# தென் இந்திய வரலாறு

(முதற் பகுதி)

கே. கே. பிள்ளை

பழனியப்பா பிரதர்ஸ்
சென்னை-14 திருச்சி-2 சேலம்-1 கோயமுத்தூர்-1

முதற் பதிப்பு : 1958
இரண்டாம் பதிப்பு : 1964
மூன்றும் பதிப்பு : 1969

விலை : ரூ. 4 - 75

ஏஷியன் பிரிண்டர்ஸ், சென்னை - 14

# முன்னுரை

இந்நூல் தென் இந்திய வரலாற்றின் முக்கிய பகுதிகளை எடுத்து விளக்க முயலுகின்றது. குறிப்பாக, ஆங்கில நூல்களைக் கற்க வசதியற்றவர்களுக்குப் பயன்படுமாறு இந்நூல் எழுதப் பெற்றுள்ளது. நாட்டின் வரலாறானது, மக்களது வாழ்க்கை நிலை, சமூக நிலை, நாகரிக நிலை முதலியவற்றை நன்கு விளக்க வேண்டுமென்பதை இன்று யாவரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். இக்கருத்தைத் தழுவியே இந்நூல் இயற்றப்பெற்றுள்ளது. ஆகையால், மன்னர் வரலாறுகள், போர் நிகழ்ச்சிகள், அரசியல் ஒப்பந்தங்கள் முதலியன விரிவாகக் கூறப்பெற்றில. சமூக வரலாற்றை அறிவதற்கு இன்றியமையாத அரசியல் குறிப்புக்கள் மட்டுமே இதன்கண் இடம் பெற்றுள்ளன. சமூக வரலாற்றிலேதானும் எல்லாக் காலத்தையும் பற்றிய தகுந்த ஆதாரங்கள் கிடைத்தில. தென் இந்திய மக்கள் வரலாறு பற்றி இதுகாறும் நூல்கள் பல வெளிவந்திலாமையால், இந்நூலை உருவாக்கும் முயற்சியில் பற்பல இன்னல்கள் தோன்றியுள்ளன. எனினும், நாளடைவில் இன்னும் பல நூல்கள் இத்துறையில் தோன்றுவதற்கு இது ஊக்கம் அளிக்குமென்னும் நம்பிக்கையுடன் இதனைத் தமிழுலகில் வெளியிடுகின்றோம்.

சென்னை
9—4—1958

ஆக்கியோன்

பம்பாய் அரசாங்கம்

"இராஜ பவனம்"
பம்பாய்—6
மார்ச்சு 28, 1957

# அணிந்துரை

நான் சென்னையில் இருந்த காலத்தில் எனது நண்பர் திரு. ஜி. வி. கிருபாநிதி அவர்கள் தென் இந்திய மொழிகளின் புத்தக டிரஸ்டு பற்றி என்னுடன் அடிக்கடி கலந்து உரையாடியதுண்டு. அக்கழகத்திற்காக "தென் இந்திய வரலாறு" எழுதுவதற்குச் சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் கே. கே. பிள்ளை இசைந்துள்ளார்களெனக் கேள்விப்பட்டு மகிழ்ச்சியடைந்தேன். அந்நூல் இப்பொழுது எழுதி முடிக்கப்பெற்றுள்ளதென அறிந்து இன்புறுகின்றேன். தென் நாட்டின் பழைய வரலாற்றை அறிவதற்கு அது பேருதவி அளிக்குமென்பதில் சற்றும் ஐயமில்லை.

வரலாற்றுநூற் குறிக்கோள் பண்டைய நிகழ்ச்சிகளை நேர்மையாக எடுத்து விளக்குவதேயாம். ஆயினும், வரலாற்று நூல்களை இயற்றினோர் பலகாலும் நடு நிலையைக் காப்பாற்றத் தவறியிருக்கின்றனர். பலர் உண்மையைப் புறக்கணித்துத் தம் தனி நோக்கத்திற்கு உகந்தவாறு தவறான பொருளமைத்து நாட்டு வரலாற்றை வரைந்துள்ளனர். குறிப்பாக, நம் நாட்டில் தோன்றியுள்ள எண்ணற்ற புரட்சிகளை எடுத்து விளக்குவதில் வரலாற்று நூலாசிரியர்கள் பலர் இக்குறைபாட்டுக்கு ஆளாயினர். தமது சமயம், இனம், குலம் முதலியவற்றை மிகைப்படுத்திக் கூறக் கருதியதால் உண்மை நெறி தவறியுள்ளனர். ஆகவே, நம் நாட்டில் நடைபெற்றுள்ள பல இயக்கங்களையும் நிகழ்ச்சிகளையும் மக்கள் திட்ப நுட்பமாக உணர்ந்துகொள்ள அவர்கள் வசதியளித்திலர். அன்றியும், நமது பண்டைப் பழக்க

வழக்கங்கள், பண்பாடு முதலியவற்றின் சிறப்பறியாது, நம்மவர் சிலர் பிறநாட்டு இயல்புகளைப் பின்பற்றுவதற்கும் அது ஒரு காரணமாயிற்றெனலாம்.

நம் நாடு விடுதலை பெற்றவுடன் ஒரு புத்துணர்ச்சி தலை தூக்கியது. அதன் விளைவாக நமது பழைய வரலாற்றையும் நமது மூதாதையரின் பண்பாட்டையும் அறிய மக்களுக்கு ஆவல் எழுந்தது. அத்துடன் இந்தியாவைப் பல்வேறு பகுதிகள் என எண்ணுது முழுவதையும் ஒரே நாடாகக் கருது வதற்கு அரிய வாய்ப்பும் தோன்றியது.

உண்மையில் என்னைப் போன்று வட இந்தியாவைச் சார்ந்தவர்களுக்குத் தென்னுட்டைப் பற்றிப் போதிய அறிவு கிடையாது. மேலும், இதுகாறும் தோன்றியுள்ள இந்திய வரலாற்று நூற்கள் பெரும்பாலும் வட இந்தியாவைப் பற்றி மட்டுமே கூறியுள்ளன. தென்னுட்டில் தொன்றுதொட்டே நிலவி வந்த பண்பாட்டையும், பண்டை மக்களது வீரச் செயல்களையும், கலைத்திறனையும் அவர் அறவே மறந்தனர் போலும்.

ஏறத்தாழ ஐந்தாண்டுகள் சென்னை நகரத்தில் தங்கி யிருக்கவும், சென்னை மாநிலத்தில் பற்பல இடங்களைச் சுற்றிப் பார்க்கவும் எனக்குக் கிடைத்த அரிய வசதிகளால், ஆங்குள்ள நம் சகோதரர்களது மாண்பையும், அவரது மூதாதையர்கள் பல துறைகளிலும் அடைந்துள்ள முன் னேற்றத்தையும் சற்று அறிந்தேன். பண்டைப் பேரரசுகள், அவற்றுள் சிறப்புற்றோங்கிய கட்டடக் கலை, மெய்ப்பொருள் ஆராய்ச்சி, இயல், இசை, நாடகம், நாட்டியம், விஞ்ஞானம், மருத்துவம், கணிதம், பொறியியல் முதலான பல்வேறு துறை களில் அவர் ஈடுபட்டு உழைத்து உலகிற்கு ஈந்துள்ள அறிவுக் களஞ்சியங்களை யானும் ஆராய்ந்து அறிய விரும்புகின்றேன். இந்திய நாட்டின் எல்லாப் பகுதிகளிலுமுள்ள மக்களது பண்டை வரலாற்றை ஆராய்ந்து அறிவது நமக்கு இன்றியமையாத கடமையாகும்.

பேராசிரியர் கே. கே. பிள்ளை அவர்களின் நூல் பேரறிஞர்களாலும், மற்றைப் பெருமக்களாலும் ஒருங்கே வரவேற்கப்படுமென்பதில் சற்றேனும் ஐயமில்லை. தென் இந்தியாவின் நில அமைப்பு, வரலாறு, பண்டைய மக்கள் பண்பாடு, தொன்றுதொட்டு வந்துள்ள செவிவழிச் செய்திகள், மக்களது நம்பிக்கைகள், அறநிலைத் தொண்டுகள் முதலியவை அனைத்தும் இந்நூல் வாயிலாக அறியலாம். அத்துடன், சென்ற பல நூற்றூண்டுகளில் வட இந்தியாவிற்கும் தென் இந்தியாவிற்குமிடையே நிகழ்ந்த தொடர்புகளும் எடுத்து விளக்கப்பெற்றுள்ளன. இது, குறிப்பாக, நமது பரத கண்டத்தின் ஒற்றுமையைப் பங்கமின்றிப் பாதுகாப்ப தற்கும், நமக்குக் கிடைத்துள்ள சுதந்திரத்தைப் பேணுவ தற்கும் பேருதவி அளிக்குமென்று நம்புகின்றேன்.

(ஒப்பம்) ஸ்ரீ பிரகாசா

# BIBLIOGRAPHY


1. Aiyangar, Dr. S. K.—Ancient India
2. ,, —Beginnings of South Indian History
3. Aiyangar, M. Srinivasa—Tamil Studies
4. Aiyangar, P.T. Srinivasa—History of the Tamils
5. Aiyar, K. G. Sesha—Cera Kings of the Sangam Age
6. Ancient India—Described by Megasthenes & Arrian
7. Historical Inscriptions of South India (Madras University)
8. Imperial Gazetteer of India Vols. 1 & 2
9. Altekar, A. S.—The Rashtrakutas and their times
10. Barnett, L. D.—Antiquities of India
11. Bhandarkar, R. G.—Early History of the Dekkan
12. Bhandarkar, D. R. —Lectures on the Ancient History of India from 650 to 325 B. C.
13. Brown, Percy—Indian Architecture, Vol. 1
14. Bp. Caldwell—Comparative Grammar of the Dravidian Languages
15. Chenchia and Bhujanga Rao — A History of Telugu Literature
16. Coomaraswamy, A. K. — History of Indian and Indonesian Art
17. Dutt, K. N. —Aryanization of India
18. Dubreuil, G. Jouveau—Ancient History of the Deccan
19. ,, —The Pallavas
20. Elliot, Sir Charles —Hinduism and Buddhism

21. Farquhar, J.N.—An outline of the religious Literature of India

22. Fleet, J. F. —Dynasties of the Kanarese District (Bombay Gazetteer, Vol. 1)

23. Gopalachari, K. — Early History of the Andhra country

24. Govinda Pillai, P. —History of the Malayalam Literature

25. Kanakasabhai, V.—Tamils 1800 years ago

26. Mugale, R. G. —The Heritage of Karnataka

27. Narasimhachariar—History of Kannada

28. Pudukkottai State Inscriptions

29. Raju, P. T. —Telugu Literature

30. Rangacharya, V.—Pre Mussalman India. Vol. I

31. Sanga Ilakkiyam (Tamil)

32. Sastri, K. A. N.—A History of South India

33. ,, —The Colas

34. Slater, G.—Dravidian Elements in Indian Culture

35. South Indian Inscriptions

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| *இயல் ஒன்று* | | |
| நாட்டின் இயற்கை அமைப்பு | ... | 1 |
| *இயல் இரண்டு* | | |
| வரலாற்றிற்கு முற்பட்ட காலம் | ... | 11 |
| *இயல் மூன்று* | | |
| பண்டைக்கால வெளிநாட்டுத் தொடர்புகள் | ... | 30 |
| *இயல் நான்கு* | | |
| பேரரசுகளைக் கண்ட பண்டை வேந்தர்கள் | ... | 46 |
| கலிங்கநாட்டு காரவேலர் | ... | 51 |
| சாதவாகனர்களின் பின் வந்தோர் | ... | 52 |
| வாகாடகர்கள் | ... | 53 |
| கதம்பர்கள் | ... | 54 |
| மேற்குக் கங்கர்கள் | ... | 55 |
| அரசியல் நிர்வாகம் | ... | 56 |
| சமுதாயம் | ... | 58 |
| *இயல் ஐந்து* | | |
| சங்க காலம் | ... | 64 |
| *இயல் ஆறு* | | |
| அரசுகள் எழுந்த காலம் (கி. பி. 500-900) | ... | 85 |
| மாகாண அரசியல் முறை | ... | 105 |
| இலக்கியம் | .... | 125 |
| தமிழ் இலக்கியம் | .... | 129 |
| கன்னட இலக்கியம் | ... | 131 |
| தெலுங்கு இலக்கியம் | ... | 132 |
| நுண்கலை | .... | 134 |

இயல் ஏழு

| | | |
|---|---|---|
| இந்து சமயப் புத்துயிர்ப்பு | ... | 140 |
| திருஞானசம்பந்தர் | ... | 142 |
| திருநாவுக்கரசர் | ... | 144 |
| சுந்தரமூர்த்தி | ... | 145 |
| வைணவ நெறி | ... | 152 |

இயல் எட்டு

| | | |
|---|---|---|
| பிற்காலச் சோழர்களும் சாளுக்கியர்களும் | ... | 164 |
| சமூக வாழ்க்கை | ... | 194 |
| இலக்கியம் | ... | 203 |
| கன்னடம் | ... | 213 |
| தெலுங்கு | ... | 218 |
| மலையாளம் | .... | 219 |
| கலை | ... | 222 |

இயல் ஒன்பது

| | | |
|---|---|---|
| கடல் கடந்த தென் இந்திய நாகரிகம் | ... | 228 |
| பர்மா | .... | 228 |
| மலாயா | ... | 230 |
| சுமத்திரா | .... | 233 |
| ஜாவா | ... | 235 |
| போர்னியாவும் பாலியும் | .... | 238 |
| சையாம் | .... | 239 |
| பூணனும் சென்லாவும் | ... | 241 |
| காம்பூஜா | ... | 242 |
| சம்பா | .... | 245 |
| இலங்கை | ... | 248 |
| குடியேற்ற முறை | .... | 248 |

# தென் இந்திய வரலாறு

## இயல் ஒன்று

## நாட்டின் இயற்கை அமைப்பு

நிலநூலார் கருத்துப்படி தென் இந்தியா மிகப் பழமையானது. இந்தியாவின் வட பகுதியும், இமயமலைத் தொடரும், கடலிலிருந்து வெளித் தோன்றியதற்கு நெடுங் காலத்திற்கு முன்பாகவே, தென் இந்தியாவில் மக்கள் வாழ்ந்து வந்தனரென்பது ஆராய்ச்சியாளர் முடிபு. ஆயினும், இதுகாறும் இந்திய வரலாற்று நூல் இயற்றியுள்ள ஆசிரியரனைவரும் தென் இந்திய வரலாற்றை முற்றிலும் புறக்கணித்தே எழுதியுள்ளார்கள். இந்திய வரலாற்றை முதன் முதல் திறம்பட உருவாக்கிய அறிஞர் டாக்டர் வின்சென்று ஸ்மித், இக்குறையை நன்குணர்ந்தார். நம் நாட்டுப் பேரறிஞர் சுந்தரம் பிள்ளையும் இப்புறக் கணிப்புப் பற்றி வருந்தியுள்ளார். தமிழ் மக்கள் இக் குறைபாட்டைக் களைதல் இன்றியமையாத செயல் என மிகவும் வற்புறுத்தியுள்ளார். இதுகாறும் இந்திய வரலாற்று நூல் இயற்ற முன்வந்தோர் அனைவரும், "கங்கையாற்றுச் சமவெளியை மட்டுமே அடிப்படையாக்கி, அதனை உருவாக்க முயன்றுள்ளது பெருந் தவறு. இக்குறையை நீக்கி, தென்னாட்டுக் கிருஷ்ண, காவேரி, வைகை முதலான

பேரியாறுகளின் பள்ளத்தாக்குகளில் முதன்முதல் நடை பெற்ற நிகழ்ச்சிகளை அடிப்படையாக வைத்து, இந்திய வரலாற்றைத் தொடங்கி முறைப்படி வரைதல் வேண்டும் '' என்று அப்பெரியார் அறிவுறுத்திப் போந்தார்.

தென் இந்தியாவின் பண்டைய வரலாறு கூறுதற்குப் போதிய ஆதாரங்கள் இல்லை எனச் சிலர் கருதுகின்றனர். ஆயினும், தற்போது நமக்குக் கிடைக்கும் சான்றுகளை வைத்து நாம் அதனை நம்மால் இயன்ற அளவு உருவாக்கு வோமேல், பிற்கால ஆராய்ச்சியால் மிக விரைவில் பல செய்திகள் வெளிப்பட்டு, அப்பணி எளிதில் நிறைவேறி விடும் என்பது மிகை ஆகாது. தென் இந்திய வரலாறு உருவாவதுவரை இந்திய வரலாறு முழுமை பெறுது என்பது திண்ணம்.

இந்திய உபகண்டத்தில், ஏறக்குறைய நடுவிடத்தில் அமைந்திருக்கும் விந்திய, சாத்பூரா மலைத் தொடர்களும், அவற்றைச் சார்ந்த அடர்த்தியான காடுகளுமே, வட இந்தியாவினின்றும் தென் இந்தியாவை வேறுபடுத்தும் இயற்கை அமைப்பாக விளங்குகின்றன. ஆனல், இந்த இயற்கை அமைப்பின் காரணமாக, இந்திய நாட்டின் இவ்விருபெரும் பகுதிகளும் பழங்காலத்தில் எவ்வகைத் தொடர்புமின்றி இருந்தன என்று கருத இடமில்லை. மலைகளுக்கு இடையே அமைந்த கணவாய்கள் வழியாகவும், கடல் வழியாகவும், சில மக்கள் அவ்வப்போது அங்கும் இங்கும் வந்து போய்க்கொண்டிருந்தனர். ஆயினும், பொதுவாக அத்தொடர்பு மிகக் குறைவாயிருந்தது என்பதற்கு ஐயம் இல்லை. இதனுல் வடநாட்டில் நடைபெற்ற பற்பல படையெடுப்புக்களும், சண்டை சச்சரவுகளும்,

குழப்பங்களும், பெரும்பாலும் தென் நாட்டை அணுகாது போயின.

தென் இந்தியாவின் வட எல்லையை விந்திய, சாத்பூரா மலைத் தொடர்களும், அவற்றுடன் இணைந்து ஓடும் நருமதை, தபதி ஆறுகளும் அணி செய்கின்றன. கிழக்கிலும் மேற்கிலும் திகழும் இரு பெருங்கடல்களும், அவற்றின் அண்மையில் அடுத்தடுத்து விளங்கும் இரு பெரும் மலைத் தொடர்களும், தெற்கே விரிந்து பரந்து கிடக்கும் இந்தியப் பெருங்கடலும் சேர்ந்து தென்னாட்டிற்குத் தனி வடிவத்தையும் அழகையும் அளிக்கின்றன.

தீபகற்பமாகிய தென் இந்தியாவின் படத்தை எடுத்து அளவில் நோக்குவோர், தலைகீழாக இருக்கும் ஒரு முக் கோணத்தின் தோற்றமுடையதெனக் கருதுவர். கிழக்கு மலைத் தொடரும், மேற்கு மலைத் தொடரும், முறையே வங்காளக் குடாக்கடல், அராபிக் கடல் இவற்றின் பக்கமாக, வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்து, நீலகிரியில் ஒன்று சேர்கின்றன. அதன் பின் ஒரே தொடர் தெற்கே கன்னியா குமரி முனை வரை நீண்டு செல்கின்றது. அராபிக் கடலுக்கும், மேற்கு மலைத் தொடருக்கும் இடையே அமைந்துள்ள நிலப் பரப்பு அழகும் செழிப்பும் ஒருங்கே பொருந்தியது. மேற்கு மலை இடைவிடாது ஒரே தொடர்பாக, ஏறத்தாழ 2,500 அடி உயரத்தில் ஓங்கி நிற்கின்றது. தெற்கில் நீலகிரிப் பக்கம் 8,700 அடிக்கு மேல் உயர்ந் துள்ளது. தென்மேற்கில் அமைந்திருக்கும் மலையடிவார நாடு வெகு காலத்திற்கு முன்னே கீழ்ப்பக்கங்களிலுள்ள நாடுகளோடு பெருந்தொடர்பு இல்லாமல், தனிப்பட்ட முறையில் இருந்தது. பாலக்காட்டுக் கணவாய் வழியாகப்

போக்கு வரவிற்கு வசதி இருந்த போதிலும், பொதுவாக இரு பக்கங்களிலும் உள்ள மக்கள் நெருங்கிய தொடர் பின்றியே வாழ்ந்தனர். கிழக்கு மலைத் தொடர்கள் மேற்கிலுள்ளவை போல் உயர்ந்தவை அல்ல. ஆகவே அவை, இரு பக்கங்களிலும் வாழும் மக்களின் போக்கு வரவுக்கு இடையூறாக இருக்கவில்லை. மேற்கிலும் கிழக்கிலும் திகழும் மலைத் தொடர்களுக்கு நடுவில் விளங்கும் பீட பூமி ஏறத்தாழ 2,000 அடி உயரமுடையது. இப்பீட பூமியின் மிக உயர்ந்த பகுதிகள் மைசூர் நாட்டிலும் அதன் அண்மையிலும் அமைந்துள்ளன.

தென்னாட்டில் ஆற்று வண்டற்பகுதி அடங்கிய சம பூமிகளெல்லாம் செழிப்பானவை. ஆயினும், ஆற்றுப் பாய்ச்சல் இல்லாத வறண்ட நிலப் பகுதிகளும் உண்டு. திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை முதலிய மாவட்டங்களில் சில பகுதிகளிலும், இராயலசீமை, ஐதராபாத் நாடுகளிலும், தொழிலுக்குத் தகுதியற்ற நில வெளிகள் மிகுதியாக உள்ளன. இவ்விடங்களிலெல்லாம் மண் வளமும் மழை வளமும் மிகக் குறைவு. மகாராஷ்டிரம் உள்ளிட்ட மலைநாடுகள் எளிதில் பயிர்செய்வதற்கு உரியன அல்ல. எனவே, அப் பகுதிகளிலுள்ள மக்கள் அரும்பாடு பட்டு உழைத்தே வாழ வேண்டும். அக்காரணத்தால் அம் மக்கள் உடலும் உள்ளமும் உறுதி மிக்கவர் ஆவார்

தென் இந்தியாவின் பெரும்பான்மை இடங்களில், வடகிழக்குப் பருவ மழை ஏறத்தாழ அக்டோபர் நடுப்பகுதி தொடங்கி டிசம்பர் முடிவு வரை பெய்கின்றது. மேத் திங்கள் இறுதியில் ஆரம்பமாகும் தென்மேற்குப் பருவ மழையால், உள் நாட்டிற்குச் சில வேளைகளில் சற்றுப் பயனுண்டு. மேற்கு மலைத் தொடர்ச்சியின் அடிவாரத்தி

லுள்ள கொங்கணத்திற்கும், மலபாருக்கும், இத்தென் மேற்குப் பருவமழை மிகுதியான பயனை அளிக்கின்றது. மேற்குக் கடற்கரை நாட்டில் 80 அங்குலத்திற்கு மேலான மழை ; ஆனால் கீழ்ப்பாலுள்ள சம வெளியில் 40 அங் குலத்திற்குக் குறைவாகவே மழை பெய்கின்றது. நாட்டில் உழவுத் தொழில் மழையைப் பொறுத்தே பெரும்பாலும் நடைபெற வேண்டும். அத்துடன் நாட்டில் அடிக்கடி தோன்றும் வெள்ளப் பெருக்கும், புயற்காற்றும், உணவுப் பஞ்சமும், தொத்துநோயும், மக்களுக்கு ஊழ்வினையில் நம்பிக்கையை உண்டாக்கியிருக்கின்றன. தென் நாடு முழுவதும் வெப்ப மண்டலத்துக்குள் அடங்கியுள்ளது. ஆண்டின் சராசரி வெப்ப நிலையைக் கணக்கிட்டால், தென் நாட்டில் வட இந்தியாவைவிட வெப்பம் மிகுதியாக இருப்பதை அறியலாம். ஆனால் வடஇந்தியா போலக் கடுமையான குளிர்காலம் தென் நாட்டில் இல்லை. ஈரக் காற்று வீசுமிடங்களில், கோடை கால வெப்பத்திற்கும், குளிர் கால வெப்பத்திற்கும், மிக்க வேற்றுமை இல்லை. தென் இந்தியாவில் மேற்குக் கடற்கரை நாடுகளில் ஈரக் காற்று மிகுதி ; கிழக்குப் பகுதிகளிலோ மிகக் குறைவு. பெல்லாரி, மைசூர் நாட்டின் வடபகுதிகள், ஐதராபாத்திற்கும் மேற்குமலைத் தொடருக்கும் இடையில் காணும் மாநிலங் கள், இவைகள்தாம் தென் இந்தியாவில் ஈரக் குறைவுள்ள வறட்சியான இடங்கள்.

பருவ நிலையால் மக்கள் வாழ்வு மிகுதியாக மாறுபடு கிறதெனக் கருத இடமில்லை என்று சிலர் தற்போது கூறுகின்றனர். ஏனென்றால், மதிநுட்பத்தாலும், விஞ்ஞான அறிவாலும், பருவ நிலைகளின் குற்றம் குறைகளை அகற்றலாமென அவர்கள் நம்புகின்றனர். ஆனால்,

விஞ்ஞான அறிவு பெருகியுள்ள தற்காலத்திலேகூட பருவ நிலையின் பலனை எவ்வளவு தொலை மாற்ற முடியுமென்பது ஐயத்திற்கு உரியதே. இவ்விதமிருக்க, பழங்காலத்தில் மக்கள் இயற்கையின் திருவிளையாடல்களுக்கு ஆளாகி வருந்தாமல் இருக்க முடியாது. குறிப்பாக, கோடையின் கடுமை மக்கள் உழைக்கும் ஆற்றலைக் குன்ற வைத்துள தென்பது யாவரும் ஒப்புக்கொள்ளும் உண்மையே.

ஆற்று வளத்தை அடிப்படையாகக் கொண்டதே நாட்டு மக்களின் வாழ்க்கை வளம். ஆறுகளின் போக்கும் பயனும், மலைகளின் அமைப்பையும், மழையின் வளத்தை யும் அடுத்துள்ளன. தென் இந்தியாவில் பொதுவாக நிலப்பரப்பு, மேற்கிலிருந்து கிழக்கே போகப் போகச் சற்றுச் சரிவாக இருப்பதால், வட பக்கத்திலுள்ள நருமதை, தபதி என்னும் இரு ஆறுகளைத்தவிர, மற்றைய ஆறுகள் அனைத்தும் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஓடி, வங்காள விரிகுடாக் கடலில் சென்று சேர்கின்றன. மக்கள் தொகை குறைவாக இருந்த பண்டைக் காலந்தொட்டே அவர்கள் ஆற்றோரங்களில் விரும்பி வாழ்ந்து வந்தனர். நாட்டின் தலைநகர்களும் பேரூர்களும் ஆற்றங் கரைகளிலேயே தோன்றின. புகார், வஞ்சி, மதுரை, விஜயநகரம், கம்பிளி முதலியன, தென் நாட்டில் புகழுடன் விளங்கிய தலைநகருள் சிலவாம். மேலும், நாடுகளையும், அவற்றின் உட்பகுதிகளின் எல்லைகளையும் அமைப்பதற்கு ஆறுகள் பயன்பட்டன. எடுத்துக்காட்டாக, கிருஷ்ணை, துங்கபத்திரை, காவேரி, வைகை போன்ற ஆறுகளைக் குறிப்பிடலாம். கிருஷ்ணை விற்கும் துங்கபத்திராவிற்கும் இடையிலுள்ள இராயச்சூர்ப் பள்ளத்தாக்கு, தக்காண அரசுகளுக்கிடையே பெரும் போட்டிக்குக் காரணமாய் இருந்ததென்பதற்கு வரலாற்றுச்

சான்றுகள் பல உள. கிருஷ்ணுவின் முக்கிய கிளை நதியாகிய துங்கபத்திரை தென்னிந்தியாவை இரு கூறுக வகுத்துளது. துங்கபத்திரையின் வடபக்கம் தக்காணம் எனவும், தென் பக்கம் தென்னிந்தியா எனவும் கருதப்பட்டு வந்தன. ஆனுல், பற்பல நதிகளும் மலைக்குன்றுகளும் தென்னுட்டை இயற்கையில் பற்பல சிறு பகுதிகள் ஆக்கி விட்டன. ஆகையால், போக்கு வரவு வசதிகள் குறைவான முற்காலத்தில், சிறு அரசுகள் பல ஆங்காங்கு அமை வதற்கு இப்பகுதிகள் அடிகோலின. நாடு முழுவதையும் பல காலத்திலும் ஒரே ஆட்சியின் கீழ் அமைக்க இயலாமல் போனதற்கு இவ்வியற்கைக் காரணம் முக்கியமானது எனக் கூறலாம்.

உழவுத் தொழிலிற்கு ஆறுகள் அளிக்கும் நன்மைகள் கொஞ்சமல்லவே. ஆறுகளின் அண்மையிலும், கழிமுகத் திலும், நெற்பயிர் செழிப்பாய் வளர்கின்றது. கோதாவரி, கிருஷ்ணு, காவிரி முதலிய ஆறுகளும், அவற்றின் கழிகளும், மிக்க வளம் படைத்தவை. மேலும், ஆறுகளில் வெட்டியிருக்கும் பற்பல கால்வாய்கள் பற்பல இடங்கட்கும் நீர்ப்பாசன வசதி அளிக்கின்றன. ஆற்றுநீர் பாய வசதி இல்லாத இடங்களில், கிணற்று வாயிலாகத் தண்ணீர் கிடைக்கும்.

ஆகையால், அவ்விடங்களில் சோளம், பயறு வகைகள், கரும்பு, பருத்தி முதலியவை பயிராகின்றன. அங்குக் கூட வசதி இருக்கும் இடங்களில் எல்லாம் நெற்பயிர் செய்யப்படுகின்றன. தென்னிந்தியர்கள் அரிசிச் சோற்றை முக்கிய உணவாகக் கொண்டவர்கள். வறுமையில் வாழும் சிலர் மட்டுமே வரகு, சோளம், கம்பு முதலியவற்றைப்

பயன்படுத்தி வருகின்றனர். ஆனால், நெல்லைக் காட்டிலும் இப் புன்செய்த் தானியங்கள் மக்களுக்கு மிக்க உடல் வலிமையைக் கொடுக்கின்றன.

கொங்கணத்திலும் கேரளத்திலும் நெற்பயிர் தவிர, காப்பி, தேயிலை, தேங்காய், மிளகு, நறுமணப் பொருட்கள் முதலியவற்றைப் பயிர் செய்கின்றனர். மைசூரிலும், கேரளத்திலும் உள்ள காடுகளில் பல்வேறு உயர்ந்த மரங்கள் வளர்கின்றன. மைசூர் சந்தனத்திற்குப் பெயர்பெற்ற இடம். இராயலசீமையிலும், தென்னார்க்காட்டிலும் நிலக்கடலையை மிகுதியாகப் பயிர் செய்கின்றனர். ஆந்திர நாடு முழுவதும் மாபெரும் நெற்களஞ்சியமாகும். மேலும் அது, இரும்பு, ஈயம், அப்பிரகம், மங்கரசம் போன்ற பல உலோக வளமும் நிறைந்த பகுதி. மைசூரில் பொன்னும், ஐதராபாத்தில் நிலக்கரியும் கிடைக்கின்றன. கடப்பை மாவட்டத்திற்கு எட்டு மைல் வடபக்கமுள்ள சுரங்கங்களில், வைரம் கிடைக்கின்றது. முற்காலத்தில் கோவையில் கோமேதகம் மிகுதியாகக் கிடைத்தது. அவ்வாறே திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த கொற்கை நகரத்தில் கிடைத்த பாண்டிநாட்டு முத்துக்கள் உலகப் புகழ் பெற்று ஒளிர்ந்தன. இவ்வாறு தென்னாடு முழுவதும் பல வகைச் செல்வம் கொழிக்கும் திருநாடாக விளங்கியமையால், அந்நாட்டில் அயல்நாட்டு வர்த்தகம் செழிப்புற்று விளங்கியதில் வியப்பு யாதும் இல்லை. தென்னிந்திய தீபகற்பத்தின் கிழக்கிலும், மேற்கிலும் உள்ள மிக நீண்ட கடற்கரைகள், மரக்கலப் போக்கு வரவிற்கும், வாணிகத்திற்கும், மிகுந்த வசதி அளித்தன. ஆயினும், இவ்விரு கடற்கரைகளும் வளைவுகள் இன்றிப் பெரும்பாலும் நேராக அமைந்திருப்பதால், இயற்கைத் துறைமுகங்கள் மிகக் குறைவு. முன்னாட்களில்

கிழக்குக் கடற்கரையில் கொற்கை, புகார், மாமல்லபுரம் முதலியனவும், மேற்குக் கடற்கரையில் முசிறி, தொண்டி முதலியனவும், சிறந்த துறைமுகங்களாகத் திகழ்ந்தன. தற்போது மேற்குக் கடற்கரையில் பம்பாய், கோவா, கொச்சி என்பனவும், கிழக்குக் கரையில் விசாகப் பட்டினமும், சென்னைப் பட்டினமுமே சிறந்த துறை முகங்கள். சென்னைத் துறைமுகம் அண்மையில் பெரிதும் சீர்திருத்தம் பெற்றுள்ளது. தூத்துக்குடி அத்தகைய சீர்திருத்தம் பெறின், சென்னை போன்று சிறந்த துறை முகம் ஆக வாய்ப்புள்ளது.

பண்டை நாட்களில் சாதவாகனர், பல்லவர், சோழர் முதலியோர், சிறந்த கடற்படையை அமைத்திருந்தார்கள். இலங்கையையும் மால்தீவுகளையும் சோழர்கள் வென்றதும், கீழ்நாடுகளில் ஆந்திரரும் தமிழரும் சென்று குடி யேறியதும், அக்காலத்தில் கடல் கடந்து செல்வதில் அவர் களுக்கு இருந்த ஆர்வத்தையும் ஊக்கத்தையும் நன்கு துலக்குகின்றன. தென்னிந்தியர் கடற்செலவிற் பெற்றிருந்த ஆற்றலும், புகழும், வட இந்தியர்கட்கு வாய்க்கவில்லை. இத்தகைய வரலாற்றுச் சிறப்பே பின்னாளில் விடுதலை வீரர் வ. உ. சிதம்பரம் பிள்ளை தென்னாட்டிற்கென்று தன்னுரிமைக் கடற்படை அமைக்கவேண்டும் என்று திட்டமிடக் காரணமாய் விளங்கியது. ஆனால், இடை யூற்றின் மிகுதியால், அத்திட்டம் நிறைவேறாது போயிற்று. கடற்படையின் வலிமை ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரரும் இந்தியாவைக் கைக்கொள்ள முயற்சி செய்தபோது, அவர் களுக்கு நன்கு புலனாகியது. கடல் ஆதிக்கமே, ஆங்கி லேயர் வேண்டியபோதெல்லாம் தமக்கு வங்காளத்திலிருந்து போர்ப் படைகளையும், உணவுப் பொருட்களையும், தென்னிந் தியாவிற்குக் கொண்டுவர உதவியது.

முன்னரே நாம் குறிப்பிட்ட பழந்துறைமுகங்களாகிய முசிறி, புகார், கொற்கை முதலியன, கடலின் சீற்றத்திற்கு இரையாகியும், கடல்நீர் ஒருபால் ஒதுங்கிவிட்டமையால் தூர்ந்தும் அழிந்தன. தற்போதுள்ள குமரி முனைக்குத் தெற்கே இருந்த ஒரு பெரிய நிலப்பரப்பும் கடல்கோளால் அழிந்து போயிற்று எனக் கருதுவாரும் உளர். அவர் கருத்துக்குப் புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலான பழைய இலக்கியங்களில் வரும் குறிப்புக்கள் துணை புரிவன. நிலநூல் ஆராய்ச்சியாளரும் அதற்குச் சான்றுகள் காண்பித்துள்ளார். தமிழ்ச் சங்கங்களைப் பற்றிச் சொல்லப் படும் செவிவழிச் செய்திகளும், பழந்தமிழ் நூல்கள் பல அழிந்து போனதற்குக் கூறும் காரணங்களும், இக்கருத்தை வலியுறுத்துகின்றன. ஆயினும், அழிந்து போன நாடுகள் யாவை என இதுகாறும் தெளிவாய் வரையறுத்திலர். தென்னிந்தியா, இலங்கை, மலாயா, ஆப்பிரிக்காவின் கீழ்ப் பகுதி முதலிய நிலங்கள் எல்லாம் ஒருங்கே இணைந்து, லெமூரியா என்ற ஒரு மாபெருங் கண்டமாக நிலவியது எனக் கருதுகின்றனர். ஆஸ்திரேலிய மக்கட்குரிய அடையாளங்களும், தென்னிந்திய மக்கள் சிலரிடம் தென் படும் குறிகளும், நம் நாட்டுக் காடர், வேடர், காணிக்காரர் போன்றவர்கட்கும், மலாயாவிலுள்ள ஜாக்கூனர்கட்கும் இடையே காணப்படும் பழக்க வழக்கங்களில் உள்ள ஒற்றுமைகளும், இக் கொள்கைக்குச் சான்றென எடுத்துக் காட்டுகின்றனர். இவற்றால் இந்தியாவைத் தொடர்ந்து, தெற்கிலும் கிழக்கிலும் நிலப்பரப்பு இருந்துள்ளது என ஊகிக்க முடிகிறதே தவிர, அது உண்மை என்று உறுதி யாக நிலைநாட்டுதற்குப் போதிய ஆதாரங்கள் இதுகாறும் பெற்றிலோம்.

## இயல் இரண்டு

# வரலாற்றிற்கு முற்பட்ட காலம்

மனிதன் முதலில் தோன்றிய இடங்களில் தென் இந்தியா ஒன்று எனச் சில நிலநூலாரும், மானிட நூல் வல்லாரும் கருதுகின்றனர். தென் இந்தியாவில் அதிலும் சிறப்பாக ஒரிஸ்ஸா, மைசூர், ஆந்திரா, சென்னை இவ் விடங்களில், தொன்மை மிக்க பழங்காலத்தைச் சார்ந்த பாறைகளைக் காண்கின்றோம். ஆதி மனிதன் தோன்றியதே தென் இந்தியாவில்தான் என்று திட்டமாகக் கூற இயலா விட்டாலும், இந்தியாவில் முதன்முதல் மனிதன் குடியிருக்கத் தொடங்கிய இடம் தக்காணம்தான் என்பது, யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய உண்மையே. தக்காணத் திலுள்ள உயர்ந்த நிலப்பரப்புக்களும், சிறு குன்றுக ளடங்கிய ஆற்றுப் பள்ளத்தாக்குகளும், மக்கள் உணவிற் குரிய காய்கனி கிடைப்பதற்கு வசதியான இடங்களா யிருந்ததே, அதற்குக் காரணம். பருவ கால நிலைகளும் இந்த இடங்களில் அந்தக் காலத்தில் மிக்க வசதியா யிருந்திருக்க வேண்டும். கோதாவரி, நருமதை போன்ற ஆறுகளின் கரைகளில், இதுகாறும் எஞ்சி நிற்கும் பல வகைப் பழம்பொருட்களின் தெளிவினால், இந்தியாவில் ஆதி மனிதன் தக்காணத்தில் வாழ்ந்திருத்தல் கூடுமென்று நிலநூல் வல்லுநர் கருதுகின்றனர். இங்கு ஆதி மனித வாழ்க்கை தொடங்கினது ஏறத்தாழ ஐந்து லட்சம் ஆண்டு

களுக்கு முன் என்று கணக்கிட்டுள்ளனர். வரலாற்று நூற்காலத்திற்கு முன் மக்கள் பயன்படுத்தி வந்த கருவிகள், பொருட்கள், உலோகங்கள் முதலியவற்றின் பெயரால், அவ்வக்காலங்களை இற்றை நாள் வரலாற்று நூலார் குறிப்பிடுகின்றனர். அதனால்தான் தொல் பழங்கற்காலம், பழைய கற்காலம், புதிய கற்காலம், வெண்கலக் காலம், இரும்புக் காலம் என்றெல்லாம் பெயர்கள் வழங்குகின்றன. தொல் பழங்காலத்துக் கரடுமுரடான கல்துண்டுகள் தென்னாட்டில் உள்ளன என்று திட்ப நுட்பமாகக் கூற இயலாது; எனினும் அவை உள்ளன என்பதே பேரறிஞர் சிலர் கருத்து.

ஆனால், பழைய கற்காலத்தில் தென் இந்தியாவின் பல பகுதிகளில் மக்கள் வாழ்ந்துள்ளனர் என உறுதியாகக் கூறலாம். அதற்குப் போதிய சான்றுகள் உள்ளன. 1863-இல் புரூஸ் புட் என்ற நிலநூல் நிபுணர், பல்லாவரத்திற்கு அண்மையில், சில பழங்கற்கருவிகளைக் கண்டெடுத்தார். அதைத் தொடர்ந்து, தென் இந்தியாவின் பல பகுதிகளிலும் அவை போன்ற கருவிகள் கண்டெடுக்கப் பெற்றன. அக்காலத்தில் மக்கள் கையாண்ட கோடரிகள், குந்தங்கள், அரிவாள்கள், கத்திகள் முதலியனவும், அவற்றை உருப்படுத்தி வந்த பளிங்குப் பாறைகளும், கோதாவரி ஆற்றுக்கும் மதுரைக்கும் இடையே உள்ள நாட்டில் பல இடங்களிலும், ஒரிஸ்ஸா, தார்வார், ஐதரபாத் முதலிய நாடுகளிலும் காணப்படுகின்றன. கர்நூல் மாவட்டத்தில் பழங்கற்காலக் குகைகளும் இருக்கின்றன.

அக்கால மனிதர் விட்டுச் சென்ற பொருட்களிலிருந்து அவர்கள் கல்லைப் பொடியாக்கவோ, மாற்றவோ, மெருகிடவோ தெரிந்திருந்தனர் என்று நமக்குத் தென்பட

வில்லை. கல் ஆயுதங்களையும், கருவிகளையும் தவிர, மரத்தில் செய்த ஈட்டிகளையும், தடிகளையும், பயன்படுத்தி வந்தனர். பழங்கற்காலத்தைச் சார்ந்ததெனக் கருதப்படும் ஒரு மரச்சீப்பு குண்டக்கல் என்னுமிடத்தில் கிடைத்திருக்கின்றது.

பழைய கற்கால மனிதன் காய் கனிகளையும், பருப்புக்களையும் உண்டு, நாடோடியாக அலைந்து திரியும் வாழ்க்கை நடத்தி வந்தான். உழவுத் தொழில் அறியான். அக்காலத்தின் இறுதியில் வேட்டையாடக் கற்றிருந்தான். இறந்து போன மக்கள் உடல்களை விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் இரையாக, வெளியே போட்டுவிட்டனர். இத்தகைய பழங்காலத்து மக்கள் வாழ்க்கையின் இறுதிப் பகுதி ஒருவாறு கி. மு. 30,000 முதல் 10,000 வரை நிலைத்திருந்தது என அறிஞர் திட்டப்படுத்தியுள்ளார்.

பழைய கற்காலத்திற்கும் புதிய கற்காலத்திற்கும் இடையே மெஸாலிதிக் எனப்படும் ஒரு காலம் நிகழ்ந்ததாக வரையறுத்துள்ளார்கள். இந்த மெஸாலிதிக் காலத்தில் பயன்படுத்தின கற்கள் மிகச் சிறிய அளவின ஆகும். அவை பளிங்குக் கற்களல்ல ; சக்கிமுக்கிக் கற்கள். அவை சூரியகாந்தக் கற்கள் போன்றனவாகும். அவை தென்னிந்தியாவில், சில இடங்களில், சிறப்பாக மைசூரைச் சார்ந்த பிரமகிரியில் கிடைத்துள்ளன. அக்காலத்து மக்கள் வேட்டையாடப் பழகி இருந்தனர். வேட்டையில் பிடித்த ஆடுகள், மாடுகள், எலிகள் முதலிய பிராணிகளை உணவாகக் கொண்டனர். மக்கள் இறந்த பின், அவர்கள் பிணங்களைப் புதைக்கும் வழக்கத்தை இக்காலத்தில் மேற்கொண்டனர்.

புதிய கற்காலத்தில், கூர்மையான படைக்கலங்களை யும், கருவிகளையும், 'டிராப்' எனப்படும் ஒரு விதக் கற்களி லிருந்து உருவாக்கினர் என்பதற்கு, அக்காலச் சிதைவுப் பொருட்கள் சான்று பகர்கின்றன. புதிய கற்காலச் சிதைவுகளை, திருநெல்வேலி, சேலம், மலபார்க்கரை, கடப்பை, கர்நூல், பெல்லாரி, அனந்தப்பூர் மாவட்டங் களிலும், மைசூர், ஐதராபாத் நாடுகளிலும் காண்கின்றோம். அக்காலத்தில் நிலையான குடியிருப்பு ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து, பயிர் செய்தல், விலங்குகளை வளர்த்துப் பழக்குதல், ஓடங்கள் செய்தல் முதலிய தொழில்கள் நடை பெற்றன. கையாலும், உருளையாலும் மண்பாண்டங்கள் வனைவதில் மக்கள் தேர்ச்சி பெற்றிருந்தனர். பருத்தியை யும், ஆட்டு மயிரையும் கொண்டு நெசவு செய்யவும் அறிந் திருந்தனர். நாட்டிய ஓவியங்களையும், வேட்டைக் காட்சி களையும், சுவர்களில் எழுதப் பழகினர். சிதைவுப் பொருட் களில் காணும் சீப்பும், தலையணையும், யானைக் கொம்பு, சிப்பி, மணி முதலியவற்றால் செய்த அணிகலன்களும், அவர்தம் சீரிய பண்பாட்டையும், அழகுணர்ச்சியையும் புலப்படுத்துகின்றன. அவர்கள் தம் முன்னோரைப் போலவே, பொதுவாக இயற்கைச் சக்திகளை வழிபட்டு வந்தனர். இக்காலத்திலே சிவலிங்க வழிபாடு தோன்றி இருந்தது என்பதற்குச் சில அறிகுறிகள் உள்ளன. எனினும், திட்டமாகக் கூற இயலாது. பெல்லாரி மாவட்டத்தைச் சார்ந்த கற்பகல்லுக் குன்றில் சிவலிங் கத்தையும், காளையையும் காண்பிக்கின்ற சிற்பம் ஒன்று அமைக்கப் பெற்றுள்ளது. இது புதிய கற்காலத்தைச் சார்ந்ததெனச் சிலர் கருதி வந்தனர். ஆயின், இதன் காலத்தைத் திட்டமாக வரையறுத்துக் கூற இயலாது.

இறந்தோரைப் புதைக்கும் வழக்கம் மிகுதியாகப் பரவி இருந்தது.

தென் இந்தியாவில் புதிய கற்காலத்திற்குப் பின், வேறு சில நாடுகளிற் போன்று பித்தளைக் காலமேனும், வெண்கலக் காலமேனும் தோன்ருது, நேரடியாக இரும்புக் காலம் தோன்றியதெனக் கருதுவாரும் உளர். ஆனல் இங்கும் பித்தளையும் வெண்கலமும் பயன்படுத்தப்பட்டு வந்த காலமும் உளது என அறிகின்ருேம். ஆந்திர நாட்டைச் சேர்ந்த இராயச்சூர் மாவட்டத்திலும், மைசூரைச் சார்ந்த பிரமகிரியிலும் கிடைத்துள்ள சான்றுகள், இதைத் தெளிவாக்குகின்றன.

இரும்புக் கால நினைவுக் குறிகளை, திருநெல்வேலி, அனந்தப்பூர், கடப்பை, கர்நூல் மாவட்டங்களிலும், கன்னட நாட்டிலும் காண்கின்ருேம். இரும்புக் காலத்தில் பாறையில் குடைந்த குகைகள், மலபாரில் தலைச்சேரியின் அண்மையிலும், சென்னையில் பெரம்பூரிலும் கோயமுத்தூர் மாவட்டத்திலும், கானியம்பூண்டி, சிறுமுகை என்ற சிற்றூர்களிலும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆதித்தநல்லூரிலும் உள்ளன. வரலாற்று நூற் காலத்திற்கு முன்னுள்ள சிதைவுப் பொருட்களைக் கண்டு பிடித்த பிரேதக் குழிகளில், ஆதித்த நல்லூரில் உள்ளவை மிகச் சிறப்புடையன. மக்கள் உடம்பின் முழு எலும்புக் கூடுகளும், நேர்த்தியான வழவழப்புடைய மண் பாண்டங்களும், பொன் அணிகலன்களும், வெண்கல உருப்படிகளும், இரும்பு ஆயுதங்களும், அரிசியும், உமியும், பிறவும், அங்குள்ள குழிகளில் இருந்தன. மேலும், இரும்பு மண்வெட்டிகளும்

சூலாயுதங்களும், இவற்றுடன் பொன்னால் செய்த தலைக் கட்டுகளும், பொன் வாய்மூடிகளும் இருக்கக் கண்டனர்.

ஏறத்தாழ கி. மு. 2,000 முதல் 1,200 வரை உள்ள காலத்தைச் சார்ந்தன என்று நிர்ணயிக்கப்பட்டுள்ள இத்தகைய பல விளைதைப் பொருட்களை, பாலஸ்தீனம், சைப்பிரஸ், கிரேக்கம் என்ற நாடுகளிலுள்ள பிரேதக் குழிகளில் கண்டுள்ளனர். ஆனால், இவ்வாறு இதுகாறும் எஞ்சி நிற்கும் பழம்பொருட்கள், இந்தியாவில் ஆதித்தநல்லூரில் அன்றி மற்றெங்கும் தென்படவில்லை. மேலும், ஆதித்த நல்லூரில் கண்ட முதுமக்கள் தாழிகளில் வேல்கள் மட்டு மல்லாது, இரும்புக் கொடிப் பட்டங்களையும், வெண்கலத்தில் வார்ப்பு வேலையாகச் செய்துள்ள கோழி உருவங்களையும் கண்டுள்ளனர். பண்டைத் தமிழர், வேலை, ஆயுதமாகக் கொண்ட முருகனை வழிபட்டு வந்தனரென்பதும், அம் முருகனுக்குக் கோழி வடிவம் பொறித்த கொடி அடை யாளம் என்பதும் யாவரும் அறிந்த உண்மையே. முருக னுக்குக் காவடி எடுக்கும் அடியார்கள், வாயைத் துணியி னாலேனும், வேறு பொருளினாலேனும் மூடிக் கட்டிக் கொள்வது தொன்றுதொட்டு இன்று வரை உள்ள வழக்கம். கோழி வடிவமுள்ள ஓவியங்களாவது, சிற்பங் களாவது, பாலஸ்தீனம், சைப்ரஸ் முதலிய நாடுகளில் தென்படவில்லை என்பதையும், நாம் உணர வேண்டும். அது மட்டுமே அன்றி, முருகனைப் போன்ற ஒரு கடவுளை அந் நாட்டு மக்கள் வழிபட்டனரா என்பதையும் அறியோம். ஆகையால், ஆதித்தநல்லூர் முதுமக்கட்டாழிகள் அவ் விடத்து வாழ்ந்த தமிழ் மக்களுடையனவேயாம்; மற்றை யோர் எவருடையனவும் அல்ல. புறநானூற்றில் இத்தகைய தாழிகளைப் பற்றி வரும் குறிப்புக்கள் இதை வலியுறுத்து

கின்றன. பாலஸ்தீனம், சிரியா, சைப்பிரஸ் முதலிய நாடு களில் காணும் அவ்விஞதைக் கருவிகளைப் போன்றே, ஆதித்தநல்லூரில் கண்டெடுத்த பொருட்களும் தோன்று வதற்குக் காரணம் யாது? ஒரு வேளை, அந்த நாடுகளி லிருந்து தென் இந்தியாவிற்கு வந்திருந்த வணிகர்கள், இந்த விஞதைக் கருவிகளை இங்கிருந்து தங்கள் நாட்டிற்கு எடுத்துச் சென்றிருக்கலாம். அல்லது, மத்திய தரைக் கடற்பக்கத்திலிருந்து தென் இந்தியாவிற்கு வந்ததாகக் கருதப்படும் திராவிடர்கள், தங்கள் சொந்த நாடுகளில் பழகிக் கையாண்டிருந்த பழக்க வழக்கங்களையும் பொருட் களையும் இங்குக் கொண்டு வந்திருக்கலாம்.

மேற்கு ஆசியாவின் சில பகுதிகளில் உள்ள பிரேதக் குழிகளில் இரும்பு காணப்படாமையால், அவ்விடங்களில் வாழ்ந்தோர் ஆதித்தநல்லூரில் வாழ்ந்திருந்த மக்களுக்கு முற்பட்ட காலத்தில் உள்ளார் என்று கருதலாம். இன்றேல், அன்னூர் மேற்கு ஆசியாவிலிருந்து வந்து, ஆதித்தநல்லூரில் தங்கி, பின்னர் வேறு சில புதிய பழக்க வழக்கங்களையும் கைக்கொண்டு, ஆங்கு வாழ்ந்திருக்கலா மென்று எண்ணவும் இடமுண்டு.

உண்மையில், தென் இந்தியாவில் வரலாற்று நூற்கு முற்பட்ட காலப் பழக்க வழக்கங்களில், பிரேதக் குழிகளைச் சுற்றிப் பெருங்கற்களால் கட்டடங்கள் அமைப்பது சிறந்த வழக்கம். இந்தக் கற்கட்டுப் பண்பாடு பலவகைப்படும். அவற்றுள், இம் மத்திய தரை நாட்டுக் கற்கட்டுப் பண்பாடு சுமார் கி. மு. 2500 முதல் 1500 வரையுள்ள காலத்தைச் சார்ந்ததெனக் கருதுகின்றோம்.

ஆனல், தென் இந்தியப் பிரேதக் குழிகளில் இரும்புப் பொருட்கள் காணப்படுகின்றன. எனினும் அவ்விரு பண் பாடுகளுக்கும் இடைப்பட்ட காலம் மிகப் பெரிது எனத் தோன்றவில்லை.

சென்ற பத்து ஆண்டுகளாகவே பழைய தென் இந்தியப் பண்பாடுகளை ஒழுங்கான முறையில் ஆராய்ந்து வந்துள்ளனர். செங்கற்பட்டு, வடஆர்க்காடு, தென்ஆர்க் காடு முதலிய மாவட்டங்களில் பற்பல வகையான பண்பாடு களைக் கண்டு பிடித்துள்ளனர். செங்கற்பட்டு மாவட்டத்தில் சானூர், அமிர்தலிங்கம், குன்றத்தூர் என்ற ஊர்களிலும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் செங்கமேட்டிலும், பழம் பொருட்களைத் தோண்டி எடுக்கும் வேலை முடிந்துவிட்டது. கொச்சி நாட்டில் பல வகையான பண்பாடுகள் அமைந் துள்ளன. அங்கு நிலத்திற்குள் குடைந்தெடுத்த சில குகைகள், குடக்கற்கள், தொப்பிக் கற்கள், அன்றியும், குழியின் மீது குடை வடிவத்தில் அமைந்த கற்கள், தூண் போன்ற தனிக் கற்கள் யாவையும் மிகுதியாகக் காணப்படு கின்றன. ஐதராபாத்திலும், மைசூரிலும், சில வகைக் கற் கட்டுக்களைப் பிரேதக் குழிகள் மீது காணலாம். அவற்றுள் சில ஏறக்குறைய கி. மு. 200 முதல் கி. பி. 200 வரை யுள்ள காலத்தைச் சார்ந்தனவாகும். ஆயினும், சில கற் கட்டுகள் பல நூற்றுண்டுகளுக்கு முன்னர், அதாவது, ஏறத் தாழ கி. மு. 1000 ஆண்டுகளுக்கு முன்னுள்ளனவாய் இருத்தல் வேண்டுமெனத் தோன்றுகிறது. புறநானூறு, தொல்காப்பியம், நற்றிணை, பதிற்றுப்பத்து, மணிமேகலை முதலான பழந்தமிழ் நூல்களில், இவற்றைப் பற்றிய குறிப்புகளைக் காணலாம். அன்றியும், இராமபிரானுடனே

சென்ற வானரப் படைகளில் உள்ள வானரர் பலர் பிரேதக் குழிக் கட்டடங்களைத் தமக்கு விளையாடும் இடமாக்கிக் கொண்டனர் என இராமாயணம் கூறுவதும் நோக்கத் தக்கது.

தென் இந்தியாவில், 1945-ஆம் ஆண்டிற்குப் பின் பிரேதக் குழிகளில் தோண்டி எடுத்த பொருட்கள், தத்தம் கால வரையறையைத் தெளிவுறுத்துகின்றன. அரிக்கா மேட்டில் டாக்டர் மார்ட்டிமர் உவீலர் தோண்டி எடுத்த பொருட்களில், கி. பி. முதலாவது அல்லது இரண்டாவது நூற்றாண்டைச் சார்ந்த பாண்டங்களைக் கண்டுபிடித்தனர். 1947-இல் பிரமகிரியில் கிடைத்த புதை பொருள்கள், தென் இந்தியாவில், வரலாற்றிற்கு முற்பட்ட காலத்திலுள்ள நாகரிகத்தைப் பற்றிச் சில சான்றுகள் அளிக்கின்றன. படிப்படியாக வளர்ந்த மூன்று வகை நாகரிகக் கலை வளர்ச்சியை அந்தப் புதை பொருட்களின் வாயிலாய்த் திட்டப்படுத்தக் கூடும். முதல் வகையில் கற்கோடரி காணப் பட்ட ஓர் இயல்; இது பிற்காலத்தைச் சார்ந்ததாக இருத்தல் வேண்டும்; ஏனெனில், இந்தக் குழிகளில் பித்தளை, வெண்கலம், இவற்றினால் செய்த பொருட்களும் உள்ளன. இரண்டாவது வகை தென் இந்தியாவில் மற்ற இடங்களில் காணப்படுவது போன்றதேயாம். அதற்கு மேற்படியில் மூன்றாவது வகையில் கி. பி. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த சிவப்பு மண் பாண்டங்களைக் காணலாம். அவை ஆந்திர மக்களின் நாகரிகக் குறிகள். பிரமகிரியில் படிப்படியாக அமைந்திருக்கும் இந்தப் புதை பொருட்களின் சான்று களைக் கொண்டு, ஹெய்மென்டார்ப் என்ற தொல் பொரு ளாராய்ச்சி வல்லுநர், பொதுவாக வரலாற்றுக் காலத்திற்கு முன்னுள்ள தென்னிந்தியப் பிரேதக் குழிகள் சுமார் கி. மு.

700 முதல் 400 வரையிலுள்ள காலத்தைச் சார்ந்திருக்க லாமெனக் கருதுகின்றூர். ஆனல், முன் கூறியது போல, மத்திய தரை நாட்டிலுள்ள குழிகள் கி. மு. 2500 முதல் 1500 வரையுள்ள காலத்தவையாகும். தென் இந்தியப் பிரேதக் குழிகளில் இரும்பு காணப்படுவதைத் தவிர, மற் றெல்லாவற்றிலும், இவ்விரண்டு வகைப் பண்பாடுகளும் ஒத்தவையே ஆகும். இரும்புப் பொருட்கள் தோன்றுத லால், இவை சற்றுப் பிற்காலத்தைச் சார்ந்தவைகளாய் இருக்கலாம். ஆகவே, கி. மு. 1000 ஆண்டை அடுத்துத் தென் இந்தியப் பிரேதக் குழிகளும், அவற்றைச் சார்ந்த பண்பாடும் தோன்றியிருக்கலாம் என்பது துணிபு.

கற்காலத்திலும், அதற்குப் பின்னும், தென் இந்தி யாவில் வாழ்ந்த மக்களின் இனம் யாது எனத் திட்டப் படுத்திக் கூறுவது எளிதன்று. கொச்சி நாட்டில் வாழும் காடர்களும், புலையர்களும், பழைய கற்காலத்தில் வாழ்ந் தவரின் பின்னேர்களென மனித குல வரலாற்று நூலா சிரியர் சிலர் கருதுகின்றனர். அவர்களுடைய குறைந்த உயரமும், உடலமைப்பும், அடர்த்தியான சுருண்ட தலை மயிரும், அவர்கள் நீக்ரோ இனத்தைச் சார்ந்தவர்கள் என வெளிப்படுத்துகின்றன. ஆனல், தென் இந்தியாவில் நீக்ரோ இனத்தினர் எவ்வாறு வந்தனரெனப் புலப்பட வில்லை. ஒரு வேளை, ஆப்பிரிக்காவும், மலாயா முதலிய நாடுகளும், ஆதியில் தென் இந்தியாவோடு இணைந்து கிடந்தன என்னும் கூற்று இதற்கு ஆதாரமாகலாம்.

மேலும் ஆஸ்திரேலிய நாட்டுப் பழங்குடி இனத்தைச் சார்ந்த கோலர்கள் அல்லது கோலேரியர்கள் என்பார், புதுக் கற்காலத்தில் இந்தியாவில் வந்து குடியேறியதாகக்

கூறுவதுண்டு. கேரளத்தைச் சார்ந்த பணியர்கள், ஆனை மலை வாசிகள், இலையை ஆடையாக அணிந்துகொள்ளும் ஓரிசா மலைநாட்டுக் குடிகள், இவர் அனைவரும் கோலேரியர் களில் நாகரிகமற்ற ஒரு கூட்டத்தாரின் வழி வந்தோர் எனக் கூறப் பெற்றுள்ளார். கோலேரியரின் தாய்மொழி முண்டா என்பது. தக்காணத்தில் வட கிழக்குப் பகுதிகளில் மக்கள் பேசும் ஜவாங், கேரியா, கடவா, சவநா முதலிய மொழி களும், மத்தியப் பிரதேசத்தின் வடமேற்குப் பகுதியில் பேசும் குர்க்கு மொழியும், முண்டாவைச் சார்ந்தவை. எவ் வழியாகக் கோலர்கள் இந்தியாவிற்கு வந்தார்கள் என்பதும், எக்காரணம் பற்றி வந்தார்கள் என்பதும் அறியோம். அஸ்ஸாமிலுள்ள காஸிகள் சில செயல்களில் மலாயா மக்க ளையும், கோலேரியர்களையும் ஒத்திருக்கின்றனர் கேரளத் திலுள்ள பிரேதக் குழிக் கற்கட்டுகள் அஸ்ஸாமிலுள்ளன வற்றை ஒத்திருக்கின்றன. கோலர்கள் இந்தியாவின் வட கிழக்குப் பகுதி வழியாகத் தென் மேற்குக் கடற்கரைக்கு வந்ததனலோ, அல்லது மக்கள் ஓரிடத்திலிருந்து மற்றோ ரிடம் மாறி அங்குக் குடியேருமலே அலைந்து திரிந்ததால், அதன் வழியே சில பழக்க வழக்கங்கள் மட்டுமே ஆங்காங் குப் பரவியதாலோ, இந்த ஒற்றுமை ஏற்பட்டிருக்கலாம். தற் போது இந்தியாவின் பல்வேறு இடங்களில் வாழ்ந்து வரும் கோலேரியரின் தொகை முப்பது இலட்சம் இருக்கும்.

ஐராவதி கார்வே அம்மையார் வேருெரு கருத்தை வெளியிட்டுள்ளார். தென் இந்தியாவிலுள்ள பண்டைய மக்களின் சில பழக்க வழக்கங்களிலிருந்தும், ஆஸ்தி ரேலியப் பழங்குடி மொழிகள் தென் இந்தியாவில் வழங்கி வருவதிலிருந்தும், பஸிபிக் பெருங்கடல் அண்மையிலிருந்து பாலினீஸியர் என்ற கூட்டத்தார் பண்டைக் காலத்தில்

தென் இந்தியாவில் குடியேறியிருக்கலாம் என்பது, கார்வே அம்மையார் கொண்டுள்ள கருத்து. இனிமேல் தொடர்ந்து செய்யும் ஆராய்ச்சியால்தான் இதன் உண்மை நன்கு வெளியாக வேண்டும். இது நிற்க, பயிர்த்தொழிலாளி களான கோலர்கள் தன்னுட்சி உரிமையுடையோராய்ச் சிற்றூர்களில் வாழ்ந்து வந்தனர். சிற்றூர்க் குடிகள் அனை வரும் ஒருங்கே அமர்ந்து உண்பதும், வேட்டையாடுவதும் வழக்கமாயிருந்தன. முன்னோர்களை வழிபடுவதே அவர் களுடைய முக்கிய மதமாக இருந்தது. பேய் பிசாசுகளுக் கும் விலங்குகளுக்கும் பலியிட்டனர். அவர்களுடைய சில பழக்க வழக்கங்களைத் திராவிடர்கள் ஆதரித்து, பின் அவற்றை ஆரியர்களிடம் பரப்பியிருக்கலாம். எடுத்துக் காட்டாக, யானை முகத்தை உடைய கணேசரும், வானரத் தெய்வமாகிய அனுமானும், ஆஸ்திரேலியப் பழங்குடி மக்க ளின் இனச் சின்னங்களிலிருந்து தோன்றியிருக்கலாம். பேய், பிசாசு, குலதெய்வம் ஆகியவற்றில், இந்துக்களனை வருக்கும் ஒருவாறு நம்பிக்கை உண்டு. சிவ வழிபாடு, அதிலும் சிறப்பாக, பார்வதி, துர்க்கை முதலான பெயர் களில் நடைபெறும் காளி வழிபாடு எல்லாம், பழங்கால மக்களின் மதக்கோட்பாட்டைப் பின்பற்றியனவாகும்.

தென் இந்தியாவின் தலை சிறந்த குடிகள் திராவிடர் கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இவர்கள் ஒரு வேளை புதிய கற்காலம் தொட்டே இங்கு வாழ்ந்திருக்கலாம். இவர் தாய் நாடு யாதென்பது பற்றிப் பல கொள்கைகள் உள. மத்திய தரை நாடுகளில் தோன்றி, இமயமலைக் கணவாய்கள் வழியாக இந்தியாவிற்கு வந்து, வட மேற்குத் திசையில் முதன் முதற் குடியேறி, பிற்பாடு தெற்கே சென்றனர் எனச் சிலர் கருதுகின்றனர். பலூசிஸ்

தானத்தில் ஒரு கூட்டத்தார் பேசி வரும் ராஹிவி மொழி திராவிட மொழியை ஒத்திருப்பது, டர்கள் அவ் வழியே வந்ததற்குச் சான்ருகுமென் ந்திய தரை நாடுகளைச் சார்ந்த ஆசியா மைனரிலிருந்த லிஸியர்களுக்கு, அவர்களுடைய கல்வெட்டுக்களில், 'திம்மறலி' என்று பெயர் வழங்கியதாகத் தெரிகிறது. இது 'தமிழர்' என்னும் சொல்லுடன் சாலவும் பொருந்தியிருப்பதால், முற்கூறிய கொள்கைக்கு அரண் ஆகின்றது. கடவுள் வழிபாடு, கோவில் அமைப்பு இவற்றில் சுமேரியருக்கும் தமிழர் களுக்கும் ஒற்றுமை உளது. அதுவும் அக்கொள்கைக்கு ஆதரவே அளிக்கின்றது. மேலும், மத்தியதரை நாட்டு மக்களாகிய மிட்டானி, ஏலமையிற்று, காஸைற்று என்போர் மொழிகட்கும், திராவிட மொழிக்குமுள்ள சில ஒற்றுமையும், ஈரானிலுள்ள காஸ்பியர்களுக்கும், திராவிடர்களுக்கும், உடலமைப்பில் தோன்றும் ஒற்றுமையும் முன்னர்க் கூறி யுள்ளனவற்றிற்கு முதன்மையான சான்றுகள் எனக் குறிப்பிடுகின்றனர். மத்தியதரை மக்கள் ஈரானுக்கு வந்து, அங்கிருந்து ஒரு கூட்டத்தார் இந்தியாவை அடைந்திருக் கலாமென்பது இவர்கள் கருத்து. இங்ஙனம், உடற்கூறு, மொழி, பண்பாடு முதலியவற்றின் ஒற்றுமைகளை அடிப் படையாகக் கருதி, இக்கொள்கை தோன்றியுளது.

மங்கோலியா, திராவிடர்களின் பண்டைநாடு என்னும் பழைய கோட்பாடு ஒன்று உண்டு. எனினும், அதனை இப்பொழுது ஒப்புக்கொள்வார் ஒரு சிலரே ஆவார். உடலமைப்பும், சமூகப் பழக்க வழக்கங்களும், அஸ்ஸாமி லுள்ள காஸிகளுக்கும் கேரளத்தில் உள்ள ஒருசார் மக்களுக்கும் ஒத்திருத்தலையே, அன்னோர் வற்புறுத்துவர். ஆனல் இந்த ஒற்றுமைகள் எல்லாம் அடிப்படைக் காரணம்

ஒன்றுமின்றித் தற்செயலாய் ஏற்பட்டவை என்றுரைப் பாரும் உளர் ... டடக் கலையில் தென்னிந்தியப் பண்பாடும், காஸிகளுங் ... ண்பாடும் பல திறத்தில் வேற்றுமை யுடையன. வட கிழக்கு இந்தியாவில் இப்பண்பாடுகள் புதிய கற்காலத்தைச் சார்ந்தவை. தென் இந்தியாவிலோ இவை பொதுவாக இரும்புக் காலத்தைச் சார்ந்தவை. அன்றியும் இவ்விரு நாடுகளில் காணப்படும் பிரேதக் குழிக் கற்கட்டுகளின் அமைப்பிலும், சிற்ப முறையிலும் வேற் றுமையுள்ளன. ஆனல், மத்தியதரை நாட்டிலுள்ள பிரேதக் குழிக் கற்கட்டுகளின் அமைப்பு, தென் இந்தியாவிலுள்ள அமைப்புப் போலவே காணப்படுகின்றது. இவ்விரு நாட்டுக் கட்டுகளிலும், கட்டட விளிம்பிலுள்ள தொளைகள் காரணம் யாதுமின்றி ஒற்றுமை உடையனவாய் இரா. ஆகவே, மங்கோலியாவிலிருந்து திராவிடர் வந்தனரென்ற கொள்கை ஏற்றுக்கொள்ளத்தக்கது அன்று.

வெளி நாட்டிலிருந்து திராவிடர் இந்தியாவிற்கு வந்தனர் என்ற கொள்கைக்கு நேர் முரணுக, திராவிடர்கள் வழி வழியே இந்தியாவில் பிறந்து, இந்தியாவில் வாழ்ந்த ஆதி மக்களே என்னும் கொள்கை நிலவி வருகின்றது. அவர்களில் ஒரு வகுப்பினர் இந்தியாவிலிருந்து பலூசிஸ் தான், ஈரான் வழியே, சுமேரியா, மெசொபொட்டேமியா ஆகிய மத்தியதரை நாடுகளுக்குச் சென்று, ஆங்குக் குடியேறி வாழ்ந்தனர் என்பது, அறிஞர் சிலர் கருத்து. ஆனல், தென் இந்தியப் பிரேதக் குழிகளில் இரும்புப் பொருட்கள் காணப்பட்டமையாலும், மேற்கு ஆசியாவில் பழைய குழிகளில் அவை காணப்படாமையாலும், தென் இந்தியக் குழிகள் பிற்காலத்தன என்பது திண்ணம். ஆகவே, திராவிடர்கள் இங்கிருந்து அங்குச் சென்றிருப்பர்

என்னும் கொள்கை பொருத்தமில்லாதது. எதிர்கால ஆராய்ச்சித் திறனே இவ் வழக்குகளுக்குத் தீர்வு காண வல்லது.

மக்கள் போக்கு வரத்தின்றி, தங்களுக்குள் நெருங்கிய தோழமை காரணமாகவே சில பழக்க வழக்கங்கள் பரவி யிருக்கலாம் என்ற கருத்தும் ஒப்புக்கொள்ளக்கூடியதன்று. வாணிபம் சில மக்களுக்கு வெளியூருக்குப் போக வசதி யளித்த போதிலும், பெருவாரியாக மக்கள் தொடர்ந்து வெளியூருக்குச் சென்றிருப்பார்கள் என்று கருத இடமில்லை. தற்போது கிடைக்கும் போக்கு வரவு வசதிகளும், தற் காலத்தினர் மனப்பான்மைகளும், அந்தக் காலத்தில் இருந்தன என நினைப்பது எவ்வகையிலும் பொருத்த மற்றது. ஆகையால், மொத்தத்தில் இன்றைக்குள்ள அறிவில், திராவிடர் என்ற மக்கள் மத்தியதரை நாட்டி லிருந்து வந்து முதலாவதாக இந்தியாவில் வடமேற்குப் பகுதியில் குடியேறியிருக்கலாமென்று கருதுவதற்கு மேல், பிறிது ஒன்றும் சொல்ல இயலாது.

இது உண்மையாயின், எப்பொழுது திராவிடர்கள் இந்தியாவிற்குள் வந்து, அவரது தனி நாகரிகத்தை உரு வாக்கிக்கொண்டனர்? இக்கேள்விக்கு நாம் இதுகாறும் அறிந்த உண்மைகள் நமக்கு வழிகாட்டிகளாயிருக்க வேண்டுமே தவிர, இனப் பற்றோ, பிற விருப்பங்களோ, எக்கொள்கைகளுக்கும் தூண்டுகோலாயிருக்கக் கூடாது. நமக்குத் தெரிந்த உண்மைகளை மட்டிலும் சீர்தூக்கிப் பார்த்து முடிவுக்கு வருவதே முறை. அதாவது, அரிக்கா மேட்டுப் பழம் புதையற் பொருட்களினால் வரையறுக்கப் படும் கால நிர்ணய ஆதாரத்தையும், பண்டைத் தமிழ் நூல்களிலிருந்து கிடைக்கும் வரலாற்றுக் குறிப்புக்

களையும், அறிவிலும் ஆராய்ச்சியிலும் சிறந்த அயல் நாட்டுப் பிரயாணிகள் வரைந்து வைத்த கருத்துக்களையும், நிலநூல் வல்லுநர் கண்ட முடிபுகளையும் சீர்தூக்கிப் பார்த்தால், கி. பி. முதல் சில நூற்றுண்டுகளுக்குள் தமிழர் நாகரிகம் சிறந்த முற்போக்கு நிலையை அடைந் திருந்தது என்று தெரிகிறது. இதை நோக்குமிடத்து பிரமகிரியில் காணப்படும் பிரேதக் குழிக் கற்கட்டுகள், முன் கூறியது போல், கி. மு. ஏழாம் நூற்றுண்டுக்கு முன்னதாகவே, அதாவது, ஏறத்தாழ கி.மு. 10-ஆம் நூற்றுண்டைச் சார்ந்தனவாக இருக்கலாம். கி. மு. 2500-க்கும் 1500-க்கும் இடையேயுள்ள காலத்தில், திராவிடர்கள் மேற்கு ஆசியாவிலிருந்து புறப்பட்டு வந்திருக் கலாம். பித்தளை, வெண்கலம், இரும்பு இவை யாவும், அவர் அங்கிருந்து புறப்பட்ட காலத்திற்குப் பின் அல்லது ஒரு வேளை அவர் இந்தியாவிற்கு வந்த பின்னரே, தோன்றி யிருக்கலாம். மேற்கு ஆசியாவில் கி. மு. 2500 ஆண்டின் அண்மையில் வெண்கலம் தோன்றியதாக அறியப்படு கின்றது. ஆனல் திராவிடருக்கு அவர் புறப்படும்போது வெண்கலம் தெரிந்த அறிகுறி யாதும் காணேம். ஆகை யால், அவர் புறப்பட்ட காலம் கி. மு. 2500-இன் அண் மையில் இருந்திருக்கலாமென்று கருதலாம். கி. மு. 2000 முதல் 1200 வரையுள்ள காலத்தைச் சார்ந்தவையெனக் கருதப்படும் ஈட்டி, மண்வெட்டி முதலிய இரும்புச் சாமான் களும் தங்க வாய்மூடிகளும் பாலஸ்தீனம், சைப்ரஸ் ஆகிய இடங்களில் தென்படுவதுபோல் ஆதித்தநல்லூரில் கண் டிருப்பது, இந்த முடிவை வலியுறுத்துவது போலாகும்.

இது பற்றி ஒரு பெரும் வினு எழுந்துளது. அதாவது, வடமேற்கு இந்தியாவில், மொகஞ்சதரோ, ஹரப்பா

முதலிய இடங்களில் இக்காலத்தே தோண்டி எடுத்துள்ள பழம்பொருட்களிலிருந்து வெளியாகும் சிந்து வெளி நாகரிகத்தைத் தோற்றுவித்தவர்கள் திராவிடர்களா என்பதுதான். இது பெரும் விவாதத்துக்குரிய ஒரு பொருள். ஸர் ஜான் மார்ஷல் உட்படப் புதைபொருள் ஆராய்ச்சி வல்லுநர் பலர், திராவிடர்களே இந்நாகரிகத்தைத் தோற்றுவித்தவர் எனக் கருதுகின்றனர். ஆனால், திராவிடர்கள் இந்தியாவிற்கு கி. மு. 2500-ஆம் ஆண்டுக்குப் பின்னரே வந்திருப்பார்களாயின் ஏறத்தாழ கி. மு. 3000 ஆண்டுக்கு முன் தோன்றிய சிந்து வெளி நாகரிகத்தை அவர் தோற்றுவித்தார் எனக் கூறுவது சிறிதும் பொருந்தாது.

மத்தியதரை நாட்டுப் பழைய நாகரிகம் சிந்து வெளி நாகரிகத்தின்மீது பெருஞ்செல்வாக்குப் பெற்றிருந்தது மறுக்க முடியாதது. உண்மையில் மொகஞ்சதரோ, ஹரப்பா ஆகிய இடங்களிலிருந்து கிடைத்த சிதைவுப் பொருட்களினால் நாம் அறிந்துகொள்வது, இந்நகரங்களில் வாழ்ந்த பண்டை மக்கள் பல இனத்தைச் சார்ந்தவர்கள் என்பதேயாம். அவர்களில் முக்கியமாக ஆஸ்திரோலாயிட் பழங்குடி வகையினர், ஆல்பைனர், மத்திய தரையினர், மங்கோலியர் ஆகியோர் கலந்திருந்தனர். சிந்து வெளி நாகரிகத்தை உண்டு பண்ணினவர் திராவிடர்களே என வலியுறுத்திக் கூறுவது, வரலாற்றுக்கு முரணாகும். மேலும் அதனை ஆரியக் கலையுடனே இணைக்க முயல்வது அதை விடப் பெரிய முரணாம். ஆராய்ந்து பார்க்கின், மொகஞ்சதரோ, ஹரப்பா முதலியவற்றைச் சார்ந்த நாகரிகம் ஆரியரல்லாதவருடையது என்பது திண்ணம். இதற்குச் சான்றுகள் பல உள்ளன. வேத கால நாகரிகம் கிராமத்தைச்

சார்ந்தது. ஹரப்பா நாகரிகமோ நகரத்தைத் தழுவியது. ஹரப்பா மக்கள் மீனுக்கு உயர்ந்த இடம் கொடுத்திருந்தனர். வேத கால மக்களோ அதை வெறுத்தனர். ஹரப்பா மக்களுக்குக் காளை, புலி, யானை இவை பழக்கமாயிருந்தன. வேத கால மக்களுக்கோ புலியும் யானையும் அதிகமாகத் தெரியா. பசுவும் குதிரையுமே அவர்களுக்கு நன்கு பழக்கமாயிருந்தன. ஹரப்பா மக்களுடைய மதம், ஆசாரம், தெய்வங்கள், இலிங்கங்கள் திராவிடருடைய மதக் கொள்கைகளுடன் மிக ஒத்திருந்தன. வேத காலத்தில் ஆரியர் ஆண் தெய்வங்களைத்தான் வழிபட்டனர். இலிங்க ஆராதனையை வெறுத்தனர். மொகஞ்சதரோவில் கண்டெடுத்த ஒரு நாட்டியப் பெண்ணின் வெண்கல உருவத்தில், பழைய ஆஸ்திரோலாயிட் இனத்தாரின் அம்சங்கள் தெளிவாகப் புலப்படுகின்றன. பெரும்பாலும் அது மத்தியதரை நாகரிகம், பழைய ஆஸ்திரோலாயிட் நாகரிகத்துடன் கலந்து உருவாயிருக்கலாம். சிந்து வெளி நாகரிகத்தைத் தோற்றுவித்தவர் யாவரெனத் திட்டமாய் வரையறுக்க, அங்குக் கிடைத்த முத்திரையிலுள்ள எழுத்துக்கள் எந்த மொழியிலுள்ளவை என்று முடிவாக அறிந்தால்தான் முடியும். ஒரு வேளை திராவிடர்கள் புறப்படுவதற்கு முன்னரே மத்தியதரை மக்களில் ஒரு கூட்டத்தார் நாடோடிகளாக வந்து சிந்து நதிக் கரையில் குடியேறி அதற்கு முன்னிருந்த பண்டைய ஆஸ்திரோலாயிட் மக்களோடும் மங்கோலியரோடும் கலந்திருக்கலாம்.

சற்றுப் பின் வந்த திராவிடர்கள் சில காலம் வடமேற்கு இந்தியாவில் தங்கி, பிற்பாடு ஒருவேளை ஆரியரின் எதிர்ப்பினாலே தெற்கே வந்து குடியேறினர் போலும். திராவிடர்கள் அனைவரும் ஒரே கூட்டமாக வந்தனரெனக்

கூற முடியாது. ஒருகால் சில மத்தியதரை மக்கள் கடல் வழியாக வந்து இந்திய மேற்குக் கடலோரங்களில் தங்கி யிருக்கலாம். கேரளத்தில் பெரிய துறைமுகமாகப் பண்டு விளங்கிய முசிறியும், கேரள நாட்டுப் பேரூக்கமுடைய நாயர் மக்கள் பெயரும், அஸ்ஸிரியாவிலிருந்த சில வகுப் பினருடைய பெயர்களாய் (முசிறி, நாயிரி) இருந்தனவென அறிகிறோம். எவ்வழி வந்த போதிலும், திராவிடர்கள், முன்னிருந்த மக்களோடு, அதிலும் பண்டைய ஆஸ்திரோ லாயிட் இனத்தாரோடு கலந்து ஒன்று சேர்ந்தனர்.

இப்பொழுது இந்தியாவில் நீக்ரோ வகுப்பின் அம்சம் வெகுவாகத் தென்படுகிறதெனக் கூறுவதற்கில்லை. அவருக்குப் பின் இந்தியாவில் குடியேறிய மக்கள், சிறப் பாகப் பழைய ஆஸ்திரோலாயிட் வகையினர். அவரை நசுக்கித் தம்மோடு இணைத்துக்கொண்டனர். நீக்ரோ வகுப்பின் அம்சம் திருவிதாங்கூர் கொச்சியினைச் சார்ந்த காடர் போன்ற மலை வாசிகளிடமும், வையநாட்டு இருளர் கள், வட இந்தியாவில் சில மலையடிவாரத்தில் இருக்கும் மக்கள், இவர்களிடையேயும் காணப்படலாம். பழைய ஆஸ்திரோலாயிட் அம்சமானது திராவிடரால் விழுங்கப் பெற்றது. ஆரியர்களும் ஆரியரல்லாதார்களும் கலந்தனர். ஆனல் தென் இந்தியாவில், இந்தக் கலப்பு மிகக் குறைவா யிருந்தது. எனினும் தென் இந்திய மக்களின் இன அமைப்பு எளிதில் வரையறுக்கக்கூடிய முறையில் அமையவில்லை. அன்றியும், தென் இந்தியாவின் வரலாற் றுக்கு முன்னுள்ள காலத்தைப் பற்றிய அறிவு மிகக் குறை வாகவே இப்பொழுது இருந்து வருகிறதென்று உணர வேண்டும்.

## இயல் மூன்று

# பண்டைக்கால வெளிநாட்டுத் தொடர்புகள்

தென் இந்தியாவிற்கும், எகிப்து, மெசப்பொட் டேமியா, சுமேரியா, பாலஸ்தீனம் முதலிய நாடுகளுக்கும் இடையே வாணிகத் தொடர்புகள் நெடுங்காலத்திற்கு முன்னமே தோன்றின. எகிப்தோடுள்ள வாணிகம் மிகப் பழமையானதென்பதற்குச் சான்றுகள் பல உள. எகிப்து மன்னர்கள் மெல்லிய துணி வகைகளையும் கருங்காலிக் கட்டைகளையும் வரவழைத்ததாகக் கூறப்படுகின்றது. இவை தென் இந்தியாவிலிருந்தே சென்றிருக்க வேண்டும். எகிப்திலுள்ள கி. மு. 15-வது நூற்றாண்டுக் கல்வெட்டுக் களில் குறிப்பிடப்பட்டிருக்கும் இலவங்கப் பட்டை, சேர நாடாகிய கேரளத்திலிருந்து சென்றதாகவே இருக்கலாம். அன்றியும், கி. மு. 800-க்கு முன்னிருந்தே தென் இந்தி யாவிற்கும் மேற்கு ஆசிய நாடுகளுக்கும் பாரசீகக் கடல், செங்கடல், இவை இரண்டிலுமுள்ள துறைமுகங்கள் வழி யாகக் கடல் வாணிகம் நடந்ததற்குச் சான்றுகளும் உள. பாலஸ்தீனத்தை கி. மு. எட்டாவது நூற்றாண்டில் ஆட்சி புரிந்த சாலமனுக்கு மூன்றாண்டிற்கொரு முறை பல அரிய பொருட்கள் பரிசுகளாகக் கப்பலில் அனுப்பப்பட்டு வந்தன. தங்கம், வெள்ளி, தந்தம், குரங்குகள், மயில்கள், சந்தனக் கட்டைகள், வைரங்கள் முதலியன சாலமனுக்குச் சென்ற பொருட்களுள் சிலவாம். அவற்றுள், மயில்

களும், சந்தனக் கட்டைகளுமேனுந் தென் இந்தியாவி·லிருந்து சென்றிருக்க வேண்டுமென்பது திண்ணம். ஏனென்ருல் அவற்றைக் குறிக்க ஹீப்ரூ மொழியில் வழங்கும் சொற்களாகிய 'துக்கீம்', 'ஆல்மக்' என்பன, முறையே தமிழ்ச் சொற்களாகிய 'தோகை', 'அகில்' என்பனவற்றிலிருந்து தோன்றினவென்பதற்கு ஐயமில்லை. மேலும் சுமேரியத் தலைநகரமாகிய முகீயரிலிருந்த சந்திரன் கோவிலிலும், நெபுக்கட் நஸார் மன்னனின் அரண்மனையிலும் மலபாரிலிருந்து சென்ற தேக்குக் கட்டைகள் காணப்படுகின்றன. இவை கி. மு. 6-ஆம் நூற்ருண்டைச் சார்ந்தவையென நிபுணர்கள் திட்டப்படுத்தியுள்ளனர். ஆகவே, இக்குறிப்புக்களிலிருந்தெல்லாம், தென் இந்தியாவிற்கும் மேற்கு ஆசியாவிற்கும் குறைந்தது கி. மு. ஆரும் நூற்ருண்டிலிருந்தாவது வாணிகம் நடந்திருக்க வேண்டுமெனக் கொள்ளலாம். அன்றியும், பாபிலோனில் ஆடைகளை விவரிக்கும் பட்டியல் ஒன்றில் 'ஸிந்து' என்ற பெயர் காணப்படுகிறது. வெண் துகிலைக் குறிப்பிடும் இச்சொல்லானது கன்னடத்திலும் துளுவிலும் வழங்கி வரும் 'சிந்தி' என்ற பழைய திராவிடச் சொல்லிலிருந்து தோன்றியதாயிருக்கலாம். இது தென் இந்தியாவோடு பாபிலோனியா நடத்திய வாணிகத் தொடர்பை விளக்குவதற்கேற்ற சான்ருகும்.

ஐரோப்பாவோடு தென் இந்தியா ஏறத்தாழ கி. மு. 500 முதல் வாணிகம் தொடங்கியது. தென் இந்தியப் பொருட்களை மேற்கு ஆசியாவிலிருந்து பெற்று, ஐரோப்பாவிற்கு எடுத்துச் சென்று, விற்பனை செய்தவர்கள் கிரேக்கர்களே. ஆகையால், தென் இந்தியப் பொருட்கள் சிலவற்றின் தமிழ்ப் பெயர்கள் கிரேக்க மொழியில் புகுந்தது விந்தையன்று. சோபாக்கிளிஸ், அரிஸ்டோபேனிஸ்

முதலியோரின் நூல்களில் இப்பெயர்கள் நுழைந்து விட்டன. தமிழ் 'அரிசி'யிலிருந்து கிரேக்க 'ஒரிசி' யும், 'கறுவாயி'லிருந்து 'கற்பியனு'ம், 'இஞ்சிவேரில்' இருந்து 'சிக்கிபெரோசும்', பிப்பலி'யிலிருந்து 'பெப்பரி' யும் அவ்விதம் பெயர்ந்து சென்ற மொழிகளாகும். கிறிஸ்து அப்தத்தின் ஆரம்ப நூற்றுண்டுகளில், ஐரோப்பாவோடு நடைபெற்ற தென் இந்திய வாணிகத்தைப் பற்றிய விவரங்கள் பல கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் மிகச் சிறந்தவை உரோம் வல்லரசர் அகஸ்ற்றஸின் காலத்தைச் சார்ந்த ஸ்டிராபோவின் விவரணம், சுமார் கி. பி. 60-இல் தோன்றியுள்ள பெரிபுளுஸ் எனும் நூல், பிளினியின் 'இயற்கை வரலாறு' (சு.கி. பி. 77), தாலமியின் 'பூகோள விவரணம்' (சு. கி. பி. 150) என்னும் நூல்கள். இவ் வெளிநாட்டு அறிஞர்கள் குறிப்பிட்டிருக்கும் நுண்ணிய விவரங்கள், சங்க நூல்கள் பலவற்றில் காணப்படும் கருத்துக்களுக்கு மிகப் பொருத்தமாயிருக்கின்றன. சில ஆண்டுகளுக்கு முன் புதுச்சேரிக்கடுத்த அரிக்காமேட்டில் கிடைத்த புதை பொருள்களும், தென் இந்தியாவில் பல இடங்களில் தோண்டியெடுத்த நாணயங்களும், ஐரோப்பா வோடு நடந்த வாணிகத்தை நன்கு விளக்குகின்றன. மலபார் கடற்கரையில் பல துறைமுகங்கள் திகழ்ந்தன. அவற்றுள் டிண்டிஸ் (தற்போதைய பொன்னுனி), முசிறி (கிராங்கனூர்), நெல்கின்ரு, (கோட்டயம்), குமரி முதலியன சிறந்தவையாம். கிழக்குக் கரையில் கொல்கோய் (கொற்கை), நிகமா (நாகப்பட்டினம்), காமரு (காவிரிப் பூம்பட்டினம்), பொதுகை (புதுச்சேரி), சொபத்மா (மரக் காணம்), ஒரிஸ்ஸாவிலுள்ள தசார்ண முதலியவையாகும். மேற்குக் கரையில் தொண்டி, முசிறி தவிரப் பந்தரையும்,

கிழக்குக் கரையில் காவிரிப்பூம்பட்டினத்தையும், சாலி. யூரையும், சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

தென் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியான பொருட்கள் பலவகைப் பட்டவை. அவற்றுள், முத்து, வைரம், இரத்தினக் கற்கள், மிளகு, கருங்காலி, தேக்கு, கருமருது, சந்தனம், வெண்துகில், (மஸ்லின்), அரிசி, ஏலக்காய், இலவங்கப்பட்டை, இஞ்சி முதலியன சிறப்பானவை. சிங்கம், கடுவாய், புலி, குரங்கு முதலிய மிருகங்களும், மயில், கிளி போன்ற பறவைகளும் ஏற்றுமதியாயின. இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களில் பவளம், கண்ணடி, ஈயம், பித்தளை, தகரம், ஜாடி, திராட்சை ரசம் முதலியன முக்கியமானவை. அடிமைகளும், இளமைப் பருவமுடைய மகளிரும் கிரேக்க நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டனர். இப்பெண்களில் பலர் சிறந்த இசைப் பயிற்சியும், அழகும் வாய்ந்தவர்.

உரோம் பேரரசர்கள் ஆட்சி புரியத் தொடங்கிய காலத்தில், தென் இந்திய வாணிகம் மிகச் சிறந்த நிலையை அடைந்தது. பாண்டிய மன்னனிடமிருந்து சென்ற அரசியல் தூதரை அகஸ்ற்றஸ் பேரரசர் வரவேற்றார். மேல் நாட்டிலிருந்து கடல் வழியாய் மலபாருக்குச் செல்ல ஒரு புதிய குறுக்கு வழியை ஹிப்பாலஸ் என்ற மாலுமி கி. பி. 45-இல் கண்டுபிடித்ததாகக் கூறுவதுண்டு. அதன் பயனாகப் பெரிய கப்பல்களின் போக்குவரவு எளிதாயிற்று; அன்றியும், முன்போல் கரையோரமாகவே செல்ல வேண்டிய கட்டாயமும் இல்லாதொழிந்தது. பருவக் காற்றைத் தழுவி நடுக்கடல் வழியே நேராக விரைவில் வர முடிந்தது. அவன் பயனாக கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் இந்தியாவுடன் நடைபெற்ற உரோமின்

வாணிகம் மிகப் பெருகியது. தென் இந்தியாவிலுள்ள நகரங்கள் சிலவற்றில் உரோம் நாட்டு வணிகர்கள் குடியேறினார்கள். அரிக்காமேட்டில் உரோமரின் தொழிற்சாலையும் வாணிகச் சாலையும் செழித்து விளங்கின. அக்காலத்திலுள்ள மத்தியதரை நாட்டுப் பொருட்களும், மண்பாண்டங்களும், அங்குக் கிடைத்த சேதங்களில் காணப்பட்டுள்ளன. இந்தியாவிலிருந்து மிகுதியாகப் பொருட்கள் இறக்குமதியாகவே, உரோமாபுரி மக்களுக்குச் சுகபோக உல்லாசப் பொருட்களில் பெரும் பற்று வளர்ந்தது. அவற்றிற்காக மிகுந்த பொன் நாட்டிலிருந்து வெளியேறியதனால் அரசியல் தலைவர்களிடையே மாபெருங் கிளர்ச்சி எழுந்தது. இந்திய வாணிகத்தினால் உரோமிலிருந்து ஆண்டுதோறும் ஆறு இலட்சம் பவுனுக்கு மேல் வெளியேறியது எனப் பிளினி முறையிட்டார்.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் கிரேக்கர்களுடைய நிலை தளரவே, அராபியர்கள் இந்த வர்த்தகத்தை நடத்த முன் வந்தனர். உரோம் பேரரசர் நீரோ கி. பி. 68-இல் இறந்த பின், தமிழ் நாட்டோடு நடந்த உரோமை வாணிகம் குன்றியது. ஆனால், தக்காணத்தின் வடமேற்குக் கரையிலுள்ள நாடுகளோடு அது பின்னும் தொடர்ந்து நடந்து வந்ததாகவே தோன்றுகிறது. தக்காணத்திலுள்ள தேர் (தாகரா), ஸொபாரா, பைதான், கல்யாண் போன்ற பல துறைமுகங்களைப் பெரிபுளூஸ் நூல் குறிப்பிடுகிறது. தமிழகத்தில் உரோமின் வாணிகம் கி. பி. 4-வது நூற்றாண்டில் புத்துயிர் பெற்றதெனலாம். ஆனால், அதன் பயன் நீடிக்கவில்லை. உரோமாபுரியில் நிகழ்ந்த சில அரசியல் மாறுதல்கள் வாணிகத்திற்குத் தடையை விளைவித்தன.

வெளி நாட்டு வாணிகம் நடத்தியவர் பெரும்பாலும் இந்தியர்கள் அல்லர் என்பதை உணர வேண்டும். மகா வீரர் அலக்ஸாண்டர் காலத்திற்கு முன், செங்கடலுக்கு அல்லது பாபிலோனுக்கு அப்பால் இந்தியர் செல்லவில்லை. அதற்குமேல் கிரேக்கர்களும், எகிப்தியர்களும், பிற் காலத்தில் அராபியர்களுமே, உரோமருடன் வாணிகம் நடத்தி வந்தனர். ஆனல், அவர்களும், அலக்ஸாண்டிரியா விற்குக் கொண்டுவந்திருந்த பொருட்களை வாங்கி, அங்கிருந்து எடுத்துச் சென்று ஐரோப்பாவின் பல நாடு களில் வாணிகம் செய்தனர்.

செங்கடலுக்கு மேற்கே இந்திய மாலுமிகள் வாணி கத்தின் பொருட்டுச் செல்லவில்லையாயினும், அவர்கள் கடல் கடந்து வெளியூர்களுக்குப் போவதில் ஊக்க முடையவராகவே இருந்தனர். கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் மூன்று தரமான மரக்கலங்களை அவர்கள் கையாண்டு வந்தனர் என்று பெரிபுளூஸ் நூல் கூறுகின்றது. அவை கடலோரமாகப் போய் வந்த பெரிய சாளரங்களும், ஒற்றை மரக் கட்டைகளால் இணைக்கப்பட்ட கப்பல்களும், கடின யாத்திரைகளுக்குப் பயன்படுத்திய மிகப் பெரிய கப்பல்களும் ஆகும்.

மேல் நாடுகளோடு வாணிகம் செய்ததுமன்றி, அதே காலத்தில், இந்தியர் கீழ் நாடுகளோடும் வாணிகம் ஊக்க மாய் நடத்தி வந்தனர். கிழக்கில், சீனவோடு தென் இந்தியா நீண்ட காலத்திற்கு முன்னமே வாணிகம் தொடங் கியது. கி. மு. ஏழாவது நூற்றுண்டிலேயே சீனவிற்கு இந்தியப் பொருட்கள் சென்றதாகச் சீன வரலாறுகள் கூறு கின்றன. தமிழில் பட்டுக்குச் சீனமென்றும், சர்க்கரைக்குச் சீனி என்றும் வழங்கி வரும் பெயர்கள், சீன நாட்டுடன்

முற்காலத்தில் இருந்த தொடர்பை நன்கு துலக்குகின்றன. மேலும் பிலிப்பியன் நாடுகளில் கிடைத்த கத்திகள், கோடரிகள், ஈட்டிகள் முதலான புதை பொருட்கள், தென் இந்தியாவில் சுமார் கி. மு. 10-ஆம் நூற்ருண்டில் வழங்கிய பொருட்களை ஒத்திருக்கின்றன. இவை போன்ற புதை பொருட்களை, மலாயா, ஜாவா, வடக்குப் போர்னியோ முதலிய இடங்களிலும் கண்டுள்ளனர். இவற்றையெல்லாம் கண்டுபிடித்த செயல்களால், வட பிலிப்பியனேடு தென் இந்தியாவிற்கு கி. மு. 1000 ஆண்டுமுதலே வாணிகத் தொடர்பு இருந்தமை தெளிவாகின்றது.

கி. பி. ஆரம்ப நூற்ருண்டுகளில் இந்தியாவே உரோமுக்கும் கீழ் நாடுகளுக்கும் நடுநிலையில் நின்று வாணிகம் நடத்தி வந்ததெனத் தெரிகிறது. இந்தியர் சீன, மலாயா, இவற்றின் அண்மையிலுள்ள நாடுகளில் சரக்குகளை வாங்கி ஐரோப்பியர்களுக்கு விற்பனை செய்தனர். தென் இந்தியக் கீழ்க் கரையில் தமிழர்கள் மட்டுமன்றி, ஆந்திரர், ஓரியர்கள் தாமும் வாணிகத்தில் ஊக்கமாய் ஈடு பட்டனர். ஆந்திர நாட்டு மஸாலியாவெனும் இடத்தில் நேரிய மஸ்லின் துணி நெய்தனர் எனவும், ஓரிஸாவில் தங்கத்தினல் மிகச் சிறந்த பொருட்கள் செய்தனர் எனவும் பெரிபுளுஸ் நூல் கூறுகின்றது. கி. மு. நான்காவது நூற்ருண்டிற்குப் பின் மேல்நாட்டுடன் நடத்திவந்த இந்திய வாணிகம் குன்றிய போதிலும், கீழ்நாட்டுடனே நடத்திய வாணிகம் குறைவுபடாமல் இருந்தது. இந்நிலை கீழ் நாடுகளில் இந்தியர் குடியேறி, ஆங்குத் தம் கலைகளைப் பரப்புதற்கு மிகுந்த வசதி அளித்தது என்பது, நினைவில் பதிக்கத்தக்கதாகும்.

வெளி நாடுகளுடன் இவ்வளவு அகன்ற வாணிகத் தொடர்பு கொண்டிருந்த தென் இந்தியாவில், உள் நாட்டு வாணிகமும் ஓங்கி வளர்ந்திருந்தது என்பதற்கு ஐயமில்லை. வாணிகர் பொதி சுமக்கும் விலங்குகள் மீதும், வண்டிகள் மேலும் சரக்குகளை எடுத்துக்கொண்டு, கூட்டம் கூட்டமாகச் சென்று, விற்பனை செய்தனரெனச் சங்க நூல்கள் பல அறிவிக்கின்றன. ஒவ்வொரு வாரமும் குறிப்பிட்ட நாட்களிலும், விழாக் காலங்களிலும் சந்தைகள் கூடின. இச்சந்தைகளில் பெருவாரியாகப் பண்டமாற்று முறையில் வாணிகம் நடைபெற்றது. சில நகரங்கள் சில பொருட்களை விற்பனை செய்யும் திறத்தில் சிறப்புப் பெற்றிருந்தன. எடுத்துக்காட்டாக, பருத்தி வாணிகத்தில் உறையூர் முதன்மை பெற்று விளங்கியது.

தென் இந்தியாவிற்கும் வட இந்தியாவிற்கும் பண்டைக் காலந்தொட்டே வாணிகத் தொடர்பு இருந்து வந்தது. ஆனால் கி. மு. மூன்றாவது நூற்றாண்டு முதல் அவ்வாணிகம் உன்னத நிலையை அடைந்ததென்பதற்கு ஐயமில்லை. பாண்டி நாட்டைப் பற்றிய பல விவரங்களையும், ஆங்குப் புகழ் பெற்ற முத்துத் துறையையும் மெகாஸ்தனீஸ் எனும் கிரேக்கர் குறிப்பிட்டுள்ளார். கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் என்னும் பொருள் நூலும் தென் இந்தியாவோடு வட இந்தியா கொண்டிருந்த வாணிகத் தொடர்பு பற்றி விரிவாகக் கூறுகிறது. தண்பொருநையின்[1] முத்துக்களைப் பற்றி மட்டுமே அன்றி, மதுரைப் பருத்தி ஆடைகளைப் பற்றியும், அந்நூல் குறிப்பிடுகிறது. தென் இந்தியாவோடு செய்த வாணிகம் மேற்கு கிழக்கு இரு பக்கமுமுள்ள கடல் வழியாக, குறிப்பாகக் கிழக்கிலுள்ள

1. தாமிரபரணி

வங்காளக் குடாக் கடல் வழியாக, நடைபெற்றிருக்க வேண்டும்.

வட இந்தியாவிற்கும் தென் இந்தியாவிற்குமுள்ள தொடர்பு, வாணிகத்துடனே மட்டும் நின்றுவிடவில்லை. ஆரியர் சிறு சிறு கூட்டமாகத் தென் இந்தியாவில் வந்து குடியேறினர். இது முற்காலந்தொட்டே நடந்து வந்தது. அங்ஙனம் வந்து சேர்ந்த ஆரியர், தென் நாட்டு அரசர்களின் அன்பையும், ஆதரவையும் பெற்றதனுல், அவரது செல்வாக்கு நாளுக்கு நாள் வளர்ந்தது. அவர்கள் பழக்க வழக்கங்களும், கொள்கைகளும், தென் நாட்டு மக்களிடையே பரவின. ஆரியர் திராவிடர் இவ்விரு வகுப்பினருடைய செயல்களும், பண்புகளும், கொள்கைகளும் இணைந்து, ஒரு தனிக் கூட்டுப் பண்பாடு நாளடைவில் உருவானதெனக் கூறலாம்.

ஆனுல், அக்காலத்தில் ஆரியர் வருகையும், அவர் கொள்கைகள் தென்னுட்டில் பரவிய முறையும் நிதானமாகவே நிகழ்ந்தன என்னும் உண்மையை இக்கால வரலாற்று அறிஞர் பலர் உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை. ஆரிய நாகரிகம் தென் இந்தியாவில் விரைவாகப் பரவி, தன் ஆதிக்கத்தை ஏற்படுத்திக்கொண்டது என்று வரலாற்று நூல் வல்லுநர் பலரும் எளிதாகக் கூறிவிடுகின்றனர். அது முற்றிலும் ஒப்புக்கொள்ளக்கூடியதன்று. உண்மையில், தென் இந்தியாவில் ஆரியர் தொடர்பு, காள் நாட்டில் (அதாவது, தற்போதைய பிரான்ஸ் நாடு) உரோமர் அமைத்த அவரது ஆதிக்கம் போல், அவ்வளவு வெற்றி முறையாகவோ ஒருதலைப்பட்ட முறையாகவோ அமைந்தது அன்று. திராவிடர் பழக்க வழக்கங்கள், மதக்கொள்கைகள், மொழிவழிகள்

யாவையும் ஒரு சில வகையில் மாறுதல் அடைந்தன. என்பது உண்மை. ஆயினும், வெகு காலமாக வேரூன்றி யிருந்த பண்டைய நாகரிகமும், பண்பாடும், தொடர்ந்து வளர்ந்தன. உண்மையில் இரு நாகரிகங்களும் கலந்து புத்துயிர் பெற்றன என்று கருதலாம். ஒரு பக்கம் ஆரியர் கொள்கைகளும் செயல்களும் திராவிட மக்களிடையே பரவின. மறுபக்கம் திராவிடர் கருத்துக்களையும் பழக்க வழக்கங்களையும் ஆரியர் பின்பற்றினர். மாமன் மகளை மணத்தல், திருமணச் சடங்கின் போது மஞ்சள் குங்குமம் அணிதல், வெற்றிலை, தேங்காய் முதலியவற்றைச் சடங்கு களில் கையாளுதல், உடன் கட்டை ஏறுதல், கைம் பெண்டிர் கூந்தல் களைதல் முதலியன யாவும், ஆரியர்கள் திராவிடர்களிடமிருந்து கைக்கொண்ட பழக்க வழக் கங்களே ஆகும். கடவுளைப் பற்றிய சில நம்பிக்கைகள், கதைகள் முதலியன, ஆரியரல்லாதார்பால் ஆரியர் தெரிந்து பின்பற்றியன ஆகும். சில தெய்வங்கள் பெயர்களையும் கோட்பாடுகளையும் திராவிடர்பால் ஆரியர் அறிந்து, அவற்றைத் தம் மதத்தில் இணைத்துக்கொண்டனர். இவ்வாறு இந்து மதம் உருவாகியது. ஆரியர், திராவிடர் ஆகிய இரு இனத்தாரின் பழங்கதைகளும் புராணங்களில் ஒருங்கே அமைந்துள்ளன. சுருங்கச் சொல்லின், தென் இந்தியாவில் இவ்விரு கூட்டத்தாரின் பண்பாடுகளும் கலந்து ஒன்றுபட்ட தன்மை, ஓரளவில் கிரீஸ் நாட்டில் ஹெலனீஸ் நாகரிகமும் அவருக்கு முன் அங்கு வாழ்ந் திருந்த ஏஜியன் மக்கள் நாகரிகமும் கலந்து ஒன்றுபட்டு இணைந்து, கிரேக்க நாகரிகமாய்த் திகழ்ந்ததற்கு ஒப்பாயது எனக் கூறலாம். கிரீஸில் நிகழ்ந்த மாற்றம் காள் இனத்தினரை உரோமர்கள் மாற்றியதே போல்,

முன்னிருந்த பண்பாட்டை முற்றிலும் நீக்கி, புதிய நாகரிகத்தை வலிந்து புகுத்தியதன்று.

ஆரியர் தம் நாகரிகத்தைத் திராவிடர்பால் புகுத்தும் பொருட்டு, பெரும் படைக் கூட்டங்களோடு திரள் திரளாக வந்து, தென்னாட்டு மக்களை அடக்கி ஒடுக்கித் தம் கட்டுப் பாடுகளுக்குட்படுத்தினர் என்று கருதுதற்குரிய சான்றுகள் இல. ஆரிய வர்த்தத்தின் அண்மையிலிருந்த விதர்ப்பம், மகாராஷ்டிரம் என்ற இரு நாடுகளிலேதான், ஆரியர் பெரு வாரியாக வந்து குடியேறி, முந்திய நாகரிகத்தை அறவே அகற்றி, தமது நாகரிகத்தைப் புகுத்தினர் என்று கூறலாம். இவ்விரு நாடுகளுக்கும் தெற்கே நிலவியிருந்த தென் இந்தியப் பகுதியில் ஆரியர் சிறு சிறு கூட்ட மாகவே வந்திருக்க வேண்டும். ஆரியர் தென் நாட்டைப் போரில் வென்று, தமது ஆணைக்குள் அடக்கி வைத்தனர் என்று இராமாயணத்திலிருந்து மேற்கோள் காண்பித்து விவாதம் செய்யும் கூற்றுச் சிறிதும் பொருத்தமற்றது. அக்கருத்தை ஒப்புக்கொள்ளப் போதிய சான்றுகள் இல்லை. ஆரியர்களைத் தென்னாட்டில் குடியேற்றும் முயற்சியில் அகத்தியர் ஈடுபட்டு உழைத்தார் என்று சொல்லும் எண்ணற்ற கதைகளையும் ஒப்புக்கொள்ள முடியாது. இருக்குவேதம், மகாபாரதம், இராமாயணம், புராண காவியங்கள், பிற்காலத் தமிழ் இலக்கியங்கள் இவை யாவற்றிலும் அகத்தியரைப் பற்றிப் பல கதைகள் காண்கின்றோம் ; ஆனாலும், ஒரே வகையான கதைகளையும், செயல்களையும், மீண்டு மீண்டும், பன்முறை புனைந்து கூறுதலால் மட்டுமே, அவற்றை உண்மையெனப் பிறர் ஒப்புக்கொள்ளார்.

ஆந்திரர், புந்திரர், சப்ராக்கள், புளிந்தர், மூதிபர் முதலாய தஸ்யுக்கள் அனைவரும், விசுவாமித்திரரின் புதல்வர் ஐம்பதின்மர் குலத்தினர் என்ற கதை வழக்கை ஐதரேய பிராமணம் குறிப்பிடுகின்றது. இந்தக் கதை தக்காணத்தில் வாழ்ந்த சில திராவிட வகுப்பினருடன் ஆரியர் கலப்பு மணம் செய்த நிகழ்ச்சியை விளக்கும் எனக் கூறுவர் ஒரு சாரார். ஆனால், இதைத் திட்டமாய் ஒப்புக்கொள்ளுவதற்கு இடம் இல்லை. வட இந்தியாவின் நிலப்பகுதிகளைப்பற்றித் தெளிவாகக் கூறியுள்ள இலக்கண நூலாசிரியர் பாணினி முனிவர் (சு. கி. மு. 600), நருமதை ஆற்றிற்குத் தெற்கில் கலிங்கத்தைத் தவிர வேறு எந்த நாட்டைப் பற்றியும் அறிந்திருந்ததாகத் தென்படவில்லை. ஆகையால், ஆரியர் தென் இந்தியாவிற்குள் வந்தது கி.மு. ஆறாவது நூற்றாண்டிற்குப் பின்னரேதான் என்று தோன்றுகின்றது. கி. மு. நான்காவது நூற்றாண்டைச் சார்ந்த இலக்கண நூலாசிரியர் காத்தியாயனர் தெற்குக் கோடியிலுள்ள ஊர்கள் உள்ளிட்ட யாவற்றையும் குறிப்பிட்டுள்ளார். ஆகையால், ஏறத்தாழ கி.மு. ஆறாவது நூற்றாண்டிற்குப் பின்னும், கி.மு. நான்காவது நூற்றாண்டிற்கு முன்னும், ஆரியர் தெற்கே வரத் தொடங்கினரெனக் கருதலாம்.

ஆரியர் தெற்கே வரக் காரணம் என்ன? அவர் முதலில் நாடோடிகளாய் அலைந்து திரிந்தனர் எனவும், இறுதியாக வட இந்தியாவுக்கு யாத்திரை வந்தனர் எனவும், அவ் யாத்திரையின் தொடர்ச்சியாகவே தெற்கே வந்தனர் எனவும், கருத இடமில்லை. ஏனெனில், அவர்கள் இந்தியாவை அடைந்து, கங்கை, யமுனை முதலிய பேராறுகளில் செழிப்பான பள்ளத்தாக்குகளில் நெடுங்காலம் தங்கி

யிருந்த பின்னரேதான் தெற்கே புறப்பட்டிருக்க வேண்டும். மக்கள் தொகை பெருகிவிட்டது என்றும், வெளிநாட்டு மக்கள் ஒருசாரார் அவரைத் தாக்கினர் என்றும், அதனல் அவர் வட இந்தியாவை விட்டகன்று தென் இந்தியாவை நாடி வந்தனர் என்றும், பலவாறு எண்ணற்குரிய சான்று கள் எவையும் இல. ஆர்யா வர்த்தத்தின் தெற்கு எல்லே விந்திய மலேதான் என மனு கூறியுள்ளது இக்கட்டத்தில் ஈண்டு நினேவூட்டற்பாலது. ஆகையால், அவர்கள் தங்கள் நாட்டிற்குக் கற்பித்திருந்த எல்லேயையும் தாண்டி, தெற்கே வரக் காரணம் யாது? குடியிருப்பை மட்டும் நாடி வந்திருக்க முடியாது. ஒரு சிலரை நாடோடி வீர வாழ்க்கை யின் வேட்கை தூண்டியிருக்கலாம். எனினும், மதப் பற்றுதான் முக்கிய நோக்கமாயிருந்திருக்கும் எனக் கருத இடமுண்டு.

பௌத்த சமணத் துறவிகள் தனிமையான வாழ்வை நாடியும், பிற்காலத்தில் அவரவர் மதக் கொள்கைகளேப் பிரசாரம் செய்தற்பொருட்டும் வந்ததற்குப் பின்னரே தொடர்ச்சியாக ஆரியர் தென் இந்தியாவில் குடியேறத் தொடங்கினரெனக் கூறலாம். தென்னுட்டின் தென் கோடியி லுள்ள குகைகளில் கி.மு. மூன்ரும் இரண்டாம் நூற்ருண்டு களேச் சார்ந்த பிராமி எழுத்தில் பொறித்திருக்கும் கல்வெட்டுகள் பல காணப்படுகின்றன. புத்த பகவானேடு தொடர்புள்ள பெயர்களில் ஒன்று ‘பாண்டவப் பதா’ என்பது. மேற்கூறிய குகைகள் இருக்குமிடத்தைத் தமிழ் நாட்டில் ‘பஞ்ச பாண்டவ மலே’ என்ற பெயரால் அழைத்து வருவதும் கவனித்தற்குரியது. பௌத்தர் தம் மதத்தைப் பரப்புவதற்காகத் தென்னுட்டிற்கும் வந்திருக்கலாம்.

ஆந்திர நாட்டு மக்கள் பெருவாரியாகப் பௌத்த மதத்தைத் தழுவியிருந்தனர் என்பதை அசோக சாசனம் 13-ஆம் கல்வெட்டுத் தெளிவிக்கின்றது. குண்டூர் மாவட்டத்தைச் சார்ந்த பட்டிப்ரோலுவில் கி.மு. மூன்றும் நூற்றுண்டில் பொறித்த கல்வெட்டுக்களும் இதை உறுதிப் படுத்துகின்றன. அசோகரது காலத்திலேயே தெற்கில் காஞ்சிபுரம் புத்த மதத்தின் தரும பீடமாய் விளங்கிய தென்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

அதுபோலவே, கி.மு. மூன்றும் நூற்றுண்டில் சமணர் களும் தெற்கில் குடியேறினதாகத் தெரிகிறது. மதுரை, திருநெல்வேலி, இம்மாவட்டங்களிலுள்ள குகைக் கல்வெட்டுகள் சில சமணர்களைச் சார்ந்தவை. மேலும், மௌரியப் பேரரசர் சந்திரகுப்தர் காலத்து பத்திரபாகு என்பார், வட நாட்டில் தோன்றிய பஞ்சத்திலிருந்து தப்பித்துக்கொள்ளும் பொருட்டு, ஒரு சமணர் கூட்டத் தினருடன் மைசூரில் குடியேறினரெனச் சமணர்கள் பலர் கூறுகின்றனர். அதற்குப் பின் திகம்பரப் பிரசாரகர் ஆகிய விசாகாசாரியர் மற்ருெரு கூட்டத்தாரோடு தமிழ் நாட்டுக்குள் புகுந்தார். இக்காலம் முதல்தான் சமணர்கள் மதபோதனையில் இங்கு ஈடுபட்டதாகக் கூறலாம். தமிழகத்தில் சமணத்தைப் பரப்ப முயன்றவருள் குண்டகண்டாசாரியரென்பர் மிகச் சிறந்தவர். அவரைத் தொடர்ந்து கி.பி. இரண்டாம் நூற்றுண்டில் சாமந்தபத்திரர் முதலிய பல மத போதனுசாரியர்களும் வந்துகொண் டிருந்தனர். கன்னட நாட்டிலும் சமண சமயப் பிரசாரகர் பலர் வந்தனர். கி.பி. இரண்டாவது நூற்றுண்டில் கங்கர் ஆங்குச் சென்று தம் ஆட்சியை அமைப்பதற்குள், சமணம் ஆங்கு வேரூன்றிவிட்டது ; அதற்குப் பின்னர் அம்மன்னர்

களும் சமணத்தை நன்கு போற்றி வந்தனர். மேற்குக் கரை நாட்டிலும், பௌத்தர்களும் சமணர்களும் புகுந்தனர்; அவர்களுடைய குகைகள் பலவற்றைத் திருவாங்கூரில் இன்றும் காணலாம். நாலடி நானூறு என்னும் தமிழ் நீதிநூல் தோன்றிய காலத்தில், சமண முனிவர் எண்ணாயிரவர், வடக்கே தம் நாடுகளில் பஞ்சம் மிகுந்துள்ள காரணமாய்த் தெற்கே பாண்டி நாட்டிற்கு வந்து, பாண்டிய மன்னரால் பல்லாண்டு ஆதரிக்கப்பெற்ற கதையும் ஈண்டு ஆராய்தற்குரியது.

தென் இந்தியாமீது நாளுக்கு நாள் ஆர்வம் மிகுந்து ஆங்கு வந்து வதிந்த பௌத்த சமணர் செயல்கள், பிராமணருக்குத் தம் இனத்தினரை அவ்விடம் அனுப்பத் தூண்டுகோலாய் இருந்திருக்க வேண்டும். ஆகையால் சுமார் கி. மு. மூன்றும் நூற்றாண்டு முதலே ஆரியர் தொடர்ந்து குடியேறத் தொடங்கினதாகக் கருதலாம். பிராமணர் துவக்கத்திலேயே மன்னர் ஆதரவைப் பெற முயன்றனர்; அவர்களுக்குப் புரோகிதருமாயினர், விரைவில் அரசவையிலும் சிறந்த பதவியைப் பெற்றனர். ஆகவே, பிராமணர் செல்வாக்கு நாளுக்கு நாள் உயர்ந்தது. கி. மு. மூன்றும் நூற்றாண்டு முதல், ஆரியர் திராவிடர் என்னும் இரு கூட்டத்தாரின் மதக்கொள்கைகளும், ஆசாரங்களும், பழக்க வழக்கங்களும் ஒன்றோடொன்று இணைந்து, புத்துருக்கொள்ளத் தொடங்கியதெனலாம். திராவிடர்களில் கற்றறிந்த சிலர் பிராமணர் வகுப்பில் சேர்க்கப் பெற்றனர் எனத் தோன்றுகிறது. தமிழருள் 'அறிவர்', 'ஆதிசைவர்' என்போரும் ஆந்திரர்களில் 'திராவிடப் பிராமணர்' என்போரும் இவ்வாறு மாறுதலடைந்த

கூட்டத்தினராயிருக்கலாம். எவ்வாற்றுலும், இந்த ஆரியத் திராவிடக் கலப்பினல், அவ் இரு சாரார் சமயக் கோட்பாடுகள், ஆசாரங்கள், சடங்குகள், சமூக வழக்கங்கள், இலக்கியப் பண்புகள் முதலியன யாவும் மாறுதல் அடைந்தன.

## இயல் நான்கு

# பேரரசுகளைக் கண்ட பண்டை வேந்தர்கள்

வட இந்தியாவிற்கும் தென்னாட்டிற்கும் அரசியல் தொடர்பு முதன் முதலாக ஏற்பட்டது மௌரியப் பேரரசுக் காலத்திலாகும். மௌரிய வல்லரசை மைசூர் வரையிலும் விரிவாக்கிய மன்னர் சந்திரகுப்தரா, அல்லது அவர் புதல்வர் பிந்துசாரரா என்பது, திட்டமாய்க் கூற இயலாது. அசோகர் பட்டத்திற்கு வருவதற்கு முன்னரே மௌரியப் பேரரசு, மைசூரில் சித்தபுரி வரையிலும் குத்தியின் அருகாமையிலுள்ள ஏற்றகுடி வரையிலும் எட்டியிருந்ததென, அங்குள்ள அசோகரின் கல்வெட்டுகளிலிருந்து நன்கு விளங்குகின்றது. தென்னாட்டின்மீது மௌரியர் படையெடுத்தது பற்றிய சில குறிப்புகளைச் சங்க நூல்களில் காணலாம். அவற்றில் தென்படுவது போல், மௌரியர் தெற்குக் கோடியில் பொதிகை மலை வரையிலும் வந்தனரோ என்று சிலர் ஐயுறுகின்றனர். மொத்தத்தில் கிடைத்துள்ள சான்றுகளைச் சீர்தூக்கி மதிப்பிட்டால், மௌரிய மன்னர் பிந்துசாரர்தான் தென் இந்தியாமீது படையெடுத்து வெற்றி பெற்றிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. ஏனெனில், பிந்துசாரர் பதினாறு அரசுகளைக் கீழடக்கினதாகத் திபெத் நாட்டு வரலாற்று ஆசிரியர் தாரநாதா கூறியுள்ளார். இவை பதினாறும் வட இந்தியாவைச் சார்ந்தனவாயிருக்க இடமில்லை. மேலும் கிரேக்கர்கள் பிந்துசாரரது போர்

வீரத்தை வியந்து 'அமித்ரகாதா' (எதிரிகளை அழி...) என்ற சிறப்புப் பெயரையும் அவருக்கு அளித்திருந்தனர். எவ்வாறிருப்பினும், மௌரியர்க்குத் தென் நாட்டில் பெரும் எதிர்ப்பு இருந்ததாகத் தெரிகிறது. ஒரு வேளை அக் காரணத்தினுல்தான் கலிங்கத்தின் மீது பிந்துசாரர் படையெடுக்காமல் இருந்தார் போலும். பிந்துசாரர் காலத்தில் தமிழ் அரசர்களடங்கிய நேசக் குழு ஒன்று இருந்ததாகத் தெரிகிறது. 'வம்ப மோரியர்' என்ற சங்க நூல்களில் குறிப்பிட்டிருக்கும் மௌரியப் படையை எதிரிட்டு, இந்தக் குழு போர் செய்திருக்கக் கூடும். ஆனல் அசோகர் கல்வெட்டுகள் காணப்படும் இடங்களிலிருந்து மௌரியப் பேரரசு தெற்கில் குத்தி அல்லது ஏறத்தாழச் சென்னை வரையிலும் பரவியிருந்ததென்று மட்டிலும்தான் திட்டமாய்க் கூற முடியும். சங்க நூல்களில் காணப்படுவது போல், தெற்குக் கோடியில் பொதிகை மலை வரை மௌரியர் சென்ருர்களா இல்லையா என்று திட்டமாய்க் கூற இயலாது.

அசோகரது பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் வட தக்காணத்தில் தோன்றியது சாதவாகனர்களின் அரசாட்சி ஆகும். சாதவாகன குடும்பத்தார் ஆந்திர இனத்தைச் சார்ந்தவர்கள். கல்வெட்டுகளில் சாதவாகனரெனக் குறிக்கப்படும் மன்னர்களைப் புராணங்கள், ஆந்திரர்களெனவோ ஆந்திரப் பிருத்தியர்களெனவோ குறிப்பிடுகின்றன. சாதவாகனரென்ற குடும்பப் பெயர் அப்பெயருடைய ஒரு மன்னனிலிருந்து முதலில் தோன்றியிருக்கலாம்.[1] அது

1. 'சாதவாகன' என்ற வார்த்தை ஆஸ்ற்றிக் மொழியிலிருந்து வந்திருக்கலாமென்றும், அதன் பொருள் 'குதிரையின் புதல்வன்' எனலாமென்றும் ஓர் அறிஞர் கூறியுள்ளார். இது ஒப்புக்கொள்ளக் கூடியதாவென்று திட்டமாய் அறிவதற்கில்லை.

படியாயினும், சாதவாகனர் ஆந்திர இனத்திலுட்பட்ட ஒரு குலத்தாராகவோ குடும்பத்தினராகவோ இருந்திருக்க வேண்டுமென்பதற்கு ஐயமில்லை. முதல் சாதவாகன மன்னனைப் புராணங்கள் ஆந்திர இனத்தைச் சார்ந்தவனெனத் தெளிவாகக் கூறியிருப்பது கருதற்பாலது.

ஐதரேய பிராமணத்தில்தான் ஆந்திரர்களைப் பற்றிய குறிப்புமுதலில் தென்படுகின்றது.[1] ஆந்திரர்கள் தஸ்யுக்கள் இனத்தைச் சார்ந்தவர்களென[2] அந்நூல் கூறுகின்றது. இக் குறிப்பும், கௌதமிபுத்திரர் போன்ற சாதவாகன மன்னர் கள் பலர் தம் பெயரைத் தமது தாயார் பெயருடன் இணைத்து வழங்கி வந்ததும், ஆந்திரப் பெண்களை ஆரியர்கள் மணந் திருக்கலாம் என்பதை விளக்குகின்றன.

தக்காணத்தின் வடமேற்குப் பகுதியான மகாராஷ் டிர நாடுதான் முதலில் சாதவாகனர்கள் ஆண்ட நாடா யிருந்ததென நாம் நினைவில் கொள்ளுவதற்கு உரியது. தற்போதைய பூனா மாவட்டத்திலுள்ள நாஸிக், நானுகாட் என்ற இடங்களில் சாதவாகனர்களின் ஆதிக் கல்வெட்டு கள் யாவும் காணப்படுகின்றன. இந்திய இலக்கிய வழக்காறும் தாலமியின் நிலநூலும் சாதவாகனர்களின் தலைநகர், (தற்போது பைதான் என விளங்கும்) பிரதிஷ் டானமாயிருந்ததெனக் கூறுகின்றன. தற்போதைய ஆந்திர நாட்டில், அதாவது கிருஷ்ணா ஆற்றை நோக்கிக்

1. பிராமணங்களை, வேதத்தை விளக்கும் உரை நூல்களெனலாம்; அவை பல கதைகளைக் கொண்டு கருத்துக்களைத் தெளிவாக்கும் தன்மையுள்ளவை.

2. ஆரியர்களைத் தடுத்துப் போரிட்ட முன் இந்தியாவில் வாழ்ந் திருந்த மக்களை தஸ்யுக்கள் என ஆரியர்கள் குறிப்பிட்டு வந்தனர். ஆந்திரர்கள், விசுவாமித்திரரது புதல்வர்களின் சந்ததியார் எனவும் அந்நூல் கூறியுள்ளது.

## தென் இந்தியா (கி. மு. 200 முதல் கி. பி. 300 வரை)




1. அஜந்தா
2. சோபாரா
3. கன்ஹேரி
4. நாஸிக்
5. பைத்தான்
6. தந்தபுரம்
7. ஹதிகும்ப
8. கார்லே
9. பரஜா
10. தெரா
11. பிஷ்டபுரம்
12. வேங்கி
13. அமராவதி
14. மஸாலியா
15. நாகார்ச்சுனகொண்டா
16. பட்டிப்ரோலு
17. ஏற்ற குடி
18. வனவாசி
19. சித்தபுரம்
20. சிரவணபெல்கொளா
21. வேங்கடம்
22. காஞ்சி
23. எய்தபட்டினம்(சொபத்மா)
24. தலைக்காடு
25. தொண்டி
26. கரூர்
27. முசிறி
28. உறையூர்
29. காவிரிப்பூம்பட்டினம்
30. நாகபட்டினம்
31. வஞ்சி
32. தலையாலங்கானம்
33. நெல்கின்ரு
34. வைக்கரை
35. மதுரை
36. சாலியூர்
37. கொற்கை
38. கோட்டியற
39. குமரி

கிழக்குப் பக்கமாகச் செல்லும் நாட்டில், சாதவாகனரின் ஆட்சி பரவியது பிற்காலத்தில்தான் என்பதற்கு ஐய மில்லை. ஆனால், அங்கு அவர் ஆட்சி பரவியது பிளினியின் காலத்திற்கு அதாவது சுமார் கி. பி. 77-க்கு முன்னரே, நடந்தேறியிருக்க வேண்டும். ஏனெனில், ஆந்திரர்களின் நாடு கிழக்குத் தக்காணத்தையும் உட்கொண்டிருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

முப்பது சாதவாகன மன்னர்கள் 460 ஆண்டுகள் ஆட்சி புரிந்ததாக மச்ச புராணம் கூறுகின்றது. இக் கருத்து உண்மையாகவே இருக்கலாம். ஆனால், ஒவ்வொரு மன்னரது அரசாட்சியையும் காலவரையறுத்துத் திட்டப் படுத்த இயலாது. சாதவாகன ஆட்சியை ஏறத்தாழ கி. மு. 230-இல் தோற்றுவித்த முதல் மன்னர் சிமுகா என்ற பெயருடையவர். இவர் மௌரியருக்குப் பின் ஆண்ட சுங்க அரசக் குலத்தாரில் எஞ்சிய மன்னர்களையும் கண்வ அரசரையும், போரில் அழித்தார். அவருக்குப் பின் ஆண்ட சாதவாகனர்கள் முதலில் மகாராஷ்டிரத்தையும் மாளவத் தையும் கைப்பற்றினர். மூன்றுவது மன்னரான முதல் சாதகர்ணி என்பவர் தம் ஆட்சியைத் தக்காணத்தின் வடக்குப் பகுதிகளில் பரவச் செய்தார். ஆகவே, மத்திய இந்தியாவின் பெரும் பகுதியும் சாதவாகனர் ஆட்சிக்குள் அமைந்தது. இராஜசூய யாகத்தையும், இரண்டு அசுவ மேத யாகங்களையும்[4], அவர் நடத்தியதாகக் கூறப்படு

4. இராஜசூயம் யாகம் என்பது அரசர், பதவி ஏற்றவுடன் நடத்தப் பெறும் வைதீக யாகம். அசுவமேதம், மன்னனின் போர்த் திறமை யையும் வெற்றியையும் பெருமைப்படுத்தும் பொருட்டுச் செய்யப்படும் யாகமாகும். ஒரு குதிரையை ஓட்டிவிட்டு அது செல்லுமிடமெல்லா வற்றையும் மன்னன் தனது நாடாக்கி, அதைச் சிறப்பித்து யாகம் செய்வதாகக் கருத்து.

கின்றது. இவருக்குப்பின் சாதவாகனர்களிடமிருந்து அவரது பகைவர்கள் சுங்கர்கள் மாளவத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். இறுதியாக, ஏழாவது சாதவாகன மன்னராகிய இரண்டாம் சாதகர்ணி (கி. மு. 172—116) மாளவத்தை மீட்டார். அத்தோடு தற்போது மத்தியப் பிரதேசம் எனக் குறிக்கப்படும் நாடு வரையில் இவரது அரசை விரிவாக்கினர். இவர் காலத்தில்தான், புகழ் பெற்ற கலிங்க மன்னர், காரவேலர், சாதவாகனர்களின் கீழ் வாழ்ந்த பிரார்போஜர்களேயும், மகாராஷ்டிர ராத்திரர்களேயும் போரில் புறங்கண்டதாகத் தெரிகிறது. ஆனல், அதைத் தொடர்ந்து காரவேலர் சாதவாகனர்களிடம் போரிட்டதாகத் தெரியவில்லே. இவ்வேளேயில் வெளிநாட்டுச் சாகர்கள் இவர்களனேவரையும் எதிர்த்து முன்னேறிக்கொண்டிருந்தனர்.

இதற்கப்பால் வலிமையுடைய சாதவாகன மன்னர் கௌதமிபுத்திர சாதகர்ணி என்பவராவர். இவர் கி. பி. ஏறத்தாழ 106 முதல் 130 வரையிலும் ஆட்சி புரிந்ததாகத் தெரிகிறது. அருகாமையில் முன்னேறிக்கொண்டிருந்த இந்தோ சித்தியர்கள், இந்தோ கிரேக்கர்கள், பார்த்தியர்கள் ஆகியோரைக் கௌதமபுத்திர சாதகர்ணி போரில் முறியடித்துச் சாதவாகனர்களின் நிலேயை வலுப்படுத்தியதாகக் கூறுவர். அவரது பேரரசு வடக்கே கத்தியவாரிலிருந்து தெற்கே கிருஷ்ணு நதி வரையிலும் பரவியிருந்தது. ஆனல் இவ்வரசர் காலத்திற்கூடத் தற்போதைய ஆந்திர நாடானது சாதவாகனர்கள் ஆட்சிக்குள் இணேக்கப்படவில்லே. சாதகர்ணியின் புதல்வர், ஏறத்தாழ கி. பி. 130 முதல் 159 வரை ஆட்சி புரிந்த, புலுமாய் என்ற மன்னரின் காலத்தில்தான் இது நடைபெற்றது. தெற்கில் ஆர்க்காட்டு மாவட்டத்தைச் சார்ந்த கடலூர்

வரையிலும் அவர் தமது பேரரசைப் பரவச் செய்தார். இதற்கிடையே சாதவாகனர்களின் கொடிய பகைவர்களான சாகர்கள், வெகுநாளாகப் போட்டிக்கிடமாக இருந்த மேற்கு இராஜபுதனம், மாளவம் ஆகியவற்றின் ஒரு பகுதியைக் கைப்பற்றினர்.

பிற்கால சாதவாகன மன்னர்களில் சிறந்தவர் ஸ்ரீயக்ஞ சாதகர்ணி (கி. பி. 174—203) என்பவர். இவர் நருமதைப் பள்ளத்தாக்கிலும், மேற்கு இந்தியாவிலும், சித்தியர்களின் ஊக்கத்தை அறவே அழித்தார். யக்ஞாவின் பிற்காலத்தில் சாதவாகனப் பேரரசு, பல தனிச் சிற்றரசு களாகச் சிதறுண்டு, சாதவாகன மன்னர் குலத்தைச் சார்ந்த பல அரசர்களால் ஆளப்பட்டு வந்தது. சாத வாகனரின் நிலை சீர் குலையக் காரணம் யாதெனத் திட்ட மாய்க் கூற இயலாது. காரணம் எதுவானாலும் கி. பி. 3-வது நூற்றாண்டின் நடுப்பகுதியை ஒட்டி, பல்வேறு புது அரச வம்சங்கள் சாதவாகனர்கள் ஆண்டு வந்த வெவ்வேறு பகுதிகளிலும் தம் அரசாங்கங்களை அமைத்துக்கொண்டன. கி. பி. மூன்றாவது நூற்றாண்டின் முடிவுக்குள் கீழ்த் தக்காணம் அதாவது தற்போதைய ஆந்திர நாட்டின் நடுப் பகுதி காஞ்சிப் பல்லவர்கள் கைக்குள்ளாகியது.

கலிங்க நாட்டுக் காரவேலர் :—சாதவாகனர்களின் பின்வந்த மன்னர்களைப்பற்றிக் கூறுமுன் சாதவாகனர் காலத்து ஆண்ட கலிங்க நாட்டுச் சேதி மன்னர்களைப் பற்றிச் சற்று ஆராயலாம். கி. மு. முதல் நூற்றாண்டில் கலிங்க நாடானது சேதி வம்சத்தைச் சார்ந்த வலிமை சான்ற மேகவாகன குடும்பத்து மன்னர்களின் கீழ் வந்தது. சேதியர் மகத ராஜ்யத்தைச் சார்ந்தவர்கள். அங்கிருந்து

சில மன்னர்கள் கலிங்கத்திற்கு வந்து ஓர் அரசை அமைத்திருக்கலாமெனத் தோன்றுகின்றது.

அக்குல மன்னர்களில் தலைசிறந்தவர் அநேகமாக கி. மு. முதல் நூற்றாண்டில் அரசு புரிந்த காரவேலர் என்பவர். அவரது புகழ்பெற்ற ஹாதிகும்பாக் கல்வெட்டு, வரலாற்றுக்கு இணையற்ற உதவி அளிக்கின்றது. ஆனால் அது அவர் ஆட்சியின் முதல் பதின்மூன்று ஆண்டுகளைப் பற்றிய நிகழ்ச்சிகளை மட்டுமே கூறியுளது. முன்னமே, அவர் போஜர்களையும் ராத்திரர்களையும் வென்றது பற்றி அறிந்தோம். வடக்கில் மகதம், அங்கம் ஆகிய நாடுகளின் மன்னர்களையும், தெற்கில் பாண்டிய அரசரையும் அவர் வென்றார். மக்களுக்கு வேண்டிய வீடுகளையும் விவசாயத்திற்கு இன்றியமையாத நீர்ப்பாசனக் கால்வாய்களையும் அமைத்து நன்மை புரிந்தார். மேலும் அவர் கலைகளில் மிக்க ஈடுபாடுடையவர்; இசைப்பயிற்சி நிரம்பப்பெற்றவர்; ஆகவே பல இசை நடன அரங்குகளையும் விழாக்களையும் நடத்தினர். சமண மதத்தை ஆர்வத்துடன் தழுவியிருந்த அம்மன்னர், சமணத்துறவிகளுக்காக ஒரு மடத்தையும் பல குகைகளையும் அமைத்தார். காரவேலருக்குப் பின் சேதி வம்சம் சிதைவுற்றதெனலாம். இவரது வீழ்ச்சிக்குக் காரணம் யாதெனத் திட்டமாகத் தெரிவதற்கில்லை. அனேகமாக காரவேலரின் பின்வந்த அரசர்கள் ஊக்கம் குன்றியவர்களாய் இருந்திருக்க வேண்டும்.

**சாதவாகனர்களின் பின் வந்தோர்**

அதுபோலவே சாதவாகனரின் வலிமை குன்றியதும் அவர் கீழ் ஆண்டுவந்த பாளையக்காரர்கள் சுதந்தர அரசுகளை அமைத்துக்கொண்டனர். மகாராஷ்டிரத்தில் ஆபிரர்களும், பீராரில் வாகாடகர்களும், மேற்குக் கன்னட நாட்டில்

சூடுக்கள் என்பாரும், அவரைத் தொடர்ந்து ஆங்குக் கதம்பர்களும் அரசை நிறுவிக்கொண்டனர். கிருஷ்ணா நதிக் கழிமுகத்தின் அண்மையிலுள்ள ஆந்திர நாட்டில், பழைய சாதவாகன குலத்து மன்னர்கள் சில காலம் தொடர்ந்து ஆண்டுவந்தனர். பின்னர் அவர்களிடமிருந்து இட்சுவாகுகள்[5] பிரஹத்பலாயனர்கள்[6] சாலங்காயனர்கள்[7] முதலியோர் முறையே பதவி பெற்றனர். அதற்குள் காஞ்சி நகரத்தில் உன்னத நிலையை எய்தியிருந்த பல்லவர்கள் சாதவாகனப் பேரரசின் தென்கிழக்குப் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டனர். ஆகவே ஏறத்தாழ ஐந்து நூற்றாண்டுகளாகத் தக்காணத்தில் அமைந்திருந்த அரசியல் ஒற்றுமை தகர்ந்தது. கி.பி. ஆறாவது நூற்றாண்டில் சாளுக்கியர் தலை தூக்கியது வரையிலும், சின்னஞ் சிறு குலத்தோர் ஆங்காங்கு ஆண்டு வந்தனர்.

**வாகாடகர்கள் :**—சாதவாகனருக்குப் பின், கி.பி. மூன்றாவது நூற்றாண்டிலிருந்து ஆறாவது நூற்றாண்டு வரை ஆட்சி புரிந்த குலத்தோரில், வடதக்காணத்தில் அரசோச்சி வந்தவர் வாகாடகர்கள் எனப்படுவர். வாகாடகர்கள் யார், எங்கிருந்து வந்தவரென அறிவதற்கில்லை. சில அறிஞர்கள், பண்டில்கண்டிலுள்ள பாகத் என்ற இடத்தோடு அவர்களை இணைக்கின்றனர். வேறு சிலர், அவரைக் கீழ்த் தக்காணத்து ஆந்திர நாட்டவராகக் கருதுகின்றனர். வாகாடக அரசை அமைத்த விந்தியாசக்தி என்ற பார்ப்பனர் போரில் பல வெற்றி பெற்றதாக அஜந்தாக் கல்வெட்டொன்று பெருமைப்படுத்துகின்றது. அவர் மகன் முதலாம் பிரவரசேனர் (கி.பி. 300-340) என்பார், பல நாடுகளைக் கைக்கொண்டார். அவர் பேரரசர் என்ற பட்

(5) Ikshavahus, (6) Brihatphalayans. (7) Salankayanas.

டத்தைச் சூட்டிக்கொண்டார் ; பல யாகங்களை நடத்தினர். வாகாடகப் பேரரசை உண்மையில் உருவாக்கினவர் இவர் தானெனக் கூறுவது மிகை ஆகாது. இவரது பேரரசு பண்டில்கண்டு முதல் ஐதரபாத் ராஜ்யம் வரையிலும் பரவி யிருந்தது. பின் இரண்டாம் உருத்திரசேனர் என்ற மன்னர் (கி.பி. 390 – 95) குப்தப் பேரரசர் இரண்டாம் சந்திரகுப் தரது மகளை மணந்துகொண்டதாக அறியப்படுகிறது. இறுதிக்கால வாகாடக மன்னர்களில் சிறந்தவரான ஹரிசேனர் என்பார் ஏறத்தாழ கி.பி. 480 முதல் 515 வரை ஆட்சிபுரிந்தார். அவர் குந்தளம், மாளவம், தென்கோசலை, கலிங்கம், திருகூடா (வட கொங்கணம்), இலாட (தென் குஜராத்), ஆந்திரா முதலிய நாடுகளைக் கைக்கொண்டார். அவர் பின்வந்தோர்களைப் பற்றித் திட்டமாக யாதொன்றும் அறிவதற்கில்லை. ஆறுவது நூற்றாண்டின் முற்பகுதியில், அவரது நாடுகளை அவ்வேளை முன்னேறிவந்த பல அரசு களும் பிடித்துக்கொண்டன. கதம்பர்கள், தென் மகாராஷ் டிரத்தையும், காலச்சூரிகள் வட மகாராஷ்டிரத்தையும் கைப் பற்றினர். இறுதியாக கி.பி. 550-இல் வாகாடகரை வாதாபியிலாண்ட சாளுக்கியர் அறவே அழித்தனர்.

**கதம்பர்கள்:**—கதம்ப வம்சத்தின் ஆட்சியை ஆரம் பித்தவர் மயூரசர்மர் என்ற ஒரு பார்ப்பனராவர். அவர் காஞ்சிபுரத்திற்கு உயர்தரக் கல்வி பயிலுவதற்காகப் போயிருந்தபோது, அவ்விடத்துப் பல்லவக் குதிரைப் படை யினர் அவரை அவமதித்ததால் அவரே ஒரு போர் வீரராய்த் திகழ்ந்தாரெனக் கூறுவதுண்டு. அவர் ஒரு படையைத் திரட்டிக்கொண்டு பல்லவப் பேரரசின் வட பகுதியிலிருந்த நாட்டைக் கைப்பற்றினர். அவரது திறமையைக் கண்டு வியப்புற்று வனவாசியைச் சுற்றி மேற்குக் கரை ஓரமாக

இருந்த இராஜ்யத்தின் ஒரு பகுதியைப் பல்லவர் கி.பி. 345-இல் அவருக்குக் கொடுத்தனர். மயூரசர்மர் வட இந்தியாவிலிருந்து பார்ப்பனரை அழைத்து வந்து தம் நாட்டில் குடியேற்றினதாகக் கூறப்படுகிறது. கதம்ப வம்ச மன்னர்களில் சிறந்தவரான காகுஸ்தவர்மர் என்பார், தமது பெண்மக்களை குப்தர், வாகாடகர், கங்கர் முதலியோரின் இளவரசர்களுக்கு மணஞ்செய்து கொடுத்தார். கதம்ப மன்னர்கள் பல்லவர்களோடு அடிக்கடி போரிட நேர்ந்தது. சில வேளை அவரிடம் தோல்வியும் அடைந்தனர். ஏறத்தாழ கி.பி. 475 முதல் 490 வரை ஆட்சி புரிந்த மிருகேசவர்மர் என்ற கதம்ப மன்னர் பல்லவர்களையும் கங்கர்களையும் போரில் வென்றார். அவர் கற்றறிந்தவர்; சமணத்தைப் பேணினவர்! பலாஸிகா என்னுமிடத்து ஒரு சமணக் கோயிலையும் கட்டினார். இறுதியாகச் சோர்வடைந்திருந்த ஹரிவர்மரது ஆட்சியில் (சுமார் கி.பி. 537—47) அவரது பாளையக்காரராயிருந்த முதலாம் புலிகேசி என்னும் சாளுக்கியர், புரட்சி செய்து வாதாபியில் தமது குலத்தை அமைத்தார். அத்துடன் கதம்பர் ஆட்சியும் முடிவடைந்தது.

**மேற்குக் கங்கர்கள்:**—கி பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து மைசூர் ராஜ்யத்தின் பெரும்பகுதி கங்கரது ஆட்சியில் அமைந்தது. இவர்கள் முதலில் குவளாலபுரத்தையும் பின் தலைக்காட்டையும் தமது தலைநகராகக் கொண்டனர். கலிங்க நாட்டிலும் அதன் அண்மையிலும் ஆண்டு வந்த கீழ்நாட்டுக் கங்கர்களிலிருந்து இவர்களை வேறுபடுத்திக் காட்ட மேற்குக் கங்கர்களென அழைக்கப்படுகின்றனர். கங்கர்கள் அனைவரும் வட நாட்டைச் சார்ந்தவர்களெனத் தோன்றுகிறது. அவரது

அரசர்களில் பலர் சமண மதத்தைத் தழுவி வந்தனர். ஏறத்தாழ கி.பி. மூன்ரும் நூற்ருண்டு முதல் பதினென்ரும் நூற்ருண்டில் சோழர்கள் இவர்களை அடக்கியது வரையிலும், மேற்குக் கங்க வம்சத்தைச் சார்ந்த மன்னர்களின் தொடர்பான வம்சாவளி கிடைத்திருக்கின்றது. பிற்பாடு, சோழர்களிடமும், ஓய்சளர்களிடமும் சில காலம் இவர்கள் பாளையக்காரர்களாக இருந்து வந்தனர். கீழைக் கங்கர்கள் கஜபதி என்ற சிறப்புப் பெயரை வைத்துக்கொண்டனர். பின், முதலாம் இராஜேந்திரச் சோழரின் மகளை மணம் புரிந்த கங்க மன்னரின் புதல்வர் அப்பகுதியைச் சோழகங்கன் என்ற பெயரில் ஆண்டு வந்தார். அந்த வம்சம் கலிங்கத்தில் 16-ஆவது நூற்ருண்டு வரையிலும் ஆட்சி புரிந்தது. இறுதியாக முஸ்லீம்கள் அவரது நாட்டைக் கைப்பற்றிக்கொண்டனர்.

**அரசியல் நிர்வாகம் :** சாதவாகனர்களும் அவர் பின் வந்தோர்களும் மௌரிய அரசியலமைப்பு முறையைத் தழுவியே தமது அரசியல்களையும் உருவாக்கினர். மன்னருக்கும் அமைச்சர்களுக்கும் இவ்வரசியல்கள் யாவற்றிலும் ஒரே மாதிரியான அதிகாரங்கள் அளிக்கப் பட்டிருந்தன. மேலும், அரசாங்க அலுவலாளர்களின் ஸ்தாபனப் பெயர்கள்கூட மௌரியர்களிடையே இருந்த வற்றை ஒட்டிக் காணப்பட்டன. வெளிநாட்டுப் படை யெடுப்பையும் உள்நாட்டுச் சச்சரவையும் தடுக்க மகா சேனுதிபதிகளும், அவர்கள் அதிகாரத்துக்குள் அடங்கி அலுவல் செய்த சேனுதிபதிகள் என்ற படைத்தலைவர்களும் இருந்தனர். பேரரசின் பல் வேறு பகுதிகளில் அமைதி நிலவச் செய்யும் பொறுப்பு மகா தலைவர்களென்ற அலுவலாளருக்கும், அவரது அதிகாரத்தின் கீழிருந்த

தலைவர்களுக்கும் அளிக்கப்பட்டிருந்தது. அரசியல் அலுவலாளர்களும் கண்காணிப்பாளருமாகிய மகாமாத்திரர் கள் பல பொறுப்பை ஏற்று வந்தனர். அரச தூதர்களாகவும், பொருள் காப்போராகவும், பண்டகசாலைக் காப்பாளர்களாக வும், நாணயமடிப்போர்களாகவும் இவர்கள் பணி செய்தனர்.

அரசியல் நிர்வாக வசதியின் பொருட்டு பேரரசானது பல 'அகரங்கள்' ஆக வகுக்கப்பட்டிருந்தது. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு அமாத்தியர் அல்லது அமைச்சர் கையில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. பேரரசர் எல்லை ஓரங்களிலிருந்த மாவட்டங்களை மகாசேனாதிபதிகள் என்ற படைத்தலைவர்களின் ஆட்சிக்குள் அமைத்திருந்தனர். ஆனால், பிற்காலக் கல்வெட்டுகளில் மட்டுமே இப்பட்டப் பெயர்கள் காணப்படுவதால் சாதவாகனர்களின் ஆட்சியின் பிற்பகுதியிலேயே இவ்வலுவலாளர்களை நியமித்திருக்க வேண்டும். மகா சேனாதிபதிகளென்பார், படைத் தலைவர் களாகத் திகழ்ந்ததுமன்றி மத்திய அரசாங்கத்தின் சில அரங்கங்களையும் பொறுப்பேற்றுச் செயலாற்றினர். கிராமங்கள் மீது மத்திய அரசாங்கத்தின் மேற்பார்வை கடுமையானதாயில்லை. தல நிர்வாகத்தை பாளையக்காரர் களும் பண்ணையாட்களும் நடத்தி வந்தனர். அவர்கள் மீது மேல்பார்வை மட்டிலும் அரசாங்க அலுவலாளர்களுக்கு அளிக்கப்பட்டிருந்தது. பாளையக்காரர்களும் பல தரத்தினில் இருந்தனர் ; அவர்களுள் மிக உயர்ந்த நிலையுடையோரை அரசர்களென்றே அழைத்தனர். அவர்களுக்கு அரச பதவியும், தங்கள் பெயரால் நாணயம் வெளியிடும் உரிமை யும் இருந்து வந்தன. அவர்களுக்குக் கீழே 'மகாபோஜர் கள்', 'மகாராத்திகள்' என்ற பெயருடைய தலைமுறைப் பிரதானிகள் பணியாற்றினர். மேற்குத் தக்காணத்தைச்

சார்ந்த சில குடும்பங்களிலிருந்தே இப்பிரதானிகளை நியமித்தனர். கடைசியாக இவர்களுக்கெல்லாம் மேலாக மகா சேனுபதிகள் என்பார் அலுவல் செய்து வந்தனர். இவர்களுக்குப் பலதரப்பட்ட பொறுப்புகளும் கொடுக்கப் பட்டிருந்தன. சிலர் தல ஆட்சியாளர்களாகவும் வேறு சிலர் மத்திய அரசாங்க நிர்வாகஸ்தர்களாகவும் திகழ்ந் தனர். அவ்வரசாங்கத்தில் பற்பல அலுவலாளர்களிருந் தனர். எனினும் நாட்டின் அமைதியைக் காப்பது தவிர வேறு பெரிய செயல்கள் எதிலும் ஈடுபடவில்லை. தற்போது அரசாங்கம் நடத்தி வரும் பல பொறுப்புக்களை, அக்காலத் தில் சமுதாயமே நிர்வகித்து வந்தது.

**சமுதாயம் :** சாதவாகனர் காலத்துச் சமூக அமைப் பில் ஒரு தனிப் பண்பு தோன்றியது. அதாவது அயல் நாட்டார் பலரை உள்நாட்டுச் சமூக அமைப்பு இணைத்துக் கொண்டது. சாகர்கள், யவனர்கள் முதலியோர் போன்ற பிறநாட்டு வர்த்தகர்கள், அவர் தொழிலுக்காக தென் இந்தியாவில் தங்கி இந்நாட்டு மக்களின் பழக்க வழக்கங் களைப் பின்பற்றினர். தெனுக்காகடா எனும் ஊரில் வந்து குடியேறிய யவனர்கள் தங்களுக்கு இந்தியப் பெயர்களை வைத்துக்கொண்டனர். புகழ்பெற்ற கார்லேக் குகைக்கு இவர்கள் பொருளுதவி செய்தனர். சில கிரேக்கர்கள் இந்தியப் பெண்மணிகளை மணந்து இந்திய சமுதாய அமைப்பில் நன்கு ஒன்றிவிட்டனர். அரசர்களா யிருந்தமையால், சாகர்கள், இந்துக்களின் இனவேறு பாடுகளையொட்டி க்ஷத்திரியர்களாகக் கருதப்பட்டு வந்தனர்.

இக்காலத்தில் தொழிலை அடிப்படையாகக்கொண்ட இன வகுப்புகள் மிகப் பல தோன்றின. கோளிகர் என்ற

ஆயர்கள் வகுப்பும் ஹாளிகர் என்ற உழவர் வகுப்பும் தென்பட்டன. ஆனால் இக்காலத்திலுங்கூட இனவேற்றுமை உச்ச நிலையை அடையவில்லை ; கலப்பு மணங்கள் சில நடந்து வந்தன. மக்களின் சமூக உயர்வு அவரது இனத்தை ஒட்டி இருந்தது போலவே, அவர் ஈடுபட்டிருந்த தொழிலையும் ஒட்டியிருந்தது. பாளையக்காரப் பிரதானிகளும் உயர்தர அரசாங்க அலுவலாளர்களும் சமுதாயத்தில் முதன்மையான செல்வாக்குடையவராயிருந்தனர். வாணிகப் பிரபுக்களும் கைத்தொழில் தலைவர்களும் அதற்கு அடுத்த நிலையிலிருந்தனர். வாணிகக் குழுக்களும் பல நிலவின. இக் குழுக்களின் தலைவர்கள் நகராட்சிகளில் பெரும் பங்கெடுத்ததாக அறிகின்றோம். வாணிகருக்கும் கீழ்ப்படியான நிலையிலிருந்தோர் உழவர், மருத்துவர், பொன் வினைஞர், மரத்தச்சர் மற்றும் இதர வேலைக்காரர்களுமாவர். நெசவுக்காரர், கூல வாணிகர் (தானிய வியாபாரி), எண்ணெய் ஆட்டுபவர், மண்டபம் செய்பவர் முதலிய கைத்தொழிலாளரின் குழுக்களும் ஓங்கி வளர்ந்தன. ஒவ்வொரு குழுவுக்கும் செட்டி என்ற அதிகாரியும், தனி அலுவல் நிலையமும், நிகம சபை என்ற குழுவின் மாளிகையும் இருந்தன.

சீரான முறையில் தொழிலாளர் குழுக்களும் அமைக்கப்பட்டிருந்தன. வர்த்தகமும் கைத்தொழிலும் செழிப்புற்றோங்கி இருந்ததை இவை நன்கு புலப்படுத்துகின்றன. உண்மையில் பண்டைக் காலத்திலிருந்தே ஆந்திர நாடு உள்நாட்டுக்கைத்தொழிலிலும்வெளிநாட்டுவாணிகத்திலும் மிகப்பெரும் நிலையை எய்தியிருந்தது. பெரிபுளூஸ் நூலாசிரியர் ஆந்திரரின் வர்த்தக மாண்பைப்பற்றிப் புகழ்ந்து கூறியுள்ளார். பைய்தான், தாகரா, ஜமார், கர்ஹடகா,

நாஸிக், வைஜயந்தி போன்ற நகரங்களில் உள்நாட்டு வியாபாரத் துறைகள் பொலிவுற்று விளங்கின. போக்கு வரத்துக்குத் தகுந்த செம்மையான சாலைகள் இல்லாத போதிலும் இவ்வியாபாரத் துறைகள் விமரிசையாகத் தொழில் நடத்தி வந்தன. கோதாவரி, கிருஷ்ணை இவ் விரண்டு ஆறுகளின் இடையில் தழைத்திருந்த மஸாலியா போன்ற சில துறைமுகங்களைப் பற்றியும், மலாயா கிழக் கிந்தியத் தீவுகள் முதலியவற்றோடு விமரிசையாக நடத்தி வந்திருந்த வர்த்தகத்தைப் பற்றியும், தாலமி கூறி யுள்ளார். கி. பி. இரண்டாவது நூற்றாண்டில் கிழக்குத் தக்காணத்தின் வர்த்தகச் செழிப்பு உச்ச நிலையை எய்திய தாகக் கருதலாம். யக்ஞஸ்ரீ சதகர்ணி மன்னரின் நாணய மொன்றில் இரு பாய்மரம் உள்ள ஒரு கப்பலின் வடிவம் பொறிக்கப்பட்டுள்ளது கவனித்தற்குரியது. இது வியாபாரக் கப்பல்கள் மிகுதியாயிருந்தனவென்று தெரிவிக்கின்றது.

வர்த்தகக் குழுக்களும், கைத்தொழில் குழுக்களும் மக்களின் பொருளாதார நிலையையும் சமூக வளர்ச்சியை யும் பல வழிகளில் செம்மைப்படுத்தின. நெசவுக்காரர் குழுக்களில் ஒரு செல்வர் மூவாயிரம் பணங்களை ஒப்படைத்து அதிலிருந்து வரும் வட்டியைப் பௌத்தத் துறவிகளுக்கு நன்கொடையாக அளிக்குமாறு நிபந்தனை செய்ததாக, நாசிக்கில் இருக்கும் ஒரு கல்வெட்டால் அறிகிறோம். வேறு சில குழுக்களிடம் துறவிகளின் மருத்துவச் செலவின் பொருட்டு பணத்தை ஒப்படைத்த தாக நாசிக்கில் காணும் மற்றொரு கல்வெட்டு கூறுகின்றது. ஆகவே, அக்காலத்து வாணிகக்குழுக்கள் பிறர் பணத்தை வாங்கிப் பத்திரப்படுத்தியும் அதற்குத் தகுந்த வட்டி கொடுத்து வளர்த்தும் மக்களது பொருள் நிலையைப் பேணி

அவர்க்குப் பணியாற்றி வந்தன. இவ்வழியில் இக்குழுக்கள் பெரும் சமூக சேவை செய்ததாகக் கருதலாம். சில வேளை இக்குழுக்களே தனிப்பட்ட முறையில் தானதர்மங்களுக் காக மானியங்கள் ஏற்படுத்தின.

மக்களிடையே உழைப்பும் பொருட்செழிப்பும் இருந்ததோடு சமயப் பற்றும் ஒருங்கே வளர்ந்தது. தக்காணத்தில் புத்த சமயம் கி. பி. முதல் இரண்டு நூற் றுண்டுகளில் மிக உயர்ந்த நிலையை எய்தியதென்பது மிகையாகாது. சாதவாகன மன்னர்கள் சமய ஈடுபாட்டில் பெருமனதுடையவரெனப் புகழ் பெற்றவர். அவர் நாட்டில் இந்துக்கள், சமணர்கள், பௌத்தர்கள் ஆகியோர் அனைவரும் சம உரிமை பெற்று வாழ்ந்தனர். மன்னர் களில் சிலர் இந்துக்களும், வேறு சிலர் பௌத்தர்களுமா யிருந்தனர். பார்ப்பனரின் தனிக் காவலன் என்று பெருமை பாராட்டிய கௌதமிபுத்திர சாதகர்ணிகூட பௌத்தர் களுக்கு ஒரு பெரும் நன்கொடை அளித்துள்ளார். இந்துக் கோயில்களும் பௌத்த நிலையங்களும் மன்னர்கள் ஆதரவில் நிறுவப்பட்டன. இந்து ஆலயங்கள் யாவும் கால வெள்ளத்திற்கு இரையாகி விட்டன. பௌத்தக் குகைகளும் கோயில்களும் நற்கால மாய் இன்றும் காணப்படுகின்றன. எண்ணிறந்த குகை கள் கட்டப்பட்டன. அவை கோயில்களாகவோ அடியார் களின் உறைவிடமாகவோ பயன்பட்டு வந்தன. கார்லி, கன்ஹேரி, நாஸிக் முதலிய இடங்களில் உள்ள பௌத்த குகைகட்குப் பல செல்வந்தர் நன்கொடை அளித்தனர். அமராவதியிலுள்ள புத்தர் நினைவுச் சின்னக் கட்டடம் இக் காலத்தில் சிறப்பாக அழகுபடுத்தப்பட்டது. குடிவாடா, கண்டசாலா, கும்மடிதுரு, அல்லூரு போன்ற இடங்களில்

பௌத்த ஞாபகச் சின்னங்களைப் புதிதாக அமைக்கவோ அல்லது பழையனவற்றைப் புதுப்பிக்கவோ செய்தனர். இவைகளில் புத்த பெருமானின் சிலைகளையும் வேறு பௌத்த போதகர்களின் சிலைகளையும் காணலாம். அடியார்கள் ஈசனை வழிபடும் முறையைச் சித்திரிக்கும் சிற்பங்களும் பல அழகாய் அமைந்துள்ளன. வழிபடுவோர், மெய்மறந்து களிப்புடன் நின்று தொழுவதை உணர்ச்சிமிக்க ஓவியமாக்கியிருப்பது மனத்தைக் கவரும் தன்மையுள்ளது. இயற்கை வடிவமும் உயிர்க்களையும் பொருந்திய இச்சிற்பங்கள் முற்காலத்தைச் சார்ந்த ஸாஞ்சிச் சிற்பங்களைவிடப் பன்மடங்கு அழகானவை. புத்தர் பெருமானின் பிறப்பைச் சித்திரிக்கும் கட்டம் மிக நேர்த்தியாக அமைந்துள்ளது. பார்ஹூத், காந்தாரா முதலிய இடங்களில் காணப்படும் சிற்பங்களை விட இவை மிக உயர்ந்த வேலைப்பாடுள்ளவை. யானையைப் பழக்குவது, நந்தன் மனத்தை மாற்றுதல் முதலிய புத்தரின் வாழ்க்கையைச் சார்ந்த நிகழ்ச்சிகளை, திறம்படச் சித்திரிக்கும் சிற்பங்களை அமராவதியில் காணலாம். இவை பண்டைச் சிற்ப வரலாற்றில் தலைசிறந்த இடம் பெற்றுள்ளன.

சாதவாகனர் காலத்தில் சிற்பக்கலை உயர்ந்து வளர்ந்த மற்றொரு இடம் நாகார்ஜூனகொண்டா ஆகும். இங்கு அமராவதியின் பண்பு தொடர்ந்து வளர்ந்திருப்பதாகக் கூறலாம். புத்தரின் வாழ்க்கையையும் ஜாதகக் கதைகளையும் இங்குச் சித்திரித்திருப்பது அமராவதியில் காணப்படுபவற்றினும் சற்று அழகு குறைந்தவையெனலாம்; ஆனால், இவை அமராவதிச் சிற்பங்களைவிட உணர்ச்சி ததும்புவன என்பதை மறுக்க முடியாது.

இலக்கியத் துறையிலும் சாதவாகன மன்னர்களின் பரந்த கொள்கை மிக்க பயனை அளித்தது. மக்களிடையே இயல்பாக வழங்கிய மொழியை அகற்றி, சமஸ்கிரு தத்தைப் புகுத்த அவர்கள் முயலவில்லை. ஹாலா என்ற 17 ஆவது மன்னர் பண்டைய மகாராஷ்டிர மொழியில் காமத்தைப் பற்றி 700 செய்யுட்கள் சமைத்த தாகக் கூறப்படுகின்றது. பழைய மகாராஷ்டிரக் கவிதையின் பண்பும் அழகும் அவற்றில் ததும்புகின்றன. ஹாலாவின் அமைச்சர், ஸர்வவர்மர் என்றவர், சமஸ்கிருத பிராகிருத இலக்கணம் ஒன்றை உருவாக்கினுர். குணுத்தியர் என்ற வேருெரு சாதவாகன மந்திரி பாமர மக்கள் கதைகளடங்கிய பிருஹத் கதையை இயற்றியதாகக் கருதப்படுகிறது. இந் நூல் பைசாசி பிராகிருதத்தில் அமைந்துள்ளது. இதில் அக்கால இலக்கிய இயல்பு நன்கு புலப்படுகிறது. பிராகிரு தத்தைவிட சமஸ்கிருதம்தான் இலக்கிய மொழியாக வளர்ச்சி பெற்று வந்தது. கல்வெட்டுகள் சமஸ்கிருதமும் பிராகிருதமும் கலந்த மொழியில் அமைக்கப்பட்டுள்ளன.

# இயல் ஐந்து

# சங்க காலம்

சாதவாகனர் தக்காணத்தை ஆண்டு வந்த காலத்தில் தென் கோடியில் சேர சோழ பாண்டிய மன்னர் அரசு புரிந்தனர். அவர்களைக் குறித்து முதன் முதல் மகா பாரதத்தில் கூறப் பெற்றிருக்கக் காண்கின்றோம். அந்த மூன்று மரபினரும் தாம் பாரதப் போரில் தொடர்பு கொண்டிருந்த செய்தியை வழி வழியே போற்றி வந்துள்ளனர். திராவிடக் குடிகளின் தலைவரான அவ்வேந் தர்கள் ஆதியில் வடக்கிலிருந்தே வந்திருக்கலாம். 'பாண்டியர்', 'பாண்டவர்' என்னும் பெயர்ப் பொருத்தமும், மகளிர் பல கணவருடன் வாழும் பாண்டர் வழக்கமும், தென் நாட்டுக் குடிகள் சிலரிடையே நடப்பிலிருந்த மரு மக்கள் தாயமும், அன்னர் வடநாட்டைச் சார்ந்தோரா யிருக்கலாம் என்பதை வலியுறுத்துகின்றன. மேல் ஆராய்ச்சிகளால்தான் இக்கோட்பாட்டின் உண்மையை வரையறுத்தல் கூடும். தெற்கிலுள்ளஇம்மூன்று அரசுகளைப் பற்றியும் முதன் முதல் கல்வெட்டுகளில் குறிப்பிட்டிருக்கக் காண்பது அசோகரது கல்வெட்டுகளிலே ஆகும். அவற்றில் அன்னர் மௌரிய அரசிற்கு அண்மையில் தன்னுரிமை பெற்றுள்ள மன்னர்களெனக் குறிக்கப்பட்டிருக்கிறது. மௌரிய அரசிற்குப் பக்கத்தில் சத்தியபுத்திரர் தன்னுட்சி செலுத்தியுள்ளார். அவர் சங்க நூல்களில் குறிக்கப்பட்டுள்ள கொங்கராகவோ அல்லது கோசராகவோ ஆயிருக்கலாம்.

வேங்கடம் என்னும் திருப்பதி தமிழகத்திற்கு, அதாவது தமிழ்நாட்டு அரசுகளுக்கு, வட எல்லையாக அமைந்தது. மேற்கிலும் கிழக்கிலும் கடலை எல்லையாகக்கொண்ட இத்தமிழகத்தில் இக்காலக் கேரள நாடும் மைசூர் சமஸ்தானத்தின் தென் பகுதியும் உட்பட்டிருந்தன. கீழ் கரையிலுள்ள பழவேற்காடு[1] முதல் மதுரை வரையுள்ள நிலப்பகுதி சோழர்களுக்கு உரியதாயிற்று. மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களும், நாஞ்சில் நாட்டின் ஒரு பகுதியும், பாண்டியர் ஆட்சியில் அடங்கின. மேல் கரையிலுள்ள கோகர்ணம் முதல் கன்னியாகுமரி வரை சேர அரசு ஆகியது. இம்மூன்று அரசுகளுக்கும் அண்மையிலுள்ள பகுதிகளை ஆய், கோசர் முதலான குறுநில மன்னர் ஆண்டு வந்தனர்.

பழங்காலத் தமிழ் மக்கள் வரலாற்றிற்கு மூலம் சங்க இலக்கியமே. ஆனால், சங்க காலத்தை வரையறுத்துத் திட்டப்படுத்துவதும், பெருந்திரளான சங்க நூல்களில் அமைந்து கிடக்கும் வரலாற்று மூலங்களை நுட்பமாக ஆராய்ந்தெடுப்பதும், எளிய செயல் அன்று. புகழ் பெற்ற புலவர் குழு ஆகிய சங்கத்தின் பிறப்பு வரலாறு புரியாத மறை பொருளாகி இருந்துளது. சங்கத்தின் ஆதி வரலாறு 'இறையனார் களவியல்' என்னும் அகப்பொருள் இலக்கண நூலின் விரிவுரை அகத்தே வெளிப்படுகின்றது. அந்நூலுரையின் காலம் கி. பி. எட்டாம் நூற்றாண்டிற்கு முந்தியதன்று. மேலும், மனித எல்லையை மீறிய தெய்வீக சக்தியில் நம்பிக்கை கொண்டு அது இயற்றப் பட்டுள்ளது. அதனுள் ஒன்றன் பின் ஒன்றாக எழுந்த

1. Pulicat.

மூன்று சங்கங்கள் கூறப் பெற்றுள்ளன. அவை மொத்தம் 9,990 ஆண்டுகள் நிலைபெற்றிருந்தன. அக் காலத்தில் 8,598 புலவர்கள் கூடி, அரிய நூல்கள் இயற்றி, சங்கத்தில் அரங்கேற்றியுள்ளனர். அப்புலவர்களில் கடவுளரும் சிலர் இருந்தனர்! இத்தகைய வரலாறு நம்புதற் குரியதன்று என்பது தெளிவு. எனினும் பன்னூற்றாண்டு களாக வழிவழியே வழங்கி வருகின்ற சங்க வரலாறு முற்றிலும் வெறும் கதை எனத் தோன்றவில்லை. சங்கத்தைப் பற்றிய பிற்கால நூல்களில் பல்வேறு குறிப் புக்கள் உள்ளன. சங்க நூல்கள் சிலவற்றில் அரசர், புலவர் ஆகியோரைப் பற்றிய செய்திகள் சிலவற்றைக் காண்கின் றோம். அவற்றை வைத்து நோக்குங்கால், சங்கத்தைப் பற்றிய வரலாறு உண்மையும் கதையும் கலந்து உருவான தென நினைக்க இடம் உளது.

சங்கம் ஒன்றோ மூன்றோ என வரையறுத்துக் கூறு தலும் எளிதன்று. பாண்டிய மன்னர் மதுரையில் வந்து நிலைபெறு முன்னர் இருமுறை தங்கள் தலைநகரை மாற்றியுள்ளனரென்ற செவிவழிச் செய்தியை, மகாபார தத்திலும், பிளினியின் இயற்கை வரலாற்றிலும், பண்டைய தலைநகர் கபாடபுரத்தைக் குறிப்பிட்டிருப் பது வலியுறுத்துகின்றது. ஒன்றன்பின் ஒன்றாக மூன்று தலைநகர்களிலும் முறையே சங்கம் நடைபெற்றமையால், மூன்று சங்கங்கள் நிலவின என்று கொள்ளவும் இடம் உண்டு. முதல் இரு சங்கங்களிலும் எண்ணிறந்த இலக்கிய இலக்கண நூல்கள் எழுந்தன எனவும், அவற்றுள் பெரும்பாலானவை அழிந்தொழிந்தன எனவும், தற்போது எஞ்சி நிற்கும் நூல்கள் பெரும்பாலும் கடைச் சங்கத்தில் தோன்றினவை எனவும், செவிவழிச் செய்தி வலியுறுத்து கின்றது.

கி.மு. 500 முதல் கி.பி. 500 வரையுள்ள காலத்திற் கிடையே, பலர் பல கட்டங்களைக் கடைச் சங்கத்தின் காலமெனக் குறிப்பிட்டுள்ளனர். இவைதவிர, இச் சங்கத்தின் தொடக்கத்தையும் இறுதியையும் பற்றி மிகை யுரைகளும் பல தோன்றியுள்ளன. கி.பி. ஏழாம் நூற் றுண்டில் பாடப்பட்ட தேவாரங்களில் சங்கத்தைப்பற்றிக் கூறியுள்ள குறிப்புக்கள், தேவாரங்கள் பாடப்பட்டதற்கு முன்னரே சங்கம் நிலவியிருக்க வேண்டுமென்பதைத் தெளிவிக்கின்றன. மேலும், இலக்கிய நடையை நோக்குங்கால், தேவாரத்தில் காணப்படும் எளிய நடைக் கும், சங்க இலக்கிய முறைக்கும் இடையே பல நூற்றுண்டு கள் கடந்திருக்க வேண்டும் எனத் தெரிகின்றது. தவிர, கிரேக்கர் இந்தியாவிற்கு வந்த தொடக்கத்தில் தமிழ் நாட்டைப் பற்றி அவர் வரைந்திருக்கும் விவரணங்கள், சங்க நூல்களில் தமிழர் வர்த்தகத்தைப் பற்றியுள்ள குறிப்புக்களை ஒத்திருப்பதுவும், கிறிஸ்து சமயத்தின் தொடக்கத்தில் வழங்கிய உரோமை நாணயங்கள் தென் இந்தியாவில் கண்டெடுக்கப்பட்டுள்ளமையும் இக்காலத்தில் எஞ்சியுள்ள சங்க இலக்கியங்கள் கிறிஸ்து சகம் முதல் மூன்று நூற்றுண்டுகட்கு உரியன என்னும் கருத்தை வலியுறுத்துகின்றன.

சங்க நூல்களுள் இக்காலம் எஞ்சியிருப்பனவற்றில் தொல்காப்பியம்—இடைச் சங்கத்திற்குரியது எனவும், எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும், பதினெண்கீழ்க் கணக்கும், அவற்றுடனே சிலப்பதிகாரமும், மணிமேகலை யும் கடைச் சங்கத்திற்குரியன எனவும் நம்புகின்றனர். எட்டுத் தொகை நூல்கள்:—நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன. பத்துப்பாட்டு நூல்

கள் :-திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறு பாணுற்றுப்படை, பெரும்பாணுற்றுப்படை, முல்லைப் பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் ஆகியவை. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் :—திருக்குறள், நாலடியார், களவழி நாற்பது, கைந்நிலை, இனியவை நாற்பது, இன்ன நாற்பது, நான்மணிக்கடிகை, கார் நாற்பது, ஐந்திணை ஐம்பது, திணைமொழி ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமாலை நூற்றைம்பது, திரிகடுகம், ஏலாதி, ஆசாரக் கோவை, பழமொழி நானூறு, சிறுபஞ்ச மூலம், முதுமொழிக்காஞ்சி ஆவன. செவிவழிச் செய்தி ஒரு புறமிருப்ப, கடைச் சங்க நூல்கள் எனக் கூறப்பெற்றவை அனைத்தும் அக் காலத்திற்குரியவைதாமா என்பது பெரிதும் ஐயப் பாடுடையது. எட்டுத் தொகையும், பத்துப் பாட்டும் கடைச் சங்க நூல்களேயாயினும், கீழ்க்கணக்கு நூல்களில் பெரும்பாலனவும், சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் காப்பியங்களும் பிற்காலத்திற்குரியன. திருக்குறள் இக் காப்பியங்களுக்கு முந்தியது என்பதற்குச் சற்றேனும் ஐயமில்லை. அதில் அடங்கியுள்ள கருத்துக்களினல், அது சங்க நூல்களோடு உறவுடையது என அறிகின்ருேம். நாலடியாரில் பெருமுத்தரையரைப்பற்றிக் குறிப்பிட்டிருத்த லால் அது கி.பி. ஒன்பதாம் நூற்ருண்டில் வாழ்ந்திருந்த முத்தரையத் தலைவர் காலத்தில் பிறந்தது எனக் காண்கின் ருேம். கீழ்க்கணக்கு நூல்களில் பெரும்பாலன கி.பி. ஆரும் நூற்ருண்டிற்கும் ஒன்பதாம் நூற்ருண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றியிருக்கலாம்.

சங்க இலக்கியங்கள், சிறப்பாக, அவற்றுள் புறநா னூறு, பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு முதலியன, தமிழரின்

வரலாற்றை உருவாக்குவதற்குப் பயன் தரும் பொருட்கள் அடங்கியன. எனினும், தமிழகம் தழைத்து நிலவிய காலத்தில் அதனை அரசாண்ட மன்னர் மரபுகளின் அரசியல் வரலாற்றைத் தொடர்ச்சியாய் அமைப்பதற்குத் தேவையான ஆதாரங்கள் கிடைத்தில. வேந்தர் சிலர் ஆற்றிய வியத்தகு செயல்கள் விரித்துரைக்கப் பெற்றுள்ளன. ஆயின், வரலாற்று நூற்குரிய கால இசைவு இல்லை. பதிற்றுப்பத்து ஒருவர்பின் ஒருவராகப் பட்டத்திற்கு வந்த சேர மன்னர் செயல்களைத் தொடர்ச்சியாய் அறிவிக்கின்றதெனக் கூறலாம். ஆனால் அதிலேகூட சேர வரலாறு பற்றி ஆங்காங்கு விவரம் அறிய முடியாத இடைவெளிகள் சில உள்ளன. பதிற்றுப்பத்தில் முதலாம் பத்தும், பத்தாம் பத்தும் தவறிப் போயுள்ளன. இதுகாறும் எஞ்சி நிற்கும் செய்யுட்கள் சேரமன்னர் அருஞ்செயல்களை அறிவிக்கின்றன. அவர்தம் மரபு வழியையும் துலக்கி, ஒவ்வொரு அரசரின் ஆட்சிக்கால அளவையும் குறிப்பிடுகின்றன. சேர மரபில் இருகொடி வழிகள் இருந்தன. அவ்வழியினர் ஒருவர் வஞ்சியிலும் மற்றவர் தொண்டியிலும் உறைந்து, பெரும்பாலும் ஒரே காலத்தில் ஒருங்கே அரசு செலுத்தினர்.[2] ஒரே கிளையைச் சேர்ந்த உறுப்பினருக்குத் தலைமைக் கொடி வழியினரோடு உள்ள திட்டமான இனமுறையை எவ்வாற்றானும் உறுதிப்படுத்த இயலாது.

2. சேரர் தலைநகராகிய வஞ்சி யாதென்பது இஞ்ஞான்றும் பெருங் கேள்வியாய் நிற்கின்றது. சிலர், அதனை மேலைக் கடற்கரையில் கிராங்கனூர் அண்மையில் நாட்டுகின்றனர். மற்றையோர் அதனை திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள கருவூர்க்கு ஓட்டுகின்றனர். ஆயினும் அது மேலைக் கடற்கரையில் இருந்தது என்பதற்கே சிறந்த சான்றுகள் உள்ளனவாகக் கருதலாம். ஒருகால் சேர மன்னர் வஞ்சியையே அன்றி, கருவூரையும் மற்றொரு தலைநகராகக் கொண்டிருப்பர்.

மன்னர் ஒவ்வொருவரது தலைநகரமும் திட்டமாகக் காண்பிக்கவில்லை. மேலும், புறநானூற்றில் வேறு சில சேர மன்னரும் கூறப்பெற்றுள்ளனர். அவருக்கும் பதிற்றுப்பத்தில் கூறப்பெற்றவர்க்கும் உள்ள இன முறை யாது? அதை அறிந்துகொள்ள வழியைக் காணோம்.

பதிற்றுப்பத்தில் விரித்துரைக்கப் பெற்ற மன்னர் எண்மரில் தலைசிறந்து விளங்கியவர் சேரன் செங்குட்டு வனரே. மாபெரும் புலவர் பரணர் ஐந்தாம் பத்தில் இம் மன்னரைப் புகழ்ந்து பாடியுள்ளார். சிலப்பதிகாரம் அவருடைய அரும்பெருஞ் செயல்கள் பலவற்றை எதிரொலிக்கின்றது. செங்குட்டுவர் வடக்கே இமயம் வரை படைக்கோலங் கொண்டு சென்றது, வேளிர் தலைவன் நன்னனைத் தோற்கடித்தது, நேரிவாயிலில் சோழர் ஒன்பதின்மரை சிதறடித்தது, கொங்கரை வெற்றி கொண்டது முதலாய அரிய செயல்கள் அனைத்தும் அக்காப்பியத்துள் காணலாம். செங்குட்டுவர் கடவுட்பற்று மிக்கவர். மறை வேள்விகள் நடத்தினர். சிவனையும் விஷ்ணுவையும் வழி பட்டார். சிலப்பதிகாரத்திலும் பதிற்றுப்பத்திலும் கண்ட குறிப்புகளின்படி, செங்குட்டுவர் கரிகாற்சோழ மன்னரது பெண்வழிப் பெயரன் மகன் என்று சிலர் கருதுகின்றனர்.

சோழர்களில் கரிகாலர் ஒப்புயர்வற்ற பேரரசர். அவர் சேர பாண்டியப் பேரரசர் மீது பெருவெற்றி கொண்டார். அரசர் ஒன்பதின்மர் ஒருங்கு சூழ்ந்து எழுந்து வந்த வெண்ணிப் பறந்தலைப் போரில் அவரனைவரையும் முறி யடித்தார். அவர்தம் வீரச் செயல்கள் புறநானூற்றிலும் பொருநராற்றுப்படையிலும், பட்டினப்பாலையிலும், மேற் கூறிய சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் இரு பெருங் காப்பியங்களிலும், சிறப்பாக எடுத்துரைக்கப் பெற்றுள்

ளன. கரிகாலர் உழவுத் தொழிலைப் பெருக்கினர் ; வாணி கத்தை வளர்த்தார் ; கைத்தொழிலைப் போற்றினர். காவிரிப்பூம்பட்டினத்தைச் சிறப்பித்தார். இவை எல்லாம் பட்டினப்பாலையில் பாடப் பெற்றன. கலிங்கத்துப் பரணியிலும் விக்கிரம சோழன் உலாவிலும் புனைந்துரைக்கப் பெற்ற அவர்தம் புதுமைச்செயல்கள் உள்ளதும் இல்லதும் கலந்த கட்டுக் கதையே போல் தோன்றினும், அவர் நிலவுலகில் வாழ்ந்த நிகரற்ற பெருமன்னர் என்னும் உண்மையைச் சங்க நூல்கள் சாற்றுகின்றன.

சங்கச் செய்யுளில் இருபதின்மருக்கு மேலாய பாண்டிய மன்னர் காட்சி அளிக்கின்றனர். அவருள் பாண்டியர் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியர் ஒருவர். அச்செருவில், அக்காலத்தே வாழ்ந்திருந்த சேர சோழ மன்னரும், குறுநில மன்னர் ஐவரும் ஒருங்கு சேர்ந்து, அவரை எதிர்த்தனர் என மதுரைக் காஞ்சி கூறுகின்றது. அவர் மீது பாடப்பெற்ற அந்நூல், அவரது பெருமையை அழகுபட உரைக்கின்றது. புறநானூறு, அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை முதலான நூல்களில் பல செய்யுட்கள் அவர் புகழைப் பகர்கின்றன. அவர் பெரும் போர் வீரராயிருந்ததோடு சிறந்த அறிஞராகவும் திகழ்ந்தார். புலவர்களை ஆதரித்தார். இந்து சமயப் பற்று மிக்கவர். மறைவேள்வி இயற்றினர். சங்க காலப் பாண்டிய மன்னரில் தலை சிறந்தவர் இவரே. நெடுஞ்செழியருக்குப் பின் வந்தவர்களில் உக்கிரப் பெருவழுதி சிறந்த போர்வீரர். கானப் பேரை ஆண்ட குறுநில மன்னனை அடக்கினர். அவர் புகழ் பெற்ற கவிஞர். அகநானூற்றை அவரே தொகுப்பித்தார் எனக் கூறுகின்றனர். அக்காலத்தில் வாழ்ந்த மற்றொரு மன்னர் பூதப்பாண்டியர். அவரும் கவிஞரே.

அவர் ஒல்லையூரைக் கைப்பற்றிய திறல் மிக்க போர் வீரர். உற்றுழி உதவும் நண்பர். அன்பு நிரம்பிய கணவர். எவ்வகையிலும் அறிவொளி சிறந்த பேரரசர்.

பெரும் புகழ் பெற்ற இம்மூன்று மரபில் தோன்றிய மன்னரே அன்றி, தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளை ஆண்ட குறுநில மன்னர் பலரும், சங்கநூல்களில் கூறப் பெற்றுள்ளார். அவர்களில் ஆய் அண்டிரனும், பாரியும் குறிப்பிடத்தக்கார். இருவரும் வீரத்திலும் கொடையிலும் புகழ் சிறந்தவர். புலவர்க்கு வரிசை அறிந்து பரிசு அளித்து ஆதரித்த புரவலர். அண்டிரன், பாரி, இவர் இரு வரை அன்றி, இவர் போலும் பெருங்கொடையுடைய குறு நில மன்னர் வேறு ஐவரும் உளர். இவர் எழுவரும் சிறந்த வள்ளல்கள் எனப் புகழ் பெற்றவர். எனினும் இவர்தம் மரபு வரலாற்றை முறையே அமைத்துக் கூறுதல் இயலாது. இவருக்கும் மேற்கூறிய மூவேந்தருக்கும் உள்ள இனமுறை முதலியன வரையறுத்தலும் இயலாத செயலாகும்.

இத்தகைய குறைபாடுகள் இருப்பினும், சங்க இலக் கியம், பேரரசின் இயல்பினையும், அதனை ஆண்ட அரசர் தம் குறிக்கோளையும், தெளிவாக அறிவிக்கின்றது. பொது வாக அரசர்கள் போர் வேட்கை யுடையராகவே இருந் தனர். போர்களும் அடிக்கடி நடைபெற்றன. போர் வீரத்தை பேரறம் என மதித்தனர். ஏழு அரசர் மீது வெற்றி பெறுவது சிறந்த மன்னருக்கு உரிய பெருமையெனக் கரு தப்பட்டது. அவ்வெற்றி வீரர் தமக்குத் தோற்று வீழ்ந்த அரசர் எழுவர் மணிமுடிகளையும் தமக்கு மாலையாகச் சூடித் தம் வெற்றியை விளம்பரம் செய்தார். போரில் இறுதி வரை புறங்காட்டாது பொருது போர்க்களத்தில் உயிர்

நீத்தல், மன்னருக்கு மாபெரும் மாண்பு எனக் கருதப்பட்டு வந்தது. போரில் முதுகில் புண்பெற்ற சேரமன்னர் இரண்டாம் ஆதர் என்பார் உண்ணு நோன்பு மேற்கொண்டு உயிர் நீத்தார்.

தம் கடமைகளை மிக உயர்வாக அரசர் மதித்திருந்தனர். நெறி தவருத நீதி வழங்குவதும், ஏழைகளையும் கதியற்றவர்களையும் பாதுகாப்பதும், மன்னரது கடமை. குடிகளின் நிலையை உயர்த்துவதும் மக்கள் நன்மையைக் கருதி சமயச் சடங்குகளையும் வேள்விப் பலிகளையும் நடத்துவதும், அரசரது பொறுப்பெனக் கருதினர். அரசியலும் சமூக நிபந்தனைகளும் தனிப்பட்டு வரையறை செய்யப்படாது அமைந்திருந்த அக்காலத்தில், அரசர் எச்செயலிலும் தம் குடிகளுக்கு மாதிரியாய் இருத்தல் வேண்டும் என்றும், உயர்ந்த சமயத்தையும் கல்வியையும் காப்பாற்ற வேண்டும் என்றும் எண்ணிறந்த செய்யுட்கள் அக்காலத்தில் இயம்பியிருத்தல் வியத்தற்குரியதன்று. மற்றையோர்க்கு எடுத்துக் காட்டாய் விளங்கும் சிறந்த மன்னனின் கடமைகளையும் கோட்பாடுகளையும், திருக்குறள் அழகாக எடுத்துரைத்துள்ளது.

சங்க கால மன்னர் மிகச் சிறந்த அறிவும் ஆற்றலும் உடையவராய் விளங்கினர். அன்னார் கல்வியைப் போற்றினதுமன்றி, அவருள் பலர் ஒப்புயர்வற்ற கவிஞராயும் விளங்கினர். மன்னர்கள் கவிஞருடன் நெருங்கிப் பழகி உறவாடினர். கவிஞர் சிலர் மன்னர்க்கு அரசியல் துணைவராகவும், தூதர்களாகவும் பணியாற்றி வந்தனர். நாடெங்கும் அலைந்து திரிந்து இசைபாடும் பாணர்க்கு அரசர் அளித்துவந்த பேராதரவினுல், இயல் இசை

நாடகக் கலைகள் மேன்மேலும் புத்துயிர் பெற்று வளர்ந்தோங்கின.

முடிசூட்டு வழக்குகள் அடிக்கடி எழுந்தனவேனும், அரசுரிமை பொதுவாக மரபு வழியே தொடர்ந்து சென்றது. மன்னர் தன்னுட்சி செலுத்தும் தனியுரிமையாளர் என்பதே கோட்பாடெனினும், நடைமுறையில் புலவர், பாணர் முதலானோர் செல்வாக்கு நலத்தினாலும், பண்டைய வழக்கத்திற்கு அளித்த நன்மதிப்பின் பயனாலும், அவர் தம் குடிகளுக்கு அன்பு நலங் கனிந்த தந்தையராகவே விளங்கினர். 'ஐம்பெருங்குழு', 'எண்பேராயம்' எனும் குழுக்கள், பிரதிநிதிகள் அவைகளாகவோ, அல்லது அரசரது பணியாளர் சுற்றமாகவோ எவ்வாறு திகழ்ந்த தெனத் திட்டமாய்க் கூற இயலாது. ஆயினும், மன்னருக்கு துணைபுரிந்த பல்வேறு உதவியாளர் இருந்தனரென்பது உண்மை.

மக்களது நியாய சபையாகப் பெயர் பெற்றிருந்தது 'மன்றம்' அல்லது 'பொதியில்' என்பது. அதன்கண் கல்வி அறிவு ஒழுக்கங்களில் முதியோர் வீற்றிருந்து வழக்குகளைத் தீர்த்தனர். அரசியல் நயம்பற்றி மன்னர் அவருடன் கலந்து ஆராய்ந்ததாகத் தோன்றுகின்றது. பொதுப் பேரவை என வேறு வகையாய்த் திகழ்ந்த தலைமைக் குழுவிற்குத் திருக்குறளில் மன்றம் அல்லது அவை எனப் பெயர் வழங்குகின்றது. அப்பேரவைக்கு அரசர்மீது செல்வாக்கு இருந்துள்ளதெனினும், அது தற்கால முறையில் பிரதிநிதி அதிகாரமோ, குடியாட்சி அமைப்போ கொண்டதன்று.

சங்க நூல்கள் அக்கால அரசியல் அமைப்பு முறைகளைப் பார்க்கிலும் மக்கள் வாழ்க்கை நிலையையே மிகத்

தெளிவாய்ப் படக் காட்சி போல் எடுத்துக் காட்டுகின்றன. ‘‘பண்டைத் தமிழ்ப் புலவர் மண்ணுலகில் பிறந்த மண்ணுளர். மக்கள் அறிந்தவாறு அன்னுர் வாழ்க்கையிற் கண்ட வாய்மைகளைத் திரைப் படத்தில் உருவாக்குவது போல் எடுத்துக் காண்பிப்பதில், அப்புலவர் இகல் கொண்டனர்’’ எனக் கூறுகின்ருர், பி. டி. சீனிவாச ஐயங்கார். தனிப்பட்ட ஆட்களையோ நிகழ்ச்சிகளையோ புனைந்துரைக்கும் செயற்கு நடுவே சமுதாயப் பழக்க வழக்கங்களையும், சமய அனுட்டானங்களையும், நுண்கலை வளர்ச்சியையும், கல்விப் பெருக்கத்தையும், இப்புலவர்கள் எடுத்துரைத்துள்ளனர். அவர் சொற்கள் எவ்வளவு தற்செயலாகவும், மறைமுகமாகவும் அமைந்துள்ளனவோ, அவ்வளவு உண்மையாகவும் இயல்பாகவும், படம் போலத் தெளிவுறப் புலப்படுத்துகின்றன.

பண்டைத்தமிழ் மக்கள், குடியிருக்கத் தகுந்த நிலம் ஐவகை இயற்கைப் பிரிவுகள் அல்லது திணைகள் என வகுக்கப் பெறுதல் கூடும் எனக் கண்டனர். அவ்வைந் திணைக்குப் பாலை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனப் பெயரிட்டனர். நீரும் நிழலும் இல்லாச் சுரமும் சுரம் சார்ந்த இடமும் பாலை. மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி. காடும் காடு சார்ந்த இடமும் முல்லை. வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம். கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல். ஒவ்வொரு திணையும் வெவ்வேறு வகையான வாழ்க்கை முறையில் வளர்ந்து, நாகரிகப் போக்கில் வெவ்வேறு தனிமுறை வளர்ச்சிக்கு இடனுயிற்று. அவ்வாறே பாலைத்திணையில் அங்குமிங்கும் அலைந்து திரியும் நிலைமையும், குறிஞ்சித் திணையில் வேட்டையாடும் நிலைமையும், முல்லைத் திணையில் ஆடு மாடு மேய்க்கும்

நிலைமையும், மருதத் திணையில் உழுது பயிர் செய்யும் நிலைமையும், நெய்தல் திணையில் கடலோடி மீன் பிடிக்கும் நிலைமையும் தோன்றின. தமிழ் மக்கள் இத்திணைகளில் எல்லாம் வாழ்ந்தவரே ஆவார்; சிலர் ஒவ்வொரு திணையிலும் வாழ்ந்திருந்து, பின் உயர்ந்த திணைக்கு மாறிச் சென்றனர். எனினும் ஒவ்வொரு திணையிலும் வெவ்வேறு பண்பு நலம் தொடர்ந்து வளர்ந்தன என்பதும் மக்கள் சிலர் ஒரு திணையை விட்டு மறு திணைக்கு மாறிச் சென்ற காலத்தும், அவரவர் வாழ்ந்திருந்த திணைக்குரிய பண்பு நலம் அவரவர்பால் தனித்தனியே நிலைத்திருந்தன என்பதும் நாம் நம் நினைவில் இருத்துதற்குரியவை. ஆகலின், ஒவ்வொரு திணையும் தன் தன் சமுதாய வாழ்க்கையின் தனிப் பண்பு உடையதாயினும் சங்க காலத்தில் அவை ஒன்றை விட்டு ஒன்று பிரிந்து, தனியே நிற்கவில்லை. ஒவ்வொரு திணையும் தனக்கடுத்த திணைமீது செல்வாக்குடையதாகவும், தன் முறையில் மற்றைத் திணைகளின் வாழ்க்கை முறைச் செல்வாக்கிற்கு உட்பட்ட தாகவும் விளங்கியது.

அவரவர் உறைவிடம் அவரவர் வாழ்க்கை நிலைமைக்குப் பொருந்தியது. மலையிலும் காட்டிலும் வாழ்ந்தோர் மண்சுவர் எழுப்பிக் குடிசை கட்டிப் புல்லால் கூரை வேய்ந்து குடியிருந்தனர். அக்குடிசை சில தூண்கள் நாட்டி, அவற்றின்மீது அமைக்கப்பெற்ற ஒரு வகை ஒதுக்கிடம் என, புறநானூறு உரைக்கின்றது. ஆற்றுப் பள்ளத் தாக்குகளில் பெரிய வீடுகள் காற்றோட்டமுள்ள தமக்குரிய விரிவான பகுதிகளுடன் விளங்கின. செல்வர் தட்ப வெப்பப் பருவகாலங்களுக்கேற்ற வண்ணம் தனித் தனி வீடுகள் வைத்திருந்தனர். பல அடுக்குகள் உள்ள பெரிய மாளிகை களும் இருந்தன. அரசர் கோவில்கள் அணிநலம் சிறந்

தோங்கிய பல்வேறு அறைகளுடன் அமைந்த பெரிய அரண்மனைகள். அக்காலத்தில் கட்டடக் கலை ஒருவாறு நன்கு வளர்ந்திருந்தது. என்பது தெளிவு. நெடுநல்வாடையில் பெரிய கட்டடங்கள் கைதேர்ந்த சிற்பிகளால் திட்ப நுட்ப முள்ள அளவும், ஒழுங்கான அமைப்பு முறையும் கொண்டு, எவ்வாறு எடுக்கப்பெற்றன என்று காண்பித்திருக்கின்றது. அரண்மனை எடுப்பதற்குச் சுட்ட செங்கல்லைக் கையாண்ட னர். பெரிய இல்லங்கள் பல மச்சும், முகப்பு மண்டபமும் உடையன. காப்பியங்கள் தோன்றிய காலத்தில், அரண் மனைகள் மிக்குயர்ந்த தலைவாயில்களும், வியத்தற்குரிய கோபுரங்களும் அமைந்தனவாம். சிறந்த வேலைப்பாடு தீர்ந்த அழகிய விளக்குகளும், மஞ்சங்களும், நாழிகை வட்டில்களும் திகழ்ந்தன.

மக்களின் உணவுப் பொருட்கள் பலவும் பிற்காலத்தில் உள்ளன போன்றனவே. செல்வர் சோறும், பாலும், நெய்யும், காய்களும், கனிகளும் அருந்தினர். குழம்பும், மற்றைய கறிகளும், பொதுவாய்ச் சுவைப் பொருள்கள் ஆகிய மசாலை கலந்து நன்ருகத் தாளிக்கப்பெற்றன. வறியோர் பெரும்பாலும் அரிசிக் குறுநொய் உணவும், கீரைக் கறியும் உண்டனர். மக்கள் எல்லா வகுப்பினரும் சாதி வேறுபாடேனும், மற்றைச் சமுதாய வேறுபாடேனும் இன்றிப் புலால் உண்டனர். நாளடைவில் சமணர் பௌத்தர் செல்வாக்கின் பயனுய், புலால் மறுக்கும் முயற்சி தோன்றியதென்பது வெளிப்படை. அனைவரும் கள் பருகும் வழக்கம் இருந்தது. சுண்ணும்பையும் பாக்கையும் சேர்த்து வெற்றிலை மெல்லும் வழக்கமுண்டு. தமிழ் மக்கள் விருந் தோம்பும் அறத்தில் தலைநின்றனர். வறியார்க்கு உணவு அளித்தல் இல்வாழ்வார் அறக்கடன். அடிக்கடி பொது

விருந்து நடத்தினர். அது "அற்றார் அழி பசி தீர்த்தல்," என்னும் அறத்தின் பாற்பட்டது. அன்றேல், பொது விருந்து விழாவின் பகுதியாக அமைந்தது. விருந்திற்குப் "பெருஞ்சோறு" எனவும் பெயர் வழங்கியது.

ஆடை எளிமையானதும் தட்ப வெப்ப நிலைக்கேற்றது மாம். ஆண்மக்கள் இரண்டு ஆடை அணிந்தனர். கீழாடையை அரையில் சுற்றினர்; மேலாடையைத் தோளில் இட்டனர். சட்டை அக்காலம் அறியப்பட்டதொன்று. ஒருகால் கிரேக்கர் வழியே அது வந்திருக்கலாம். ஆடைகள் மென்மையான தன்மை உடையன. அக்காலம் வழங்கிய இலக்கியங்களில், அரசர் அணிந்த அணியும் பெரிய விலையும் அரிய வேலைப்பாடும் உடைய அழகிய சிறந்த ஆடைகள் பற்றிய குறிப்புக்கள் மிகுதி. அக்காலத்தில் துறவிகளும், இரவலரும், வறியாரும், மரவுரியும் விலங்குத் தோலும் அணிந்த செய்தி கேட்டுள்ளோம்.

மக்கள் பெரும்பாலும் பொழுது போக்காகப் பந்தயம் வைத்து, சூது, வட்டு முதலியன ஆடினர். வழக்கமாக இளைஞரும் முதியோரும் விளையாடும் இடம் மன்றமே. சிறுவர் மன்ற வெளியில் தாம் விரும்பியவாறு விளையாடினர். மன்னரும் செல்வரும் தங்கள் மாளிகைகளின் முன் கூடாரங்களில் அமர்ந்து, பாணரும், புலவர் பாடும் இசைப் பாட்டுகளையும், செய்யுட்களையும், கேட்டு மகிழ்வது பெரு வழக்கு. திருவிழாக்கள் நடை பெற்றன. சங்க காலத்தின் இறுதியில் அவை தொகையிலும் வகையிலும் வளர்ந்து பெருகின. திருவிழாக் காலங்களில் சிலம்பம் பழகினர். வில்லும் அம்பும் கையாண்டனர். நாடக சாலைகளில் ஆடலும், பாடலும், கூத்தும் நிகழ்த்தினர். போர்ப் பயிற்சி செய்வதற்காக ஒவ்வொரு சிற்றூரிலும் 'போரவை'

என்றும் 'முரண்களரி' என்றும் பயிலிடம் நிறுவினர். ஆண்டுதோறும் போர்ப் பயிற்சியில் சிறப்புற்று விளங்கிய வீரர்களைப் பாராட்டுவதற்காக, விழாக்கள் கொண்டாடினர். பெருநற்கிள்ளி என்னும் சோழ மன்னர் ஒருவர் இளைஞருக்குப் போர்ப் பயிற்சி அளிப்பதில் பெருமுயற்சி செய்தார். அக்காலத்தில் பேராண்மையே தலைமைக் குறிக்கோள். மகளிர் சிறப்பாகப் போர் வீரர் குறிக்கோள்களை உயர்வாக மதித்துப் போற்றி வளர்த்தனர். அன்னார் தம் மன்னர்க்காகவும், தம் நாட்டிற்காகவும், தம் கணவரும் தம் புதல்வரும் போரில் தம் உயிரை வேள்வி செய்யவும் அவரை ஊக்கினர்.

இளைஞர்க்குக் கல்விப் பயிற்சி அளித்தனர். கற்று வல்ல ஆசிரியர் மாணவர் குழுவிற்கு இலக்கியமும், கணக்கும் கற்பித்தார். இன்னிசை, நடனம், நாடகம் முதலாய நுண்கலைகளும், வியத்தற்குரிய அளவு வளர்ச்சி பெற்றன. இக்கலைகளை வளர்க்கும் முயற்சியில் பாணர் கொண்ட பங்கு பெரிது. பாணர் சுற்றம் நாடெங்கும் சுற்றி அலைந்து, இவற்றைப் பரப்பி வந்தது. உயர்ந்த இசையறிவே இவற்றுள் சிறப்பாக வளர்ந்தது என்று தோன்றுகின்றது. சங்க காலத்தில் பற்பல இசை நூல்கள் இருந்தன. அவற்றைக் கற்று நுகரும் பேறு நாம் பெற்றிலோம். அவை கடல்கோளால் மறைந்தன போலும்.

நுண்கலைகள் அனைத்தையும் கடவுள் வழிபாட்டிற்குப் பயன்படுத்தினர். பழம் பெருந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியம், மற்றைச் சங்க நூல்கள் கூறும் முறையில் தனிப்பட்ட கடவுளரை எடுத்துக் கூறுவிடினும், தனி முதற் கடவுள் மீதும், அக்கடவுள் மும்மைப் பொருளாய் விளங்கும் தன்மை மீதும், தமிழ் மக்களுக்கு நம்பிக்கை

இருந்தது என்பதைக் கூறுகின்றது. வேறு வகையில், புறநானூறு முதலான நூல்களில் சிவன், முருகன், கொற்றவை முதலான தெய்வப் பெயர்கள் வழங்குகின்றன. அத்தெய்வங்களுக்கு எடுத்த திருக்கோவில்கள் நிலை பெற்றிருந்தன. சிலப்பதிகாரம் தோன்றிய காலத்தில் சிவன், முருகன், திருமால், பலதேவன், இந்திரன், சாத்தன் முதலியோர் தோன்றியுள்ளனர். புறநானூற்றில் காணும் ஆரியர் குறிக்கோட் செல்வாக்குக் குறிப்பிடத் தக்கது. அது காப்பியங்களில் வளர்ந்தோங்கியது. நாளடைவில் முருகர் கார்த்திகேயருடனே இணைந்து ஆறுமுகமும் பன்னிரு தோளும் பெற்று, ஆரியர் கடவுள் ஆயினர். தமிழ் மக்களின் போர்த் தெய்வம் ஆகிய கொற்றவை, துர்க்கை என்னும் ஆரிய தேவியுடன் கலந்தார். விஷ்ணுவும் இலக்குமியும், இந்திரனும், பிரமனும் தெய்வக் குழுவில் புகுந்தனர்.

தென் இந்தியாவில் இக் கலப்பு நிகழ்ந்த திட்டமான காலப் பகுதியை வரையறுத்துக் கூறுதல் எளிதன்று. ஏறக்குறைய கி.பி. மூன்றாண்டு முதல் சமண பௌத்த சமயக் கருத்துக்கள் தமிழ் நாட்டில் புகுந்தன. அக் கருத்துக்கள் பிராமண சமயத்தின் செல்வாக்கை மக்கள் வெறுத்து, அதற்கு எதிர் இயக்கத்தைத் தோற்றுவித்து விழிப்படைந்த தருணத்தில், புகுத்தப்பட்டிருக்கலாம். அக்காலத்தில் பிராமண சமய அனுட்டானங்களும் திராவிட சமயப் பழக்கங்களும் கலப்புற்றன. தென் இந்தியாவில் இந்து சமயம் மீண்டும் இளமை பெற்று வளர்ந்தது. எனினும், சங்க காலத்தில் இந்து சமணப் பௌத்த சமயங்கள் இடையே இணக்கமுள்ள உறவு இருந்து வந்தது. கி.பி. ஆறும் நூற்றாண்டு வரை இகல் தோன்ற

வில்லை. அப்பொழுது தோன்றிய இகல் சைவ சமய பரம குரவர்கள் ஆகிய நாயன்மார் காலம் என்னும் ஏழாம் எட்டாம் நூற்றுண்டுகளில் வலுப்பெற்றுக் கடுமையான நிலைமையை அடைந்தது.

ஆரியர் செல்வாக்கு தமிழ் மக்கள் சமூக அமைப்பில் தெளிவாய்க் காணக்கூடியதாயிற்று. ஆரியர் கோட்பாட்டில் வருணம் அல்லது நிறம் என்பதன் அடிப்படையில் எழுந்த சாதி என்னும் பிரிவு இன்றியமையாததொன்று. ஆதியில் தோன்றிய தமிழ் மக்கள் சமுதாயப் பிரிவு, தொழிலையே அடிப்படையாகக்கொண்டு அமைந்துளது. புறநானூற்றிலுள்ள செய்யுள் ஒன்று, துடியன், பாணன், பறையன், கடம்பன் என்னும் நான்கு குடிகளைப் பற்றிக் கூறுகின்றது. இன்னும் மற்றைக் குழுக்களும், வேளாளர், வணிகர், வினைவலர், அடியார் எனத் தொல்காப்பியத்தில் கண்டவண்ணம் வெவ்வேறு தொழில்களையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. வேளாளர் உழவுத் தொழில் நடத்தும் பெருநிலக்கிழார் அல்லது பண்ணையாளர். வாணிகர், வாணிகத் தொழில் நடத்துவோர். வினைவலர், வினைவல்லுநர் அல்லது சிறந்த தொழிலில் கைதேர்ந்தவர். அடியார், குற்றேவல் செய்வோர். ஆயின், நிறம் பற்றி எழுந்த நால்வகைப்பட்ட ஆரிய வருண பேதம், தமிழ்க் குடிப் பிரிவு ஒவ்வொன்றையும் சுற்றி அடுத்தடுத்து அண்மையில் தமிழ் நாட்டிற்குரிய பண்பாடு போல் அடைந்து கிடக்கும் அமைப்பு முறை பெரிதும் வியத்தற்குரியதேயாம். இரு வகைத் தனி வகுப்புக்கள் வேடிக்கையான முறையாய்க் கலந்துகொண்டன. அதன் பயனாய், காப்பியங்கள் தோன்றிய காலத்தில், இரு தனி

ஒழுங்கு முறைகள் ஒன்றோடொன்று கலத்தல் ஆயின. அடுத்தடுத்து அண்மையில் ஆரிய சதுர் வர்ண பேதங்களுடனே தொழில் அடிப்படையில், சூத்திர வருணத்தில் பெருந்தொகையுள்ள உப வருணங்கள் வளர்ந்து பெருகின. பிராமண, சத்திரிய, வைசிய வருண அங்கத்தினர் அனைவரும் வடக்கிலிருந்து வந்து தென் இந்தியாவில் இறக்குமதி ஆயினர் என்று காட்டுதற்குச் சான்று யாதும் இல்லை. ஒருசில பிராமணர் வந்தது உண்மை. நாளடைவில் தமிழ் நாட்டிலுள்ள சில மக்கள் குழுவில் அன்னார் முழுகிப் போயினர்; திராவிடக் குடிகளில் சில பிரிவினர், ஆரியரோடு கலந்ததன் விளைவாக, சத்திரியரையும் வைசியரையும் அமைத்துக்கொண்டனர் என்று தோன்றுகிறது.

இந்த உருமாற்றம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்குப் பின்பு நிகழ்ந்து, சங்க காலத்தில் நிலைபெற்ற கொள்கை ஆகிவிட்டது. அவரவர் தத்தம் இனத்தில் மட்டுமே வாழ்க்கைத் துணையைத் தெரிந்து மணந்துகொள்ளும் வழக்கம் வேரூன்றியது. பழந்தமிழ் மக்கள் காலத்தில், களவு, கற்பு என்னும், இருவகை மணஒழுக்கங்கள் வழக்கில் இருந்தன. எனினும், ஒருவாறு சங்க காலத் தொடக்க முதல் மாறுதல் தோன்றியது. காப்பியங்கள் தோன்றிய காலத்தில் அக்கினிச் சடங்கு முறையுடனே ஆரிய மண அனுட்டானங்கள் தமிழ் நாட்டில் நிலைபெற்று விட்டன எனக் காண்கிறோம். ஆயினும், சில தமிழ் வழக்கங்களை மேற்கொண்டொழுகுதல் அவசியம் ஆயிற்று. அவற்றுள் சிலவற்றைப் பிராமணர்தாமும் கடைப்பிடித்தொழுகுதல் குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக, மணமகன் மணமகள் கழுத்தில் தாலி கட்டும் வழக்கமும்,

மனைவி கணவனுடன் உடன்கட்டையேறும் வழக்கமும், காண்க. பிராமணருக்குள்ளே ஆரிய முறைகளையும் சடங்கு களையும் அடுத்து, கைம்பெண்டிர் கூந்தல் களையும் வழக் கம் நடைபெற்று வருகின்றது.

சங்க காலத்தில் மகளிர் நிலைமை மிகவும் உயர்வுற் றிருந்தது என்பதில் சிறிதும் ஐயமில்லை. இல்லத்திற்கு மெய்யான அணிகலன் என மதிக்கப்பெற்ற மகளிர், தம் கணவரைத் தெய்வம் என வழிபடும் உயர்ந்த அறத்தின் குறிக்கோள் உடையராய் விளங்கினர். அவர் பெருமை சிறந்த தன்னுரிமையுடன் வாழ்ந்தனர். முக மூடி, முக்காடு, மற்றும் சில பாசாங்கு ஒழுக்க முறை இவைகளைப் பின்பற்ருது தாராளமாய் எங்கும் உலா வித் திரிந்தனர். பணத்திற்காகச் செல்வமிக்க இளை ஞரை மயக்கும் விலைமகளிரும் இருந்தனர் என்பது அறிதல் வேண்டும். எனினும் அன்னர் சமுதாயத்தில் இகழ்ந்து ஒதுக்கப்பெற்றனர். அவர் நிலை மிகவும் தாழ்வுற்றிருந்தது.

இவ்வாறு, சங்க இலக்கியம் என்னும் அரும்பெருங் கருவூலத்தின் வழியே, பண்டைத் தமிழ் மக்கள் சமுதா யப் படக் காட்சிகளைக் கண்ணுரக் காண்கின்ருேம். அன்னர் மன நிறைவும், தன் நிறைவும் பெற்ற தனிச் சிறப்புடைய வாழ்க்கை நடத்தி வந்தனர் என்னும் உண்மை பொதுவாய் இதனைப் படிப்போர் உள்ளத்தில் பதியும் என்பது திண்ணம். ஊக்கம், உண்மை, கற்பு, ஒப்புரவு முதலாய உயர்ந்த பண்புகளும், பொருள் வள மும், அக்காலத்தில் சிறந்து வளர்ந்தன. மக்கள் வாணி கத் தொழிலில் செழுமையும், கொழுமையும் கொண்ட

னர் என்பது முன்னர்க் கண்டோம். உழவுத் தொழில்மட்டுமே அன்றி, கைத்தொழிலும், வாணிகப் பெருக்கமும் மக்களுக்குப் பெருஞ்செல்வமும் பேரின்பமும் பயந்தன.

## இயல் - ஆறு

# அரசுகள் எழுந்த காலம் (கி. பி. 500—900)

சாதவாகன மன்னர் வீழ்ச்சியடைந்த பின்னர்ப் பற்பல மரபுகளைச் சார்ந்தவர்கள் தென்னாட்டில் தத்தம் தலைமையை நிலைநாட்ட முயன்ற நிகழ்ச்சிகள் கண்டோம். எனினும், கி. பி. ஆறும் நூற்றாண்டில் சாளுக்கியர் தலை தூக்கிய பிறகுதான் தக்காண அரசியல் நிலை வரமாயிற்று. சாளுக்கியர் தோற்றம் பற்றிய கதைகள் ஒரு புறம் இருப்பினும், அவர்கள் வரலாறு பற்றியும் பல வகைக் கோட்பாடுகள் வழங்குகின்றன. சிலர் அவர்களை ஹூனர், சாகர், செலூக்கிடர் முதலான அயல் நாட்டு மக்களுடன் தொடர்பு படுத்துகின்றனர். மற்றையோர் அவர்களை இந்திய நாட்டுக் கன்னட மக்களுடன் இணைத்துள்ளனர். பிற்காலத்தில் சாளுக்கிய வரலாறு, அவர் கன்னட மரபிற்குரியார் என அறிவிக்கின்றது. தாம் சத்திரியர்களென அவரே கூறிக்கொண்டனர். ஆகவே, கி. பி. ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்திருந்த யுவான் சுவாங் என்னும் சீனப்பிரயாணியும், அவர்களைச் சத்திரிய மரபினர் எனக் கூறியுள்ளார்.

சாளுக்கிய மரபின் முதல்வர், முதலாம் புலிகேசி மன்னர். அவர் கி. பி. 543 முதல் 566 வரை ஆட்சி புரிந்தார். அவர் வாதாபி நகரைக் கைப்பற்றி அதனைத் தமது

தலைநகராக்கினார். தம் அரசியல் மாண்பைக் கொண்டாட அசுவமேத யாகமும் பலிகள் பலவும் செய்தார். அந்த மரபில் தலைசிறந்த மன்னர் கி. பி. 610 முதல் 642 வரை ஆண்ட இரண்டாம் புலிகேசி ஆவார். அவர் கதம்பர்களையும் கங்கர்களையும், மற்றை அயல் மக்களையும், தமக்குக் கீழ்ப்படுத்தித் தென் நாட்டிற்குத் தலைவர் ஆயினார்.[1] ஹர்ஷர் என்ற புகழ் பெற்ற பேரரசர் தெற்கே படையெடுத்துச் செல்லும் வழியில், நருமதை ஆற்றைக் கடக்க முயலும் பொழுது, அவரைப் பின்னிட்டோடச் செய்த அருஞ்செயலால் புலிகேசி பெரும்பெயர் பெற்றார். ஆயினும், அவர் தாமும், பல்லவ மன்னர் முதலாம் நரசிம்மவர்மரால் முறியடிக்கப் பட்டார். நரசிம்மவர்மர் வாதாபி நகரைத் தாக்கி, அதைக் கைப்பற்றிக்கொண்டார்.

மரபு வழி துலங்காத மற்றொரு மரபினர் பல்லவர் எனப்படுவர். அவர் பார்த்தியர் மரபினர் என்னும் கோட்பாடும், தமிழர் வழியினர் என்னும் கொள்கையும், தெளிவாக நிலைபெறவில்லை. அநேகமாக அவர்கள் அசோகரது கல்வெட்டுக்களில் கூறப்படும் புளிந்தர்கள் என்ற உள்நாட்டவரின் வழித்தோன்றியவர்களாகவும், சாதவாகனர்களின் குறுநில மன்னர்களாகவும் இருந் திருக்க வேண்டும். படர் கொடியைக் குறிக்கும் 'தொண்டை' என்ற சொல்லின் பிராகிருத சம்ஸ்கிருத மொழிபெயர்ப்பே தளிர் என்ற பொருள் படும், 'பல்ல

(1) நெல்லூர் மாவட்டம் முதல் விசாகப்பட்டினம் வரைப் பரவி யிருந்த பகுதிக்குத் தன் தம்பியான விஷ்ணுவர்த்தனரை துணை வேந்தராக அமைத்தார். ஆனால், சில காலத்திற்குப் பிறகு விஷ்ணு வர்த்தனர் தனியாகப் பிரிந்து வேங்கியைத் தலைநகரமாக்கிக் கொண்டு கீழைச் சாளுக்கிய வம்சத்தை நிறுவினார்.



மேற்குச்
சாளுக்கியர்
இராஷ்டிரகூடர்
கதம்பர்
மேற்குக்
கங்கர்
பல்லவப்பேரரசு
சேரர்
பாண்டியர்
வேணாடு
அராபிக் கடல்
இந்தியப் பெருங்
கடல்

வர்' என்ற சொல்லாகும். தொண்டை நாடு எனப் பெயர் வழங்கி வந்த பல்லவர் நாட்டிற்குக் காஞ்சிபுரம் தலைநகராகத் திகழ்ந்தது.

பல்லவர் வரலாறு நான்கு பகுதியாக வகுக்கக் கூடியது. முதற்பகுதி பிராகிருதக் கல்வெட்டுக்கள் வழங்கிய காலம். இரண்டாம் பகுதி சம்ஸ்கிருதக் கல்வெட்டுக்கள் தோன்றிய காலம். மூன்றுவது பகுதியில் பல்லவரது ஆட்சி உச்ச நிலையைப் பெற்றது. நான்காவது பகுதி பல்லவரது மேம்பாடு ஒழிந்த காலம். முற்காலப் பல்லவர்களில் ஒருவர் விஷ்ணுகோபர் என்பார். சமுத்திரகுப்தர் தெற்கே படையெடுத்துச் செல்லும் பொழுது விஷ்ணுகோபர் அவரை எதிர்த்துப் போர் புரிந்தார்.

பல்லவ வரலாற்றில் மூன்றுவதும், ஓங்கு புகழ் பெற்றதுமான பகுதி, கி. பி. 574 முதல் 600 வரை ஆண்ட சிம்மவிஷ்ணு மன்னருடன் தொடங்குகிறது. அவர் சோழரையும் பாண்டியரையும் வென்று தம் அரசு தென் நாடெங்கணும் பரவச் செய்தார். அவர் புதல்வர் முதலாம் மகேந்திரவர்மர் கி. பி. 600 முதல் 630 வரை ஆட்சி புரிந்தார். அவர் பல்கலை வல்லுநர்; கவிவாணர்; இசைப் புலவர்; சிற்பக்கலைஞர்; அறிவு விளக்கம் பெற்ற அரச கேசரி. அவரது ஆட்சிக் காலத்திலேதான், இரண்டாம் புலிகேசி பல்லவ அரசின் வட மாகாணங்கள் மீது படையெடுத்து, வேங்கியைக் கைப்பற்றிக்கொண்டார். எனினும், அவர் அப்பாற் செல்லாவண்ணம் மகேந்திர வர்மர் அவரைப் புள்ளலூரில் அடக்கினர். முதலாம் மகேந்திர வர்மருக்குப் பின், கி. பி. 630 முதல் 668வரை அரசு புரிந்து பெரும் புகழ் பெற்றவர் அவர் புதல்வர் முத

லாம் நரசிம்மவர்மர் அவர் சேர சோழ பாண்டியரையும் இலங்கை மன்னரையும் போரில் வென்றதுமன்றி, சாளுக்கியரையும் தாக்கி, அவரது தலைநகர் வாதாபியை யும் பிடித்தார். ஹர்ஷர் மீது வெற்றி பெற்ற இரண் டாம் புலிகேசி இக்காலத்தில் தோற்றோடி நரசிம்மவர்ம ருடன் நிகழ்ந்த போராட்டத்தில் மாண்டார். நரசிம்ம வர்மர் தம் தந்தையார் போலவே தாமும் சிறந்த சிற்ப நிபுணராய் விளங்கினர். அவர் மாமல்லபுரத்தில் எண் ணிறந்த குகைக்கோவில்கள் கட்டினர். அவை கலை யழகுடன் திகழ்வன. அந்த இடமும் மாமல்லன் என்னும் அவரது சிறப்புப் பெயரால் மாமல்லபுரம் எனப் பெயர் பெற்றது.

சாளுக்கியப் பல்லவப் போராட்டம் இரண்டாம் புலி கேசி இறந்ததுடன் மறைந்துவிடவில்லை. அதற்குப் பிறகும் புகைந்துகொண்டேயிருந்தது. சில வேளை களில் சாளுக்கியர் பல்லவரை முறியடித்தனர்; மற்ற வேளைகளில் பல்லவர் சாளுக்கியரைப் புறங்கண்ட னர். நற்செயலாக விஜயாதித்திய சாளுக்கியரின் நீண்ட செழிப்பான ஆட்சி காலத்திலும் (696-733), ஏறக்குறைய அதே காலத்தில் (680-720) ஆண்ட இரண்டாம் நரசிம்ம வர்ம இராஜசிம்ம பல்லவர் ஆட்சி யிலும் அமைதி நிலவியது. இருதிற மன்னரும் ஆக்க வேலைகளில் ஈடுபட்டுத் தத்தம் நாடுகளில் எழில் கொழிக்கும் கோயில்களைக் கட்டினர்.

ஆகிலும் கி. பி. 733 முதல் 744 வரை அரசு செலுத் திய இரண்டாம் சாளுக்கிய விக்கிரமாதித்தர் என்பவர், பல்லவமல்லர் இரண்டாம் நந்திவர்மர் ஆட்சியில் (731-795) பல்லவர்களைத் தாக்கி, காஞ்சிபுரத்தைக் கைப்பற்றி,

பழைய போராட்டத்தை உயிர்ப்பித்தார். நந்திவர்மர் அதே காலத்தில் பாண்டியரின் கொடிய தாக்குதலுக்கும் ஈடு கொடுக்க நேர்ந்தது. சாளுக்கிய மன்னர் நற்செயலாகக் காஞ்சி நகருக்கு எவ்வகையிலும் கேடு செய்யவில்லை. மக்களிடம் திருக்கோவில்களையும், அவற்றிற்குரிமையான அணிகலன்களையும் திரும்பக் கொடுத்து, அவர்களை மகிழச் செய்தார். நாட்டையோ பொருளையோ கவர்வது அம் மன்னனின் நோக்கமன்று; இழந்த சாளுக்கியப் புகழைத் திரும்பப் பெறுவதே அவரது குறிக்கோளாக இருந்தது. அவர், பல்லவ மன்னருக்கு மீண்டும் காஞ்சியை வழங்கினர். விக்கிரமாதித்தரே எவ்வாற்றானும் ஆற்றல் சான்ற சாளுக்கிய இறுதி மன்னர் ஆவார். அவரது புதல்வர் இரண்டாம் கீர்த்திவர்மர் முன்னேறிக்கொண் டிருந்த இராஷ்டிரகூடருக்கு எதிர் நிற்க மாட்டாது, படிப்படியாகப் பணிந்தார். இவ்வாறு ஏறக்குறைய எட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் சாளுக்கிய வல்லரசு குலைந்தது.

இராஷ்டிரகூடர், ஆபிரர் என்ற கூட்டத்தாரின் வலிமையை எதிர்த்துப் போராடி ஏறக்குறைய கி.பி. நான்காம் நூற்றாண்டில் தக்காணத்தில் தலையெடுக்க லாயினர். தென் இந்திய வரலாற்றின் வெவ்வேறு காலங் களில், இராஷ்டிரகூடர் தென் நாட்டின் வெவ்வேறு பகுதி களை ஆண்டுள்ளனர். மணப்புரத்தில் இருந்த இராஷ்டகூடர் கி.பி. ஐந்தாம் ஆறும் நூற்றாண்டுகளிலும், பீராரில் வாழ்ந்தவர் ஏழாம் எட்டாம் நூற்றாண்டுகளிலும், இறுதியில் மால்கெட்டில் இருந்தோர் ஒன்பதாம் நூற்றாண்டிலும், மத்திய இந்தியாவில் ஆட்சி செய்தனர். இராஷ்டிரகூடர் கள், யாதவர் அல்லது மராட்டியரின் வழித் தோன்றியவ

ரென்ற கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கவை அல்ல. 'இராஷ்டிரங்கள்' என்றழைக்கப்பட்ட மாவட்டங்களது அரசியல் நிலைமை அலுவலாளர்கள், தம்மை இராஷ்டிர கூடரென்னும் பெயரால் குறித்துள்ளனர். இது சாளுக்கியக் கல்வெட்டுகளிலிருந்து புலப்படுகின்றது. ஆகவே, இராஷ்டிரகூடர், அரசியல் அலுவற்பெயரில் தோன்றிய மரபினர் போலும். அம்மரபை முதலில் நிறுவியவர் சாதவாகனர்களின் அரசு போன்ற ஓர் அரசில் பணியாற்றிய அலுவலாளராக இருக்கலாம். அவர் கன்னட வகுப்பினரென்பதற்கு ஐயமில்லை. கன்னடமே இராஷ்டிர கூடர் தாய்மொழி.

தக்காணத்தில் முற்காலச் சாளுக்கியரின் ஆதிக்கம் ஓங்கிய காலத்தில், இராஷ்டிரகூடர்கள் அவர்களுக்குப் பணிந்தே வந்தனர். இராஷ்டிரகூடத் தலைவர், தந்தி துர்க்கர், கி.பி. 752-ல் சாளுக்கிய மன்னர் இரண்டாம் கீர்த்திவர்மரைத் தோற்கடித்துத் தமது மரபின் புகழை நிலைநாட்டினர். தந்திதுர்க்கருக்குப் பின் அரசரான முதலாம் கிருஷ்ணர் (கி.பி. 756-775) சாளுக்கியரை முற்றிலும் முறியடித்து, தென் கொங்கணத்தைக் கைப் பற்றினர். பிறகு கங்கையர், கீழைச் சாளுக்கியர் என்பார் களின் அரசுகளையும் வென்று, தம் ஆட்சியை எப்பக்கமும் விரிவடையச் செய்தார். முதலாம் கிருஷ்ணர் எல்லோராவில் பெரும்புகழ் பெற்ற கைலாயத் திருக்கோயிலைக் கட்டுவித்தார். அடுத்த சிறந்த இராஷ்டிரகூட மன்னர் துருவர் (780-794). அவர் பல்லவர்க்கும் மாளவ கூர்ச்சரர்க்கும், வங்காளப் பாலர்க்கும் எதிராகப் படை யெடுத்துச் சென்று, அவர்களை வென்ருர். மூன்ரும் கோவிந்தர் (794-814) அந்த மரபில் வந்த மாபெரும்

வல்லாளர் என்பதில் ஐயம் இல்லை. அவர் பல்லவரையும், கீழைச் சாளுக்கியரையும், கன்னோசி, வங்காள வேந்தர்களை யும் தோற்கடித்தார். அவரது பேரரசு விந்திய மலை முதல் துங்கபத்திரை ஆறுவரை, தக்காணத்தின் பெரும்பகுதி யில் பரவிக் கிடந்தது. மேற்கு இந்தியாவில் இராஷ்டிரகூட வல்லரசு எத்தகைய வலிமையுடையதாக இருந்தது என்பது பற்றி, ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த நூலாசிரியர் ஒருவர், 'இராஷ்டிரகூட மன்னர் உலகின் நான்கு பேரரசருள் ஒருவர்' எனக் கூறிய கூற்றினால் தெரிகின்றது.

கோவிந்தர் புதல்வர், அமோகவர்ஷர் (கி.பி. 814-880) கீழைச் சாளுக்கிய அரசை முற்றிலும் சிதைத்தார். எனினும், அடங்காத் தன்மை படைத்த கங்கருடன் ஒப்புரவாகி, கங்க மன்னருக்குத் தம் புதல்வியை மணம் செய்து கொடுத்தார். தமது நீண்ட ஆட்சிக் கால முழுவதும் அவர் தம் அரச மரபின் மாண்பு பழுதுபடாத வண்ணம் பாதுகாத்து வந்தார். அவர் சமண சமய பக்தர் எனவும், கன்னட மொழிக்காப்பாளர் எனவும் புகழ் பெற்று, போர் நடத்த விரும்பாது, அமைதியையே நாடும் உத்தமர் என விளங்கினார். ஏறக்குறைய பத்தாம் நூற்றாண்டின் நடுப் பகுதி வரை அம்மரபு தன் வீரத்தைக் காப்பாற்றியது; அப்பால் மாளவ நாட்டுப் பரமாரர் இராஷ்டிரகூட மாகாணங் களைத் தாக்கினர். அதன் விளைவாய் நிகழ்ந்த குழப்பத்தினிடையே, தைலர் என்னும் சாளுக்கியப்போர் வீரர் ஒருவர் இராஷ்டிரகூட வல்லரசை முறியடித்து, கி.பி. 973-இல் கல்யாணிச் சாளுக்கிய மரபினை நிறுவலாயினர்.

இனி, பல்லவ வரலாற்றை மீண்டும் உற்று நோக்குவோம். பல்லவமல்லரின் புதல்வர், தந்திவர்மர் (795-845) பல இன்னல்களுக்கு ஆளானர். இவரை இராஷ்டிரகூட மன்னர், மூன்ரும் கோவிந்தர், போரில் தோற்கடித்தார். அதே காலத்தில் பாண்டியரும் பல்லவரைத் தாக்கினர். தந்திவர்மருக்குப் பின் பட்டத்திற்கு வந்த அவரது தகுதி மிக்க புதல்வர் மூன்ரும் நந்திவர்மர் (844-866), தெள்ளாற்றில் நடந்த போரில் பாண்டியர் மீது வெற்றி கொண்டார். அவரது மைந்தர் நிருபதுங்கர் (866-896) தம் தந்தையார் கொண்ட வெற்றியின் பயனுய்த் தம் ஆணையைப் புதுக்கோட்டை வரை விரிவடையச் செய்தார். இறுதிப் பல்லவ மன்னர் அபராஜிதர் கும்பகோணத்திற்கு அண்மையில் பாண்டியரை வென்ருரெனினும், முதலாம் ஆதித்த சோழர் அவரை முறியடித்தார். அதன் விளைவாய்ப் பல்லவர் தொண்டை நாட்டில் தம் தலைமையை இழந்தனர். பிற்காலத்தில் ஆங்காங்குச் சிற்றரசராகவே பல்லவர் வாழ்ந்துள்ளார்.

பல்லவரோடு தீவிரப் போர் புரிந்த பாண்டியர் வரலாறு விரிவுடையது. சங்க காலத்திற்குப் பின்னர் பாண்டியர், சோழரும், சேரரும் போலவே, களப்பிரர் படையெடுப்புகளால் வலிமை குன்றிப் போயினர். நான்காம் நூற்ருண்டு முதல் ஆரும் நூற்ருண்டு வரை தமிழகம் முழுவதையும் தடுமாறச் செய்த இக் களப்பிரர் கன்னட நாட்டைச் சேர்ந்தவர் எனத் தோன்றுகிறது. களப்பிரரது கொடுமைகளிலிருந்து தமிழகத்தை மீட்ட பெருமை கடுங்கோன் பாண்டியருக்கு உரியது. அவர் கி. பி. 590 முதல் 620 வரை அரசாண்டார். அவர் காலம் முதல் பாண்டியர் புத்துயிர் பெற்றனரெனலாம்.

கடுங்கோனுக்குப் பின்னே வந்த பாண்டிய மன்னர்கள் உரம் மிக்க வல்லரசிற்கு வழி வகுத்துச் சேரருடனும் ஆய் மன்னருடனும் போர் தொடுத்து, வெற்றி கண்டனர். பாண்டியர் பல்லவர்க்குக் கொடிய பகைஞர்; அவரை எதிர்த்துச் சிறிதும் பின்வாங்காது அஞ்சா நெஞ்சுடன் போர் நடத்தி வந்தனர். சில காலம் பாண்டியர் சாளுக்கிய ரோடு நட்புக்கொண்டிருந்தார். அவ்வேளை அரிகேசரி மாறவர்மர் (670-700) சாளுக்கிய விக்கிரமாதித்தர் உதவியினல் பல்லவரைத் தாக்கினர். ஆயினும் இது இறுதியில் பயனளிக்கவில்லை. இராசசிம்ம பாண்டியர் (730-765) எவ்வாற்றுனும் நந்திவர்ம பல்லவமல்லரைப் பற்பல போர்களில் முதுகு கண்டு, சிறிது காலம் நந்திக் கிராமத்தையும் முற்றுகை யிட்டார். மேலும், பல்லவ மல்லர், கொங்கு மன்னர், சேர மன்னர் முதலியோருடன் தொடர்பு கொண்டு, தம் பகை மன்னருக்குப் பதிலுக்குப் பதில் செய்ய நோக்கங்கொண்டிருந்தார். அந்நிலையில், முதலாம் வரகுண பாண்டிய மன்னர் (765-815) காலங் கருதி இருந்து, தருணம் வாய்த்த பொழுது இப் பகைவர் அனைவரையும் ஒருங்கே முறியடித்தார். எனினும், வரகுண பாண்டியருக்குப் பின் பட்டத்திற்கு வந்த அவரது புதல்வர், ஸ்ரீமாற ஸ்ரீவல்லபர் (815-862) மூன்றும் நந்தி யிடம், முன் கண்ட வண்ணம், கடுந்தோல்வி அடைந்தார். அதற்கு எதிராக ஸ்ரீவல்லபர் திருப்புறம்பியத்தில் பல்லவரைத் தோற்கடித்தார். இந்நெடும் போராட்டத்தினல் பல்லவர் பாண்டியர் இருவரும் வலி குன்றினர். ஆகவே சோழர் முன்னேறி வந்தபோது, இவ்விருவரும் விழுந்தமை வியப்பன்று.

ஆரும் நூற்ருண்டின் தொடக்கம் முதல் பத்தாம் நூற்ருண்டு வரைக்கும் சேர மன்னர் வாழ்வு எத்தகையது என இனி நோக்குவோம். சங்க காலத்திற்குப் பின்னர்ப் பல நூற்ருண்டுகள் சேரநாட்டின் வரலாறு தெளிவாகத் தெரிவதற்கில்லை. மலையாள மொழியில் 'கேரளோற்பத்தி' எனவும், சமஸ்கிருத மொழியில் 'கேரள மாகாத்மியம்' எனவும், பதினெட்டாம் நூற்ருண்டில் தோன்றிய இருநூல்கள் உள்ளன. அவற்றில் கூறப்பெற்ற வரலாறு பெரும்பாலும் புராணக்கதையை ஒட்டியே தோன்றியுள்ளது. களப்பிரர் படையெடுப்புகளினுல் விளைந்த குழப்பங்களினிடையே, கேரளநாடு மற்றைத் தமிழ் நாட்டுடன் தொடர்பு கொள்ளாது தனித்து இருந்துவிட்டது போலும். கி. பி. ஐந்தாம் அல்லது ஆரும் நூற்ருண்டில்தான் நம்பூதிரிகள் கேரளத்திற்குள் நுழைந்திருப்பர் எனத் தோன்றுகின்றது. நம்பூதிரிகள் ஆரியரே ஆயினும், தென் இந்தியாவில் அவர்தம் குடியேற்றம், முன்னர் நடந்தேறிய ஆரியர் குடியேற்றத்திற்குப் பன்னெடுங்காலத்திற்குப் பின்னரே நிகழ்ந்திருக்க வேண்டும். 'கேரளோற்பத்தி' என்னும் நூலில், நம்பூதிரிகள் வட இந்தியாவினின்று வாராது, தெற்குப் பிரதேசத்தினின்று வந்தனர் என வழிமுறை கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

நம்பூதிரிகள் வந்தது முதல் கேரள அரசியல், சமுதாயம், சமய நெறி முதலியவற்றில், பெரிய வேற்றுமை நிகழ்ந்திருக்க வேண்டும் என்று காண்கின்ருேம். அன்னுர் அரசரை ஆக்குவதிலும் நீக்குவதிலும் பெரும்பங்கு பற்றியுள்ளார். ஆரியர் குடியேற்றத் தலைவராகிய பரசுராமர், பானுவிக்கிரமர் எனப் பெயர் கொண்ட அரசிளங்குமரர் ஒருவரைக் கிழக்குக் கரை

நாட்டிலிருந்து கொண்டுவந்து, அவரைக் கேரள மன்னர் என முடிசூட்டி வைத்து, அம்மன்னருடைய தம்பியை வட கேரளத்தில் அவருக்குட்பட்ட சிற்றரசராகவும் நியமித்தனர் என்பது புராணக் கதை. அக்கதையில் கூறியுள்ளபடி, தலைவருக்கும் நம்பூதிரிகளுக்கும் இடையே வேற்றுமை எழுந்தது. நம்பூதிரிகளைக் கொண்ட சிறு குழு சிறிது காலம் ஆட்சி செய்த பின்பு, அவர்கள் திருநாவாய் என்னுமிடத்தில் ஒருங்கு கூடி, மலைக்குக் கீழ்புறம் உள்ள நாட்டிலிருந்து அழைத்து வந்த கோயபெருமாள் என்பார் ஒருவரைத் தமக்கு அரசராக நியமித்தனர். கேரள மன்னர்களில் பெருமாள் என்பார் இருபத்தைவர் பெயர்கள் வழி முறையே அறியப்பட்டுள்ளன. பெருமாள் கிளை வழியினர் இரு திறத்தினர் என்றும், அவருள் ஒரு திறத்தினர் கேரளத்தின் தென் பகுதியையும், மறு திறத்தினர் வட பகுதியையும் ஆண்டனர் என்றும், செவி வழிச் செய்தி உண்டு. ஆயின், இவற்றிற்குத் தகுந்த சான்றுகள் இன்மையால், தீர்வுகாண இயலவில்லை. என்றாலும் பெருமாள் மன்னர் அரசு கேரளத்தில் சிறிது காலம் பரவியுள்ளது என்பது தென்படுகின்றது. ஒருகால் நாட்டிற்கு வெளியே இருந்து மன்னரைத் தெரிந்தெடுத்தது பற்றிய கதைகள், அயல் நாட்டிலிருந்து படையெடுத்து வந்து வென்று அரசு செலுத்தியவருக்கு அடங்கி வாழ்ந்திருந்த வரலாற்றை மறைத்துக் கூறுவன ஆகும்.

பெருமாள்மாரில், குலசேகர ஆழ்வார் பெயர் செவி வழி முறையிலும், மத இலக்கியத்திலும், தனிச் சிறப்புடன் நிலைநிற்கின்றது. அவர் தூய முனிவரேனும், உலக முன்னேற்றத்தை இகழ்ந்து ஒழுகிலர். அவர் இயற்றியுள்ள செய்யுட்கள், அவர் சேர சோழ பாண்டிய நாடுகளிலும்,

கொங்கு நாட்டிலும், கொல்லி மலையிலும், தமது தனித் தலைமையை நிலைநாட்டியுள்ளார் என்பதைக் காண்பிக் கின்றன. குலசேகரப் பெருமாள் காலம் விவாதத்திற்குரிய ஒரு பொருள். ஆறும் நூற்றுண்டு தொடங்கிப் பல்வேறு அறிஞர்கள் பல்வேறு காலங்களைக் குறிப்பிடுகின்றனர். ஆனால் ஆறும் நூற்றுண்டிற்குப் பின்னது என்ற கூற்றுப் பொருந்துவதாயில்லை. ஆறும் நூற்றுண்டிற்குப் பிந்திய காலத்தில் முன் குறிப்பிட்ட மன்னர்களை அவர் வெல்லுதல் எளிதன்று; அன்றியும், அவரது இலக்கிய நடையும் அவர் அக்காலத்திற்கு முந்தியவர் என்றே தெரிவிக்கின்றது. அதனால் அவர் ஆறும் நூற்றுண்டிற்குரியவர் என்பதே தகுதி.

கி. பி. ஏழாம் நூற்றுண்டு முதல் ஒன்பதாம் நூற் றுண்டு வரை நிலவியுள்ள காலத்தில் கேரளம் அடிக்கடி பல்லவர் பாண்டியர் படையெடுப்பிற்குட்பட்டது. சாளுக் கியரும் இராஷ்டிரகூடரும் கேரளத்தின்மீது படையெடுத் துள்ளனர். சிம்மவிஷ்ணு, நரசிம்மவர்ம மாமல்லன், பல்லவமல்லன் இரண்டாம் நந்திவர்மன் முதலியோர் கல்வெட்டுக்கள், அன்னூர் சேரர் மீது பெற்ற வெற்றி பற்றிக் குறிப்பிடுகின்றன. அக்காலத்தில் இயற்றிய தமிழ் நூல் நந்திக் கலம்பகம், மூன்றும் நந்திவர்மன் அரசாட்சி சேர நாடு வரை பரவியிருந்தது எனச் சாற்று கின்றது. ஆனால், இவற்றின் உண்மையைத் திட்டப் படுத்துவதற்கு உதவக்கூடிய சேர வரலாற்றுச் சான்று கள் எவையும் கிடைத்தில. ஒருகால், படையெடுத்தல் எனக் கூறப்பட்டுள்ளது, திடீரெனச் சென்று தாக்கு வதையே குறிக்கும். ஆனால் இரண்டு அரசுகளுக்கும்

இடையே கலைத் தொடர்பு இருந்தது என்பதைக் காட்டும் சான்றுகளும் உள்ளன. முதலாம் மகேந்திர வர்மர் இயற்றிய மத்தவிலாசப் பிரகசனம் என்னும் நாடக நூலினைக் கேரள நாட்டுச் சாக்கியக் கூத்தர் பெரிதும் விரும்பிப் போற்றி வந்தமையை எவரும் அறிவர். அவந்தி சுந்தரி கதை என்பது, காஞ்சியில் ஆண்ட பல்லவர் வரலாற்றை ஒட்டி எழுதப்பட்டதேயாம். அதனுள் மலையாள நாடுபற்றிப் பல குறிப்புக்கள் அடங்கியுள்ளன. அதனால் அந்நாட்டைக் குறித்து அந்நூலாசிரியர் நுண்ணிய அறிவு பெற்றிருந் தாரெனத் தெரிகின்றது. தண்டி இயற்றிய அவந்தி சுந்தர கதாஸாரா என்பது முன் குறிப்பிட்ட அவந்தி சுந்தரிக் கதையின் சுருக்கமெனலாம். அதனுள், அறிவு மிகுந்த பார்ப்பனர் ஒருவர் எடுத்துரைக்கப்பெற்றுள் ளார். அவர் நூலாசிரியரது கேரளநாட்டு நண்பரென வும், அவரோடு பல்லவ அரசவைக்குச் சென்றாரெனவும் தோன்றுகின்றது. பல்லவர் தொடங்கிய சிற்பக் கலை யின் செல்வாக்கினால், கேரள நாட்டிலும் சில குகைக் கோயில்கள் உண்டாயின. அவற்றுள் இரண்டு, தலை சிறந்தவை. ஒன்று, மத்திய திருவாங்கூரிலுள்ள கவியூரில் இருக்கின்றது. மற்றது, தென் திருவாங் கூரிலுள்ள திருநந்திக்கரையில் உள்ளது.

ஏழாம் எட்டாம் நூற்றாண்டுகளில் ஆண்ட பாண்டிய மன்னர் அடிக்கடி சேர நாட்டின் மீது படையெடுத் தனர். ஜயந்தவர்மர் (கி. பி. 645-670) சேர மன்னர்க் குரிய வானவன் என்னும் சிறப்புப் பெயரை வைத்திருந் தார். அது அவரது சேரர் வெற்றிக்கு அறிகுறி. அரிகேசரி பராங்குசர் (670-710) சிறந்த போர் வீரர்.

சேர மன்னர் மீது பல வெற்றிகள் பெற்று, இறுதியில் அவரைச் சிறைப்படுத்தினர். கோச்சடையன், இரணதீர ரும் (710-730) வானவன் என்னும் பட்டம் சூடியிருந்தார். நெடுஞ்சடையர் (765-815) தாம் வேணாட்டை வென்று கொண்டதாகக் கூறியுள்ளார்; இது பற்றிய சாசனக் குறிப்பை முதன் முதலாகச் சென்னைப் பொருட்காட்சி சாலையிலுள்ள செப்பேடுகளில் காணலாம். இந்தச் சாசனத்தில் வேணாட்டை 'வேள் நாடு' என்று குறித் திருப்பதாலும், ஆய் வரலாற்றைப் பற்றி அறிந்துள்ள செய்திகளாலும், ஆய் வேள் அரசுதான் வேணாட்டு அரசிற்கு அடிப்படை என்று காண்கின்றோம். அது ஏறக் குறைய ஒன்பதாம் நூற்றாண்டில் வேணாடு எனத் தெளிவாகப் பெயர் வழங்கலாயிற்று. பாண்டியர் படை யெடுப்பிற்கு எதிராகச் சேரன் ஆய் வேளிற்கு உதவி செய்த காரணத்தினால், ஆய் மன்னர், அதாவது வேணாட்டரசர், சேரருக்குத் திறை செலுத்தும் சிற்றரசரா யிருந்தாரெனக் கருதலாம். பாண்டியர் கல்வெட்டுக்கள் பலகாலும் வேணாட்டு வெற்றியைக் குறிக்குமிடத்து கேரளம் அல்லது சேர நாட்டின் மீது அடைந்த வெற்றி என்றே கூறுவது குறிப்பிடத்தக்கது. ஸ்ரீமாறர் ஸ்ரீவல்ல பரும் (815-862), தாம் நடத்தியுள்ள அரிய செயல்கள் பிறவற்றினூடே கேரள வெற்றியையும், தென் திருவாங் கூரில் குன்னூரிலும், விழிஞத்திலும் அடைந்த சிறப்புள்ள வெற்றிகளையும் பாராட்டிப் பேசியிருக்கின்றார்.

கேரளம் சாளுக்கியர் கருத்தையும் கவர்ந்தது. பல்லவர்களைத் தாக்கும் பொழுது, மேலைச் சாளுக்கியர் பாண்டிய சோழ மன்னர்களையன்றி கேரள வேந்தனையும் தோற்கடித்தார்கள் என்று தோன்றுகிறது. முதலாம்

விக்கிரமாதித்தர் (655-681) தென் நாட்டு மன்னர் ஆகிய சேர சோழ பாண்டியர் கூட்டிணைப்பை எதிர்க்க நேர்ந்த போது, அவர்கள் அனைவரையும் முறியடித்ததாகக் கூறியுள்ளார். வினயாதித்தரும், இரண்டாம் விக்கிரமாதித்தரும், இரண்டாம் கீர்த்திவர்மர்தாமும், சேரர்பால் அடைந்த வெற்றிகளைப் பொறித்துள்ளார்கள். இவை எல்லாம் எந்த அளவு வரலாற்று நூல் உண்மைக்குப் பொருந்துவன என்பதை ஈண்டு வரையறுத்தல் இயலாது. நாம் அறிந்துள்ள இச்செய்திகளுக்கு ஆதாரம் சாளுக்கியரிடமிருந்து மட்டிலுமே கிடைத்துளது என்பதை உணர வேண்டும்.

சாளுக்கியரைத் தொடர்ந்து இராஷ்டிரகூடர்களும் கேரளத்தைத் தாக்கினர் எனக் காண்கின்றோம். சேரர்களை முறியடித்ததாகக் கூறப்படுகின்ற இராஷ்டிரகூட மன்னர்களைக் குறித்து ஆராயுமிடத்து, ஒரு சில வீரர்களை வைத்துக்கொண்டு கேரள மன்னனை முதுகு கண்ட தந்தி துர்க்கர், கேரள மக்களைச் சுற்றி வளைத்து அவர்களைக் கலங்கச் செய்த மூன்றும் கோவிந்தர் (794-814), இறுதியில் சேர அரசருள்பட தென்புல மன்னர் அனைவரையும் கீழ்ப்படுத்திய மூன்றும் கிருஷ்ணர் ஆகியோர் பற்றிக் கூறலாம்.

பெருமாள் மன்னரில் இறுதி மன்னர் சேரமான் பெருமாள். அவர் சைவ சமய பரமகுரவர் சுந்தர மூர்த்தி நாயனர் காலத்தில் ஒருங்கே வாழ்ந்தவர். ஆதலால், அவர் எட்டாம் நூற்றண்டின் பிற்பகுதியில், அன்றேல் ஒன்பதாம் நூற்றண்டின் முற்பகுதியில் வாழ்ந்திருத்தல் கூடும். சேரமான் பெருமாளைப்பற்றி வியத்தற்குரிய செய்தி யாதெனில், சமணர், கிருஸ்துவர், முஸ்லீம்கள்,

சைவர்கள் அனைவரும் அவர் தத்தம் சமயத்தைச் சேர்ந்தவர் என ஒருங்கே உரிமை கொண்டாடுதலே. அவர் இஸ்லாம் மதத்தைத் தழுவியதும், மக்கத்திற்கு யாத்திரை சென்றதும் பற்றிய செவிவழிச் செய்திகள், எங்கணும் பரவியுள்ளன. எனினும், அவற்றை நம்பு வதற்குத் தகுந்த உறுதியான சான்றுகள் இல்லை. அவர் யாதானும் ஒரு சமயத்தின் மீது கடும் பற்றுக்கொண்டு, உலக இன்பங்கள் அனைத்தையும் துறந்த பக்தராய் மாறி யிருக்கலாம். அவர் தம் அரசின் வள நாடுகளைத் தம் தாயத்தினருக்கும், தம் சிற்றரசர்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்தார் என்ற கூற்றின் உண்மையையும் திட்டமாய்த் தெரிவதற்கில்லை. அது எவ்வாறு இருப்பினும் அவருக்குப் பின்னர், பெயர் அளவில் மட்டுமே தலைமை பெற்ற சேர மரபினரின் மேலாண்மையின் கீழ்ப் பற்பல குறுநில மன்னர்கள் தோன்றலாயினர்.

சேரமான் பெருமாள் மக்கத்திற்குப் புறப்பட்டுச் செல்லும் இறுதி வேளையில் கொல்லம் ஆண்டு என்ற காலவரையறையை நிறுவினர் என்னும் செய்தியும் பெரும் ஐயத்திற்கு இடமாயுள்ளது. அந்த ஆண்டைச் சங்கராச் சாரியர் நிறுவினரெனக் கூறும் செய்தியும் ஒப்புக் கொள்ளுதற்கில்லை. ''கொல்லம் தோன்றி'' என்னும் தொடர் மொழியை எவ்வாற்ருலும் ஆராய்ந்து நோக்கு மிடத்து, அவ்வாண்டு கொல்லம் தோன்றிய காலத்தேனும், அவ்வூர் புதுக்கி அமைக்கப்பெற்ற காலத்தேனும் உடன் தோன்றியது என்னும் கருத்து வெளியாகின்றது. இக்கருத்திற்குக் கொல்லத்தில் யூதர் வாணிகக் குழு வந்து குடியேறிய நிகழ்ச்சியும், அது முதல் வாணிக வளமிக்க புதிய காலத்தை எதிர்பார்த்துக் கொல்லம்

ஆண்டினை நிறுவினர் என்னும் நோக்கமும் ஆதாரம் ஆகும். இதற்கு இரு நூற்றாண்டுகளுக்குப் பின்பு நிகழ்ந்த இன்னொரு நிகழ்ச்சியும் இக்கருத்திற்குத் தகுந்த ஆதாரமாகும். முதலாம் குலோத்துங்கரின் படைத் தலைவர் நரலோக வீரர் என்பார், கொல்லம் நகர் மீது படையெடுத்து அதைப் பாழாக்கி, அது முதல் "கொல்லம் அழிந்த ஆண்டு" என்னும் காலவரையறை நிறுவியுள்ளார். அதற்கு முன்னே தோன்றியுள்ள காலவரையறை வரலாற்றை அவர் நன்குணர்ந்திருந்த உணர்ச்சியே கொல்லத்தை அழித்துத் தம் நினைவிற்காக அந்தக் காலவரையறையை நிறுவிய செயலிற்குக் காரணம் என்க.

ஆட்சி முறை :—நாம் ஆராய்ந்து வருகின்ற காலப் பகுதியில், தென் இந்தியாவில் இருந்த பற்பல அரசுகளின் ஆட்சி இயல்பு ஏறக்குறைய ஒரே தன்மையாகவே இருந்தது. வழிவழி மரபு முறையே பொது முறை. நேர் வழி ஆண் மகவு இல்லாதிருப்பின் முடி சூட்டுவது பற்றிப் பலகாலும் வழக்குகளும் சச்சரவுகளும் தோன்றின. சில வேளைகளில் அமைச்சர்களும் நாட்டில் வாழ்ந்த மூதறிஞரும் தலையிட்டு வழக்கை அமைதியாகத் தீர்த்து வைத்தனர். எடுத்துக்காட்டாக, 731-இல் பரமேஸ்வர பல்லவர் இறந்த பொழுது அரசியற் பெருந்தலைவர்கள் கல்வியறிவு சான்ற அந்தணர் குழாத்துடன் கலந்து ஆராய்ந்து, இனத் தொடர்பான குடும்பத்து அரசிளங்குமரர் நந்திவர்மரைத் தேர்ந்தெடுத்தனர்.

மக்களின் நலத்திற்கெல்லாம் மன்னரே காவலர் என்பதை நன்குணர்ந்து அவருக்கு உயர்ந்த மதிப்பு அளித்து வந்தனர். இந்தக் காலப் பகுதியில் அரசவைகளில்

ஆரியர் கருத்துக்களின் செல்வாக்குத் தலைதூக்கி நின்றது. அரசர் தம் செயல்களுக்கெல்லாம் மனு முறையைப் பின் பற்ற வேண்டும் என்னும் நெறி முறை வளர்ந்துள்ளது. இக்காலத்தில் வாழ்ந்த மன்னர் பலர் "தருமாதிராசர்" என்று சிறப்புப் பெயர் வைத்திருந்த செய்கை, மன்னர் தருமத்தை அல்லது நீதியைக் காப்பாற்றுகின்றவர் என மக்கள் கொண்டிருந்த கருத்தை விளக்குகின்றது. தெய்வ ஆட்சி என இவ்வரசுகள் விளங்கவில்லையாயினும், புரோகிதர், புலவர், சான்றோர் முதலானோர் செல்வாக்கு, அரசியற்கோட்பாடுகளுக்குத் தெய்வத்தன்மை அளிக்க முற்பட்டது. ஆகிலும் அரசர், அமைச்சர் கொள்கையையும், நோக்கத்தையும் நிறைவேற்றுகிறதற்காகப் போரும் நடைபெற்றது. போரில் வீரமும், அயல் நாடுகளில் 'திக்கு விசயமும்' தலைசிறந்த குறிக்கோள். போர்க்கோலம் அக் காலத்திற்கேற்ப அமைந்திருந்தது. வழி வழியாக வந்த யானை, குதிரை, தேர், காலாள் என்னும் நால்வகைப் படைகளும் நன்கு புகழ் பெற்றன. போர்க்குரிய தேர்களைக் குதிரைகளே ஈர்த்துச் சென்றன. சிறிய அத்தேர்களிற் பெரும்பாலும் இருவரே அமர்ந்திருப்பர். அவர் போர் வீரனும் தேர்ப்பாகனுமே. அக்காலத்தில் தேர்களின் செல்வாக்கு சற்றுக் குறைந்திருந்தது எனத் தோன்று கின்றது. யானைப்படை தலைமை பெற்றிருந்தது. காஞ்சிநகர் வைகுந்தப் பெருமாள் திருக்கோவிற் சிற்பங்கள் சில இதற்கு எடுத்துக்காட்டு ஆவன. மகாராஷ்டிர யானைப் படைகளைப் போர் தொடங்கும் முன் கள் பருகச்செய்து, வெறியூட்டினர் என யுவான் சுவாங் வரைந்துள்ளார். படைக்குப் போர்ப் பரிகள் பாரசீகம், அராபியா முதலிய நாடுகளிலிருந்து இறக்குமதி ஆயின. குதிரைவீரர் மார்க் கவசமும், தலைச்

சீராவும் தரித்து, ஈட்டி, உடைவாள், வடிவாள் முதலிய போர்க்கருவிகளைக் கையாண்டனர். போர் முயற்சியில் தலை நின்ற காலாட்படையானது, மூலப் படை, கூலிப் படை, நாட்டுப் படை, காட்டுப் படை, துணைப்படை, பகைப்படை முதலிய பகுதிகள் அடங்கப்பெற்றது. அப்பகுதிகளுக்கும் அவற்றின் பிரிவுகளுக்கும் படைத் தலைவர் பலர் உளர். அக்காலத்தில் மரக்கலப் படைபற்றி மிகச் சிறிதே அறிகின்றோம். எனினும், மேலைக் கரையில் சாளுக்கியர் வெற்றியும், இலங்கை மீதும், மால் தீவுகள் மீதும் பல்லவர் படையெடுப்பும், விழிஞத்தில் பாண்டியர் கடற்போரும் தோன்றி நிற்றலால், தமிழக மக்கள் மரக்கலப் போர்ப் பயிற்சியை, அதுகாலை மறந்து கைவிட்டனர் என இயம்புதற்குச் சிறிதும் இடமில்லை.

ஏறக்குறைய எல்லா அரசுகளிலும் அமைச்சர் அவை நிலைபெற்றிருந்தது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. வைகுந்தப் பெருமாள் திருக்கோவிற் கல்வெட்டு ஒன்று "மந்திரி மண்டலம்" அல்லது அமைச்சர் அவை என்பதைக் குறிப்பிடுகின்றது. சாளுக்கியர், பல்லவர், கதம்பர், பாண்டியர் முதலியோரின் கல்வெட்டுகளில், மந்திரி, பிரதானி, மகாசாமந்தன், உத்தரமந்திரி எனக் குறிப்பிடப்படுவோர் அனைவரும் அமைச்சரே ஆவார். சில கல்வெட்டுகளால் அமைச்சர் பலர் இருந்தனர் என்பது தெளிவாகின்றது. தலைமை பெற்ற எல்லாச் செயல்களிலும், பிறவற்றிலும், அரசர் அமைச்சருடன் கலந்து சூழ்ந்து அரசியல் நடத்தினர். கதம்ப மன்னர் சிவசித்தர் என்பார் ஓர் உதவி அளித்ததற்கு முன்னர்த் தம் தலைமை அமைச்சரோடும் துணை அமைச்சரோடும் கலந்து பேசி, அவர் உடன்பாடு பெற்று அளித்தார் எனக் கூறப்பெற்றிருப்பது இதற்கு

ஓர் எடுத்துக்காட்டாகும். பாண்டியர் முதலாம் இராசசிம்மர், கங்க மரபு இளவரசி ஒருவரை அரச குடும்பத்தைச் சார்ந்த ஒருவர் மணந்துகொள்வது பற்றி மதுரகவி என்னும் அமைச்சருடன் கலந்துரையாடி அவர் உதவியைப் பெற்ருர். பல்லவர் இரண்டாம் நந்திவர்மர், அவரது வலிய பகைஞராகிய சாளுக்கிய மன்னருடன் போர் தொடுத்தற்கு அவரது அமைச்சர்களின் வற்புறுத்தல்தான் முக்கிய காரணம்.

சாளுக்கிய இராஷ்டிரகூட அரசியலில் போருக்கும் அமைதிக்கும் பொறுப்பாளரான அயல் நாட்டு நயம் பற்றிய அமைச்சர் 'மகா சந்தி விக்கிரகர்' என அழைக்கப் பெற்ருர். அமைச்சரவை அரசியலின் முக்கிய உறுப்பாக அமைந்திருந்தபோதிலும், செயலாற்றலில் ஒவ்வொரு அரசியலங்கங்களுக்கும் அலுவல்கள் நன்கு வரையறுக்கப் பட்டிருந்ததெனக் கூற இயலாது. அயல் நாட்டுக் காரியம் பற்றிய மந்திரிக்கு ஒரு மாகாண ஆட்சியிலேனும், அல்லது ஏதாவது அரசியல் துறையிலேனும், தலைமைப் பொறுப்பு அளிக்கப்பட்டிருந்தது. இது சாளுக்கியர், இராஷ்டிரகூடர் ஆகியோரின் கல்வெட்டுகளிலிருந்து தெரிகின்றது. பல்லவ அரசில் தலைமை அமைச்சர் அலுவலும், மன்னரது புரோகிதர் அலுவலும், ஒருவர்பால் இணைந்திருந்தன என்பதற்கு எடுத்துக் காட்டுகள் உள்ளன. சிறுத்தொண்டர், நரசிம்ம வர்ம பல்லவருக்கு அமைச்சராகவும், படைத் தலைவராகவும் இருந்தார் என்பது, இங்குக் குறிப்பிடத் தக்கது.

அரசியர் மிக்க மாண்பு பெற்றிருந்தனர். அன்னுர் திருக்கோவில் ஆட்சி முறை, சமயத் திருப்பணிகட்கு நன்கொடை அளித்தல், கோயில்கள் எடுத்தல், குளங்கள்

அமைத்தல் முதலான பொதுநலச் செயல்களில் மட்டுமே. அன்றி, அயல் நாடுகள் மீது செல்லும் படையெடுப்புக் களிலும், பங்கு பற்றியுள்ளனர் எனச் சில கங்கர் கல் வெட்டுகள் வெளிப்படுத்துகின்றன. இராஷ்டிரகூட மன்னர் துருவரது அரசியார், சீலபட்டாரிகா என்பவர், அரச விருதுகள், பட்டங்கள் ஆகியவை பெற்றும், நிலக் கொடைகள் வழங்கியும், அரசியல் அலுவலாளர்க்குத் தம் பெயராற் கட்டளைகள் பிறப்பித்தும் சிறப்புற்றுர். கல்யாணி சாளுக்கிய மன்னரின் தங்கை அக்காதேவி என்னும் சாளுக்கிய இளவரசி, ஒரு மாகாண ஆட்சி முறையை நடத்தி, போர்த்தொழிலிலும் ஈடுபட்டிருந்தார். பல்லவர் இராசசிம்மரது அரசியார் காஞ்சி நகர்க் கைலாயநாதர் திருக்கோவிற் கட்டடத்தைக் கண்காணித்து எடுப்பித்தார். மற்ருெரு பல்லவ மன்னரின் அரசியார் காஞ்சி முத்தீஸ்வரர் திருக்கோவிலைக் கட்டினுர்.

**மாகாண அரசியல் முறை:** வாதாபிச் சாளுக்கியர் ஆட்சியில் எல்லாவற்றிலும் பெரிய நிலப்பகுதி 'விஷயம்' என்று பெயர் பெற்றது. பின்பு அதை 'இராஷ்டிரம்' என வழங்கினர். சாளுக்கியர் தம் அரசு விரிவடைந்த காலத்திலேயே பெரிய மாகாணத்திற்கு அவ்வாறு 'இராஷ்டிரம்' எனப் பெயர் மாற்றினர் என்று தோன்றுகிறது. பல்லவர் காலத்தில் மாகாணம் போன்ற பெரிய பகுதியை 'விஷயம்' என்றும் இக்கால மாவட்டம் போன்ற சிறு பகுதியை 'இராஷ்டிரம்' என்றும் வழங்கி வந்தனர். இராஷ்டிரகூடரது கல்வெட்டுக்கள் 'இராஷ்டிரம்', 'விஷயம்' என்னும் பகுதிகள் முறையே ஒன்றினுக்கு ஒன்று சிறிது எனத் தெரிவிக்கின்றன. வேங்கி போன்ற சில தென்னுடுகளில் 'இராஷ்டிரம்' என்பது 'மண்டலம்'

என அழைக்கப்பெற்றது. கன்னட நாட்டின் சில பாகங்களில் 'விஷயம்' என்பதை 'ஸ்தலம்' எனவும், மற்றும் சில பாகங்களில் அதனைக் 'கம்பணம்' எனவும் கூறி வந்தனர். மாகாணம், மாவட்டம் முதலானவற்றின் பெயர் வழக்குகளில் தக்காணத்தின் பல்வேறு அரசுகளில் பலவகை ஏற்பாடுகள் தோன்றின. ஆகவே மாவட்டத்தைச் சில அரசுகளில் 'இராஷ்டிரம்' எனவும், வேறு சில அரசுகளில் 'விஷயம்' எனவும் அழைத்து வந்தனர். பாண்டிய சேர அரசுகளில் மாகாணத்தை 'நாடு' என வழங்கினர். மாவட்டம் போன்ற பகுதியைக் 'கூற்றம்' எனவும் 'கோட்டம்' எனவும் கூறினர். சிற்றூரைக் 'கிராமம்' என்றனர்.

அரச மரபின் உறுப்பினரேனும், அனுபவம் முதிர்ந்த அரசியல் அலுவலாளரேனும், அரசிறை இறுக்கும் சிற்றரசர் ஒருவரேனும், மாகாணத்திற்குப் பொறுப்புள்ள தலைவர் பதவியைப் பெறுவார். அரசரின் நெருங்கிய உறவினர் ஒருவர் அப்பதவியை ஏற்பதே எங்கும் பெருவழக்கு. எல்லா அரசுகளிலும் அரசர் தம் புதல்வருள்ளும், உடன் பிறந்தாருள்ளும், அப்பதவிக்குத் தகுந்தவர் ஒருவரையே தெரிந்தெடுத்து, இளவரசுப் பட்டம் அளித்து அவர்பால் மாகாணத் தலைமைப் பொறுப்பினை ஒப்புவித்தனர். மாகாணத் தலைவர் அதிகாரம் பெரிது. தமக்குக் கீழ்ப்பட்ட அலுவலாளர்களை நியமிக்கும் உரிமை அவருக்கு இருந்தது. மாகாணத்தலைவர் பதவி சிறுபான்மை மரபு வழி உரிமை ஆயிற்று. அவ்வுரிமை சில வேளைகளில் தனியுரிமையாகி, மாகாணத் தலைவர் தனியாட்சி செலுத்தத் தலைப்பட்டார்.

ஊராண்மை : தென் இந்தியாவில் வளர்ந்தோங்கிய சிற்றூர்த் தன்னுரிமை ஆட்சி முறை வரலாற்றுச் சிறப்புடையது. எனினும், நூலாசிரியர்கள் பலர், பிரமதாயக் கிராமாட்சி முறைக்கும், மற்றை ஊராண்மை முறைக்கும் உள்ள வேறுபாடு இன்னதென உணர்ந்து கொள்ளாமையால், அதன் அமைப்புப் பற்றித் தெளிவற்றுப் பொதுப்படப் பலவும் முறை தவறிக் கூறியுள்ளனர். வழக்கமாக ஊர்தோறும் ஊரார் பேரவை உண்டு. தமிழ் நாட்டில் அதை 'ஊர்' என்றே கூறுவார்கள். கேரளத்தில் 'தற' எனவும், ஆந்திர கன்னட நாடுகளில் 'கிராம' அல்லது 'காம' என்வும் சொல்வது வழக்கம். சாலங்காயணர் கல்வெட்டுகளில் 'முதுடு' எனவும், சாளுக்கிய சாசனங்களில் 'கிராமகூட' எனவும் வருகின்ற குறிப்புக்கள், அவ்வூராண்மையானது ஊர்த்தலைவர் கண்காணிப்பில் தொடர்ந்து வெகுநாள் நடைபெற்று வந்ததைக் காண்பிக்கின்றன. கேரளத்தில் ஒன்பதாம் நூற்றாண்டுப் பதிவுகளில் மூன்று வகையான ஊர்ப் பேரவைகளைக் காண்கின்றோம். 'தற' அல்லது 'ஊர்க் கூட்டம்' என்பது ஒன்று. 'நாடு' அல்லது 'மாவட்டக் கூட்டம்' மற்றொன்று. கேரளம் முழுவதுக்கும் சேர்ந்து திருநாவாயில் கூடிய முழு 'நாட்டாண்மைக் கூட்டம்' வேறொன்று. ஒன்பதாம் நூற்றாண்டில் குறிப்பிடப்பட்ட இக்கூட்டங்கள் அக்காலத்திலேயே மிகப் பழமை பெற்றவையெனக் கருதப்பட்டுள்ளன. அவற்றின் இயல்பையும் இயக்க முறையையும் இப்பொழுது ஒரு சிறிதே அறிகின்றோம். அவை ஊரார் வழக்கமாகக் கூடும் பொதுக் கூட்டம் போன்று நடைபெற்றிருக்க வேண்டும். அனேகமாக, சங்ககால 'மன்றம்'

'பொதியில்' என்ற கூட்டங்களிலிருந்து அவை வளர்ந்து வந்தவை எனக் கருதலாம்.

'சபைகள்' அல்லது 'மகாசபைகள்' எனக் குறிப் பிடப்பட்டிருக்கும் குழுக்கள் தனிப்பட்ட பிரமதாயங்கள் அல்லது பார்ப்பனர் ஊர்களையே குறிப்பன. அவற்றைத் தெலுங்கு, கன்னட நாடுகளில் 'மகாஜனம்' என அழைத்து வந்தனர். அக்கூட்டங்கள், திருக்கோவில் நடைமுறை, ஊரார் ஒழுக்க முறை இவற்றைப் பற்றி ஆராயும் பொருட்டுக் கூடுவன. இவை முன்னர்க் கண்டுள்ள வண்ணம், சாதவாகனர் மன்னர் காலத்தில் சிற்றூர்களில் வாழ்ந்த பார்ப்பனர்களின் வரிசை முறை வழக்குகளைத் தீர்த்து வைக்குமாறு தொடங்கப்பெற்று, தென் இந்தியா வில் பன்னெடுங்காலம் தொடர்ந்து நடைபெற்று வந்தன. ஒன்பதாம் நூற்றாண்டில் பல்லவ அரசில் இருபது பிரம தாயங்கள் இருந்துள்ளன. பாண்டி நாட்டிலும் பிரமதாயங் கள் பல தோன்றியிருந்தன. அவற்றின் தொகை இத்துணை என்ற வரையறை இல்லை. மகாசபை, எல்லை வழக்கைத் தீர்த்து முறை செய்த நிகழ்ச்சி, தந்திவர்ம பல்லவ மன்னர் ஆட்சி இருபத்தோராவது ஆண்டுக் கல்வெட்டில் கூறப் பெற்றுள்ளது. ஒன்பதாம் நூற்றாண்டில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மானூரில் திகழ்ந்த மகாசபையின் செயல் முறை பற்றிய கல்வெட்டின் முழு விவரம் இப்பொழுது கிடைக்கின்றது. அதற்கும், பத்தாம் நூற் றாண்டில் உத்திரமேரூரில் பெயர் பெற்றிருந்த மகாசபைக் கும், செயல் முறையில் உள்ள ஒற்றுமை குறிப்பிடத் தக்கது. உத்தரமேரூர்க் கல்வெட்டு, மகாசபையின் அமைப்பையும், செயல் முறையையும் மிகத் தெளிவாய்க் காண்பிக்கின்றது. பல்வேறு பொறுப்புக்களை நிர்வகிக்கக்

குழுக்களை அமைத்தலும், குழுக்களுக்கு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கப் பின்பற்றிய முறைகளும், தற்கால முறைகளைப் பெரிதும் ஒத்திருந்தன. மகாசபைகள் அனைத்தும் அந்த முறையிலேயே இயங்கின என்று கூறுதல் அமையாது. தக்காணத்திலுள்ள மகாஜன சபைகள் குழு அமைப்பு முறையை வளர்த்து வந்த செய்திகளை கங்கக் கல்வெட்டுக்கள் பலவற்றால் அறிகின்றோம். அவை அனைத்தும் தென் நாட்டு மகாசபைகளைப் போலவே வழக்குகளை ஆராய்ந்து தீர்த்து, தீர்ப்புக்களை நிறைவேற்றி வைத்து, நீதியைக் காப்பாற்றி வந்தன. மகாஜன சபைகளின் கணக்குகளைக் குறிப்பிட்ட காலந்தோறும் அரசியல் அலுவலாளர் தணிக்கை செய்தனர். விவாதத்திற்குட்பட்ட செயல்களில் மன்னர் ஆணை முடிவுக்கு வர உதவியது. பல்லவர், கங்கர் கல்வெட்டுகள் தர்மகர்மிகர் பற்றிக் கூறுகின்றன. அன்னார் நிலவுரிமை வழக்குகளையும், அற நிலையக் கண்காணிப்பு வழக்குகளையும் ஆராய்ந்து முடிவு செய்தனர். தென் முனை நாட்டைப் பார்க்கிலும், அதன் வடபால் உள்ள தக்காண பிரமதேயப் பேரவைச் செயல்களில், பொதுவாக அரசியல் அலுவலாளர் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தனர்.

வணிகரும், தொழிலாளரும் வாழ்ந்த பேரூர்கள் அல்லது நகரங்களில் அவர்களுக்குத் தனிப்பட்ட பேரவைகள் இருந்தன. நகராண்மை பற்றித் தமிழ் நாடு, கேரள நாடு, இவற்றினும் பார்க்கத் தக்காணத்தில் மிகுதியான விவரங்கள் கிடைக்கின்றன. பேரூர்களில் வாணிகக் கைத்தொழிற் கழகங்களே அன்றி, பொதுப் பேரவைகளும் நிலைபெற்றிருந்தன. பேரவையில் வழி வழியே வந்த பதினெண் இனத்தையும் சார்ந்த மக்கள் அடங்கியிருந்தனர்.

அப்பேரவையில் குற்ற விசாரணைத் தலைவரும், ஊர்காப் பாளர்த் தலைவரும் நியமனம் பெற்றிருந்தனர். அவரை 'நகரிகர்' அல்லது 'தோத்திகரர்' என்பர். வரி விதிப்பதும், முறை செய்து ஒழுக்கத்தை நிலை நாட்டுவதும் அவர் கடமை.

தக்காண நகரவாசிகள் தென்முனை நாட்டுப் பேரூர் மக்கள் பெற்றிருந்த அளவு தன்னுட்சியுரிமை பெற்றோர் அல்லர். தக்கண நகர்கள் எல்லா வகையிலும் தென்முனை நாட்டுப் பேரூர்கள் போலவே தொழிற்பட்டு இயங்கி வந்திருப்பினும், ஆங்கு நகர் மன்ற அலுவலாளர் செயல் களை அரசியல் அலுவலாளர் கட்டுப்படுத்தியமையால், அவர் அதிகார முனை மழுங்கியிருந்தது. கவுண்டர் எனும் 'தலையாரி', 'செனபோவா' என்னும் கணக்கர், 'கிராம குரகர்' என்னும் ஊராளி முதலான அரசியல் அலுவ லாளரும், நகர் மன்ற அலுவலாளரும் கூட்டாளிகளாய், நாட்டாண்மையையும், நகராண்மையையும் சங்கிலித் தொடர்போல் இணைத்து நடத்தினர். தென் நாட்டில் நகர் மன்ற அலுவலாளரில் கரணத்தார் என்னும் கணக்கரும், நிர்வாக அலுவலாளராகிய மத்தியஸ்தரும் உட்பட் டிருந்தனர்.

வாணிகக் கழகம் கைத்தொழிற் கழகத்திலும் மிக்க செல்வாக்குப் பெற்றிருந்தது. அமைப்பிலும் செயலிலும் அது பிரமதாய சபையை ஒத்தது. பற்பல வாணிகக் குழுக்கள் அடங்கிய 'நானாதேசி' என்னும் வாணிகக் கழகம் ஒன்று இருந்தது. அதற்குத் தென் இந்தியா முழுவதிலும் கிளைகள் இருந்தன. கிளைகள் மொழி வழியே தோன்றப் பெற்றன. அந்தந்த மாநிலங்களில் தோன்றிய அக்குழுக்கள், கன்னடத்தில் 'வீர பனஜர்'

எனவும், தமிழில் 'வீர வலஞ்சியர்' எனவும் பெயர் பெற்றுள்ளன. ஆதியில் வாணிகம் ஒன்றிலேயே தொழிற்பட்டு இயங்கிய இக்குழுக்கள், நாளடைவில் ஆங்கிலக் கிழக்கிந்திய வாணிகக் குழுவே போன்று கட்டுப்பாடுள்ள சமுதாய அமைப்பும், ஓரளவு படை அமைப்பும் பெற்றன. 'நானுதேசி வாணிகக் கழகம்' 11, 12-ஆம் நூற்ருண்டுகளில் தென் இந்தியாவில் உச்ச நிலை எய்தியது.

சமூக வாழ்க்கை: அக்கால சமூக வாழ்க்கையானது அரசர்களினுல் பற்பல சிற்றூர்களில் குடியேற்றம் பெற்றுள்ள பார்ப்பனர் செல்வாக்கிற்குட்பட்டிருந்தது. சென்னைப் பொருட்காட்சிசாலையிலுள்ள ஜடிலவர்ம பாண்டியர் செப்பேடுகள், மகத நாட்டிலிருந்து பாண்டி நாட்டில் வந்து சிலர் குடியேறிய பார்ப்பனச் சேரி ஒன்றைக் குறிப்பிடுகின்றன. அச்சேரியில் குடியேற்றம் தொடங்கிய நாள் தெரிந்திலதேனும், அது கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டிற்கு முன்னமே தோன்றியுள்ளது என்பதற்குச் சிறிதும் ஐயமின்று. சாளுக்கியர், கதம்பர், கங்கர், பல்லவர், சேரர் ஆகியோர் ஆட்சிகளிலும் பல இடங்களில், பார்ப்பனர் வந்து குடியேறிய செய்தி அறிகின்றோம். அந்தந்த ஊர்களில் முன்னரே அமைந்துள்ள திருக்கோவில்களை அக்கால அரசர் இவர்கள் பொறுப்பில் விட்டிருக்கலாம். அன்றேல், பலகாலும் செய்ததே போல் அன்னர் வாழும் புதிய சேரிகளில் அரசர் புதுக்கோவில்களை உருவாக்கியிருக்கலாம். எவ்வாற்ருனும், திருக்கோவில்களின் பாதுகாப்பிற்கு அவ்வச் சேரிவாழ் பார்ப்பனர் தலைமைப் பொறுப்புடையார் ஆயினர். விரைவில் திருக்கோவில்கள் உயர்ந்த கல்விக்கு நடுநிலைக் களன்கள் ஆயின. கோவில்களு

டனே ஆச்சிரமங்களும், கடிகைகளும், மடங்களும் எழுந்தன. மக்கள் அனைவரும் கல்வியிலும், சமய உரைகளிலும் ஈடுபட்டனர். மடங்களும், கடிகைகளும், திருக்கோவிலின் எல்லைக்குள்ளோ, அருகாமையிலோ அமைந்தன. பல்பெரும் புலவர்கள் தோன்றுதற்கு இடனாகிய காஞ்சிப் பதியில் புகழ்பெற்ற கடிகை கி. பி. நான்காம் நூற்றாண்டிற்கு முன்னமே நிலைத்துள்ளது. இக்காலத்தில் விளங்கும் வட ஆர்க்காடு மாவட்டத்தில், சோழிங்கர் என்னுமூரில், ஒரு கடிகை இருந்தது. புதுச்சேரிக்கு அண்மையில் பாகுகிராமம் என்ற ஊரில் திகழ்ந்த கல்லூரி ஒன்றுக்குப் பல்லவ மன்னராகிய விஜய நிருபதுங்கவர்மரது தலைமை அமைச்சர் ஒருவர் மூன்று சிற்றூர்களைத் தானம் செய்தார். இவை யன்றியும் தெலுங்கு, கன்னட மாநிலங்களிலும் பற்பல கடிகைகள் இருந்தன எனக் கல்வெட்டுகள் பகர்கின்றன. தெற்குக் கோடியில் கண்டலூர், பார்த்திவ சேகரபுரம், கன்னியாகுமரி முதலான இடங்களில் சாலைகள் இருந்தனவென 9, 10-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளன. இவை கடிகைகள் போலவே கலை நிலையங்களாகத் திகழ்ந்தனவென்று தோன்றுகின்றது. கற்றுத் தெளிந்த பார்ப்பனர், தம் இனத்தவருக்கு இலவசமாக அறிவூட்டும் பணியில் ஈடுபட்டனர். மன்னர்களும் மற்றுப் பெருந்தகையாளர்களும் அவர்களுக்கு நன்கொடை அளித்தனர். சில வேளைகளில் அரசர்கள் சிலவூர்களை அவர்களுக்கு முற்றூட்டாக (சர்வமானியமாக) நல்கினர். அவ்வூர்கள் அக்கிரகாரம் எனப் பெயர்பெற்றன. எட்டாம் நூற்றாண்டில், இரண்டாம் நந்திவர்ம பல்லவ மன்னர் தஞ்சை மாவட்டத்தில்

கும்பகோணத்திற்கு அண்மையில் ஒன்றும், நாகபட்டினத்திற்கு அருகில் மற்றென்றுமாக, இரண்டு அக்கிரகாரங்களை நிறுவியது இதற்கு உதாரணம் ஆகும். விஷ்ணுகுந்திய மரபைச் சேர்ந்த மாதவ வர்மர், கோதாவரி மாவட்டத்திலுள்ள பொலமூரு என்னும் சிற்றூரைப் பார்ப்பனர் ஒருவருக்கு அளித்துள்ளார். சிறப்புள்ள சடங்கு நிகழ்ச்சிகள் நடைபெறும் காலத்தில், அந்தணர்களுக்குச் சிற்றூர்களையும், அக்கிரகாரங்களையும் தானம் பண்ணுதல் அரசருக்கு வழி வழி வழக்கமாக இருந்து வந்தது. அரசர் முடிசூட்டு விழாவில் அந்தணர்க்குப் பெரும் பரிசில்கள் கிடைத்தன. 'கோசகஸ்ரம்' என்னும் சடங்கில் ஆயிரம் பசுக்கள் கொடுத்தனர். 'இரணிய கருப்பம்' என்னும் சிறந்த விழாவில், அரசர் பொன்னல் செய்த பசு வயிற்றில் பிறப்பதாக ஒரு சடங்கு நிகழும். அப்பொற்பசு பின்பு அச்சடங்கு நடத்திய அந்தணர்க்குத் தானமாக வழங்கப்பட்டது. துலாபாரம் என்னும் சடங்கில் அரசரைத் துலாக்கோலால் நிறுத்து, அவரது எடை அளவான பொன்னை அந்தணர் தானம் பெறுவர். முதலாம் இராசசிம்ம பாண்டியரும், தொடக்கத்தில் அரசு செலுத்திய பல வேளுட்டு மன்னரும், கங்க வேந்தரும், ஆந்திர அரசரும் துலாபார தானம் செய்துள்ளனர். சாளுக்கிய விசயாதித்தர் (696-734) அமைச்சர் ஒருவர் இரணிய கருப்பதானம் செய்தார். மொத்தத்தில் புரோகிதர் வகுப்பு நிலைமை பெரிதும் உயர்வடைந்தது.

அக்காலத்தில் சாதி வேற்றுமை கடுமை அடைந்திலது. அரசர் மரபில் நிகழ்ந்துள்ள கலப்பு மணங்களினல், பொது மக்களிடையும் கலப்பு மணம் பரவி

யிருந்ததென அறிகின்றோம். கதம்ப காகுஸ்தவர்மரும் வாகாடக உருத்திர சேனரும், பார்ப்பனர். அவர்கள் தம் புதல்வியரை வைசியகுல அரசர்களுக்கு மணஞ்செய்து கொடுத்தார்கள். பார்ப்பன இக்சுவாகு மன்னர் சகமரபு இளவரசியை மணந்தார். தந்திவர்ம பல்லவரது அரசியரில் ஒருவர் கதம்பகுல அந்தண மகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சாதிக்கட்டுப்பாடு நிலைத்திருந்தாலும் பலர் வேறு தொழில்களும் செய்தனர். அந்தணர் சிலர் அரசராக ஆட்சி புரிந்தனர். வேறு பலர் வாணிகம் நடத்தினர்; சிலர் சிற்பத் தொழில் செய்தனர். சத்திரியர் பலரும் வாணிகம் செய்துள்ளனர். தென் இந்தியாவில் மக்கள் தொகையில் சத்திரிய வகுப்பினர் மற்றை வகுப்பின ரிலும் குறைந்தவர். எனினும் படைத்தொழில் சத்திரி யர்க்கு மட்டுமே தனி யுரிமையாக இருக்கவில்லை. குதிரைப் படையிலும், காலாட்படையிலும், சூத்திரர் பெரும் பாலார் இருந்தனர். சூத்திரர்களுக்குள் மிகப் பல இன வேற்றுமைகளும் புதுச் சாதிகளும் தோன்றின. வேளாளர் நீண்ட காலமாகத் தக்கண ரெட்டியார் போலும், நாயக்கர் போலும், தமிழ் நாட்டில் உழவுத் தொழிலே செய்து வந்தனர். தென் இந்தியாவில் செட்டிமார். அனைவரும் வணிகத் தொழிலில் ஈடுபட்டனர். வைசியர் என்று கூறப் படும் கோமுட்டி வாணிக வகுப்பினர் தோல் வேலை செய் கின்ற 'மாதிகர்' என்பாருடன் நெருங்கிய தொடர்புடையார். கோமுட்டி மரபில் திருமணம் நடைபெற்ற பொழுது, மணமக்கள் புதுக்குடித்தனம் செய்வதற்கு 'மாதிகர்' வீட்டிலிருந்து நெருப்பு எடுத்துக்கொண்டு போவது இன்றி யமையாத செயல் ஆயிற்று. இவை புது இடங்கள்

தோன்றின வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிக ளாவன. தட்டார், தச்சர் முதலான தொழிலாளிகள் போன்ருர் வகுப்புக் கிளைகள் பெருகிவரினும், கலப்பு மக்களும் தோன்றினர். எட்டாம் நூற்ருண்டுப் பாண்டியர் கல்வெட்டுகள் சிலவற்றில், அரசியலில் உயர்ந்த அலுவல்கள் பெற்றிருந்த வைத்திய குல உறுப்பினர் குறிக்கப்பெற்றுள்ளார். அவர் கலப்பு வகுப்பினர் எனக் காண்கின்ருேம். 'கரணர்' என்னும் வகுப்பு வைசிய ஆடவரும் சூத்திர மகளிரும் கலந்து தோன்றியதெனப் பிருஹத் தர்ம புராணம் குறிப்பிட்டுள்ளது. 'கரணர்' சாதி பற்றித் தமிழ்நாட்டுக் கல்வெட்டுகளில் சில குறிப் புக்கள் காண்கின்ருேம். இவ்வகுப்பு மக்கள் மன்னர்பால் அலுவல்கள் செய்தனர். திருக்கோவில்களின் கணக்கரும், பேரவைகளின் கணக்கரும், இவர்களிலிருந்து தெரிந் தெடுக்கப்பெற்றனர். தக்காணத்தில் வடதிசை மேற்றிசை காயஸ்தர்களைச் சூத்திரர்களாக ஸ்மிருதிகள் கருதின. அவர் எழுத்தாளர் தொழிலும் மற்றை அலுவல்களும் செய்து வந்தனர். பிராமண ஆடவரும் வைசிய மகளிரும் கலந்து பிறந்தது 'அம்பட்டர்' வகுப்பு என்று மனுவும், மற்ற ஆசிரியர்களும் கூறியுள்ளனர்.

'அம்பட்டர்', உழவு, மருத்துவம் முதலிய பற்பல தொழில்கள் செய்துள்ளனர். தென் கோடி நாட்டில் இதே வகுப்பினர் சவரத் தொழிலும் சிலவேளை மருத்துவத் தொழிலும் செய்து வந்துள்ளனர். சாதிகளில் கடைப் பட்டது சண்டாளச் சாதியெனக் கருதி வந்தனர். யாருமற்ற பிணத்தை எடுத்துப் புதைப்பதும், கொலைத் தீர்ப்பை நிறைவேற்றுவதும் ஸ்மிருதிகளில் சண்டாளருக்கு வகுக்கப் பட்ட தொழில்களாவன. அவர் தீண்டாதார் என ஒதுக்கப்

பெற்ருர். அவரது தீட்டு அணுகாதபடி காத்துக் கொள்வதற்குக் கடுமையான விதிகள் கையாளப்பெற்றன. ஐந்தாம் நூற்ருண்டில் இந்தியாவிற்கு வந்த சீன யாத்திரிகர் பாஹியன், மத்திய இந்தியாவில் வாழ்ந்திருந்த சண்டாளர், பேரூர்களின் எல்லேகளுக்கு வெளிப்புறத்திலும், சந்தை வெளிகளிலும் குடியிருக்கவேண்டுமென்றும், ஊருக்குள்ளே வந்தால், அவர்களால் தீட்டுப்படாதிருப்பதற்கு எச்சரிக்கையாக ஒரு மரத்துண்டை எடுத்துத் தட்டிக்கொண்டே செல்லும் வழக்கம் இருந்தது என்றும் கூறியிருக்கின்ருர். ஏழாம் நூற்ருண்டில் வந்த யுவான் சுவாங், அத்தகைய நிலைமை, தோட்டிகள், கசாப்புக் கடைக்காரர், கொலைத் தீர்ப்பை நிறைவேற்றுவோர் முதலியோருக்கு ஏற்பட்டிருந்தது என இயம்பியுள்ளார். ஏழாம் எட்டாம் நூற்ருண்டுகளில் இத்தகைய சட்டதிட்டங்கள் தென் இந்தியா முழுவதிலும் பரவியிருந்தன என்று தோன்றுகின்றது. கேரளத்தில் நம்பூதிரிகள் அடைந்த உயர்ந்த நிலைமை காரணமாக, அன்ஞர் தீட்டுகளுக்குரிய விதிமுறைகள் அனைத்தையும் மிகவும் ஒழுங்காகக் கடைப்பிடித்து வந்தனர். தென் இந்தியாவின் பிற பகுதிகளிலும் அவற்றை மற்றையோர் கையாண்டு வந்தனர்.

பிற்காலத்தில் வந்த ஸ்மிருதி நூலாரும், புராணதரும சாஸ்திர விரிவுரையாளரும் சாதிக் கட்டுப்பாட்டிற்கும், தீட்டுகளுக்கும், மேன்மேலும் விதிமுறைகளைப் பெருகச் செய்தனர். பராசரர் என்னும் ஸ்மிருதியாளர் இயற்றிய ''சம்ஸ்காரப்பிரகாசம்'' என்னும் நூலில், மேல் இனத்தவர் சூத்திரனுடனே ஓர் இருக்கையில் ஒக்க அமர்ந்திருக்கக் கூடாது. அவனுடன் கல்வி கற்கக் கூடாது, அவன் சமைத்த உணவை அருந்துவது பற்றிப் பேசவே கூடாது

என்றெல்லாம் கடுமையான விலக்குகள் கூறப்பெற்றுள்ளன. சில இடங்களில், சூத்திரனைத் தொடுவது தீட்டு என்றும், பார்ப்பது தீட்டு என்றும் விதித்திருக்கின்றனர். ஒன்பதாம் நூற்றுண்டில் மேதாத்திதி என்ற மனுதர்ம விரிவுரையாளர், பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் இவர்களது பிரேதங்களைப் பேரூர்களிலும் சிற்றூர்களிலும் முறையே கிழக்கு, வடக்கு, மேற்கு, தெற்கு வாயில்கள் வழியே கொண்டு போக வேண்டும் என்று கூறியுள்ளார். இவ்வகை விதி முறைகள் அனைத்தும் தெற்கே ஏற்றுமதியாகி, சாதி வேற்றுமைக் கட்டுப்பாடுகள் வடக்கிலும் பார்க்கத் தெற்கிலே வலிமையும் உறுதியும் எய்தின. தெற்கில் வாழும் பார்ப்பனரை வடக்கில் வாழ்பவரினும் தாழ்ந்தவர் என மதித்தது இங்குச் சிறப்பாகக் குறிக்கத் தக்கது. மச்ச புராணத்தில் மிலேச்ச நாடுகளில் வாழும் பார்ப்பனர் தாழ்ந்தவர் எனவும், அவரைச் சாவு சடங்குகளுக்கு அழைக்கக் கூடாது என்றும் கூறப்பட்டிருக்கின்றது. அப்புராணத்தின்படி ஒரிசா, ஆந்திரா, பஞ்சாப், திராவிடம், கொங்கணம் முதலிய நாடுகள் மிலேச்ச நாடுகள் அல்லது தூய்மையற்ற நாடுகள் ஆவன. அந் நாடுகளில் உள்ள பிராமணர் ஆரியரல்லாதோருடன் கலந்து கொண்டமையால் அத்தகைய இழிவு அடைந்தனர் போலும்.

அரசவையிலும், சமுதாயத்திலும் பிராமணர் அடைந்த உயர்நிலை ஆரிய கொள்கைகள் மேன்மேலும் பரவுகிறதற்கு வழியாயிற்று. முன்னமே புகுந்த சமயக் கருத்துக்களும் பழக்கங்களும் பின்னும் தொடர்ந்து வழங்கலாயின. ஆரியரின் பல தெய்வக் கோட்பாடு புதிய தேவர்க்கும், தேவியர்க்கும் இடம் அளித்துப் பழைய முறையை மாற்றி

விட்டது. எனினும் மாற்றப்பெற்ற புதிய முறை தெற்கே இந்து சமுதாய அமைப்பை முற்றிலும் மாற்றிவிடவில்லை என்பது நினைவில் வைக்கத் தக்கது. பிராமணரும் மற்றையப் பேரில் உயர்ந்த சாதியார் என்பாரும் புதிய முறைக்கு மாறிவிடினும், நாட்டுமக்களில் பெரும்பாலார் சிற்றூர்களில் சாமிகளையும் அம்மன்களையும் வழிபடும் வழக்கத்தை விட்டு நீங்கவில்லை. மரங்களையும் பாம்புகளையும் வணங்கும் வழக்கம் ஒரு பக்கம் இருக்க, ஆவிகளையும், முன்னோர்களையும் வழிபடும் பழக்கம் முன் போலவே தொடர்ந்து நடைபெற்று வந்தது. தீமைகளை நீக்கவும் நல்வாழ்வு பெற்றுக்கொள்ளவும் வேண்டிச் சாமிகளுக்கும் அம்மன்களுக்கும் உயிர்களைப் பலியிடும் வழக்கம் உரிய காலங்களில் நடைபெற்றது. தேவர்களை மகிழ்விக்கும் நோக்கோடு மக்கள் பற்பல வகையாய்த் தம் உடம்பை வதைத்துத் துன்புறுத்திக்கொண்டனர்.

உயர்குல மக்கள் இத்தகைய பழைய வழக்கங்களைக் குறை கூறி வெறுத்துத் தள்ளிவிடவில்லை என்பது வினோதமாகும். சூத்திரர்களில் பெரும்பான்மையோர் பழைய தேவர் தேவியரைப் போலவே புதிய தெய்வங்களையும் வழிபட்டு வந்தனர் என்று தோன்றுகிறது. கிருஸ்துவ சகாப்தத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளில் புலாலுணவில் தோன்றிய வெறுப்பு சில சூத்திரர்களை வேள்விச் சடங்குகளில் சேரவொட்டாது ஒதுங்கி நிற்குமாறு அவர்களைத் தடுத்திருப்பினும், பழைய முறையில் வழிபாடு செய்வதை அவர் அறவே விட்டுவிடவில்லை.

இந்துக்களிடையே இவ்வகை மாறுதல்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும் பொழுது பௌத்தரும் சமணரும் தத்தம்

நிலைமையை உறுதிப்படுத்திக்கொண்டார்கள். அவர்தம் பள்ளிகளும், கல்வி நிலையங்களும் பெருந்திரளான துறவிகளையும், மாணவர்களையும் கவர்ந்துகொண்டன. கல்விக்காகவும், சிறப்பாக இலக்கியங்களுக்காகவும், நுண்கலைகளுக்காகவும் அவர்கள் செய்துள்ள தொண்டு பெரிது. தென் இந்தியக் கலைப்பண்பிற்காகச் சமணரும் பௌத்தரும் செய்துள்ள அரிய செயல்கள் தகுந்தவாறு வரலாற்றில் மதிப்புப்பெறவில்லை. உண்மையில் தென் நாட்டுக் கலைப் பண்பு அவ்விருகூட்டத்தினருக்கும் மிகக் கடமைப்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்க வண்ணம் பௌத்த சமயம் ஆந்திர, கேரள நாடுகளிலும், சமண சமயம் கன்னட, தமிழ் நாடுகளிலும் மக்கள் வாழ்க்கையிலும், நினைப்பிலும் பெற்றுள்ள செல்வாக்கு மிகப் பெரிது. அவர் சமயக் கருத்துக்களும், பழக்கங்களும் சமுதாய வழக்கங்களும் தென் இந்திய சமுதாயத்திற்குள்ளே புகுந்துவிட்டன. அகிம்சை என்னும் அருளுடைமை, எளிய வாழ்க்கை, சைவ உணவு, துறவறம் முதலியவற்றை வற்புறுத்திக் கூறும் அறவுரை தென் நாட்டு மக்கள் மீதும் செல்வாக்குப் பெற்றுவிட்டது. சமணரும், பௌத்தரும், மன்னர் ஆதரவை நாடினர். அதிலும் பல இடங்களில் சித்தி பெற்றனர். கங்கமன்னரும், சாளுக்கிய, இராஷ்டிரகூட வேந்தர் சிலரும், முற்காலப் பாண்டியர் சிலரும், சமண சமயத்தில் பற்றுடையராய் விளங்கினர். ஆந்திர நாட்டிலும், காஞ்சி நகரத்திலும், சமணத்தில் தலைசிறந்து நிற்கும் கோட்பாடுகளை இந்து சமயம் தன்னகத்தே ஈர்த்துத் தன்மயமாக்கி, மக்கள் மீதுள்ள தன் பிடியை வலுப்படுத்திக்கொண்டமையால், அவ்விடங்களில் சமண சமயச் செல்வாக்குக் குறைவடைந்தது. கன்னட நாட்டிலும்,

தமிழ் நாட்டிலும் அது பின்னும் நெடுநாள் வாழ்ந்திருந்தது; இலக்கியக் கலையை வளர்த்து வந்தது. அவ்விலக்கியங்களைக் குறித்துப் பின்னர் ஆராய்வோம்.

தென் இந்தியாவில் ஏறக்குறைய கி. பி. ஏழாம் நூற்றாண்டு வரையிலும் இந்த மூன்று சமயங்கள் சமரசமாக வாழ்ந்து வந்தன. அதுகாறும் அவை தமக்குள் வெறுப்பும், பகையும் கொண்டில. ஏழாம் நூற்றாண்டு முதல், பக்தி இயக்கத்தின் செல்வாக்கு வழியே தென் இந்தியாவில் இந்து சமயப் புது மலர்ச்சி தோன்றியது. வைச சமய குரவர்கள் பாடிய தேவாரப் பாடல்கள் பொது மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. பௌத்தம் முன்னரே வலி குன்றியது. சமணம் இப்பொழுது மறையும் தறுவாயில் இருந்தது. இந்துக்களின் தீராப் பகையினால் கடுமையாய்த் தாக்குறினும், சமணம் இன்னும் தென் இந்தியாவில் சில இடங்களில் உயிர் வாழ்ந்திருக்கின்றது. சமணர் பலர் இந்து சமயத்தில் கலந்து கொண்டனர். அவர் நினைவுக் குறிகள்தாமும் இந்துக் கோவில்களாய் மாறிப் போயின.

கேரளம் ஒரு காலத்தில் பௌத்த சமயத்தின் உறையுளாய் இருந்தது. அக்காலத்தில் சமண சமயப் பற்றுடையாரும் ஆங்கு இருந்தனர். ஆயின், ஏழாம் நூற்றாண்டில் யுவான்சுவாங் கேரளத்தைப் பார்க்க வந்திருந்த பொழுது, பௌத்தம் வீழ்ச்சி அடைந்திருந்தது. பௌத்தப் பள்ளிகள் அழிந்து கிடந்தன. அவற்றில் இந்துக் கோவில்கள் இடம் பெற்றன. மத்திய திருவாங்கூரில் கண்டெடுக்கப்பட்ட அக்காலப் பழம்பொருட்களில் புத்தர் சிலைகள் உள்ளன. ஆலப்புழைக்கு அண்மையில் உள்ள ஸ்ரீமூலவாசம் என்னும் பட்டினம் ஒரு காலத்தில், பௌத்தரது கலைஞானம் தழைத்

தோங்கிய நகரமாயிருந்தது. இந்துக் கோவில்களில் நடைபெறும் சில விழாக்களும் சடங்கு முறைகளும் பௌத்த சமயத்திலிருந்து தோன்றியவை என்பதை நாம் நினைவில் இருத்தல் வேண்டும். உள்ளத்தைக் கவரும் உருவ வழிபாட்டு முறைகள், உருவங்களையும் சிறப்பாக அணி செய்யும் வகைகள், ஊர்வலம் நடத்தும் வழக்கங்கள் அனைத்தும், பெரும்பாலும், 'தென் இந்தியாவில் வாழ்ந்த மகாயான பௌத்தர் வழியாக வந்துள்ளன. சிவபெருமானது தக்ஷிணாமூர்த்தி வடிவம் புத்தர் வடிவத்தை மாற்றி அமைத்துக்கொண்டதே என்னும் கருத்தின் உண்மையை அறிய இயலாதிருப்பினும், கேரளத்தில் வழங்கும் சாஸ்தா வழிபாடு பௌத்த சமயத்தைப் பின்பற்றித் தோன்றியதென்பதற்கு ஐயம் இன்று. நடுத் திருவாங்கூர்க் கோவில்களில் நடைபெறுகின்ற கெட்டுக் காழ்ச்சை விழா[2] பண்டைப் பௌத்த சடங்கின் தொடர்பு எனக் கொள்ளுகின்றனர். திருவாங்கூரின் வடகோடியிலும், கன்னியாகுமரிக்கு அண்மையிலுள்ள தற்கால நாகர்கோவிலைச் சுற்றியும் ஒரு காலத்தில் சமணப் பள்ளிகள் வளர்ந்தோங்கின. விளவங்கோட்டு திருச்சிணுட்டுமலைக் கோவிலும் நாகர்கோவில் ஆலயமும் 13-ஆம் நூற்றாண்டு வரை சமணர் வழிபட்டு வந்த இடங்கள் என்பது உறுதி. பின்னரே அவை இந்துக்கள் வழிபடும் திருக்கோவில்களாக அமைக்கப்பெற்றன.

இந்து சமயம் புத்துயிர் பெற்ற நிகழ்ச்சியில் கேரளம் பெரும் பங்கு கொண்டுள்ளது. அத்வைத சித்தாந்தவாதி எனப் புகழ்பெற்ற சங்கராச்சாரியார் வட

2. முன்னுள் சேர மன்னர் ஒருவர் பௌத்தத்தைப் பின்பற்றியதின் நினைவுக் குறியாக இவ்விழா தோன்றியதெனக் கூறுவர்.

திருவாங்கூரைச் சேர்ந்த நம்பூதிரிப் பிராமணரெனக் கருதப்படுகின்றது. சைவ சமயத்துடன் ஒருங்கே புது மலர்ச்சி கண்டது வைணவ சமயம். அச்சமய குரவரில் ஒருவரான கேரளநாட்டுக் குலசேகரஆழ்வாரது செயல்கள், வைணவம் புத்துயிர் பெறுவதற்கு உதவின. கேரள நாடும், சிறப்பாகத் திருவாங்கூரும் மாட்சிமை தங்கிய வைணவத் திருக்கோவில்களால் பெரும் புகழ் எய்தின. திருவனந்தபுரம், வற்கலே, திருவட்டாறு ஆகிய ஊர்களில் அத்தகைய ஆலயங்கள் உள்ளன. அக்கோவில்கள் ஒன்பதாம் நூற்றுண்டிற்கு முன்னே தோன்றியவை என்னும் உண்மைக்குக் கல்வெட்டுச் சான்றுகள் பல காண்கின்றேம்.

தென் இந்தியாவில் கேரளம் கடல் வழியே எவரும் எளிதாக வந்து சேரத் தக்க இடமாயிருத்தலால், ஆரம்ப காலக் கிருஸ்தவரும், முஸ்லீம்களும் அவ்விடத்தே வந்து சேர்ந்தனர். தூயர் தோமாஸ் தொண்டர் கி. பி. 52-ல் மரக் கலத்தில் கிராங்கனூருக்கு அண்மையில் வந்து இறங்கி, கிருஸ்துவக் கோவில்கள் கட்டி மக்கள் பலரைக் கிருஸ்து சமயத்தில் சேர்த்தார் என்பது தொன்று தொட்டுச் செவி வழி வந்து நிலவியுள்ள செய்தி. இச்செய்தியின் வரலாற்று உண்மை எவ்வாறு இருப்பினும், கானு தோமாஸ் என்பார். கி. பி. நான்காம் நூற்றுண்டில் ஜெருசேலத்திலும், நினிவேயிலுமிருந்து, ஏறக்குறைய நானூறு கிருஸ்தவர் களைக் கிராங்கனூரில்கொண்டுவந்து குடியேற்றினர் என்னும் செய்தி பெரும்பாலும் நம்பிக்கைக்குரியது. கி. பி. 522-இல் கொல்லத்திற்கு வந்த அலெக்சாந்திரிய வணிகர் காஸ்மாஸ், அங்கே நெஸ்தோரியக் கிருஸ்தவ சபை இருக்கக் கண்டார். சேர மன்னர் வாணிக வளர்ச்சியின் பொருட்டு அயல் நாட்டுக் கிருஸ்தவரை ஆதரித்தனர்.

ஒன்பதாம் நூற்றுண்டில் வாழ்ந்த சேரமன்னர் ஸ்தாணு இரவி என்பார், கொல்லத்தில் கிருஸ்தவர் தமக்குக் குடியிருப்பு அமைத்துக்கொள்ள அனுமதி அளித்தார் என்று ''கோட்டயம் சிரியக் கிருஸ்தவ சாசனங்கள்'' கூறுகின்றன. அச்சாசனங்கள், அம்மன்னர் அவர்கட்கு அளித்தவை என்கின்றனர். அடுத்த நூற்றுண்டில், பாஸ்கர இரவிவர்மர் என்னும் சேர அரசர், கேரளத்தில் யூதர் குழுவினருக்குக் குடியிருக்கத் தனியுரிமை அளித்துள்ளார். இதற்குரிய சாசனங்களின் மெய்மை பற்றி ஐயந் தோன்றினும் அவ்வையத்தை நிலே நாட்டுதற்குக் காரணம் யாதும் இல்லே. வாணிகத்தின் பொருட்டு அராபியர் கேரளக் கடல் துறைக்கு வந்தனர். வாணிகம் வளர்ச்சி அடைந்தது. அவர் மேன்மேலும் கூட்டங்கூட்டமாக வந்து, எட்டாம் நூற்றுண்டில் கடற்கரைப் பட்டினங்களில் குடியேறினர். அவர் கேரள மக்கள் சிலரை இஸ்லாம் மதத்தில் சேர்த்துள்ளனர். அதனே அடிப்படையாகக் கொண்டு பலவகைக் கதைகளும் தோன்றியுள்ளன.

சமுதாய மேல் வகுப்புகளில் மகளிர் நிலேமை நன்கு மதிக்கப் பெற்றுள்ளது. அரசியரும் அரசிளங்குமரியரும் புலவர்களாகவும், கவிஞர்க்குப் புரவலராகவும் இருந்தனர் என்று கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. உயர்குடி மகளிர் சிலர் மருத்துவக் கலே வல்லுநராய்ப் புகழ் பெற்றிருந்தனர். உயர்ந்த நீதி நூல்கள், தத்துவ நூல்கள் முதலியவற்றின் உண்மைக் கருத்துக்களே விரித்துரைக்கும் அருந்திறல் படைத்திருந்தனர். தம் உலக இன்பங்கள் அனேத்தையும் பற்றறத் துறந்து, சமண சமயத்தில் சேர்ந்து , பிக்குணிகளாய் விளங்கிய ஒப்பற்ற கலேப்பண்புடைய உயர்குல மகளிர் சிலர் பற்றிக் கல்வெட்டுக்களும்

சான்று பகர்கின்றன. தென் நாட்டுக் கோவில்களில் நாடக மகளிரை நியமிக்கும் வழக்கம், கி.பி.ஏழாம் நூற்றுண்டில், பல்லவர் ஆலயங்களில் தொடங்கியுள்ளது. முதலாம் இராசராச சோழ மன்னர், அவர்கள் நியமனத்திற்கு வரையறை நிறுவினுரெனினும், ஒன்பதாம் நூற்றுண்டிற்கு முன்னமே தென் இந்தியத் திருக்கோவில்களில் அது சாதாரண வழக்கமாகிவிட்டது. திருக்கோவில்களில் அப்பணி இயற்றுதற்கு நியமிக்கப்பெற்ற அம்மகளிரை தேவதாசிகள் என அழைத்தனர். ஆரம்ப காலத்தில் அவர்கள்ளங்கபடமற்ற மெய்யன்புடைய திருக்கோவிற் பணியாளராய் விளங்கினர் என்பதற்கு எட்டுணையும் ஐயம் இன்று.

ஒருவர் பல மகளிரை மணந்துகொள்வது ஆங்காங்கு, அதிலும் குறிப்பாகச் செல்வர்களுக்கிடையே, வழக்கத்திலிருந்தது. அக்காலத்திலும் மணவினை என்பது சமயச் சடங்கு முறை எனவும், சமுதாய ஒழுங்கு முறை எனவும் மதிக்கப்பெற்றது. இளவரசியர் சில வேளைகளில் சுயம்வர வழக்கத்தை மேற்கொண்டாரெனினும் பெற்ருரும் பெரியோருமே திருமணம் பேசி நிறைவேற்றி வைத்தனர். மணவினைச் சடங்குகள் வரவர முன்னிலும் மிக விரிவடைந்தன. 'சதி' என்னும் உடன்கட்டை ஏறுதல் எங்கும் பரவியிருந்தது. ஸ்மிருதிகளினுலும் பண்டைத் தமிழ் நூல்களினுலும் கைம்மை மகளிர்க்கு விதிக்கப்பெற்ற துறவு வாழ்க்கை, அக்காலத்தில் கடுமையாகக் கையாளப் பெற்றது. மனுவும், அவரது நீதி நூல் விரிவுரையாளர் மேதாத்திதியும், திருமணத்திற்குரிய வயது குறைந்திருக்க வேண்டும் என்னும் கொள்கையை ஆதரித்தனர். ஏறக்குறைய ஒன்பதாம் நூற்றுண்டில் தென் இந்தியாவிலும்

அன்னர் விதிமுறைகள் செல்வாக்குப் பெற்றன. அதனல், பொதுவாக, மகளிர் மேன்மையும் நிலைமையும் படிப்படியாகத் தாழ்வுற்றன. கணவனுக்கு மனைவி மீது சர்வாதிகாரம் உளது எனவும், அவளை அடித்துக் கொடுமைப்படுத்தவும், தன் சொல்லிற்கு இணங்காது எதிர் பேசிய எக்கணத்திலும் அவளைத் தள்ளிவிடவும் அவனுக்கு உரிமை உண்டு எனவும் மனு விதித்திருக்கின்ருர். கணவன் எவ்வகைப் பண்பும் அற்ற கயவனே ஆயினும் அவனை மனைவி கடவுளாக மதித்து, அவனை வழிபட வேண்டும் எனவும் மனு விதி வகுத்துள்ளார். கணவன் உயிரோடு இருந்தாலும், இறந்து போனலும், மனைவி அவனைப் பற்றிய கற்பிலும் உண்மையிலும் எக்காலத்தும் நிலைத்திருக்க வேண்டும் என்பதும், கணவனே, மனைவி இறப்பின், அவளது இறுதிச் சடங்கு நிறைவேறிய பின்னர் மறுமணம் செய்துகொள்ளலாம் என்பதும் அவரது நீதி நூல் முறைமை. இத்தகைய ஒரே சார்பான சட்டங்களுக்குப் பொது நெறி முறைகள் ஆதாரம் அளித்தாலும் அளிக்காவிடினும், இச்சட்டங்களின் விளைவாக மகளிரின் நிலை தாழ்த்தப்பட்டு வந்தது என்பதற்கு ஐயமில்லை. அக்காலத்தில் மகளிர், வேதம் கற்பதும் ஓதுதலும் கூடாது என்ற நிபந்தனைகளும் ஏற்பட்டன.

இலக்கியம் : சம்ஸ்கிருதம் : அக்காலத்தே தென் இந்திய அரசவைகள் யாவும் சம்ஸ்கிருத இலக்கியத்தை ஆதரித்தன. கடிகைகளுடனும், கல்விக் கழகங்களுடனும் தொடர்புடைய புலவர்கள் தம் நூல்களினல் சம்ஸ்கிருத இலக்கியத்தை வளம் பெறச் செய்தனர். கி. பி. ஐந்தாம் நூற்ருண்டு முதல் ஏழாம் நூற்ருண்டு வரையுள்ள காலப் பகுதி சம்ஸ்கிருத மொழிக்கும், இலக்கியத்திற்கும் பொற்

காலம் ஆகும். வட இந்தியாவில் நடைபெற்ற அம்மொழி யின் முன்னேற்றம் தென் இந்தியாவில் வாழ்ந்த எழுத் தாளர்க்கு ஊக்கம் அளித்தது. தென் இந்தியாவில் அக் காலத்தில் தோன்றிய சம்ஸ்கிருத நூல்கள், சமயம், தத்துவம், இலக்கிய நுட்பம், இலக்கணம் முதலியவை உள்ளிட்டனவாம்.

கேரள நாட்டில் புலவரும் புனிதருமாக விளங்கிய குலசேகர ஆழ்வார் இக்காலத்தின் தொடக்கத்தில் தோன்றிய சம்ஸ்கிருத கவிஞருள் ஒருவர். அவர் இயற்றிய பனுவல்களில், பதுமநாப சுவாமி மீது புகழ்ந்து பாடிய முகுந்தமாலை என்னும் பக்தி நிறைந்த இசைப் பாட்டு மிகச் சிறந்தது. அதன் இலக்கிய நயமும் இரங்கற் சுவையும் குறிக்கத் தகுந்தன. கேரள நாடு ஒன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் சக்திபத்திரர் என்னும் சம்ஸ் கிருதப் புலவரை ஈன்றது. அவர் கவிஞரும் நாடகாசிரியரு மாய் விளங்கினர். அவர் சங்கராச்சாரியர் மாணுக்கர் என்பர். அவர் இயற்றிய நூல்களில் இதுகாறும் பெரும்புகழுடன் நிலைத்திருப்பது ஆச்சரிய சூடாமணி என்பதாம். அது இராமாயண நீதியை அடிப்படைப் பொருளாகக் கொண் டுள்ளது.

பல்லவர் சம்ஸ்கிருத மொழியை மிக்க ஊக்கத்துடனே ஆதரித்து வந்தார். சம்ஸ்கிருத இலக்கியத்தில் தோன்றிய மாபெரும் நூல்கள் சில அவர் நாட்டிடைப் பிறந்தன. பாரவி என்னும் தென் இந்தியக் கவிஞர் கிரதார்ஜுனீயம் என்னும் பனுவல் இயற்றி மிகுபுகழ் பெற்றுர். அது, அர்ச்சுனன், பாசுபதாஸ்திரம் பெறுதற்பொருட்டுச் சிவபெருமான்பால் தவங்கிடந்த வரலாற்றைப் பதினெண் பகுதிகளில், பாலொடு தேன் கலந்தாற் போன்று, பல்வகை அழகும்

இனிமையும் தோன்ற எடுத்துரைப்பது. செவிவழிச் செய்தி அவரைப் பல்லவர், கீழைச் சாளுக்கியர், கங்கர் ஆகியோரின் அரசவைகளுடனே தொடர்பு படுத்துகின்றது. எனினும், அவர் ஏழாம் நூற்றாண்டில் பல்லவ நாட்டினைச் சிறப்பித்த பாவலரே ஆவார். தலைநகரங்களாகிய வேங்கிக்கும் தலைக்காட்டுக்கும் அவர் சென்றுள்ளார். பல்கலைகளிலும் வல்லுநராகிய முதலாம் மகேந்திரவர்ம பல்லவ மன்னர் இனிமை பயக்கும் இரு நாடக நூல்கள் இயற்றினர். அவை மத்த விலாச பிரகசனம் எனவும், பகவதச் சுகம் எனவும் பெயர் பெறுவன. அவை இரண்டும் அக்காலத்தில் நிகழ்ந்த சமுதாயக் கேடுகள் சிலவற்றை நகைச்சுவையாக எடுத்துக் காட்டுவன. தண்டி என்னும் பெரும்புலவர் இரண்டாம் நரசிம்மவர்ம பல்லவ மன்னர் காலத்தில் ஒருங்கு வாழ்ந்தவர். அவர் அவந்தி சுந்தரி கதை, தசகுமார சரிதை என்னும் இரு அரிய நூல்களை ஆக்கினர் என்பர் ; ஆயினும் அக்கூற்று ஐயத்திற்கு வழி திறக்கின்றது. தண்டியின் பெரும்புகழ் பெற்ற நூல் காவியதர்சம் ; அது இலக்கிய நுணுக்கங்களை எழிலுற விரிப்பது. தண்டி, பெயர் பெற்ற சம்ஸ்கிருத உரை நடை எழுத்தாளரும் ஆவர்.

தத்துவ இலக்கியப் புலத்தில் சங்கராச்சாரியார் பிரம சூத்திரத்திற்கும் உபநிஷத்திற்கும் கீதைக்கும் இயற்றிய புகழ்பெற்ற விரிவுரைகளே அன்றி, சபர சுவாமியின் பாஷியத்திற்கும், ஜேமினியாரது மீமாம்ச சூத்திரத்திற்கும் குமரில ஆக்கிய விரிவுரைகளும் உள்ளன. ஆந்திரராகிய குமரில, கி. பி. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவர். அவர் செய்துள்ள பூர்வ மீமாம்சை ஆராய்ச்சி பெரிதும் பாராட்டற்பாலது. குமரிலாவின் மாணக்கர் ஆகிய கேரள

நாட்டுப் பிரபாகரர் தாமும் அந்தப் பாஷியத்திற்கு முதன் முதல் இரு விரிவுரைகள் இயற்றினர். தத்துவக் கலைக்குத் தென் இந்தியா செய்தருளிய மாபெரும் தொண்டுகள் யாவையெனின், வேதாந்த தத்துவ நூற்புலத்தில் தென் திசையில் தோற்றுவித்த அத்துவைதம், துவைதம், விசிஷ்டாத்துவைதம் என்னும் கோட்பாடுகளே. ஒருமை என்னும் அத்துவைத சித்தாந்தத்திற்கு அருங்கலைக் குரிசில் சங்கராச்சாரியார் இயற்றிய விரிவுரை ஆழ்ந்த ஆராய்ச்சி நிரம்பியது; அதை ஒரு அறிவுக் களஞ்சிய மெனலாம். சங்கராச்சாரியார் மாணவரில் சுரேஸ்வரர் முதலானோர் சிலர் அவரது விரிவுரைக்கு மிகச் சிறந்த விளக்கவுரைகள் செய்துள்ளனர். இருமை என்னும் துவைதக் கோட்பாடும், ஒருமை விளக்கம் என்னும் விசிஷ்டாத்துவைதக் கோட்பாடும் பத்தாம் நூற்றாண்டிலும் அதற்குப் பிந்திய காலத்திலும் வளர்ச்சி அடைந்தன. ஏறக்குறைய ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் முதன் முதல் விசிஷ்டாத்துவைதத்தை தோற்றுவித்தவர் நாத முனியே! தாம் இயற்றிய யோக ரகசியம், நியாய தத்துவம் என்னும் இரு நூல்களின் வாயிலாய் அமர் தமது சித்தாந் தத்தைத் தெளிவுற விளக்கினர்.

சம்ஸ்கிருத இலக்கணப் புலத்தில் ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சாகடாயனர் புதுக் கருத்துக்களைத் தோற்றுவித்தார். அவர் இராஷ்டிரகூட மன்னர் அமோக வருஷருடைய காலத்தைச் சார்ந்தவர். சாகடாயனர் செய்த அரிய நூல் சப்தானுசாசனம் எனப்படுவது. அது முக்கிய மாய்ச் சமணர்களுக்குப் பயன்பட வேண்டுமென்னும் நோக்கத்துடனே இயற்றப்பெற்றது. எனினும், சமணர்

நடுவில் மட்டுமே அன்றி, சமணர் அல்லாத நூலாசிரியர் நடுவிலும் அது பெரும்புகழ் பெற்றுள்ளது.

**தமிழ் இலக்கியம் :** கி. பி. ஆறும் நூற்றாண்டிற்கும் ஒன்பதாம் நூற்றாண்டிற்கும் நடுவில் தமிழ் இலக்கியம் முக்கியமாய்ச் சைவ நாயன்மாரும் வைணவ ஆழ்வார்களும் இயற்றிய தேவாரம், திவ்யப் பிரபந்தம் என்னும் திருமுறைகளில் அடங்கியுள்ளது. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தியார் மூவரும் மாபெரும் சைவ இசைவாணர்களாவர். நான்காமவராகிய மாணிக்க வாசகர் இவர்களுக்குச் சற்றுப் பின் வந்தவரெனலாம். புகழ் பெற்ற பன்னிரு ஆழ்வார்களும் வாழ்ந்தது கி.பி.500 முதல் 800 வரையில் உள்ள காலமெனக் கருதலாம். திருமாளிகைத் தேவர், பட்டினத்தார், காரைக்கால் அம்மையார், காடவர்கோன் போன்ற சைவப் புலவர்களும், நாயன்மார்கள் போலவே இசைப் பாட்டுக்கள் இயற்றி இலக்கியத்தை வளமுறச் செய்தனர். பக்தியுணர்ச்சி ததும்பிய அன்னார் பாடல்கள் அனைத்தும் எளியவையும், இனியவையும், எல்லா மக்கட்கும் உரியனவும், ஆகும். திருமூலரது மூவாயிரம் செய்யுட்களடங்கிய திருமந்திரம், சிவயோக மறைப்பொருள்களும், உயர்ந்த தத்துவஞானக் கருத்துக்களும் உடையது. அந்நூல் இக்காலப் பகுதியையே சேர்ந்ததாகும்.

வைணவப் புனிதரும் பக்திச் சுவை இலக்கியத்தை மிகைபட வளர்த்தனர். அவர் பாடல்கள் உள்ளங் கவரும் நாலாயிரப் பிரபந்தத்தில் அடங்கியுள்ளன. பன்னிரு ஆழ்வார்கள் பாடல்களில், திருமங்கை ஆழ்வார் பாடல்கள் செய்யுள் மாண்பிற்கும், நம்மாழ்வார் பாடல்கள் ஆழ்ந்த தத்துவக் கருத்திற்கும் பெயர் பெற்றவை.

பெரியாழ்வாரும் அவரது வளர்ப்புப் புதல்வி ஆண்டாளும் அப்பன்னிருவர் குழுவில் அடங்கியுள்ளனர். இவ்விருவர் இசைப் பாட்டுக்கள் மிக்க மேன்மை உடையன. திருமழிசை ஆழ்வார், முதலாம் மகேந்திரவர்ம பல்லவ மன்னர் காலத்தில் வாழ்ந்தவர். **நான்முகன் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம்** என்னும் இரு சிறு நூல்களும் அவர் செய்தவை. சமணத்தையும் பௌத்தத்தையும் இழித்து, வைணவத்தை உயர்த்துதலே அந்நூல்களை இயற்றியதன் நோக்கம்.

**பதினெண்கீழ்க்கணக்கு** நூல்கள் இக்காலத்தே தோன்றியிருத்தல் வேண்டுமென்பது சிலர் கருத்து. பதினெண் நூல்களில் பல நூல்கள் இக்காலம் தோன்றி யிருக்கலாம். புகழ்பெற்ற **திருக்குறள்** அத்தொகையிற் சேர்ந்திருப்பினும் அது சங்க காலத்திற்குரியதென்று காணப்படுகிறது. **திருக்குறள்** மக்களுக்கு உறுதி பயக்கும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளையும், முப்பாலில் அடக்கிக் கூறுவது. **நாலடியார்,** சமணப் புலவர் பலர் இயற்றிய நானூறு நீதிச் செய்யுட்களை ஒருங்கே தொகுத்த தொகை நூல். அது திருக்குறளுக்கு அடுத்த நிலையில் நன்கு மதிப்பு உடையது. **பழமொழி** என்பது, ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பழமொழியைக் கொண்ட நானூறு செய்யுட்களால் ஆயது. அப்பழ மொழிகள் அக்காலத்திலேயே பண்டைப் பழமொழிகள் எனப் பழைமை பாராட்டப்பெற்றுள்ளன. **ஆசாரக் கோவை** என்பது உண்ணல், பருகல், உடுத்தல், உரை யாடல், உறங்குதல், எழுதல், நீராடல் முதலாய அன்றாடச் செயல்களில் மக்கள் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய நல்லொழுக்கங்களை நூறு செய்யுளால் அறிவுறுத்துவது.

''சுருங்கச் சொல்லலும், விளங்க வைத்தலும்'' இப்பதினெண் நூல்களின் சிறப்பியல்பு ஆகும். இக்காலப் பகுதியின் இறுதியில், நந்திக் கலம்பகம் என்னும் பனுவல் தோன்றியது. அது எண்பது செய்யுளால், மூன்றும் நந்திவர்ம பல்லவ மன்னனின் பண்பு நலம், செயல் ஆகியவற்றை நவில்கின்றது. அம்மன்னனது அரசவைப் புலவர், பெருந்தேவனார் என்பார், மகாபாரதத்தை தமிழில் பாரத வெண்பா என்னும் பெயரால் மொழிபெயர்த்துள்ளார்.

**கன்னட இலக்கியம் :** கன்னட இலக்கியம் நெடுங் காலத்திற்குப் பின்பு வளர்ச்சி அடைந்ததெனவே கூறப் படுகின்றது. ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த அமோக வர்ஷர் இயற்றிய கவிராஜமார்க்கம் என்னும் நூலே முதன் முதற் செய்யப்பெற்ற நூல். எனினும், நெடுங்காலம் நடைபெற்ற இலக்கிய முயற்சியின் பயனாகவே இந்த யாப் பிலக்கண நூல் தோன்றியிருத்தல் வேண்டும். கவிராஜ மார்க்கம் தானும், கன்னடத்தில் முதன் முதல் நூல்கள் தோன்றியது கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிற்கும் ஒன்பதாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலமே எனக் காண்பித் துள்ளது. கவிராஜமார்க்கத்தில் சிறந்த உரைநடை எழுத் தாளர் என்று குறிப்பிடப்பட்ட துர்வினீதர், ஆறுவது நூற் றாண்டில் வாழ்ந்த அப்பெயருடைய கங்க மன்னராயிருந் திருக்கலாம். ஆகவே, எட்டாம் நூற்றாண்டிற்கு முன் மே இலக்கிய ஈடுபாடு இருந்து வந்தது என்று தோன்று கின்றது. அக்காலத்தில் பூர்வத ஹளே என்ற பழங் கன்னடம் வழங்கியதுபோலும். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிற் பொறித்த சிக்மகளூர் சாசனமும், அதற்குச் சற்று முற்பட்ட சிராவண பெல்கோளாக் கல்வெட்டும், கன்னடம் முன்னமே பழைய முறையில் வழங்கி வந்திருப்பினும்,

ஏறக்குறைய கி.பி. நான்காம் நூற்றுண்டு முதல் தெளி வான இலக்கிய நிறைவின் வடிவம் எடுத்துள்ளது என்று காண்பிக்கின்றன. அதன் எழுத்து வடிவம் தமிழ்க் கிரந்த எழுத்தின் வடிவத்தை ஒத்துள்ளது. அதன் இலக்கண அமைப்பு முற்றிலும் தமிழ் இலக்கண அமைப்புப் போன்றுள்ளதே. ஆயினும், அம்மொழியின் பிற்கால வளர்ச்சியில் சம்ஸ்கிருதச் செல்வாக்கு சாலவும் மிகுந் துள்ளது. இச்செல்வாக்கு முதன் முதல் சமணர் வழி யாகப் புகுந்தது. கன்னட மொழியின் ஆரம்ப கால இலக்கியத்தைப் பெரும்பாலும் வளர்த்தவர் சமணரே. அவரில் தும்புளூராசாரியர், சியாமகுந்தாசாரியர் என்னும் இருவரும் கன்னட எழுத்தாளர் அனைவரினும் முந்தியவர். ஒத்த ஆராதன என்னும் உரைநடைநூலை எழுதியவர் சிவ கோட்டியாசாரியரென்ற சமணரே. எஞ்சியிருக்கும் பழைய கன்னட நூல்களில் இதுவே மிகப் பழமையானது எனக் கருதப்பட்டுள்ளது. எனினும் அதன் காலம் வரை யறுக்கப்பெற்றிலது.

ஆதலின், தற்காலக் கன்னட மொழி இலக்கிய வர லாற்றின் நுட்பமான காலத் தொடக்கம், அமோக வர்ஷர் யாப்பிலக்கண நூலாகிய கவிராஜமார்க்கம் இயற்றிய காலத்தைச் சார்ந்தது. அவர் நல்ல செய்யுளைத் தேர்ந் தெடுப்பதற்கு வழி வகுத்துள்ளார். அவர் கலப்பற்ற தனி மொழிப் பற்றுடையவராய் இருந்தமையால் பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்கிக் கையாளுதலைத் தடை செய் தார். ஒன்பதாம் நூற்றுண்டில் கன்னட ஆரம்ப எழுத் தாளராய் விளங்கிய மற்றொருவர் முதலாம் குணவர்மர். அவர் ஹரிவம்சம், சூத்ரகா என்னும் நூல்களை இயற்றினர்.

தெலுங்கு இலக்கியம்.—ஆதியில் தெலுங்கு மொழி பேசிய மக்கள் கன்னட நாட்டு மக்களைப்போலவே தமிழுக்கு

இனமாகிய திராவிடக் குழுவைச் சேர்ந்தவராய் இருத்தல் வேண்டும். குமரில கூறியதே போல், தெலுங்கு நெடுங் காலத்திற்கு முன்னரே ஆந்திர திராவிட பாஷையாக இருந்தது. பௌத்தரும் சமணரும் வந்த காலத்தில் பிராகிருத மொழி ஆந்திர நாட்டில் புகுந்தது. பிராகிருத மொழியின் வடிவம் பைசாசி எனப் பெயர்பெற்று வழக்கில் உலாவியது. பிற்காலத்தில் சம்ஸ்கிருதம் நுழைந்த பொழுது தற்காலத் தெலுங்கு வடிவம் பெற்று வளர்ந் தோங்கியது.

கி. பி. ஐந்தாம் நூற்றுண்டு கல்வெட்டுக்கள், தெலுங்கு மொழி அக்காலத்திற்கு முற்படாவிடினும், அக்காலத்திலே தான் தெளிவான தன்மை பெற்றுள்ளது என நிலைநாட்டு கின்றன. கன்னடத்திற்கும் தெலுங்கிற்கும் பல பண்புகள் பொதுவாயுள்ளன. இவ்விரு மொழிகட்கும் சம்ஸ்கிருதத் துடனும் தமிழுடனும் உள்ள உறவு தெளிவாய்க் கண்டு பிடிக்கக்கூடியது. தெலுங்கில் யாப்பிலக்கண நூலாக ஆதியில் தோன்றியதும், இக்காலம் வரை நிலைபெற்றிருப் பதும், இரண்டாம் மாதவ வர்மா என்னும் விஷ்ணுகுந்த மன்னர் (சு. கி. பி. 580-620) இயற்றியுள்ளதும் ஆகிய ஜனாச்ரய சந்தஸ் ஆகும். இப்பனுவலில் தெலுங்கு மொழிக்கே உரிய இலக்கிய மரபுத் தொடர்களும் யாப்புறுப்பு வகைகளும் கலந்திருப்பினும் அது உள்ளவாறு சம்ஸ்கிருத மொழியில் வரையப்பெற்றதே ஆகும். ஆயின், நெடுங்காலத்திற்கு முன்பு இருந்தே நாடோடிய எழுத்து வழக்கற்ற இலக்கியத் தொகுதிகள் தெலுங்கு மொழியில் இருந்துள்ளன. நன்னையரது மகாபாரத மொழிபெயர்ப்புத் தோன்றிய பதினொன்றும் நூற்றுண்டில் தெலுங்கு இலக் கியத்தின் உயர் நிலை நிலவிய காலம் தொடங்கியதெனலாம்.

நுண்கலை :—இக்காலப் பகுதியில் தென்னாட்டில் பல திருக்கோவில்கள் தோன்றின. கற்கட்டடக் கலை முன்னமே தக்காண நாட்டில் பௌத்தர்களால் தொடங்கப்பெற்றது. அவர்கள் சைத்தியம் அல்லது தளி, விஹாரம் அல்லது பள்ளி என்னும் இருவகைக் கட்டடங்களில் கருத்தைத் செலுத்தினர். ஏறக்குறைய ஐந்தாம் நூற்றாண்டு முதல் இவ்வகையான சிற்பக் கலைகளில் மேன்மேலும் ஊக்கம் பிறந்தது. வட தக்காணத்தைச் சார்ந்த அஜந்தா, எல்லோரா, அவுரங்கபாத், மத்திய பாரதத்தில் பாக் போன்ற இடங்களிலெல்லாம் சைத்தியங்களும் விகாரங் களும் மேன்மேலும் சிற்பக் கலைகளில் சிறந்து வளர்ந்தன. பௌத்த சமயத்தின் மகாயானக் கொள்கையினது செல்வாக்கினால் கற்குகைகளை வெறுமையாய் வைப்பதை விட்டுப் புத்தர் உருவச் சிலைகளை அவற்றில் அமைக்கத் தொடங்கினர். அஜந்தாக் குகைகள் இருபத்தெட்டில் இருபத்துமூன்று குகைகள் கி. பி. நான்காம் நூற்றாண்டிற் கும் ஏழாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றியவையாம்.

பதினாறும், பதினேழாம் குகைகள் முன்னர்க் கண்ட வண்ணம், கி. பி. ஆறும் நூற்றாண்டில் வாழ்ந்த வாகாடக மன்னரின் அலுவலாளரது நன்கொடைகளால் குடையப் பட்டன. அங்குள்ள சுவர் ஓவியமும் மண்டப ஓவியமும் உலகப் புகழ் பெற்றுள்ளன. அருந்திறல் மிக்க ஓவியமும், அழகு ஒளிர்கின்ற நிறங்களும், மாட்சிமை சிறந்த காட்சிக் கருத்துக்களை மனத்தை மயக்கும் விதத்தில் அமைந்துள் ளன. அஜந்தா ஓவிய முறையானது, ஆறும் நூற்றாண்டில் பாகிலும் வாதாபியிலும் பணி செய்த ஓவியர் மீது செல்வாக் குப் பெற்றது. அவ்விரண்டு இடங்களிலும் செய்துள்ள அரிய வேலைப்பாடுகளை ஏழாம் நூற்றாண்டில் அமைத்த

சித்தண்ணவாயில் சமணப் பள்ளியிலும் காஞ்சிக் கைலாய நாதர் திருக்கோவிலிலும் காண்கின்றோம். பாகிலுள்ள ஓவியக் கலைத் தொடர்கள் எட்டுக் குகைகளில் அடங்கி யுள்ளன. அவை கி. பி. ஆறும் நூற்றாண்டில் வரையப் பெற்றவை. சித்தண்ணவாயில் சமணக் குகை ஓவியங் களில் நாட்டிய வகைகள் எடுத்துக்காட்டப் பெற்றுள்ளன. அங்கு முதலாம் மகேந்திரவர்மர், அவரது அரசி, இவர்கள் வடிவங்களும் அடங்கியுள்ளன. நடு இந்தியாவிலுள்ள பாக், தெற்கிலுள்ள காஞ்சிபுரம், சித்தண்ணவாயில், இலங்கையி லுள்ள சிகிரியா ஆகிய இடங்களில் தோன்றிய ஓவியங்கள், அஜந்தாவிலுள்ளவைகளினும் மிக்க வேறுபாடு உடையன அல்ல. மிகச் சிறிய அவ்வேறுபாடு சிறந்த தனிப்பொருட் களின் சேர்க்கை விளைவு.

அவுரங்கபாத்திற்கு அண்மையில் கற்பாறைகளில் எடுத்த குகைகள் பன்னிரண்டு ஆகும். இவை பல வகைப் பட்டவை. இவற்றில் ஒன்று மட்டுமே 'சைத்தியம்'; மற்றவை 'விகாரங்கள்'. சைத்தியக் குகையின் அமைப்பு முறையினால், அது கி. பி. இரண்டாவது அல்லது மூன்றாவது நூற்றாண்டிற்கு உரியது என்று தோன்றுகின்றது. விகாரங் கள் ஏழாம் நூற்றாண்டிற்குரியவை எனத் திட்டப்படுத்தியுள் ளனர். நிர்மாணத் திட்டமும் அலங்காரக் கோலங்களும் அஜந்தாக் குகைகளையே ஒத்துள்ளன. ஆயின், தலைமைக் குறிப்புக்களை உற்று நோக்கிப் படியெடுத்திருப்பினும், அவை செயலற்றும் உயிரற்றும் நிற்கின்றன. எண் மூன்று பெற்ற குகையில் காணும் மாபெரும் புத்த உருவச் சிலையின் முன், முழந்தாளில் நிற்கும் வண்ணம் அமைத்துள்ள சிறு சிலைகள், சிறந்த தனித் தன்மையும் பண்புடைமையும் கொண்டு தோன்றுகின்றன. ஆகவே, அவுரங்கபாத்து

ஓவியங்களின் வேலைப்பாடுகள் பெரிதும் வியத்தற்குரியன என மதிக்கப்பெற்றிருத்தல் நியாயமேயாம், இயற்கைத் தன்மையும் அழகும் ஒருங்கே வாய்ந்த உருவ அமைப்புக்கள் நுண்கலையின் மேம்பாட்டைக் காண்பிக்கின்றன.

எல்லோராவில் பௌத்தம், பிராமணம், சமணம் ஆகிய மூன்று மதங்களைச் சார்ந்த குகைகளையும் காண்கின்றோம். அவற்றுள் பெரும்பாலன கி. பி. ஆறும் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றியவை. கற்பாறைகளைக் குடைந்து எடுத்த பிராமண சமயச் சிற்பங்கள் பதினாறில், காஞ்சிக் கைலாயர் திருக்கோவிலின் முறையில் அமைக்கப் பெற்ற கைலாய ஆலயமே அவை அனைத்திலும் மிகப் பெருஞ்சிறப்புடையது. ஒப்பு நோக்குங்கால், மொத்தத் தொகையில் சமணக் குகைகள் மிகச் சிலவேயாம். வாதாபியில் ஒன்றும், அயிஹொளெயில் மற்றொன்றும், ஏழாம் நூற்றாண்டின் நடுவில் எடுக்கப்பெற்றன எனத் தோன்றுகின்றது. எல்லோராவில் காணும் குகைகளே எல்லாவற்றிலும் நிகரற்ற சிறப்புடையவை எனினும், அவை கி. பி. எட்டாம் நூற்றாண்டிற்கு முன்னே தோன்றியவையல்ல. அமைப்பிலும் அழகிலும் அவை முற்கால பௌத்தக் குகைகளுக்கும் பிராமணக் குகைகளுக்கும் வேறுபட்டவையல்ல.

ஆதிச் சாளுக்கிய மரபின் இருக்கை ஆகிய வாதாபியில் கல்லில் குடைந்தெடுத்த பிராமண சமயத் தளிகள் தோன்றியுள்ளன. பாறைகளைக் குடைந்தும் உருப்படுத்தியும் எடுத்த பெருந்தொகையான தளிகள் வாதாபியில் உள்ளன. சிற்ப அமைப்பு நுட்ப வேலைத்திறனில் அவை தனிச் சிறப்பு உடையன. அவற்றில் அமைப்பு முறையில் ஒன்றற்கொன்று இனமாகிய மூன்று தளிகள்

பிராமண சமயத்திற்குரியன. வைணவக் கருத்துப் புலப்படுமாறு அமைந்துள்ள மூன்றும் தளியில், கி. பி. 578-ஆம் ஆண்டிற்குச் சமமாகிய 500-ஆம் சக ஆண்டுக் கல்வெட்டு ஒன்று அடங்கியுள்ளமையால், அது சிறப்புப் பெற்றுளது. மூன்று குகைகளின் உட்புறத்திலும் பலவகை அமைப்பிற் சிறந்த தூண்களும், சிற்பத்தொழில் மாண்பும், வளைவுகளும், அவற்றின் பக்கங்களில் எல்லாம் தோன்றி இலங்கும் காரணத்தால் அவை வியத்தற்குரிய சிற்பச் செல்வம் நிறைந்தவையாயுள்ளன.

ஏழாம் நூற்றாண்டு, சாளுக்கியச் சிற்பக் கலை வளர்ச்சியில் குறிப்பிடத் தக்க காலம். அதற்குப் பின்பு கட்டடக் கோவில்கள் சமைத்தல் அக்கால வழக்கு முறை ஆயிற்று. அத்தகைய ஆலயங்கள் பத்து, வாதாபிக்கு அடுத்த பட்டதகலில் உள்ளன. அவற்றில் ஆறு, தென்னாட்டு அமைப்பு முறையை மிகவும் ஒத்திருக்கின்றன. இரண்டாம் விக்கிரமாதித்திய சாளுக்கிய அரசர் எடுப்பித்த விருபாட்சர் திருக்கோவில், காஞ்சிக் கைலாயநாதர் திருக்கோவில் மாதிரியைப் பின்பற்றியதாகும். அது தென்னாட்டிலிருந்து சென்ற சிற்பிகளின் வேலைத்திறன் போலும். திருக்கோவில் அடிப்படை, மண்டபங்கள், கல்லில் துளையிட்டு இயற்றிய பலகணிகள், சுற்றி நடக்கும் இடைவழி, கும்ப முடிவுரை, உட்புறம் நாற்கோணமாக எழும்பும் சிகரம், வெளிச் சுவர்களில் சாந்துப் பூச்சு வகுத்து அமைத்துள்ள அழகிய ஓவியம், தீர்ந்த மாடக் குழிகள், சிற்பக் கலை, அணிவகுப்பு முதலியன எல்லாம் தென் நாட்டு முறையில் அமைந்தனவேயாம்.

தென் நாட்டில் கற்கட்டடம் சாளுக்கியர் காலத்தில் தொடங்கியது. கற்பாறைகளைக் குடைந்து எடுக்கும்

பல்லவக் குகைகள் தக்காண நாட்டில் ஆதியில் தோன்றிய மாதிரியின்படி அமைந்தவை. மஹாபலிபுரத்திலே அன்றித் தமிழ் நாட்டில் அவற்றைக் காண்டல் அரிது. தமிழ் நாட்டில் அவற்றைத் தோற்றுவித்தவர் முதலாம் மகேந்திர வர்மர். அவை மிகப் பழங்கால மாதிரியில் அமைந்துள்ளன. கற்பாறைகளைக் குடைந்து தளி எடுக்கும் முறையை அவை காண்பிக்கின்றன. அம்முறையை அக் காலத்தில் இந்நாட்டுச் சிற்பிகள் அறியார். அம்முறை பிற்காலத்தில் முதலாம் நரசிம்ம வர்ம பல்லவ மன்னரால் வளர்க்கப்பெற்றது. அவர் தம் நகரத்தில் அத்தகைய மண்டபங்கள், இரதங்கள் முதலான சிற்ப நுண்கலைகளை மிகுதியாக நிரப்பி வைத்தார். ஆதியில் அருச்சுனன் தவ நிலை என்று அறியப்பெற்ற அழகு சிறந்த பெரிய உருவச் சிற்பம், சிற்பக் கலையின் மணிமுடி எனவும், சுவரில் ஓவியம் தீட்டல் போல், கல்லில் வியத்தற்குரிய மிக்க நுண்மையும் உண்மை உணர்ச்சியும் வெளிப்படுமாறு தீர்த்துள்ள சிற்ப கருவூலம் எனவும், கலைஞர் அனைவரும் கொண்டாடும் பெருஞ்சிறப்புப் பெற்றுள்ளது. ஆயின், அஃது அருச்சுனன் தவநிலை அன்று எனத் தோன்றுகின்றது; பகீரதர் தவநிலை எனக் கருதுவதே பொருத்தமாயிருக்கும். அவர் ஆகாயக் கங்கையைப் பெறுதற் பொருட்டுத் தவஞ் செய்ததைத் சித்திரித்துள்ளது.

எவ்வாற்றானும், முதலாம் நரசிம்ம வர்மர் தொடங்கிய சிற்பக் கலை முறை, பிற்காலத்தில் பெருஞ்செல்வாக்குப் பெற்றது. பாறையைக் குடைந்தெடுக்கப்பட்டவை தவிர கல்லால் கட்டப்பட்ட கோவில்கள் பல தோன்றின. பல்லவர் கோவில்களை, அவற்றின் கலை முறையை ஒட்டி, இரண்டு இனங்களாக வகுக்கலாம். முந்திய கோவில்

களின் கட்டடக் கலை முறை இராசசிம்மர் பெயரால் வழங்கப்படுகின்றது. மற்றவை அபராஜிதர் பெயரை அடிப்படையாக்கி வழங்கப்பெற்றுள்ளன. மஹாபலிபுரம் கடற்கரைத் திருக்கோவிலும், காஞ்சிக் கைலாய நாதர், வைகுந்தப்பெருமாள் திருக்கோவில்களும், இராச சிம்மர் சிற்ப முறைக்கு முதன்மையான எடுத்துக் காட்டுக்கள். காஞ்சி முக்தீஸ்வரர், மதங்கேஸ்வரர் திருக்கோவில்களும், திருத்தணிகை வீரட்டானேஸ்வரர் திருக்கோவிலும், அபராஜிதர் சிற்ப முறையைச் சார்ந்தவை. அபராஜிதர் சிற்ப முறை அமைந்த திருக்கோவில்கள் வடிவில் சிறியன. எவ்வகையிலும், இராசசிம்மர் சிற்பமுறை அமைந்த திருக் கோவில்களைப் பார்க்கிலும் சிறந்தவையல்ல. பல்லவர் ஆதிக்கம் வலி குறைந்த நிலையை அவை தெளிவாய்க் காண்பிக்கின்றன. பல்லவர் தென் இந்தியாவில் கற்சிற்பக் கலையைத் தொடங்கி வைத்த தொண்டு சாலவும் பெரிது. அவர்கள் முதன் முதல் கற்பாறையைக் குடைந்து தளி எடுக்கும் முறையைத் தமிழ் நாட்டில் அமைத்தனர். மேலும், பிற்காலத்தில் தென் இந்தியாவில் மட்டுமே அன்றி, தொலை கிழக்கிலுள்ள இந்தியக் குடியேற்ற நாடு களிலும் ஆலயக் கட்டடம் சமைக்கும் நன்முறைக்கு அவர்கள் வழி காட்டியுள்ளார்.

## இயல் ஏழு

# இந்து சமயப் புத்துயிர்ப்பு

கி. பி. ஆரும் நூற்ருண்டிற்கும் ஒன்பதாம் நூற்ருண்டிற்கும் இடையில், தென்னிந்தியாவிலுள்ள பல்வேறு அரசுகளும் தத்தம் வருங்கால வாழ்வை உருப்படுத்திக்கொண்டிருந்த அதே வேளையில் தமிழ் நாட்டில் சமயப் புத்துணர்ச்சி பொங்கி எழுந்தது. இந்து சமயம், பௌத்தம், சமணம் என்ற மும்மதங்களும், கிருத்துவ ஊழியின் முந்திய நூற்ருண்டுகளில் தமக்குள் யாதொரு பகைமையும் இன்றி அடுத்தடுத்துத் தழைத்தோங்கிக்கொண்டிருந்தன. கி. பி. ஏழாம் நூற்ருண்டில் புத்தமதம் ஆந்திர நாட்டிலும் கேரள வளாகத்திலும் நிலை குலைந்தது. என்ருலும், பௌத்தப் பள்ளிகளும் மடங்களும் இந்த வட்டாரங்களின் பல பகுதிகளில் தொடர்ந்து இருந்து வந்தன. தமிழகத்திலும் அப்பொழுது இதன் செல்வாக்கு ஒரு வகையாக நல்ல நிலைமையில் இருந்தது. சமண சமயமோ, தமிழ் நாட்டில் மாத்திரமன்றி, தக்காணத்தின் பல பகுதிகளிலும் இன்னும் வலுக்கொண்டிருந்தது. மேலைய கங்கர்களும், பல்வேறு சாளுக்கிய மன்னர்களும் சமண சமயத்தைத் தொடர்ந்து ஆதரித்து வந்தனர்.

ஆரும் நூற்ருண்டு இறுதியில், தென்னிந்திய வைதீக இந்துக்கள், நாட்டிலுள்ள வேறு இரு சமயங்களுக்கிடையில் தங்களுடைய நிலைமையைக் கண்டு அச்சங்கொண்டனர்

எனத் தோன்றுகின்றது. இந்த அவநம்பிக்கை ஏழாம் நூற்றுண்டு துவக்கத்திலிருந்து சமயப் பற்றின் வளர்ச்சிக்கு வழிகோலியது.[1] அவ்வளர்ச்சியே பக்தி இயக்கத்தைப் படைத்தது. இது ஏறத்தாழ ஒன்பதாம் நூற்றுண்டு இறுதிவரை நாட்டில் தலைதூக்கி நின்றது. அதன் பின்னரும், இடை இடையே அதன் பயன் எங்கும் நிலவியது.

இந்தச் சமயப் பற்றுகிய அலை, சன்னல் பின்னலான சடங்குகளுக்கும் ஈடாக, உண்மையான பக்தியையே பெரிதும் வற்புறுத்தியது. அந்தந்த வகுப்பைச் சார்ந்த இந்துக்கள், சிவன், திருமால், இருவர் மீதே தங்களுடைய முழுப்பக்தியையும் ஆர்வத்தையும் செலுத்தினர்கள். அருவாய பொருளுக்கு ஈடாக உருவாய பொருள் வந்தது. கால உணர்ச்சி கனல்கொண்டு எழுந்தது. புனிதரும் அடியாரும் புடைத்தெழுந்தனர். புண்ணிய தலங்களுக்குப் போயினர். திருக்கோவில் சென்று கண்டனர். தித்திக்கும் எளிய இனிய தெய்வப் பாடல்களைப் பாடினர். இரக்கம் பொருந்திய கடவுள்; அருள் வடிவமான ஆண்டவன்; துன்ப துயரங்களில் மக்களை ஈடேற்றும் மாண்புடையோன்; இத்தகைய ஈசன்பால் காதல் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

சமயச் சொற்போர்களும் கிளைக்கலாயின. இந்தப் பக்தி இயக்கமானது சைவ வைணவ சமயத்தின்பால் ஒரே

1. தென்னிந்தியாவிலுள்ள இந்தப் புத்துயிர்ப்பிற்கு இஸ்லாமியக் கொள்கைகளோ, கிருத்துவக் கருத்துக்களோ மூல காரணமாயிருக்கலாமெனச் சிலர் கூறியிருப்பது பொருத்தமெனப் படவில்லை. ஒருவேளை, பௌத்த மதமும் சமண சமயமும் அற ஒழுக்கங்களையே அழுத்தமாக வற்புறுத்தியதின் பயனுக வெறுப்படைந்த மக்களிடையே ஒரு தனிப்பட்ட கடவுள்பால் பக்தி கொள்ளும் சார்பு பிறந்தது போலும்.

காலத்தில் ஒருங்கே தலைதூக்கியது. அவற்றுள் முதலில் சைவ நெறியில் தோன்றிய இயக்கத்தைப் பற்றி ஆராய் வோம்.

நாயன்மார்கள் என்றழைக்கப்படும் சிவனடியார் அறுபத்துமூவர் இருந்தனரென்று அறிகிறோம். அவர்கள் பல்வேறு குலப் பிரிவுகளிலே தோன்றினரென்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. பொங்கியெழுந்த புதிய இயக்கமானது சமூகத்தின் எல்லாப் பிரிவுகளிலும் பொதுவாகப் பரவியிருந் தது. ஆகவே, சிவனடியார் திருக்கூட்டத்திலே, பார்ப்பன ரும் பார்த்திபரும், வணிகரும் வலைஞரும், உழவரும் குயவ ரும், இடையரும் வேடரும் இன்னும் பல தீண்டப்படாத வகுப்பினரும் திகழ்ந்து விளங்கினர். இழிகுலத்தைச் சார்ந்த நந்தன் என்ற அடியாரின் வாழ்க்கை வரலாறு இதற்கோர் எடுத்துக் காட்டாகும். மாபெரும் இன்னல்கள் மலை போல் எழுந்து எதிர்த்தபோதும், அன்னார் சிதம்பரம் சென்று சிவபெருமானைத் தொழவேண்டுமென்ற தமது திண்ணமான எண்ணத்தை உறுதியுடன் நிறைவேற்றி இறுதியில் ஈடேற்றம் பெற்றார். இந்த மெய்யடியாரது வாழ்க்கை வரலாறுகளும், அவர்கள் இயற்றிய வெவ்வேறு வகையான திருப்பணிகளும் திருத்தொண்டர்புராணம் என் னும் பெரிய புராணத்திலே விரிவாகக் கூறப்பெற்றுள்ளன.

## திருஞானசம்பந்தர்

சிவனடியார் அறுபத்து மூவரில் சமய குரவர் என மதிக்கப்பெற்றவர் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, மாணிக்கவாசகர் என்பார் நால்வரே. அவ ருள் திருஞானசம்பந்தர் சீர்காழியில் அந்தணர் குடியில் தோன்றினார். மூன்றாண்டு முற்றுப்பெறாத இளங்குழவியா

யிருக்கும்போது ஒரு நாள் உலகன்னை ஆகிய மலைமகளார் அவருக்குத் திருக்காட்சி அளித்து அறிவுப் பால் ஊட்டினாரென்பர். குழந்தை அருளொளியடைந்தது கண்டு இன்புற்ற தந்தையார், அதனைத் தூக்கித் தோள் மேல் வைத்துத் திருக்கோவில் முதல் திருவகம் வரை சுமந்து சென்றார். பின்பு, சென்றவிடமெல்லாம் சம்பந்தர் தேன் போல் தித்திக்கும் தேவாரப் பதிகங்கள் என்னும் தெய்வப் பாடல்களைப் பாடிச் சொற்பொழிவு நிகழ்த்தி சைவ சமயத்தைப் பரப்பி வந்தார். பதினாறுண்டுதானும் நிறைவுறாத குறுகிய வாழ்நாளில் பெருகிய பேறு பெற்றுப் பெருவாழ்வு நடத்தினார். தமிழகத்தில் சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருப்பதிகள் எல்லாம் சென்றார். அவர் பாடல் பெற்ற இடங்களிலும் பதிகளிலும் எல்லாம் பக்தி வெள்ளம் கரை புரண்டோடியது. திருஞானசம்பந்தர் பதினாயிரம் பாடல்கள் இயற்றினார் என்பர். இக்காலத்தில் நமக்குக் கிடைப்பன முந்நூற்று எண்பத்து நான்கே. அவர் சைவ சமயத்தை எங்கும் பரப்பி வந்த காலத்தில், அப்போது பாண்டி நாட்டை ஆண்ட கூன்பாண்டியரது கோப்பெருந்தேவி மங்கையர்க்கரசியாரும், அமைச்சர் குலச்சிறையாரும் அவரைத் தம் நாட்டிற்கு வருமாறு வருந்தி அழைத்தனர். அக்காலம் சமண சமயம் பாண்டி நாடு முழுவதும் பரவியிருந்தது. தெளிந்த உள்ளமுடைய தென்னவர் கோனும் அதில் ஈடுபட்டு மயங்கி நின்றார். சைவ சமயத்தலைவர்களும் சமணக் குருக்களும் சந்தித்தனர் ; சொற்போர் நிகழ்த்தினர். பின்னர், சமணர் அவரை வெல்லுமாறு நியமித்த மந்திர வாதம், அனல் வாதம், புனல் வாதம் மூன்றிலும் அவரே வென்றார். வியத்தற்குரிய இத்தகைய விழுமிய செயல்களால் சமணர்

தோற்றனர். அக்காலம் சம்பந்தர் செய்துள்ள புதுமைகளை இக்கால விஞ்ஞானிகள் ஏற்றுக்கொள்ளார். அவை எல்லாம் உயர்வு நவிற்சி எனவும், மிகைபடக் கூறல் எனவும் மாறு படக் கருதுவர். எவ்வாற்றானும், சைவப்புகழ் மீண்டும் சுடர்விட்டு ஒளிர்ந்தது.

திருஞானசம்பந்தர் ஏறத்தாழ ஏழாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்தனர் என அறிகிறோம்.

### திருநாவுக்கரசர்

இவரது மறுபெயர் அப்பர். தென்னாற்காடு மாவட் டத்திலுள்ள திருவாமூரில் வேளாண் குடியில் பிறந்தவர். அன்னை தந்தையர் சைவ சமயப் பற்றும் ஒழுக்கமும் உடையவர். அவர் விரைவில் காலம் சென்றனர். அப் பொழுது சிறுவராயிருந்த நாயனார், சமணர் சிலருடன் பழகி, அந்த மதத்தைச் சார்ந்து, நாளடைவில் அம்மத நூல்களைக் கற்று வல்லவராகித் தருமசேனர் என்ற பெயரும் பெற்றார். ஆனால் அவர் தமக்கையர் திலகவதி அம்மையாரது அரும்பெரும் முயற்சியால் அறநெறியை விட்டு விலகி, மீண்டும் சைவ நெறியை அடைந்தார். சமணராகவிருக்கும்போது கொடிய சூலை நோயினால் உழன்றார். அவரைக் குணமாக்கச் சமணர் செய்த பெரும் முயற்சியெல்லாம் விழலுக்கிறைத்த நீரானது. அவரைத் திரும்பவும் சிவனடியாராக்க அதுவே ஏற்ற காலம் என்று உணர்ந்த திலகவதியார் சிவபெருமானை உளமுருகி வேண்டினார். திருநாவுக்கரசரது பிணி தீர்ந்தது. அவரும் சிவனடியாராக மாறினார். இதைக் கேட்டுச் சினந்தெழுந்த சமணர் அவரை ஒறுக்குமாறு பல்லவ மன்னர், முதல் மகேந்திர வர்மரைத் தூண்டினர். ஆயினும், அவர்

சிவபெருமான் திருவருளால் தமக்கு மன்னரால் வந்த இன்னல்கள் அனைத்தும் நீங்க வெற்றி கண்டார். அவர் பால் கண்ட புதுமைகளை உணர்ந்த மன்னரும் சமண சமயத்தை விட்டு நீங்கிச் சைவரானார். பிறகு, திருநாவுக்கரசர் திருக்கோயிலுக்குச் சென்று, இறைவனைப் புகழ்ந்து பாடி, அவருக்குப் பாடல் தொண்டு செய்து சமயத்தைப் பரப்பி வந்தார். ஒரு நாள், வழியில், தம்மைப் போலவே பாடல் தொண்டு செய்யும் சம்பந்தரைக் காண நேர்ந்தது. சம்பந்தர் தம் உள்ளத்தில் ஊறிப் பெருக்கெடுத்த அன்பினால் அவரை 'அப்பா' என்று அழைத்தார். அன்று முதல் அப்பர் என்பது அவருக்குப் பெயராயிற்று. சில காலம் அடியார் இருவரும் ஒருங்கே பணியாற்றி வந்தனர். அப்பர் தம் 81-ஆம் ஆண்டில் இறைவனடி எய்தினார். அவர் பாடிய 313 தேவாரப் பதிகங்களும் அவரது நிறைந்த சமயப் பற்றையும் முதிர்ந்த அறிவுத் திறனையும் எதிரொலிக்கின்றன.

**சுந்தரமூர்த்தி :** சுந்தரமூர்த்தி நாயனார் தென்னாற்காடு மாவட்டத்தில் ஆதிசைவர் என்னும் அந்தணர் குடியிற் பிறந்தார். ஆதிசைவர் ஆரியர் அல்லர் ; தமிழர். வழி வழியாகத் திருக்கோவில் அர்ச்சகராய் விளங்குவோர். நாளடைவில் ஆரியர் அப்பதவியைக் கைப்பற்றினர். சுந்தரரது திருமணத்திற்கு ஒரு நாள் முன்பு, சிவபெருமான் ஒரு முதிய மறையோர் கோலத்தில் காட்சியளித்து அவரைத் தடுத்து ஆட்கொண்டார் என்பது புராண வரலாறு. அவரது மணவினை தடைபட்டது ; அந்நாள் முதல் சுந்தரர் சிவாலயங்களுக்குச் சென்று சிவபெருமானுக்குப் பாடல் தொண்டு செய்து வந்தார். சேரமான் பெருமாள் நட்பைப் பெற்று, அவரது துணையுடன் தம் அறப்பணியினைச் சிறப்

புடனுற்றினர். இறுதியில் இவர் இருவரும் ஔவையாரும் கைலைமலைக்குச் சென்று கடவுட்காட்சி பெற்று அவருடன் இரண்டறக் கலந்தனர். சுந்தரர் பதினெட்டாண்டு பாரில் வாழ்ந்தார். அவர் இயற்றிய பன்னூறு தேவாரப் பதிகங்களில் ஒரு நூறு பதிகங்களே நமக்குக் கிடைத்துள்ளன. அவற்றிலிருந்து அவர் இறைவனைத் தம் இணையற்ற நண்பராகக் கருதி வாழ்ந்து வந்தாரெனத் தெரிகிறது. தம்பிரான் தோழர் என்பது அவர் சிறப்புப் பெயர்களில் ஒன்று. நாயன்மார் இயற்றிய பாடல்களனைத்தையும் பத்தாம் நூற்றுண்டில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பி என்பவர் ''தேவாரம்'' என்னும் அரும்பெரும் நூலாகத் தொகுத்துள்ளார்.

மற்றெரு வைசப் புனிதர் மாணிக்கவாசகராவார். அவரது காலத்தைப் பற்றிப் பல திறப்பட்ட கருத்துக்கள் பரவியுள்ளன. முடிந்த முடிபொன்றும் கூறுவதற்கில்லை. ஆயினும், சுந்தரமூர்த்தி சிவனடியார்களைக் குறித்துப் பல பாடியுள்ள திருத்தொண்டத் தொகையில் இவரது திருப்பெயர் காணப்படாமையாலும், 9 - ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் ஆண்ட வரகுண பாண்டியனைப் பற்றி நிகழ்காலத்தில் இவர் கூறியுள்ளமையாலும் அம் மன்னர் காலத்தில் வாழ்ந்தாரென்றும், தேவாரம் பாடிய திருமூவருக்குப் பிற்காலத்தே தோன்றியவரென்றும் கூறலாம். மாணிக்கவாசகர் முதன் முதல் பாண்டிய மன்னனின் மாண்புறு அமைச்சராக இலங்கினர். ஆனல், இறைவன் மீது கொண்ட எல்லையற்ற காதல், அரசவையைத் துறந்து மறைப் பணியில் அவரை ஈடுபடுத்தியது. உள்ளத்தை அள்ளும் அவரது திருவாசகப் பாடல்கள் அவருடைய நுண்ணறிவையும், அவர் நுணுகி நுகர்ந்த கருத்துக்களையும்

நிழற்படம் போல் காட்டுகின்றன. 'திருவாசகத்திற் குருகான் ஒரு வாசகத்திற்குமுருகான்' என்ற மூத்தோர் சொல் முற்றிலும் உண்மை. கடவுளின் இணை கழலிலே தன்னை முற்றிலும் கையளித்துவிட வேண்டுமென்ற சைவ சமயக் கொள்கையைத் திருவாசகம் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. மாணிக்கவாசகரின் பாடல்கள் இப்பொரு ளுணர்த்தும் பாக்களாக அமைந்த போதும், அவை யனைத்தும் அனைவரும் ஆண்டவனிடம் காட்டவேண்டிய தன்னலமற்ற பேரன்பின் பெருமையையே உணர்த்து கின்றன. நடராசர்தம் நற்சிறப்பை நன்கு விளக்கும் திருச்சிற்றம்பலக் கோவையும் இவர் இயற்றியருளியதே. இலங்கையைச் சார்ந்த பௌத்த சமயத்தவர் சிலர் சிதம்பரத்தில் வாழ்ந்தனரென்றும், மாணிக்கவாசகர் அன்னாருடன் சொற்போர் நிகழ்த்திப் பெரும் வெற்றி கண்டாரென்றும் தெரிகிறது.

பக்தி இயக்கத்தைச் சைவ சமயத்தில் பெரும்பாலும் தோற்றுவித்த இந்நால்வரின் நற்கருத்துக்களே தென் இந்திய இந்துக்களின் உள்ளங்களிலே பல நூறு ஆண்டு களாக வேரூன்றி நிற்கின்றன. நாயன்மார்களைப் பற்றி எழுந்த கதைகளெல்லாம் அடியார்களது கருத்திலுதித்த கற்பனையாக இருக்கலாம். ஆனால், அவற்றையெல்லாம் தமிழகத்து மக்கள் உண்மையெனத் திண்ணமாக எண்ணி வந்தனர். நெஞ்சையள்ளும் அப்பாடல்களைப் பாடி மனப் பக்குவமடைந்தனர். சோழ மன்னர்கள் காலத்தில் அந் நாயன்மார்களைக் கடவுளர்களாகக் கருதி வழிபட்டு வந்தனர். அன்னார் வாழ்க்கையில் நிகழ்ந்த சிறப்பு நிகழ்ச் சிகளைத் திருக்கோவில்களில் இன்றும் திருவிழாக்களாகக் கொண்டாடி வருகின்றனர். மேலும், அவர்கள் திருவாய்

மொழிந்த திருப்பாடல்களை ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட வேளைகளில் கோவில்களில் இன்னிசையுடன் ஓதி வருகின்றனர்.

நாயன்மார்கள் பரப்பிய புத்துயிர்ப்பு அளிக்கும் புதிய கருத்துக்களே பிற்காலத்தில் வாழ்ந்த அடியார்களின் மனத்திலே புத்துணர்ச்சியையும் புதிய கிளர்ச்சியையும் ஊட்டியுள்ளன. 10 - ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் தோன்றிய பட்டினத்துப்பிள்ளையாரின் பாடல்கள் நாயன்மாரின் திருப்பாடல்களைப் போல் மக்களது உள்ளத்தை ஊடுருவி அங்கே நிறைந்து நிலைபெற்றன. அவர் காவிரிப் பூம்பட்டினத்தில் பெருஞ்செல்வர் குடியில் பிறந்தாலும், இளம்பருவத்தில் துறவு நிலை மேற்கொண்டு, திருக்கோவில்கள் பலவற்றிற்கும் சென்று வழிபட்டு, சென்னைக்கு அண்மையிலுள்ள திருவொற்றியூரில் நிலையாகத் தங்கினார். ''கோவில் நான்மணி மாலை'' எனும் நூலிற் காணப்படும் அவரது பாடல்கள், நாயன்மாரது உள்ளச் சுனையிலே சுரந்து பெருக்கெடுத்த பாடல்களைப் போல் தெளிதேன் சுவையுடையன. ஏறக்குறைய 10 - ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமாளிகைத் தேவர், கருவூர்த்தேவர், சேந்தனார், சோழ இளங்கோ சுந்தராதித்தன் போன்ற அறத்தில் தழைத்த அடியார்கள் சிலர், சிவாலயங்களைப் பற்றிப் புகழ்ந்து பாடிய 29 பாக்கள் ''திருவிசைப்பா'' என்ற நூலாக நம்பியாண்டார் நம்பியால் திருமுறையுடன் தொகுக்கப்பெற்றன. பட்டினத்தார் பனுவல்கள் பதினோராந் திருமுறையாக அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. பிற்காலத்தில் தோன்றிய சைவநெறிப் பாடல்களும் பக்தி இயக்கத்தின் எதிரொலிகளேயாகும். 12 - ஆம் நூற்றாண்டில் பெரியபுராணத்தை இயற்றிப் பெரும்புகழ்

பெற்ற சேக்கிழாரும், 15 - ஆம் நூற்றுண்டில் ஆயிரத்து முந்நூற்று அறுபது அரும்பாடல்களால் திருமுருகனைப் போற்றி ''திருப்புகழ்'' தீட்டிய அருணகிரிநாதரும், 17 - ஆம் நூற்றுண்டின் அருட்சுடராய் மிளிர்ந்த தாயுமான வரும், 19 - ஆம் நூற்றுண்டில் வாழ்ந்து திருவருட்பா திருவாய் மலர்ந்த இராமலிங்க அடிகளாரும் பக்தி இயக் கத்தின் விளைவாகப் பிற்காலத்தில் தோன்றிய பெருந் தொண்டர்களென்பது திண்ணம்.

இந்தப் பக்தி இயக்கமானது சைவ சமயக் கொள்கை களில் சிற்சில மாற்றங்களை விளைவித்தது. சைவ நெறியின் அறிவியல்களை எடுத்தோதிய அறிஞர் திருமூலராவர். அவரது காலம் இன்னதென்று ஐயமின்றி அளவிட்டுக் கூறுவதற்கில்லை. கி. பி. ஐந்தாம் அல்லது ஆரும் நூற்றுண்டு என்பார் சிலர். ஒன்பதாம் நூற்றுண்டு என்பாருமுளர். ஆயினும் நாயன்மார் விதைத்த உள்ளக் கிளர்ச்சியின் விளைவே அவரது கொள்கையென்பது தெற்றெனத் தெரிகிறது. மேலும், அவரது நூலாகிய திரு மந்திரத்தைப் பற்றிய குறிப்புகள் முதன் முதலில் 12 - ஆம் நூற்றுண்டில் இயற்றப்பெற்ற பெரியபுராணத்தில் தான் காணப்படுகின்றன. ''திருமந்திர''த்தில் ஆசிரியர் தம் அற வாழ்க்கையில் நுணுகி ஆய்ந்த நுண்கருத்துக்களை மூவாயிரம் மந்திரங்களாக எழுதி, அவற்றின் வாயிலாகச் சைவ நெறியின் உயர்ந்த உண்மைகளை விளக்கி இருக் கிருர். ஆகமங்களை ஆர்வத்துடன் பயின்றவராதலின் அவற்றின் கருத்துக்களையும், வேதங்களின் கொள்கைகளை யும் இணைத்து விரவி, அதிலிருந்து ஒரு பொது நெறியை உருவாக்க முயன்றிருக்கிருர். ஆகவே, ஆகமங்களை அடிப் படையாகக் கொண்ட சைவ சித்தாந்தத்தின் தந்தை என

அவரை அழைக்கலாம். உயிரும் பொருளும் உண்மையாகவே உள்ளனவென்றும், அன்பின் கொடுமுடியே சிவபெருமானென்றும் அவர் உணர்த்தினர். சிந்தைக்கும் செவிக்கும் வாய்க்கும் இனிய இக்கருத்துக்களைப் பின்னர் மெய்கண்டார் தமது 'சிவஞான போத'த்தில் சைவ சித்தாந்தம் என வெளியிட்டார்.

மேலும், தென் இந்தியாவில் சங்கராசாரியார் தோன்றி 'அத்வைத' அறிவியல் கருத்துக்களைப் பரப்பலானர். ஏறக்குறைய கி. பி. 790-இல், வட கேரளத்தில் காலடி யூரிலே நம்பூதிரிக் குலத்தில் பிறந்த சங்கரர், காளைப் பருவத்திலே கடுந்தவத்தை மேற்கொண்டார். நாடு முழுவதும் சுற்றி, தம் அறக் கருத்துக்களைப் பரப்பி, நாட்டின் முக்கிய இடங்களில் நான்கு மடங்களை நிறுவினர். உபநிடதம், பகவத்கீதை, பிரம சூத்திரங்கள் முதலியவற்றிற்கு இவர் எழுதிய விளக்கவுரைகளில், 'அத்வைத' வேதாந்தத்தைப்பற்றி விரித்துரைத்திருக்கிருர். இறைவன் எங்கும் நிறைந்திருக்கும் உயிர்ப்பொருளென்பதும், தனி மனிதனின் உயிர் அம்முதற்பொருளில் இரண்டறக் கலந்துவிடுமென்பதும், இந்நிலையைபடைய அறியாமை அகன்றொழிய வேண்டுமென்பதும் அவரது கருத்துக்களின் பிரிவாகும். இளவயதிலே அவர் இறைவனடி சேர்ந்த போதிலும், காலமெனும் நிலத்திலே தம் காலடிகளை நிலையாகப் பதித்துவிட்டார். இந்திய நாடு முழுவதுமுள்ள இந்துக்களின் அன்புறையும் உள்ளத்தில் அவரது நினைவு என்றும் நிலைத்திருக்கும்.

இந்து சமயத்தில் தோன்றிய இப்புத்துயிர்ப்பின் ஒரு பிரிவே, பன்னிரண்டாம் நூற்ருண்டில் தெலுங்கு நாட்டிலும், கர்நாடகப் பகுதிகளிலும் முளைத்த வீர சைவ நெறிமுறை

யாகும். இலிங்காயத் இயக்கமென அழைக்கப்படும் இதன் ஆதிவரலாறு இன்னும் மழுங்கி மறைந்தே கிடக்கின்றது. கி. பி. 1156-இல் கலியாணிச் சாளுக்கியரின் அரியணை கவர்ந்த களச்சூரி மன்னரின் முதலமைச்சரான பசவர் என்பார் இவ்வியக்கத்தை இயக்கியவர். அவருக்கு முன்பு ஏகாந்தத இராமையா என்பவரே இவ்வியக்கத்தைத் தோற்றுவித்தவரென்றும், பசவர் அதற்குப் புத்துயிரளித்துப் புதுவை கொடுத்தவரென்றும் கருதுவாருமுளர். ஆனல் பசவருக்கும், ஏகாந்தத இராமையாவிற்கும் முற்பட்ட காலத்தில் வாழ்ந்த ஐம்பெருந் துறவிகளின் அரு முயற்சியால் இவ்வியக்கம் பிறந்ததென்று இலிங்காயத்தார் மரபுவழிச் செய்தி உணர்த்துகிறது. சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்று இப்பிரிவினர் கருதுகின்றனர். இவர்களது கொள்கைகள் இருபத்தெட்டுச் சைவ ஆகமங்களை அடிப்படையாகக்கொண்டவை. அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கும் இவர்கள் காட்டும் அன்பு கலந்த வணக்கம் பக்தி இயக்கத்துடன் இவர்கள் கொண்டுள்ள தொடர்பைக் காட்டுகிறது. ஆனல், வீரசைவர்களின் முறையும் போக்கும் பிற மறைப் பிரிவுகளைத் தாக்கும் நோக்குடன் வளர்ந்துள்ளன. இவர்கள் ஆரியரது நான் மறைகளை ஏற்க மறுத்தனர்; குலப் பிரிவினை வெறுத்தனர். எல்லோரும் ஓரினம் என்ற உயரிய நிலை அவர்களிடையே நிலவியது. உள்ளத்தில் சுரந்த பக்தி வெள்ளமானது கன்னட இலக்கியத்தின் வாயிலாகக் கரைபுரண்டோடியது. தெலுங்கு நாட்டிலும் வீரசைவ நெறியின் ஒரு கிளை ஆரத்திய சைவம் எனும் பெயருடன் தழைத்து வளர்ந்தது. இதை ஆங்குத்தோற்றுவித்தவர் பசவர் காலத்தில் வாழ்ந்த பேரறிஞர் மல்லிகார்ச்சுனர்.

## 1. வைணவ நெறி

தென் இந்தியாவில் தழைத்த பக்தி இயக்கமானது சைவ சமயத்தில் ஏற்பட்டது போன்ற ஒரு புத்துணர்ச்சியை வைணவ நெறியிலும் தோற்றுவித்தது இங்குக் குறிப்பிடத்தக்கது. வைணவர்கள் இடையிலும் தூய சிந்தனையாளர் சிலர் தோன்றிப் பண்ணூர்ந்த பாக்களால் மக்களைக் கவர்ந்து, தம் நுண் கருத்துக்களால் மறையின் அறிவியற்கொள்கைகளை வளர்த்தனர்.

இறைவன் இயல்புகளைக் கருத்தூன்றிக் கற்றறிந்த வைணவ ஆழ்வார்கள் பன்னிருவரும், சைவ நாயன்மார்களைப் போலவே தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள பலப்பல இனப் பிரிவுகளிலே பிறந்தவர்கள். கிருத்தவ காலத்திற்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னே ஆழ்வார்கள் தோன்றினரென்பதும், ஒவ்வொருவரும் பன்னெடுங் காலம் வாழ்ந்தனரென்பதும் பழங்காலக் கூற்று. ஆனால், அவர்கள் கி. பி. 500 முதல் 850 வரையுள்ள கால வரம்பினுள் வாழ்ந்தவரென்று இப்பொழுது முடிவாகக் கூற முடியும். அன்னாரை மூன்று பிரிவினராகப் பகுக்கலாம். காஞ்சியில் பிறந்த பொய்கை ஆழ்வாரும், மாமல்லபுரத்தில் பிறந்த பூதத்தாழ்வாரும், மயிலாப்பூரில் பிறந்த பேயாழ்வாரும், திருமழிசையில் பிறந்த திருமழிசையாழ்வாரும் முதற்பிரிவைச் சேர்ந்தவர்கள். இரண்டாவது பிரிவில் நம்மாழ்வார், மதுரகவி ஆழ்வார், குலசேகர ஆழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் என்பாரைக் கூறலாம். சேரர் குடிப்பிறந்த குலசேகராழ்வாரைத் தவிர மற்றவர்கள் பாண்டி நாட்டில் தோன்றியவர்கள். மூன்றுவது பிரிவைச் சேர்ந்த தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார்,

திருமங்கையாழ்வார் என்பார் சோழ நாட்டின் பெருங்குடி மக்களாவர்.

இவ்வாழ்வார்களின் வாழ்க்கை வரலாறுகளையும், அன்னார் பக்தி இயக்கத்தை வளர்த்த முறையையும் சிறிது நோக்குவோம். முதல் மூன்று ஆழ்வார்களைப் பற்றிய பழங்கதை யொன்று உண்டு. திருக்கோவலூரில் அம் மூவரும் ஓரிரவில் ஒன்றுகத் தங்க நேர்ந்தபோது, அங்கே திருமால் தாமே அவர்களுடன் வந்து தங்கியதாகவும், ஆண்டனின் அண்மையில் நெருங்கி நின்றதின் விளைவாக, ஒவ்வொருவரின் உள்ளத்திலும் உவகை வெள்ளம் பெருக் கெடுத்து ஒரு நூறு பாடல்கள் வெளிப்பட்டனவென்றும், அதன் பிறகே அவர்கள் திருவல்லிக்கேணி சென்று திரு மழிசை ஆழ்வாரைப் பார்த்து, பிறகு பிரிந்து, வைணவத் திருப்பதிகளைக் காணச் சென்றனரென்று கதை கூறுகிறது.

பார்ப்பனர் குடிப்பிறந்த திருமழிசை, பிறந்ததும் பெற்றோர்களால் கைவிடப்பட்டதாகவும், திருவளன் என்ற இழிகுலத்தோனல் எடுத்து வளர்க்கப்பட்டதாகவும் அறி கிறோம். அவர் முதலில் சமண, புத்த, சைவ மறை நெறி யெல்லாம் ஆய்ந்து உண்மையை அறிய முற்பட்டா ரென்றும், இறுதியில் வைணவ நெறியே உண்மை நெறி எனத் துணிந்தாரென்றும் கூறப்படுகிறது. அவர் காஞ்சி சென்றபோது, அதை ஆண்ட மகேந்திரவர்மர் என்ற பல்லவ மன்னர் அவரது பெருமையைக் கண்டுணர்ந்து அவரைப் பலவாறு புகழ்ந்தனுப்பினர். பிறகு, அவர் கும்பகோணம் சென்று, அங்கு வாழ்வின் இறுதிக் காலத் தைக் கழித்தார். முதற் பிரிவைச் சேர்ந்த இந்நான்காழ் வார்களும் ஏழாம் நூற்றுண்டின் முதற் பகுதிவரை வாழ்ந்த வர்கள். முதல் மூன்று ஆழ்வார்களின் முந்நூறு பாடல்

களும் நாலாயிரப் பிரபந்தத்தின் மூன்றும் பகுதியாகிய இயற்பாவில் சேர்க்கப்பெற்றுள்ளன. திருச்சந்த விருத்தம், நான்முகன் திருவந்தாதி ஆகிய இவற்றிலுள்ள திருமழிசையாழ்வார் பாடல்கள் பிரபந்தத்தின் முதற் பகுதியிலும், மூன்றும் பகுதியிலும் பொன்னில் நன்னிற மணிகளாய் மின்னுகின்றன. முதல் மூவரின் அருட்பாக்கள் அனைத்தும் இறைவனுடன் கலந்து வாழத் துடிக்கும் எளிய உள்ளங்களின் ஏக்கத்தை நிழற்படம் போல் காட்டுகின்றன. திருமழிசையார் பாடல்கள் ஒரு கடவுட்கொள்கையில் அவருக்குள்ள உறுதியான எண்ணத்தைக் காட்டுவதோடு, கருத்து வேற்றுமைகளைத் தோற்றுவிக்கும் பல எண்ணங்களையும் வெளிப்படுத்துகின்றன.

நம்மாழ்வார் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆழ்வார் திருநகரி என்ற ஊரில் வேளாளர் குலத்தில் பிறந்தவர். அவருக்குக் காரிமாறன், சடகோபன், வகுளாபரணன், பராங்குசன் எனப் பல சிறப்புப் பெயர்கள் உண்டு. பல்லாண்டுகளாக நற்றவத்தில் நிலைத்து ஆழ்ந்திருந்த அவரை, மதுரகவி என்ற அந்தணர் அணுகி, அவருக்குப் பணி செய்து வந்தார். திருமங்கையாழ்வாருக்கு அடுத்தபடியாக நம்மாழ்வாரே பெருந்தொகையான பாடல்களை இயற்றியவர். அவை நாலாயிரப் பிரபந்தத்தின் நான்காம் பகுதியாகிய திருவாய்மொழியில் அமைந்துள்ளன. பிரபந்தத்தின் மூன்றுவது பகுதியிலுள்ள திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி என்பனவும் அவரது பாடல்களே. கடவுள்பால் கரையிறந்த காதலுடைய சமயப் பெரியார்களில் நம்மாழ்வாரும் ஒருவராவர். அருள் ததும்பும் பொருள் பொதிந்த அவர் திருப்பாடல்கள் பல திறப்பட்டவை.

நுண் கருத்துக்கள் நிறைந்தவை. உள்ளத்தை அள்ளும் அப்பாடல்கள் அவருக்கு நிலைத்த புகழைக் கொடுத்து, வைணவ சமயப் பெரியார்களின் வரிசையில் முத லிடத்தைப் பெற்றுத் தந்தன. திருவாய்மொழியைத் திரு வாசகத்துடன் ஒப்பிட்டுக் கூறுவாருமுளர். விஷ்ணு சித்தரென்றும், பட்டர் பிரானென்றும் அழைக்கப்பெற்ற பெரியாழ்வார், ஸ்ரீவில்லிபுத்தூரில் பார்ப்பனர் குலத்தில் பிறந்தார். இளம்பருவத்தில் கோவில் திருப்பணிகளுக் காக நறுமலர்ச் செடிகளை வளர்த்து எவர் கண்ணிற்கும் எளிதிற் புலப்படாத மறைந்த வாழ்க்கை நடத்தி வந்தார். பாண்டிய மன்னர் ஸ்ரீவல்லபர் காலத்தில், அவரது அரசவை யில் நிகழ்ந்த மறைபற்றிய சொற்போரில் திறம்பட உரை யாடிப் பெரும் வெற்றி பெற்றார். இவரது பாடல்கள் ஐந்நூறு திவ்விய பிரபந்தத்தில் இடம் பெற்றுள்ளன. அவற்றில் மிகப் புகழ்பெற்ற அவர் பாடிய திருமொழி, கண்ணபிரான் வாழ்க்கையை விளக்கும் உயர் கற்பனை ஓவியமாகத் திகழ்கிறது. அவரது பாடல்களில் உணர்ச்சி நிறைவையும், கருத்தாழத்தையும் காணலாம்.

பெரியாழ்வாரின் திருமகளான ஆண்டாள் அம்மையார், அக்காலத்தில் திருமாலுக்கு அடிமை பூண்ட மகளிர் பலரில் மிகச் சிறந்தவர். அவர் இயற்றிய திருப்பாவை முதலான திருப்பாடல்கள், தமிழ் நாட்டில் வைணவர் இல்லங்களிலே இன்றும் இன்னிசையுடன் முழங்கப்படுகின்றன. திருப் பாவைக்கடுத்த நிலையில் நாச்சியார் திருமொழியைக் கூற லாம். திருவரங்கத்தில் எழுந்தருளிய அரங்கநாதப் பெரு மானைத் தவிர வேறெவரையும் மணக்க ஆண்டாள் உடன் பட்டிலர். திருவரங்கநாதரும் அப்பெருமாட்டியைத் தம் அரும்பெருந் துணைவியாகக்கொண்டு அன்பு பாராட்டினர்

எனவும், இறுதியில் அம்மையார் இறைவனுடன் இரண்டறக் கலந்துவிட்டார் எனவும் கூறுவர். ஆண்டவன் மீது ஆண்டாளுக்கிருந்த ஆழ்ந்த அன்பைக் காட்டுகிறது அச் செய்தி. கண்ணபிரானை மணப்பதாக அம்மங்கையர்க்கரசி கண்ட கனவை விளக்கும் திருப்பாடல்களை இன்றும் வைணவப் பார்ப்பனர் தம் திருமண விழாக்களில் பாடி மகிழ்கின்றனர்.

குலசேகர ஆழ்வார் தமது பாடல்களில் தம்மைக் கேரள, கொங்கு, பாண்டிய, சோழ நாடுகளின் தலைவரென்று கூறுவதால், பெரும்பாலும் அவர் கேரள நாடு முழுவதையும் ஆண்ட பேரரசராக இருத்தல் வேண்டுமெனத் தெரிகிறது. அவர் அரியணை துறந்து, திருவரங்கம் சென்று, ஆங்கு வதிந்து, அரங்கநாதர் திருக்கோவிலின் சில பகுதிகளைக் கட்டினரென்று கூறப்படுகிறது. அவர் தமிழ் மொழியில் பெருமாள் திருமொழியும் வடமொழியில் முகுந்தமாலை எனும் நூலும் இயற்றியுள்ளார். அவரது தமிழ்ப் பாக்கள் 105, நாலாயிரப் பிரபந்தத்தில் நலமுற மிளிர்கின்றன.

திருப்பாணாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருமங்கை ஆழ்வார் என்பார் மூன்றாவது பிரிவைச் சேர்ந்தவர்கள்; ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர்கள். திருப்பாணாழ்வார் தாழ்ந்த குலத்தில் தோன்றிப் புகழ் பெற்ற சமய குரவராவர். இது சிவனடியாராகிய நந்தனாரின் பிறப்பை நமக்கு நினைப்பூட்டுகிறது. இவரது கனிந்த பக்தியைக் கண்டு அரங்கநாதப் பெருமான் இவரைத் தம் திருத்தோள் மீது வைத்துத் திருக்கோவிலுள் எடுத்துச் செல்லுமாறு உலோகசாரங்க முனிவருக்குக் கட்டளையிட்டார் என்றும், ஆலயத்தினுள்ளே

அடியார் ஆண்டவனோடு இரண்டறக் கலந்துவிட்டார் என்றும் கூறுகின்றனர். பிரபந்தத்தில் அவரியற்றிய பத்துப் பாடல்கள் உள்ளன. விப்ரநாராயணன் என்று அழைக்கப் பட்ட தொண்டரடிப்பொடியாழ்வார், விலைமகளொருத்தியின் வயப்பட்டு இழிந்த நிலையை எய்தியபோது அந்நிலையி லிருந்து அரங்கநாதரால் மயல் நீக்கம்பெற்று மீட்கப் பெற்றார் என அறிகிறோம். அது முதல் அவர் அரங்கநாதர்க்கு விழுமிய தொண்டராக விளங்கினார். வைணவ மறைச் சட்டங்களில் 55 அடிகள் அவர் இயற் றியவை.

ஆழ்வார்களில் புகழ் பெற்றுப் பொலிவுற்றவர்களில் ஒருவராகிய திருமங்கையாழ்வார், எட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்தவர். அவர் சம்பந்தரைச் சீர்காழியில் சந்தித்ததாகக் கூறும் கதை உண்மையானால் அவர் ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்தவரெனலாம். அவர் தஞ்சாவூர் மாவட்டத்தில் கள்ளர் வகுப்பில் பிறந்து கொள்ளை யடிக்கும் கள்வராகவே தம் குலத்தொழிலைச் சிறப்புற நடத்திவந்தார். ஒரு நாள் மணமகனொருவனை வழி மறித்து, அவன் அணிகலன்களைச் சூறையாடுமிடத்து, அவன் அவர் செவியில் ஓதிய மந்திரத்தினால் அவரது வாழ்க்கையில் திருப்பமொன்று நிகழ்ந்தது. ஆறலை கள்வர் ஆண்டவர் அடியாரானார் ; மருள் நெஞ்சினர் அருள் நெஞ்சினராக மாறினார் ; தீய நெறி துறந்து தூய நெறியை மேற்கொண்டார். திருமால் திருக்கோயில்களுக்குச் சென்று, அவற்றைப் பழுது பார்த்து, ஆங்கு எழுந்தருளி யுள்ள கடவுளர்களைப் புகழ்ந்து பாடல் தொண்டு செய்தார். பிரபந்தத்தில் ஏறக்குறைய 1351 செய்யுட்கள் அவர் இயற்றியவை. அதன் இரண்டாம் பகுதியாகிய பெரிய

திருமொழி முழுவதும் அவர் இயற்றியதாகும். அவரது ஏனைய பாடல்கள் வைணவ மறைச் சட்டத்தின் மூன்ருவது பகுதியாக இலங்குகின்றன. உள்ளத்தில் பொங்கியெழுந்த சமயப் பற்றினுல் சமணரையும், சைவரையும், புத்தரையும் தம் பாக்களால் தாக்கினுர். ஆனுல் நம்மாழ்வாரின் பாடல் களில் காணப்பெறும் அகம் உருக்கும் அருட்பெருக்கை இவரது பாடல்களில் காண்பதற்கில்லை ; இவற்றில் சொல் லழகைத் தவிர உள்ளழகைக் காணேம்.

பத்தாம் நூற்ருண்டின் இறுதிப் பத்தாண்டுகளில் மறைப் புத்துணர்ச்சியில் மாற்றமொன்று நிகழ்ந்தது. ஆழ்வார்களுக்குப் பிறகு ஆச்சாரியர் தோன்றினர். அறி வியற்கருத்துக்கள் யாங்கணும் பரவலாயின. மணிப் பிரவாள நடையில் அக்கருத்துக்கள் எழுதப்பட்டன. அரங்கநாதாச்சாரியார் என்றழைக்கப்பட்ட நாதமுனியே இவ்வழியில் இயக்கத்தைத் திருப்பியவர். அவர் மன்னுர் குடி என்றழைக்கப்படும் வீரநாராயணபுரம் என்ற ஊரிற் பிறந்தார். கி. பி. 985 முதல் 1030 வரை வாழ்ந்தார். அவர் பெரும்பாலும் முதல் இராஜேந்திரர் காலத்தவர். தமது ஆசிரியராகிய நம்மாழ்வாரிடம் தமிழ்த் திருமறை நாலாயிரம் பாடல்களையும் பெற்று அவற்றை ஒழுங்காகத் தொகுத்தார். மேலும், விசிட்ட அத்வைதம் என்ற அறி வியற்கொள்கையை விரித்துக் கூறும் நியாயத்துவம் என்ற நூலையும் எழுதினுர். இறைவன் இணையடிகளில் ஆன்மா சரணுகதியடைந்து தன்னை முழுவதும் ஒப்படைத்துவிட வேண்டும் எனக் கூறும் பிரபத்தி என்ற கொள்கையை அழுத்தமாக அவர் எடுத்தோதினுர். திருவரங்கத்தில் சமயகுரவர்களாக விளங்கிய ஆச்சாரியார்களில் அவருக் கடுத்தபடியாக அவரது பேரனுன ஆளவந்தாரைக் கூற

லாம். அவருக்கு யாமுனுசாரியார் என்ற மறுபெயரு முண்டு.

ஆச்சாரியர்களில் மாண்புமிக்கவர் இராமானுசர் என்று ஐயமறக் கூறலாம். அவர் சென்னைக்கு அண்மையிலுள்ள ஸ்ரீபெரும்புதூரில் பதினெரும் நூற்ருண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர். காஞ்சியில் வதிந்த யாதவப்பிரகாசரிடம் முதலில் அத்துவைத நெறியைப் பயின்ருர். ஆனுல் அவரது கொள்கை தமது கருத்துக்கு முரணுகத் தோன்றவே, திருவரங்கத்தில் வாழ்ந்த யாமுனுசாரியாரை அணுகி, அவரிடம் சமயக் கல்வி கற்க விழைந்தார். இராமானுசரின் இலங்கு புகழைக் கேள்வியுற்ற யாமுனுசாரியாரே அவரைத் தம்மிடம் அழைப்பித்தார். ஆயினும், இராமானுசர் சென்று அவரைப் பார்க்குமுன்பே அவர் பரம பதம் சேர்ந்துவிட்டார். ஆகவே, யாமுனுசாரியாரின் தொண்டரான பெரிய நம்பியிடம் அவர் மாணவராக அமர்ந்தார். பிறகு இந்தியநாடு முழுவதும் சென்று பல திருப்பதிகளைக் கண்டார். காச்மீரம் சென்று அங்கே **பிரம்ம சூத்திரங்களை** விளக்கிக் கூறும் **போதாயன விருத்தி** என்ற நூலைப் பெற்ருர். **பிரம்ம சூத்திரங்களின்** உரை நூலாகிய **ஸ்ரீபாஷ்யம்** என்ற அரும்பெரும் நூலைத் திருவரங்கத்திலே தொடங்கி அங்கே முடித்தார். ஆயினும், இடையில் பல ஆண்டுகளாகத் திருவரங்கத்தை விட்டகன்று ஒய்சள நாட்டில் வாழ நேரிட்டது. ஏனெனில், சைவப் பற்று முற்றிய சோழவேந்தர் பிற மறையோருக்குப் பெரும் இன்னல் இழைத்து வந்தார். ஒய்சள நாட்டில் கி. பி. 1104 முதல் 1141 - வரையில் செங்கோல் செலுத்திவந்த பிட்டிதேவர் என்ற அரசரை இராமானுசர் வைணவராக்கி அவரது பெயரையும் விட்ணு

வர்த்தனர் என மாற்றினர். தமக்குத் தீங்கு விளைத்த சோழ மன்னன் இறந்த பின் இராமானுசர் திருவரங்கத் திற்குத் திரும்பிவந்து தமது பெரு நூலை எழுதி முடித்தார். இவர் இயற்றிய ஏனைய நூல்கள் வேதாந்தசாரம், வேதாந்த சங்கிரகம், வேதாந்ததீபம் என்பனவும், பிரம்மசூத்திரங் களுக்கு ஸ்ரீபாஷ்யமும், பகவத்கீதை முதலான நூல்களைப் பற்றிய விளக்கவுரைகளுமாம். இவர் சங்கரரின் அத்துவைதக் கொள்கையை ஏற்க மறுத்தார். அது பக்தி வளர்ச்சிக்கு இடந்தரவில்லை என்பது இவர் கருத்து. மனிதனின் உயிர் தனிப்பட்டதென்றும், இறுதியில் பேரின்பமடையும் நிலையில் கடவுள் அண்மையிலே நிலை பெற்று வாழும் என்றும் இராமானுசர் கருதினர்.

இராமானுசரின் விசிட்டாத்துவைதக் கருத்தோடு ஒன்றித்ததும், ஆயினும் அதனின்று வேறுபட்டதுமான இன்னொரு வைணவக் கொள்கை இப்போது முளைத்தது. இதை விதைத்தவர் நிம்பார்கர் என்பவராவர். இவர் பெரும்பாலும் இராமானுசர் காலத்தவராக இருக்கலாம். பல்லாரி மாவட்டத்திலுள்ள நிம்பபுரியில் பிறந்தார். இவரும் பிரபத்திக் கொள்கையையே முக்கியமாகக் கருதினர். ஆயினும், இராமானுசரின் கருத்துக்கு முரணாக பேத-அபேதம், அதாவது வேற்றுமையில் ஒற்றுமை காணும் கொள்கையைப் பரப்பினர். அது, பொருளும் உயிரும் ஒன்றென்றும் வேறென்றும் ஏற்றுக்கொள்கிறது. இராமானுசர் நாராயணனுக்கும் இலக்குமிக்கும் கொடுத் திருந்த சிறப்பிடத்தை நிம்பார்க்கர் கிருட்டிணனுக்கும், இராதைக்கும் தந்துள்ளார். இது அவர் வடநாட்டில் பிருந்தாவனத்தில் நெடுநாள் தங்கியிருந்ததன் விளைவாக இருக்கலாமென எண்ண இடமுண்டு; பிரம்மசூத்திரங்களின்

உரை நூலும், பத்துப் பாக்களைக் கொண்ட தசசுலோகி என்ற சிறு நூலும் இவர் எழுதியவை. இந்நூல் அவரோதிய கருத்துக்களின் பிழிவாகும்.

சங்கரரின் கொள்கைகளை வெகுண்டு எதிர்த்தவர் மத்துவர். அவருக்கு ஆனந்த தீர்த்தர், பூர்ண பிரச்சினர் என்ற பிற பெயர்களுமுண்டு. அவர் உடுப்பி மாவட்டத்தில் கல்யாணபுரம் என்ற ஊரில் பார்ப்பனர் குலத்தில் பிறந்தார். இளவயதில் சங்கரரின் அத்வைதக் கொள்கையை ஆசிரியர் கற்றுக்கொடுக்கும்போது அதன் மீது அவருக்கு வெறுப்புத் தோன்றியது. பிறகு சங்கரரின் கருத்துக்களை மறுத்து, துவைதம் என்ற தமது கருத்துக்களே உண்மையென்று எங்கும் எடுத்தோதி வந்தார். நாடு முழுவதும் வடக்கிலும், தெற்கிலும் சுற்றிச் சென்றார். இமயமலையிலுள்ள பதரிகாசிரமத்திற்கு இருமுறை சென்று பிரம்மசூத்திரங்களை விளக்கிப் பாஷ்யம் என்ற அரிய நூலை எழுதினார். சுற்றுச் செலவுகளின்போது தமது கருத்துக்களை உரம்படக் கூறித் திறம்பட வாதித்துப் பலரைச் சமயச் சொற்போரில் வென்றார். அத்துவைதக் கொள்கையில் ஆழமான பற்றுடைய திரிவிக்கிரம பண்டிதர் என்பவரைத் துவைத நெறியில் திருப்பித் தமது மாணவராக ஏற்றுக் கொண்டார். அவரது எழுதுகோலிலிருந்து பல நூற்கள் பெருக்கெடுத்தோடின. அவர் முப்பத்தேழு நூல்கள் எழுதியுள்ளார். அவரது கொள்கைகளைப் பின் வருமாறு கூறலாம்: நாராயணனே தனிப்பெருங் கடவுள். சங்கரர் கூறியது போல் உலகம் வெறுந் தோற்றமன்று. இராமானுசர் ஓதியது போல் அது இறைவனின் ஒரு பகுதியுமன்று. அது உண்மையிலே இருக்கும் ஒரு பொருள்; இறைவனினின்றும் வேறுபட்டது. எண்

ணற்ற உயிர்களெல்லாம் தத்தம் ஈடேற்றத்திற்காகவே இறைவனைச் சார்ந்துள்ளன. அவை நல்லவை முதல் தீயவை வரை பல திறப்பட்டவை. தீயவை முடிவில் தீக்குழி புகும். உள்ளம் நிறைந்த பக்தியே ஈடேற்றத்தை நல்கும். இறைவனை மறைநூல் வழியில் மட்டுந்தான் காணலாம்.

13-ஆம், 14-ஆம் நூற்றுண்டுகளில் இராமானுசரைப் பின்பற்றிய அடியாரிடையே மாபெரும் பிளவு ஏற்பட்டது. வட கலையென்றும், தென் கலையென்றும் இரு பிரிவுகள் முளைத்தன. வட கலையை, கி.பி. 1268-இல் பிறந்த வேதாந்த தேசிகரும், தென் கலையை, கி.பி. 12-ஆவது நூற்றுண்டில் பட்டர் முதலிய ஆசாரியர்களும் பரப்பினர். பிரபத்திக் கொள்கையை விளக்கிக் கூறுவதில் ஏற்பட்ட வேறுபாட்டாலே இப்பிளவு தோன்றியது. வட கலை வட மொழியையும் நான் மறையையும், தென்கலை தென்மொழி யாம் தமிழ் மொழியையும் திவ்வியப் பிரபந்தத்தையும் தலைமையாகக் கொண்டு ஆதரித்தன.

13-ஆம் நூற்றுண்டின் இறுதியிலிருந்து மராட்டிய நாட்டில் வைணவம் ஓரளவிற்குச் செல்வாக்குப் பெற்றது. அதன் விளைவாக ஆங்குப் பல இசைவாணர் தோன்றி, தென்னுட்டில் ஆழ்வாரும், நாயன்மாரும் செய்தது போல் பாடல் தொண்டினுல் மக்களின் உள்ளத்திலே பக்தியை விதைத்து வந்தனர். மராட்டிய மொழியில் பல பக்திப் பாடல்களை (அபங்கங்கள்) இயற்றிய ஞானேச்வரரே முதலில் இவ்வியக்கத்தைத் தொடங்கியவர். அவருக்குப் பிறகு பெரும்புகழ் பெற்ற துக்காராம் காலம் வரையில் பலப்பல தூயர்கள் தோன்றினர். கல்லாதவரின் உள்ளத் திலும் பக்திக் கனலை மூட்டுமாறு தாசகூடர் என்ற அடியார்

கன்னட மொழியில் வகுத்த தேவரநாமங்கள் என்ற இசைப் பாக்களும் பக்தி இயக்கத்தின் விளைவே எனத் துணிந்து கூறலாம். இவ்வடியார்களில் சிறந்த புகழுடையார் பல தேவரநாமங்களை எழுதிய புரந்தர விட்டலர் ஆவர். துவைதம் என்ற அறிவியற் கொள்கையை அடிப்படையாக் கொண்ட இப்பாடல்கள் அறிவாற்றல் நிரம்பாத மக்களின் உள்ளத்தைக் கவரும் முறையில் எழுதப்பட்டவை. இப் புனிதர்கள் 15-ஆம் 16-ஆம் நூற்றாண்டுகளில் ஆண்ட விசயநகர அரசர் ஆதரவில் தொண்டாற்றியவர்களெனத் தெரிகிறது. வைணவப் பக்தி இயக்கத்தில் பொலிவுடன் ஒளிர்ந்த மற்றொரு அடியார் வல்லபாசாரியார். அன்னார் காசியில் பிறந்து துவைத ஆசிரியர்களிடம் பயின்று, தென்னாட்டில் பன்னெடுங்காலம் வாழ்ந்தவர். கிருட்டிண தேவராயர் அவைக்களத்தை அண்மிச் சென்ற அறவோர் களில் அவருமொருவர். அவரே சுத்தாத்துவைதம் என்ற நெறியை நிறுவியவர். அதன்படி பக்தியே அறிவினும் சிறந்தது. அவர் எழுதிய வேதாந்த சூத்திரங்களின் விரிவுரைகளும், பிற நூல்களும் இக்கருத்தையே வலியுறுத் துகின்றன. கோபிகள் கிருட்டின பக்தியைப் பரப்ப முயன்றது போல் இப்பிரிவினரும் பக்தி நெறியைப் பரப்பப் பெரிதும் முயன்றனர். ஆயினும் காலப் போக்கில் இவர் களது முயற்சி வெறும் உணர்ச்சியற்ற பற்றாக வளர்ச்சி குன்றிப் போயது.

## இயல்—எட்டு

# பிற்காலச் சோழர்களும் சாளுக்கியர்களும்

களப்பிரர் படையெடுப்பின் விளையால் நைந்து போன சோழர்கள் ஒன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் திடீரெனப் புத்துயிர் பெற்றுப் பொலிவுடன் தோன்றினர். அதன் பிறகு தொடர்ந்து மூன்று நூற்றுண்டுகளாகத் துங்க பத்திரை ஆற்றின் தெற்கிலுள்ள நிலப்பகுதி முழுவதிலும் அவர்களது ஆட்சியும், செல்வாக்கும் சிறந்து விளங்கின. ஆயினும் தொடக்கத்தில் அவர்கள் இராஷ்டிரகூடரோடும், கலியாணிச் சாளுக்கியரோடும் போரிட நேரிட்டது. பத்தாம் நூற்றுண்டின் முடிவு வரை தென் இந்திய வரலாறு முழுவதிலும் சோழருக்கும் சாளுக்கியருக்கும் இடையே நடைபெற்ற போர் நிகழ்ச்சிகளே முனைப்பான இடம் பெற்றிருந்தன.

கி. பி. ஏழாம் எட்டாம் நூற்றுண்டுகளில் சோழர்களை இடையிடையே பல்லவர்களும் பாண்டியர்களும், வாதாபிச் சாளுக்கியர்களும் பலமுறை முறியடித்ததாகக் கல்வெட்டுக் கள் தெரிவிக்கின்றன. பல்லவரின் ஆட்சிக்குட்பட்டிருந்த விசயாலயர் என்ற சோழச் சிற்றரசர், ஏறக்குறைய கி. பி. 850-இல், முத்தரையர்பால் தஞ்சாவூரைக் கைப்பற்றிய காலமுதல் சோழர்கள் தனியாட்சி செய்யும் தகைமை பெற்றனர். இம்முத்தரையர்கள் முதன் முதல் பல்லவர்க்குப் பணிந்து திறை செலுத்தி வந்தனர். பிறகு,

பாண்டியரின் ஆட்சிக்குப் பணிந்தனர். விசயாலயருக்குப் பிறகு கி. பி. 871 முதல் 907 வரை ஆட்சி நடாத்திய முதல் ஆதித்த மன்னர், இரண்டாம் வரகுண பாண்டியரின் பகையையும், அவரது படையையும் எதிர்க்க நேர்ந்தது. ஆயினும் பல்லவர், கங்கரது பெருந்துணை பெற்று, கி. பி. 880-இல் ஸ்ரீபுரம்பியம் எனுமிடத்தில் நடந்த போரில் பாண்டியரைத் தோற்கடித்தார். பல்லவ மன்னரின் இசைவின் பேரில் ஆதித்தர், தஞ்சாவூரையும், அதன் அண்மையிலுள்ள இடங்களையும் ஆண்டுவந்தார். ஆனால், விரைவில் அவர் அபராஜிதர் என்ற பல்லவ அரசரை வென்று கொன்று பல்லவ நாடு முழுவதையும் தமதாக்கிக்கொண்டார். பிறகு ஆதித்தர் பாண்டியரிடமிருந்து கொங்கு நாட்டைக் கைப்பற்றினர். ஆகவே, கி. பி. 907-இல், முதல் பராந்தகர் ஆட்சியேற்றபோது அவரது நாடு வடக்கே காளத்தி முதல் தெற்கே புதுக்கோட்டை வரை பரவியிருந்தது.

கி. பி. 907 முதல் 955வரை செங்கோலோச்சிய முதற் பராந்தக சோழ மன்னர் வீரம் செறிந்த வேந்தர். அவர் மதுரையைக் கைப்பற்றிப் பாண்டியரையும் அவரது நண்பரான இலங்கை மன்னரையும் வென்று, வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள வேலூர் வரை தம் ஆட்சியை நிலை நாட்டினர். மேலும் வெற்றி காண விழைந்த சோழரது ஆசையை இராஷ்டிரகூட அரசரான இரண்டாம் கிருஷ்ணர் தடுத்து நிறுத்தினர். அவர் பராந்தகருக்கு எதிராகக் கிளம்பியதற்குக் காரணம், முதலாம் ஆதித்தரை மணந்த அவரது புதல்வியின் மைந்தர் கன்னர தேவருக்குத் தமது தந்தைக்குப் பின்னர் ஆட்சியுரிமை அளியாமையே. ஏறக்குறைய கி. பி. 915-இல் வல்லாலம் எனுமிடத்தில் நிகழ்ந்த

போரில் பராந்தக சோழர், கங்கர் துணைகொண்டு, படைகளைச் சிதறடித்தனர். கிருஷ்ணர் வேங்கிமேல் பன்முறை படையெடுத்தார். ஆனால், அவர் முயற்சி அனைத்தும் விழலுக்கு இறைத்த நீர் ஆயிற்று. இரண்டாம் கிருஷ்ணருக்குப் பின்பு ஆண்ட மூன்றும் இந்திரருக்கு (கி. பி. 915-27) சோழர்களைப் பற்றி நினைக்கவே நேரமில்லாமற் போயிற்று. ஏனெனில் தம் நாட்டின் மேல் படையெடுத்து வந்த மாளவ மன்னர் உபேந்திரருடன் சமர் செய்வதிலே அவர் காலம் எல்லாம் கழிந்தது. இறுதியில் மாளவர் தோற்றூர். மேலும், இந்திரர் வேங்கியில் நிகழ்ந்த அரசுரிமைப் போட்டியில் தலையிட்டதன் விளைவாக, வேங்கி நாட்டின் பெரும்பகுதி, ஏறக்குறைய ஏழாண்டுகள் இரர்ஷ்டிரகூடரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது.

முதல் பராந்தகர் ஆட்சியின் இறுதியில் தளிர்த்துக் கொண்டிருந்த சோழ அரசுக்கு, மூன்றும் கிருஷ்ணர் என்ற இராஷ்டிரகூட மன்னரால் பெரும் எதிர்ப்பு ஏற்பட்டது. ஆற்றலும், ஆர்வமும் கொண்ட மூன்றும் கிருஷ்ணர் தமது மைத்துனர், இரண்டாம் பூதுகருக்காகப் போர் செய்தார். மேலைக் கங்கரது நாட்டையும் அவருக்கு வென்று கொடுத்தார். பிறகு கி. பி. 949-இல் அவர் படைகள் சோழருக்கெதிராக அணிவகுத்துச் சென்றன. தக்கோலப் போர்க்களத்தில் சோழரை முதுகு கண்டார். இராசாதித்தியர் என்னும் சோழ இளவரசர் கொலையுண்டார். இதன் பின்னர்த் தொடர்ந்த சண்டைகளினுல் சோழப் பேரரசின் வட பகுதி முழுவதையும், கிருஷ்ணர் தமது நாட்டுடன் இணைத்துக்கொண்டார். சோழர்களுக்கு நேர்ந்த இந்த இடுக்கண் அக்காலத்தில் அவருக்குப் பகைவராயிருந்த பாண்டியரைத் தனித்தியங்கி உரிமை பெறுமாறு செய்தது.

மூன்றும் கிருஷ்ணர் வேங்கி நாட்டின் அரசியல் நிகழ்ச்சிகளில் தலையிட்டு, ஆங்கே ஆட்சி செய்த இரண்டாம் அம்மன் என்ற மன்னர்க்கெதிராகக் கிளர்ச்சிகளை எழுப்பிவிட முயன்றார். எனினும், அவர் எண்ணம் நிறைவேறவில்லை. ஆகவே, தம் வீரர்களை வடக்கு நோக்கிச் செலுத்தி, மாளவ அரசரை அமரில் வென்று இராஷ்டிரகூட ஆட்சிக்கு அடிபணியுமாறு செய்தார். அவ்வீர மரபில் தோன்றிய பெருவேந்தரில் மூன்றும் கிருஷ்ணரே இறுதி மன்னர். அவருக்குப் பின்பு ஆண்ட அரசர்களால் மாளவ மன்னரை எதிர்த்து நிற்க முடியவில்லை. பிற்காலச் சாளுக்கிய மரபினை நிறுவிய இரண்டாம் தைலர் என்பார், கி. பி. 973-இல் இரண்டாம் கர்கர் என்ற கடைசி இராஷ்டிரகூட அரசரை மிக எளிதில் தோற்கடித்தார்.

பராந்தகர் இறந்த பிறகு ஏறக்குறைய முப்பதாண்டுகள் சோழ அரசு ஆற்றல் குன்றியிருந்தது. ஆனால் சோழப் பேரரசின் சிற்பியாகிய முதலாம் இராசராசர் ஆட்சியேற்றது முதல் தென் இந்திய வரலாற்றில் ஒரு திருப்பம் ஏற்பட்டதெனலாம். இராசராசர் திட்டமிட்டுத் துணிந்தாற்றிய போர்களில் பாண்டியரையும், சேரரையும் வென்று, இலங்கை மீதும் படையெடுத்து வட இலங்கையையும் தம் நாட்டுடன் சேர்த்தார். நாளடைவில் தற்காலக் குடகு, வட தென் மைசூர், மாலத் தீவங்கள் முதலிய நாடுகளை வென்றார். பின்பு, இராசராசருக்கும் இரண்டாம் தைல மன்னரால் உறுதியாக நிறுவப்பெற்ற கலியாணிச் சாளுக்கியருக்குமிடையே பகைமை முற்றியது. தைலர் மாளவ மன்னரான முஞ்சருடன் போரிடுவதில் முனைந்திருந்தார். தைலரின் படைகளை மாளவ மன்னர் ஆறு முறை முதுகு கண்டார் எனவும், ஏழாம் முறை அவை மாளவ

மன்னரைமேற்கொள்ள, அம்மன்னர் தோல்வியடைந்து ஓடினர் எனவும் கூறப்படுகிறது.

தைலருக்குப் பின்னே கி.பி. 997 முதல் 1008 வரை ஆண்ட முதலாம் சத்தியாசிரயர் காலத்தில் மீண்டும் சோழருக்கும் சாளுக்கியருக்கும் இடையே பகை மூண்டது. வேங்கி நாட்டின் அரசியல் நிகழ்ச்சிகளில் இராசராசர் தலையீட்டின் விளைவாகவே போர் தொடங்கியது. இராசராசர், முன்பு நாட்டை விட்டு வெளியே ஓடிப்போன பழைய அரச மரபைச் சேர்ந்த சக்திவர்மனுரைத் திரும்பவும் ஆட்சியில் அமர்த்தி, அவரது தம்பிக்குத் தம் புதல்வி குந்தவையைத் திருமணம் செய்து வைத்தார். இதன் விளைவாக, முதலாம் குலோத்துங்கர் காலத்தில் சோழ, வேங்கி மன்னர் மரபுகள் இரண்டும் ஒருங்கே இணைந்தன. சோழரின் செல்வாக்கு வேங்கியில் நிலைபெற்றதைக் கண்டு மனம் புழுங்கிய சத்தியாசிரியர், படை திரட்டி வந்து போர் தொடுத்து, அந்நிலப்பரப்பில் ஒரு பகுதியைக் கைப்பற்றினர். அதற்கெதிராக இராசராசர் கி.பி. 1008-ல் மேலைச் சாளுக்கியரைத் தாக்கிப் பெருவெற்றி கொண்டு அவரது மரபிற்கும் முடிவு கண்டார். அப்போரில் எண்ணிறந்த வீரர் மாண்டனர். வனவாசியையும், இராயச்சூரில் பெரும் பகுதியையும் சோழர் கைப்பற்றிக்கொண்டனர். சத்தியாசிரியர், தன் சொந்த நாட்டைக் காப்பதற்காக வேங்கியை விட்டு வெளியே செல்ல நேர்ந்தது. அப்போது சோழப் பேரரசு, துங்கபத்திரைக் கரைவரை பரவியிருந்தது. இராசராசன் பல்லாண்டுகள் போரில் ஈடுபட்ட போதும், நாட்டில் நல்ல ஆட்சி முறையை அமைத்து, சைவ சமயத்தைப் பரப்பி, இலக்கியத்தையும் நுண்கலை

களையும் வளர்த்து, மாண்பிற் சிறந்த பேரரசை நிறுவி, புலவர் பாடும் புகழ் பெற்று விளங்கினர்.

முதலாம் இராசராசரின் புதல்வர் முதலாம் இராசேந்திரர் (1012-44), தம் தந்தையைப் போலவே தமது ஆட்சியைப் பரப்பி, அதைப் பலப்படுத்தும் வேலையில் முனைந்திருந்தார். இராசராசர் இலங்கையில் ஒரு பகுதியை மட்டும் வென்றார். இராசேந்திரரோ அதை முழுவதையும் வென்று பெரும்புகழ் ஈட்டினர். பாண்டிய சேர நாடுகளின் வழியே தம் வீரப் படைகளை வெற்றி முழக்கத்துடன் நடத்திச் சென்றார். மேலைச் சாளுக்கிய மன்னரான இரண்டாம் ஜெயசிம்மர், தம் முன்னோர்களைப் போல் வேங்கி நாட்டின் நிகழ்ச்சிகளில் தலையிட்டு வந்தார். இராசேந்திரர் அதற்கு எதிராகத் தமது படைகளைச் செலுத்திச் சாளுக்கிய வேந்தரை மாஸ்கி எனுமிடத்தில் தோற்கடித்தார். சோழப் படைகள் வேங்கியில் ஆட்சி செய்த இராசராசன் என்ற அரசருக்குத் துணை நின்றதோடு, இரண்டாம் ஜெயசிம்மர் ஆதரித்து வந்த அவரது மாற்றானையும் தோற்கடித்தன. ஜெயசிம்மர் இதற்கு முன்னே மாளவ மன்னரான போஜரின் படையெடுப்பில் சாளுக்கியருக்கு உதவி செய்து, அவரது அரசைப் பாதுகாத்திருந்த போதிலும் சோழர் அடைந்த வெற்றியினால் அவரது பெருமை குன்றியது.

துங்கபத்திரைக் கரைவரை பரவியிருந்த பரந்த நிலப் பகுதி தன் ஆணை வழி நின்றபோதும், முதலாம் இராசேந்திரரின் மனம் நிறைவுறவில்லை. ஆகலின் வடக்கே படையெடுத்துச் செல்லத் துணிவுற்றார். பொங்கியெழுந்த அவரது படைகள் கங்கைப் பேரியாற்றைக் கடந்தன; கங்கைச் சமவெளியில் கொற்றவர் இருவரை வென்றன; வங்க மன்

னர் முதலாம் மகிபாலரையும் வென்று வீரமுடன் வீடு திரும் பின. இராசேந்திரரின் படையெடுப்பால் வங்கத்திலும், மிதிலையிலும், தென் இந்தியர் சிலர் குடியேறி வாழலாயினர். இதன் விளைவாக வங்காளத்தில் சோழர் மரபும், மிதிலையில் கருநாடர் மரபும் நிலைபெறலாயின. மேலும், வட இந்தியா வில் வாழ்ந்த சைவர் சிலர் தமிழ் நாட்டில் குடியேறத் தலைப்பட்டனர். புகழ்பெற்ற இப்படையெடுப்பினால் இராசேந்திரருக்குக் "கங்கை கொண்டான்" என்ற பட்டமும், தெற்கிலிருந்த அவரது புதிய தலைநகருக்குக் "கங்கை கொண்ட சோழபுரம்" என்ற பெயரும் ஏற் பட்டன.

சுமித்திராவில் ஸ்ரீவிஜய அரசுக்கெதிராக இராசேந் திரர் நடத்திய கடற்படையெடுப்பும் மிகப் பெருமை வாய்ந் தது. குன்றாப் புகழ் பெற வேண்டுமென்று கொண்ட குறிக்கோளே அவரைக் கடற்போருக்குத் தூண்டியிருத்தல் வேண்டும். இராசேந்திரர் பல்பெரும் வெற்றி பெற்ற வீர வேந்தராய் விளங்கி நின்றமையால் ஸ்ரீவிஜய மன்னர், ஸ்ரீசங்கிராம விஜயதுங்கவர்மர், சோழர் தலைமைக்குப் பணிந்தார். அவரது ஆட்சிக்குட்பட்ட மலாயா, சுமத்திரா முதலாய சுற்றுப்புறமுள்ள பல தீவுகளும் சோழப் பேரரசின் முன்னர்த் தலை வணங்கி நின்றன. இவ்வாறு, தொலை கிழக்கு நாடுகளில் சோழர் பல்பெரு வெற்றிகள் அடைந்திருப்பினும் அவரது அரசாட்சி ஆங்கு நிலைபெற்று நின்றதற்குச் சான்றுகள் எவையும் கிடைத்தில. அவை சோழர் தலைமையை ஏற்றுக்கொண்டு அடிபணிந்த பின்னர், திறைசெலுத்தும் நிபந்தனையுடன், மீண்டும் பழைய மன்ன ரிடமே விடப்பெற்றிருத்தல் கூடும்.

இராசேந்திரர் ஆட்சியின் இறுதியில் சாளுக்கியர் மீண்டும் தீங்கிழைக்கத் தலைப்பட்டனர். இரண்டாம் ஜெய சிம்மருக்குப் பிறகு ஆண்ட முதலாம் சோமேஸ்வரர் (1042-68), வேங்கியைத் தாக்கிச் சோழ அரசரை எதிர்த்தார். இராசேந்திரர் மேலைச் சாளுக்கியருடன் போர் செய்து வெற்றி பல பெற்று, இறுதியில் கல்யாணி நகரையே தாக்கித் தகர்த்துவிட்டார். ஆனால், சோமேஸ் வரர் விரைவில் மீண்டெழுந்து, கி. பி. 1050-ல் வேங்கியில் தமது ஆட்சியைப் பலப்படுத்தி, சோழ நாட்டின் மீது படையெடுத்தார். அப்போது பேரரசராகத் திகழ்ந்த இராசாதிராசர், சோமேஸ்வரரரை கி. பி. 1053-ல் கொப்பம் எனுமிடத்தில் எதிர்த்து வெற்றி கண்டார். ஆயினும் போர்க்களத்தில் அவர் உயிர் துறந்தார்.

இராசாதிராசர் இறந்த பின், முறையே இரண்டாம் இராசேந்திரரும், முதலாம் வீரராசேந்திரரும், ஆதி இராசேந்திரரும் அரியணை ஏறினர். கி. பி. 1052 முதல் 1064 வரை ஆண்ட இரண்டாம் இராசேந்திரர், முதலாம் சோமேஸ்வரரைக் கூடல்சங்கமம் என்ற இடத்தில் நிகழ்ந்த போரில் தோற்கடித்தார். கி. பி. 1064 முதல் 1070 வரை ஆட்சி செலுத்திய வீரராசேந்திரர் சாளுக்கிய நாட்டின் மேல் படையெடுத்தார். சோழக் கல்வெட்டுக்கள் முதலாம் வீரராசேந்திரர், முதலாம் சோமேஸ்வரரின் படைகளை ஐந்து முறை முறியடித்ததாக விளம்புகின்றன. ஆயின், இவை உண்மையென எடுத்துக்காட்டப் பிற சான்றுகள் எவை யும் இல. விஜயவாடையின் அண்மையில் மேலைச் சாளுக் கியர் அடைந்த தோல்வியொன்று மட்டும் உறுதியாகத் தெரிகிறது. விழுமிய போர் வீரரான சோமேஸ்வரர், இடைவிடாத போர்த்தொழிலின் விளைவாக உடல் குன்றி

இறுதியில் கி. பி. 1068-இல் துங்கபத்திரை ஆற்றில் குதித்து உயிர் துறந்தார். அவர் சோழர்பால் பல தோல்விகள் அடைந்திருப்பினும், மாளவ மன்னரான போஜரைப் புறங்கண்டு, கோசலை, கலிங்கம் ஆகிய நாடுகளில் புகழுடன் தம் ஆட்சியைப் பரப்பினர்.

முதலாம் சோமேஸ்வரருக்குப் பிறகு அவரது முதல் மைந்தர் இரண்டாம் சோமேஸ்வரர் அரசேற்ற போதிலும், இளைய புதல்வர் விக்கிரமாதித்தர் அரசுரிமை அடைய விரும்பி, தமையனுருக்கு எதிராகச் சூழ்ச்சிகள் செய்தார். சிற்றரசர்கள் பலரைக் கிளர்ச்சி செய்ய அவர் தூண்டினர். அவர் சாளுக்கிய நாட்டுடன் பகைமை கொண்டிருந்த சோழ வேந்தராகிய வீரராசேந்திரருடன் நட்புக்கொண்டு, அவரது மகளை மணந்து தாம் சாளுக்கிய பேரரசின் தென் பகுதிக்கு இளவரசர் என விளம்பரம் செய்தார். அவர் சாளுக்கிய அரசியல் நிகழ்ச்சிகளில் தலையிட்டு வெற்றியுடன் திகழ்ந்தது மல்லாமல் இலங்கை மீதும், கடாரம் மீதும் படையெடுத்து வாகைசூடித் திரும்பினர். ஆயின் வீரராஜேந்திரர் நெடுநாள் வாழ்ந்திலர் ; கி. பி. 1070-இல் இறந்து போனர். உடனே தக்காணத்தின் நிலைமையும் மாறியது.

வீரராசேந்திரர் இறந்த சிறிது காலத்துக்குப் பின் முதலாம் குலோத்துங்கர் (1070-1118) சோழவேந்தராக அரசேற்ருர். முதலாம் இராசேந்திரரது பெயரர் என்ற முறையிலும், அவரது மகள் அமங்காதேவியை மணந்த கீழைச்சாளுக்கிய அரசர் இராசராசரின் புதல்வர் என்ற முறையிலும், அவர் சோழ நாட்டிலும் கீழைச்சாளுக்கிய நாட்டிலும் அரசு செலுத்த உரிமை உடையார் ஆயினர். தொடக்க முதல் திறமை மிக்க வேந்தர் எனத் திகழ்ந்தமை

யால் அவர் காலத்தில் சோழநாடு தலைமை எய்தியது. ஆயினும், அவரது ஆட்சியில் இலங்கை, சோழர் தலைமையை விட்டு விலகி உரிமை பெற்றது. குலோத் துங்கர், சிங்கள அரசருடன் உடன்படிக்கை செய்து, அவரது புதல்வியை மணந்து, அத்திருமண உறவினால் தம் தொடர்பை உறுதிப்படுத்தினார். பாண்டியரையும், சேரரை யும் மீண்டும் வென்று அடிப்படுத்துவதற்கு ஆங்காங்கே படைகளை நிறுவினார். விக்கிரமாதித்தர் சில காலம் குலோத்துங்கரோடும் தம் அண்ணனோடும் போர் செய்வதில் முனைந்தார். கி. பி. 1076-இல் அவர் தம் அண்ணனைச் சிறையில் வைத்துத் தமது ஆட்சியை நிறுவினார். முதலாம் குலோத்துங்கரும் ஆறும் விக்கிரமாதித்தரும் ஒரே காலத்தில் வாழ்ந்திருந்து, ஏறக்குறைய ஐம்பது ஆண்டு செங்கோல் செலுத்தினர். அவரவர் தத்தம் ஆற்றலைத் தாமே வியந்து தருக்கி நடந்தமையால் ஒருவர் மீது ஒருவருக்குப் பொறாமையும் பகைமையும் உள்ளத்தில் புகைந்துகொண்டிருந்தன. எனினும், நற்காலமாக, அது மூண்டிலது.

கி. பி. 1076 முதல், குலோத்துங்கர் புதல்வர் ஒவ் வொருவரும் வேங்கி நாட்டில் வெவ்வேறு பகுதியில் இள வரசராக நியமனம் பெற்றனர். 1097 இல் விக்கிரம சோழர் ஆட்சியில் கொலனு தலைவன், கலிங்க மன்னர் கொலனு அனந்தவர்மன், சோட கங்கனது துணை கொண்டு புரட்சி செய்தான். விக்கிரம சோழன் கொலனுவையும், கலிங்கத்தையும் வென்று, வேங்கியில் சோழர் ஆட்சியை வலுப்படுத்தினார். பிறகு 1110-இல் கலிங்க மன்னர் திறை கொடுக்கத் தவறியதால் குலோத்துங்கர் கலிங்க நாட்டின் மீது இரண்டாம் முறை படையெடுத்தார்.

கருணுகரத் தொண்டமானின் தலைமையில் நிகழ்ந்த இப் படையெடுப்பானது கவிக்களஞ்சியமாகிய கலிங்கத்துப் பரணியில் புகழ்ந்து பாடப்பட்டுள்ளது.

குலோத்துங்கர் தூரக் கிழக்குப் பகுதியிலும் சோழர் புகழை நிலைநாட்டினர். அவர் இந்தோ-சீனுவிலுள்ள காம்பு ஜாவுக்கும், பர்மாவுக்கும், வட இந்தியாவிலுள்ள கன்னேசிக்கும் அரசியல் தூதர்களை அனுப்பினுர். 1090-இல் ஸ்ரீவிஜயாவின் வேந்தர் குலோத்துங்கருடைய அவைக்கு ஒரு தூதுவர் குழுவை அனுப்பி நாகப்பட்டினத்திலிருந்த பௌத்தப் பள்ளிகள் நிலையைக் கண்காணிக்க வேண்டினுர்.

குலோத்துங்கர் ஆட்சியின் இறுதியில் பல இன்னல்கள் தோன்றின. 11-ஆம் நூற்ருண்டின் தொடக்கத்தில் மைசூர்ப் பகுதியில் நிலைநாட்டப்பெற்ற ஒய்சள மரபைச் சேர்ந்த விஷ்ணுவர்த்தனர், 1116-இல் தலைக்காட்டை மேற்பார்த்து வந்த அதிகமான் என்னும் துணைவேந்தரைத் தோற்கடித்தார். அதுவரை கங்கை பாடியில் நிலைத்திருந்த சோழரது ஆட்சி அத்துடன் முடிவுற்றது. விஷ்ணுவர்த்தனர் தென் இந்தியாவில் இராமேஸ்வரம் வரை படையெடுத்துச் சென்றதாகக் கூறுகின்றனர். வேங்கியில் நிலைபெற்றிருந்த சோழரின் ஆதிக்கத்தை வேரறுக்கக் காத்திருந்த சாளுக்கிய மன்னர் ஆறும் விக்கிரமாதித்தர், 1118-இல் தம் படைகளை ஆங்கு அனுப்பிச் சாளுக்கிய ஆட்சியை அந்நாட்டில் நிறுவினுர். இவ்விறு தோல்விகள் காரணமாகக் குலோத்துங்கர் ஆட்சியின் இறுதியில் அவரது புகழ் மழுங்கியது. ஆயினும் அவர் காலத்தில் சோழ அரசு புத்துயிர் பெற்றுப் பொலிவுடன் விளங்கிய தென்பதும், நாட்டு மக்கள் நலமாகவும் வளமாகவும் வாழ்ந்தனரென்பதும் மறுக்க முடியாத உண்மை.

பன்னிரண்டாம் நூற்ருண்டின் முதற்பகுதியில் மேலைச் சாளுக்கியரின் ஆற்றல் குன்றியது. 1126-இல் விக்கிரமாதித்தர் இறந்த பின்னர், அமைதியை விரும்பி அவரது மைந்தர் மூன்ரும் சோமேஸ்வரர் வேங்கியில் தமது செல்வாக்கு அனைத்தையும் இழந்தார். ஒய்சள மரபைச் சார்ந்த விஷ்ணுவர்த்தனர் சாளுக்கிய ஆதிக்கத்தி லிருந்து விலகி விடுதலை பெற்றதுமன்றி, அவர் நிலப்பகுதி யில் சிலவற்றையும் கவர்ந்துகொண்டார். மூன்ரும் சோமேஸ்வரரின் மக்கள் காலத்தில் சாளுக்கிய ஆட்சி நிலை குலையத் தொடங்கியது. குலைந்துகொண்டிருந்த அவ்வர சினைக் காகத்தீயர் ஒருபுறமும், களச்சூரியர் மற்ருெரு புறமும் சிதைத்து அழித்தனர். 1163-இல் சாளுக்கிய மரபின் இறுதி மன்னர், மூன்ரும் தைலர் இறந்ததும், களச் சூரியன் தலைவர் பிஜ்ஜலர் சாளுக்கியப் பேரரசைக் கைப் பற்றி, கலியாணியில் தம் ஆட்சியை நிலைநாட்டினுர்.

குலோத்துங்கருக்குப் பிறகு ஆண்ட அவரது புதல்வர் முதலாம் விக்கிரம சோழர் (1118-35) ஆரும் விக்கிர மாதித்தர் இறந்த பிற்பாடு, வேங்கியில் சோழரது செல்வாக்கை வளர்த்தார். மேலும், அவர் கங்கைபாடியின் ஒரு பகுதியையும் திரும்பக் கைப்பற்றினர். ஆயினும், காலப்போக்கில் அரசாங்கத்தின் உறுதி தளரவே புரட்சி களும் கிளர்ச்சிகளும் ஆங்காங்கே அடிக்கடி தோன்ற லாயின. 13-ஆம் நூற்ருண்டின் முற்பகுதி வரை விக்கிரம சோழர் வழி வந்த மன்னர்களின் ஆட்சி நிலைபெற்று நின் றது. ஆனல், பாண்டி நாட்டில் எழுந்த கிளர்ச்சிகளும், சோழரிடையே தோன்றிய குழப்பங்களும், மக்களின் பசிப் பிணியை வளர்த்த பஞ்சங்களும் சோழர் ஆட்சியை உள் ளூர அரித்துவிட்டன. இறுதியாக 1246 முதல் 1279

வரை ஆண்ட மூன்றும் இராசேந்திரரது ஆட்சியின் முடிவில் பாண்டியர், சோழ அரசை வென்று வீழ்த்தினர்.

**சேரமான் பெருமாளுக்குப் பின் கேரளத்தின் வரலாறு:** ஒன்பதாம் நூற்றுண்டில் சேரமான் பெருமாள் மறைவுக்குப் பின் கேரள நாட்டின் வரலாற்றைப் பற்றி ஒரு சிறிதளவே நமக்குத் தெரிகின்றது. கேரளத்தின் பல பகுதிகளிலும் பல்வேறு மன்னர் ஆண்டு வந்தனர். ஒன்பதாம் நூற்றுண்டிலிருந்து சேர மன்னர்களைப் பற்றியும், அதே காலத்தில் ஒருங்கு வாழ்ந்த வேணுட்டு வேந்தர்களைப் பற்றியும் சில குறிப்புக்கள் கிடைத்துள்ளன. ஒரு வேளை சேர அரசர், பெருமாள் வழிவந்தவராக இருக்கலாம். ஆயினும், மற்றக் கேரள மன்னர் அவருக்குப் பணிந்து நடந்தார் எனத் திட்டமாகக் கூறமுடியாது. கொல்லத்தில் ஆட்சி நடத்திய சில அரசர்கள் தங்களைப் பேரரசர்கள் என அழைத்துக்கொள்வதிலிருந்து, சேர மன்னர் தம் தலைநகராகிய கொல்லத்தையும், அதன் சுற்றுப்புறமுள்ள நிலப்பகுகளையும் ஆண்டு வந்தாரெனக் கூறலாம். முன்னுள் சேர வேந்தர் உறைந்த ஊராகிய வஞ்சி என்னும் மகோதை நகரில், இக்காலத்தில் ஆண்டுவந்த மன்னர், தனிச் சிறப்புடன் விளங்கினுரா என்பது தெரியவில்லை. ஆயின், தென் கேரளத்தைப் பற்றிச் சான்றுகள் பல கிடைத்துள்ளன. தென் திருவாங்கூரில் ஆட்சி புரிந்த வேணுட்டு மன்னரைப் பல முறை பாண்டியரும், பிறகு சோழரும், போரில் எதிர்த்துத் தாக்கியதாகவும், சில முறை பெருவேந்தராகிய சேர அரசர் அவருக்குத் துணை நின்றதாகவும் அறிகிறோம்.

9-ஆம் நூற்றுண்டில் ஆட்சி செலுத்திய சேர மன்னர் ஸ்தாணு ரவி என்பவரைப் பற்றியும், அவர் கிருத்தவ

வணிகருக்கு அளித்த வாணிக உரிமைகளைக் குறிப்பிடும் கோட்டய நகர் ஏடுகளைப் பற்றியும் கூறியுள்ளோம். அவர் முதலாம் ஆதித்தர் காலத்தில் வாழ்ந்தவராகலின், கி. பி, 9 - ஆம் நூற்றுண்டின் இறுதியில் அரசு செலுத்தியிருக்க வேண்டும் எனத் தெரிகிறது. அவரது புதல்வியை ஆதித்தரின் புதல்வர் பராந்தகர் மணம் செய்தார். கோட்டய நகர் ஏடுகளில் 'கோயிலதிகாரிகள்' என்றும், திருவொற்றியூர்க் கல்வெட்டில் கேரளராஜன் என்றும் கூறப் பெற்ற விசயராகவதேவன், பெரும்பாலும் ஸ்தாணுரவிக்குப் பிறகு அரியணையேறிய அரசராக இருக்கவேண்டும். கோதை ரவி, இந்துக்கோதை வர்மன் போன்ற இம்மரபைச் சேர்ந்த பல அரசர்களைப் பற்றிக் கல்வெட்டுக்களினுல் அறிகிறோம். ஸ்தாணு ரவி வழி வந்தோரில் மாண்புடன் இலங்கிய மன்னர் பாஸ்கர இரவிவர்மர். அவர் காலத்தில் ஆட்சி செலுத்திய வேணுட்டு மன்னர்கள் முதலில் ஸ்ரீவல்லபன் கோதையும், பிறகு கோவர்த்தன மார்த்தாண்ட வர்மரும் ஆவர். பாஸ்கர இரவி வர்மர், தம் நாட்டில் குடி யேறியிருந்த யூத வணிகர்களுக்குப் பல உரிமைகள் அளித்தார் எனச் செப்பேடுகள் தெரிவிக்கின்றன. இவ் வுரிமைகளைப் பெற்ற ஜோசப் ரப்பனது கூட்டம் 'அஞ்சு வண்ணம்' என அழைக்கப்பட்டது. இவர்கள் அரசர்பால் நாட்டுப்புறச் சிற்றூரொன்றைப் பெற்றனர். மேலும், வரி வழங்குதல், ரப்பனும் அவர் மக்களும் சிவிகையில் செல்லு தல் இன்னும் இவை போன்ற அறுபத்திரண்டு உரிமைகளை அன்னுர் பெற்றனர். எலிஸ், குண்டர்ட் முதலிய அறிஞர் கள் 'அஞ்சு வண்ணம்' என்ற சொல்லைப் பலவகையாக மொழி பெயர்த்துள்ளனர். ஆனுல், உண்மையில் வெங்கையர் கூறுவதே போல் அது ஐந்து குலம் என்றே

பொருள் படும். கோட்டயச் செப்பேடுகளில் கிருத்தவ சமயத்தைத் தழுவிய ஈழவர், தச்சர், வேளாளர், வண்ணர் ஆகிய நான்கு குலப்பெயர்கள் காணப்படுகின்றன. ஐந்தாவது பெயர் தெளிவாகத் தெரியவில்லை. இந்த ஐந்து குலத்தவருமே அஞ்சு வண்ணத்தாராக விளங்கியிருத்தல் வேண்டும். இந்த உரிமைப்பத்திரத்திற்குச் சாட்சிகளாக இருந்தவர்கள் நாடுகள் என அழைக்கப்பெற்ற ஐந்து மாவட்டங்களின் சிற்றரசர்களாவர். அவர்களில் ஒருவர் வேணாட்டின் அரசரான கோவர்த்தன மார்த்தாண்டர். இதனால் பாஸ்கர இரவிவர்மரின் ஆட்சி கேரள நாடு முழுவதும் பரவியிருந்தது எனத் தெரிகின்றது. ஆயினும், சில நூலாசிரியர்கள் இந்தச் சரித்திரச் சான்றுகள் உண்மையல்ல என வீணே ஐயுறுகின்றனர். பாஸ்கர இரவிவர்மரது இக்குறிப்புகள் கேரளத்தின் பல்வேறு பகுதிகளில், தெற்கே சங்கனாச்சேரியிலும், வடக்கே வைநாட்டிலுள்ள திருநெல்லியிலும் காண்டல் கருதற்பாலது.

*11*-ஆம் நூற்றாண்டில் முதலாம் இராசராசர், முதலாம் இராசேந்திரர் ஆகிய இவ்விரு மன்னர்கள் காலத்தில் சோழ ஆட்சியானது வேணாடு உட்படக் கேரளத்தின் பெரும்பகுதியில் பரவியிருந்தது. இராசராசன் விழிஞத்தைக் கைப்பற்றியடைந்த வெற்றியும், பரசுராமரின் நாட்டை வென்றதாகத் திருவாலங்காடு ஏடுகளிலிருந்து கிடைக்கும் சான்றுகளும், சேர நாட்டில் அவர் சதய விழாவை நிலை நிறுத்தியதாகக் கலிங்கத்துப்பரணியில் காணப்படும் குறிப்புகளும் அவரது ஆட்சி கேரளம் முழுவதும் பரவியிருந்ததைக் காட்டுகின்றன. ஆனால், விழிஞத்திற்கு வடக்கே பரவியிருந்த சேர நாட்டுப் பகுதி சோழ மன்னரின் தலைமையை வெளிப்படையாக ஏற்றுக்கொண்டதே தவிர, அவரது நேர்

ஆட்சியின் கீழ் வரவில்லை. பிறகு கொல்லத்திலிருந்த சேரச் சிற்றரசர் ஒருவர், சோழப் பேரரசரான முதலாம் குலோத்துங்கருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார். குலோத்துங்கர் புரட்சி செய்த சிற்றரசரையும், மற்றும் பாண்டியரையும் கேரள மன்னரையும் அடக்கியாண்டதாக அவரைப் பற்றிய சிதம்பரக் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. இவ்வெற்றிகளைப் பற்றி **விக்கிரம சோழன் உலா**வும், **கலிங்கத்துப் பரணி**யும் மேற்கொண்டு சான்று பகர்கின்றன. கேரளத்தில் அடிக்கடி குழப்பங்கள் நிகழ்ந்தமையின், குலோத்துங்கர், பாண்டிய கேரள நாடுகளில் முக்கிய போக்கு வரவு வழிகளிலெல்லாம் நிலைப்படைகளை நிறுவினர். ஆயினும், 1098-இல் கொல்லத்தில் மற்றொரு புரட்சி தொடங்கியதென்றும், இதில் வேணாட்டு வேந்தரும் சேர்ந்திருந்தாரென்றும் தெரிகிறது. ஆனால், குலோத்துங்கரின் தளபதி நரலோக வீரர் அதை அடக்கி, கொல்லம் அழிந்ததின் நினைவாகக் கொல்லம் அழிந்த ஆண்டு என்ற ஊழிக் காலத்தை ஏற்படுத்தினர்.

முதலாம் குலோத்துங்கருக்குப் பிறகு விக்கிரம சோழர் காலத்தில் பராந்தக பாண்டியர், வேணாட்டுக்கெதிராகத் திருவனந்தபுரம் வரை படையெடுத்துச் சென்றார். வேணாட்டு அரசரை வென்று, அவரது புதல்வியைப் பராந்தகன் திருமணம் செய்துகொண்டார். அவருடைய வெற்றிகளைப் புகழ்ந்து கூறும் கன்னியாகுமரிக் கல்வெட்டுக்கள் வேணாட்டைச் சேர நாடென்றும், கூபக தேசம் என்றும் திரித்துக் கூறுகின்றன. இதனால் சேர வேந்தர், வேணாட்டரசர் ஆகிய இவ்விருவரது நாடுகளின் எல்லையையும் ஆட்சிப் பரப்பையும் அலகிட்டுக் கூற இயலவில்லை. கூபகம் கொல்லத்துக்கு அருகேயுள்ள இடம். சிலவேளை

சேரமன்னர் கூபக மன்னர் என்று அழைக்கப் பெற்றிருக்கலாம். குலோத்துங்கர் காலத்தில் சேர அரியணையில் அமர்ந்திருந்த மன்னர், இராமன் திருவடி திருகுலசேகர சக்கரவர்த்திகள் என்பவர் ஆவர். வேணாட்டு வேந்தரும், சேர அரசரும் ஒருவரே என்று சிலர் கூறுவது[1] ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று. வேணாட்டு மன்னர் சிலர், தம்மைக் கூபக மன்னரென்று அழைத்தபோதிலும் சேர மன்னர் காலத்திலேயே வேணாட்டு வேந்தரும் ஆட்சிசெய்து வந்தனர் என்ற உண்மையானது அவரது கருத்துத் தவறெனக் காட்டுகிறது.

12- ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில்தான் வேணாட்டு அரசரின் புகழ் வளரத் தொடங்கியது. 1117- முதல் 1145 வரை ஆண்ட வீர கேரளர், சோழ மன்னரை முறியடித்து நாஞ்சில் நாடு முழுவதையும் தமது கொடியின் கீழ்க் கொண்டு வந்தார். வீர கேரளருக்குப் பிறகு ஆட்சி செலுத்திய மன்னர்களும் நாஞ்சில் நாட்டில் தமது ஆட்சியை நிலைநாட்டி வந்தனர். ஆயினும், அவர்கள் அடிக்கடி பாண்டியரின் தாக்குதல்களை எதிர்த்து நிற்க நேர்ந்தது. 12-ஆம் நூற்றாண்டின் இறுதியில் வேணாட்டை யாண்ட உதய மார்த்தாண்டவர்மர், கோசாலக் கல்வெட்டுக்களில் 'கோளம்ப' (அல்லது கொல்லத்து) மன்னர் என்று அழைக்கப்படுகிறார். இதனால், அவர் கொல்லத்தில் தமது ஆட்சியை நிறுவியிருத்தல் கூடுமெனவும், அல்லது திருமணத்தொடர்பினால் சேர வேணாட்டு அரசுகளை ஆள உரிமை பெற்றிருக்கலாமெனவும் கூறலாம்.

ஆட்சி முறை: பிற்காலச் சோழர்களின் ஆட்சிமுறை மிகத் திறமையாகவும், சீராகவும் நடைபெற்று வந்தது.

1. T.K. Velu Pillai-Travancore State Manual, Vol.II.P.127

ஆயினும், அவர்களது முறை அக்காலத்தில் தென் இந்தியாவில் தழைத்தோங்கிய பிற அரசுகளின் முறைகளில் வேறுபட்டது அன்று. வாழையடி வாழையாக வளர்ந்து வந்த தந்தை மரபு வழியே மன்னர் அரியணை ஏறினர். எனினும், காலம் செல்லச் செல்ல நாட்டில் அரசுரிமைக் குழப்பங்கள் மிகுந்தன. ஆறும் விக்கிரமாதித்தர் தம் உடன்பிறந்த அண்ணனோடு சண்டைகள் நடத்தியதும், உத்தமசோழர் தம் உடன் பிறந்த தங்கை மகனைக் கொலை செய்ததும் அரசுரிமைப் போட்டிகளின் கடுமையைக் காட்டுவன. அடிக்கடி அயல் அரசுகளின் சூழ்ச்சிகளாலும் தலையீடுகளாலும் நிலை இன்னும் தாழ்ந்தது. கீழைச் சாளுக்கிய அரியணையில் தமக்கு விருப்பமுள்ளவர்களை அமர்த்தும்படி மேலைச் சாளுக்கியரும், சோழரும் எடுத்த முயற்சிகளினால் போரும் பகைமையும் நெடுங்காலம் வளர்ந்துகொண்டே போயின.

அரச தூதுவர்கள் உயர்நிலை பெற்றதாலும், நாட்டில் ஏற்பட்ட செல்வப் பெருக்கினாலும் அரசவை பொலிவுடனும் சிறப்புடனும் திகழ்ந்தது. அரண்மனை விழாக்களுக்கும், சடங்குகளுக்கும் ஏராளமான பொருள் செலவாயிற்று. அரசனுடைய மெய்காப்பாளர், ஏவலாளர் முதலியோர் எண்ணிக்கையும் மிகுந்தது. இவற்றின் விளைவாக மன்னருக்கும், மக்கட்கும் இடையேயுள்ள வாழ்க்கை நிலையில் பெரும்பிளவு ஏற்பட்டது; அரசியல் அலுவலாளர்களால் அதனை இணைக்க முடியவில்லை. அவர்கள் அரசரது மதிப்பைப் பெற விழைந்தனரே தவிர, மக்களது அன்பைப் பெற விரும்பவில்லை.

அமைச்சரைத் தவிர வேறு பல அலுவலாளரும் அவரவர்கட்குக் குறிக்கப்பட்ட வேலைகளைச் செய்து வந்தனர்.

சோழ ஆட்சி முறை திறமைமிக்க அலுவலாளர்களால் நடைபெற்று வந்தது. தலைமைச் செயலாளர்கள், வரி இறுக்கும் அலுவலாளர்கள், நிலம் அளத்தலை மேற்பார்வை செய்வோர் முதலானுரைப்பற்றிக் கேள்விப்படுகிறோம். அரசர் நம்பிக்கைக்கு உகந்த அலுவலாளர் 'ஓலைநாயகம்' என்பார். அவர், அரசர் அண்மையிலே அமர்ந்து அவர் கூறும் ஆணைகளை உடனே குறித்துக்கொள்வார். அவ்வாணைகளை நிறைவேற்றுகிறதற்கு உரியார் செயலாளர்; ஆகவே, அவற்றை அவர்க்கு அறிவிக்க வேண்டும். ஓலைநாயகத்தைத் தவிர, 'உடன் கூட்டம்' என்ற அமைச்சர் குழுவும் எப்போதும் அரசர் அண்மையில் இருந்தது. சிக்கலான செயல்களில் அவர்பால் கேட்டு அரசர் ஐயம் நீக்கிக்கொள்வார். வரவு செலவு கணக்கு களைப் பதிவு செய்யவும், அவற்றை மேற்பார்த்து நடத்தவும், கணக்குகளைத் தணிக்கை செய்யவும் தனித்தனி அலுவலாளர் இருந்தனர். சோழக் கல்வெட்டுக்களில் காணப்படும் 'கருமிகள்' என்ற பெயர் பொதுவாக அரசவை அலுவலாளர் களைக் குறிக்கிறது. சோழர் காலத்திலிருந்த பதவிகளின் தனிப்பெயர்களை விளக்கிக் கூற இயலவில்லை.

அக்காலத்தில் ஆட்சி நடத்திவந்த இராஷ்டிரகூடர், மேலைச் சாளுக்கியர், கங்கர், பாண்டியர் முதலியோர் அரசவைகளிலும், பல்வேறு ஆணையாளரும், அலுவலாளரும் பணியாற்றி வந்தனர். ஆயினும், அன்னுர் பிற்காலச் சோழர் ஆட்சியிலிருந்தது போல் ஒழுங்குடன் அமைந்த பெருங்குழுவாக இணைக்கப்பெற்றிலர். இராஷ்டிரகூடர் ஆட்சியில் அயல் நாட்டுக் காரியங்களைக் கவனிக்கும் 'மகாசந்தி விக்கிர'கரும் பொருளாளரான 'பண்டகாரிக்கரும்', 'பாலதிகிருத்தர்', 'தண்டநாயகர்',

'மகாதண்டநாயகர்' என்னும் மூன்று திறப்பட்ட படை ஆணையாளரும் இருந்தனர். கல்யாணி, வேங்கி சாளுக்கியர்களின் ஆட்சியிலும், இராஷ்டிரகூடர் அரசாங்கத்தில் இருந்தது போல் அதே பெயருடைய அலுவலாளர்கள் இருந்தனர். மகாசந்தி விக்கிரகர் என்ற பெயர் எல்லா அரசுகளிலும் காணப்படுகிறது. இப்பெயர் பெரும்பாலும் குப்தர்களிடமிருந்து பெற்றதாக இருக்கலாம். படைத் தலைவராகிய 'சேனாதிபதி', செயலாளராகிய 'அதிகாரிகள்', மாவட்டக் கண்காணியாகிய 'விஷயாபதி', கிராமத் தலைவனாகிய 'கிராமக் கூட்டன்' என்பார் பெயர்களை அவர்கள் கல்வெட்டுக்களில் காணலாம். 'இராய சூத்திரதாரி' என்ற திட்டக் குறிப்புத் தீட்டுவோர், 'இரகசியாதிகிருதர்' என்ற தனிச்செயலாளர், 'லேககர்' என்ற ஏடுகளைப் பாதுகாப்போர், 'நிதிகாரர்' என்ற பொருளாளர், 'படியார்' என்ற அரண்மனைக் கண்காணி ஆகியோர் அனைவரையும் பற்றிக் கங்கர்களின் ஏடுகள் கூறுகின்றன. மேலைச்சாளுக்கியரின் அரண்மனையில் 'மனெவர்கடெ' என்ற மனை மேற்பார்வையாளரும், 'பானேஸ்வர்கடெ' என்ற கண்காணியும் இருந்தனர். கீழைச் சாளுக்கியரின் அரண்மனையிலும் அதைப் போன்ற அலுவலாளர்கள் இருந்திருக்கலாம். ஆயினும், அவர்கள் பெயர்கள் நமக்குக் கிடைத்துள்ள நூல்களில் காணப் படவில்லை. எனினும், 'கட்ட கதிசன்' என்றழைக்கப்பட்ட அரசபடைத்தள மேற்பார்வையாளர் கீழைச் சாளுக்கியரின் ஆட்சி முறையில் இடம் பெற்றிருந்தார்.

'தண்டநாயகன்' என்ற பெயர் தக்காணத்திலும், அதன் தெற்குப் பகுதியிலுமுள்ள கல்வெட்டுக்களில் காணப்படுகிறது. பொதுவாக அப்பெயர் படைத்தலை

வர்களைக் குறித்தபோதிலும், ஏனைய அலுவலாளர்களுக்கும் அது வழங்கியதென அறிகிறோம். பெரும்பாலும் படை ஆணையாளரும், பொது அலுவலாளரும்கொண்ட ஒரு தொகுதியை அப்பெயர் குறிக்கலாம். பொதுவாக இதில் குறிப்பிடத்தக்கது என்னவென்றால், தக்காணத்தில் வழங்கப்பெற்ற பெயர்கள் வடநாட்டையும் வடமொழியையும் சார்ந்தனவாயும், சோழ ஆட்சி முறையில் வழங்கிய பெயர்கள் தமிழ் நாட்டிற்குரியனவாயுமிருந்தன.

அலுவலாளர் தொகை உயர்ந்தமையால் அரசியற் செலவும் உயர்ந்தது. எக்காலமும் போல் அக்காலமும் நிலவரியே அரசின் முக்கிய வருவாயாக இருந்தது. ஒவ்வோர் ஊரும் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய பகுதியைப் பொருளாகவேனும் பணமாகவேனும் செலுத்தியது. நிலத்தை முறைப்படி அளந்து பார்த்து, அதன் தரத்தையும் தன்மையையும் ஆராய்ந்து, அதற்கேற்ப வரி விதித்தனர். சோழர் மட்டுமன்றி, கன்னடநாடு, தெலுங்கு நாடு ஆகியவற்றின் அரசர்களும் நிலத்தை அளந்து வகைப்படுத்தினர். நில அளவிற்கு வெவ்வேறு வகையான அளவுகோல்களைக் கையாண்டனர் எனக் கல்வெட்டுக்களால் அறிகிறோம். விளைநிலங்களை, நன்செய் நிலங்களென்றும், புன்செய் நிலங்களென்றும் இருவகையாகப் பகுத்திருந்தனர். நன்செய் நிலங்களுக்கு வரி திட்டப்படுத்தும்போது நிலத்தின் செழுமையும், ஆங்கு வளரும் பயிரின் தன்மையும், நீர் நிலை வசதியும் கவனிக்கப்பட்டன. எவ்வளவு வரி விதிக்கப்பட்டது என்று திட்டவட்டமாகக் கூறமுடியவில்லை. முதலாம் இராசராசரது கல்வெட்டுக்களின்படி விளைபொருளில் மூன்றில் ஒரு பகுதியை வரியாக வாங்கினர் என்று தெரிகிறது. ஆனால்,

வேறு கல்வெட்டுக்களில், குறைந்த அளவு ஆறில் ஒரு பகுதி எனக் குறிக்கப்பெற்றுள்ளது. விசயநகராட்சியில் வரிப்பளு அதிகமான போதிலும் கன்னட தெலுங்கு நாடுகளில் மனு, மாதவாச்சாரியார் முதலியோர் கருத்துப்படி, இக்காலத்தில் ஆறில் ஒரு பகுதியே வாங்கி வந்தனர். இதுகாறும் கிடைத்துள்ள சான்றுகளிலிருந்து, தென் இந்தியாவில் நிலவரி, விளைபொருளில் ஆறிலொரு பகுதி முதல் மூன்றிலொரு பகுதி வரை, அரசாங்கம், வரியாகப் பெற்றதெனத் தெரிகின்றது. எல்லா அரசுகளிலும் மன்னர்கள் தனிப்பட்டவருக்கும், அற நிலையங்களுக்கும், நிலவரியிலிருந்து விதிவிலக்களித்தனர். கோயில் நிலங்களுக்கும், பார்ப்பனர் குடியிருப்புகளுக்கும், தனிப்பட்ட பார்ப்பனர், கவிஞர், வீரர் முதலியோருக்கும் அரசினர் அளித்த மானிய நிலங்களுக்கும் வரி வாங்குதல் இல்லை. இம்மானிய நிலங்கள் யாவையும் 'இறையிலி'யாகக் கொடுக்கப்பட்டிருந்தன.

தொழில் வரி, வீட்டு வரி, சொத்து வரி, சுங்க வரி, போக்கு வரவு வரி, திருமணம் முதலான திருவிழாச் சடங்கு வரி முதலியன அரசின் ஏனைய வருவாய்களாகும். மேலும், சுரங்கங்கள், காடுகள், உப்பளங்கள் முதலியவற்றிலிருந்தும் வருவாய் வந்தது. முதலாம் குலோத்துங்கர் பல போக்கு வரவு வரிகளை நீக்கிப் புகழ் பெற்றார் எனக் கூறும் செய்தியினால், அக்காலத்தில் அவ்வரிகள் அதிகமாகவும் மக்கட்குப் பளுவாகவுமிருந்தன எனத் தெரிகிறது. கன்னட நாட்டில் விறகு, வைக்கோல் உள்ளிட்ட எல்லாப் பொருட்களின் மீதும் வரி விதித்தனர் என்பது கவனத்திற்குரியது.[2] மேலே கூறப்பெற்ற வரிகள் அக்காலத்தில் தென்

2 Rice, Lewis: Mysore Gazetteer, Vol. I. P. 583.

இந்தியாவில் திகழ்ந்த எல்லா அரசுகளிலும் இயல்பாக இருந்தன. நில வரி, சொத்து வரி, தொழில் வரி, வாணிக வரி முதலியவை தென் இந்திய அரசாங்கங்களின் தலைமை யான வருவாய்கள். சில தொழில் வரிகள் வியக்கத் தக்கன. குயவருக்கு அவர் தொழில் மீதும், அவர் கருவி யாகக்கொண்ட சக்கரத்தின்மீதும் வரி விதித்துள்ளனர். அவ்வாறே வண்ணாருக்குத் தொழில் வரியுடனே அவர் துணி துவைக்கும் கல்லிற்கும் வரியும், நாவிதருக்கும், தொழில் வரியும் சவரக் கத்தி வரியும் இருந்தன. கள்ளிறக்குவோர் தம் தொழிலுக்கும், பனையேறும் ஏணிக்கும் வரி செலுத்தினர். நாட்டிய மகளிர், தம் தொழிலுக்கு மட்டுமே அன்றி, தம் முகம் பார்க்கும் கண்ணாடிக்கும் வரி கொடுக்க வேண்டியதாயிற்று.

குற்றவாளிகளிடமிருந்து நீதிமன்றங்கள் தண்டம் இறுத்த பணமும் அரசியல் வருவாயைப் பெருக்கியது. நீதி வழங்கித் தண்டம் இறுக்கும் பொறுப்பு ஒரு தலைவனுக்கேனும் ஊர் அவைக்கேனும் விட்டிருந்தனர். கன்னட நாட்டில் அதற்கென முதியவர் ஒருவரைத் தெரிந் தெடுத்தனர். இதில் குறிப்பிடத்தக்கது யாதெனின், கொலைக் குற்றம் உட்படப் பலவகைக் குற்றங்களுக்காகவும் அரசாங்கத்திற்கு அல்லது திருக்கோவில்களுக்கு அபராதப் பணம் கட்ட வேண்டும் என்பதே. அரசியல் அலுவலாளர் ஒருவரைக் குத்திக் கொன்ற குற்றவாளிக்கு, இரண்டாம் இராசேந்திரர், அண்மையிலுள்ள கோவில் திருவிளக்கு நெய்க்காக 96 ஆடுகளை அபராதம் கொடுக்குமாறு கட்டளையிட்டார்.

பொதுவாக, நீதிமுறையில் கடுமை குறைந்திருந்தது. ஆயினும், பெருங்குற்றம் செய்தவர் கொலைத் தண்டனை

பெற்றனர். அவரை வாளால் தலை வாங்கியேனும் யானைக் காலின் கீழ் இட்டேனும் தீர்ப்பை நிறைவேற்றினர். பெரும்பாலும், ஊர் அவைகளிலும் பஞ்சாயத்துக் குழுக் களிலும் வழக்குகளை விசாரித்து நீதி வழங்கினர். நாட்டை ஆளும் மன்னரே நீதிக்கு உறைவிடம் எனவும், அவரே இறுதித் தீர்ப்பு வழங்க வல்லவர் எனவும் மதித்தனர். தலைநகரத்திலும் பேரூர்களிலும், அரசர் சார்பாக நீதி வழங்கும் நீதிபதிகள் இருந்தனர். திருக்கோவில் அதிகாரி களும் குலப்பஞ்சாயத்துச் சபைத்தலைவர்களும் உள்ளூர்க் குழப்பங்களைத் தீர்த்துவைத்தனர். ஆயின், பல திறத்தனவாகிய நீதி மன்றங்களின் ஆட்சித் திறன் செவ்வனே வரையறுக்கப்பெற்றிலது.

சுந்தரமூர்த்தி அடிகளார் குற்ற விசாரணை பற்றிப் பெரிய புராணத்தில் காணும் குறிப்புக்கள் நீதி விரை வாகவும், நடுவு நிலைமையாகவும் வழங்கப்பெற்றதென் பதை நன்கு எடுத்துக் காட்டுகின்றன. ஏடுகளின் சான்றுகளே வழக்கில் தலைமை பெற்றன. போதிய சான்று கிடைக்காவிடில் சில வேளை உண்மையைக் கண்டறிதற்குக் கடுமையான முறைகளைக் கையாண்டனர். ஆயினும், தென் இந்திய அரசுகள் அனைத்திலும் தண்டனை முறை களில் மென்மையும் மனிதப் பண்பும் விரவியுள்ளன. திருட்டு, களவு, பொய்யுரை முதலிய குற்றங்களுக்கு மரண தண்டனை விதித்தனர் என்றும், பிற குற்றங்களுக்குக் குறைந்த தண்டனையே வழங்கினர் என்றும் சாளுக்கிய, கங்க, சோழக் கல்வெட்டுக்கள் பகர்கின்றன. தனக்குச் சொந்தமில்லாத நாயைத் தன் உடைமையில் வைத்திருந்த குற்றத்திற்காக தலைவன் ஒருவனது வீட்டிற்கு நெருப்பு வைத்து, அவன் சொத்துக்களைப் பறி முதல் செய்தனர் என்று ஒரு கங்கக் கல்வெட்டு கூறுகிறது.

கிராம ஆட்சி முறை : முற்காலத்தில் இருந்தது போல் நாடு பல பகுதிகளாகப் பிரிக்கப்பெற்று ஆட்சி முறை செவ்வனே நடைபெற்று வந்தது. சோழர், கீழைச் சாளுக்கியர் ஆகிய இவ்விருவரது ஆட்சி முறையில் மண்டலம் என்பதே நாட்டில் பெரும்பிரிவு. சோழநாட்டில் ஒவ்வொரு மண்டலமும் பல வளநாடுகள் என்றும், வளநாடுகள், நாடுகள் என்றும், கூற்றங்கள் என்றும் பிரிக்கப்பெற்றன. தென் இந்தியாவின் பிறபகுதிகளில் கி. பி. 6-ஆம் 7-ஆம் நூற்ருண்டுகளில் நிலவிய பிரிவு களும் பெயர்களும் தொடர்ந்து நின்றன. மண்டல ஆட்சிக்கு அரச குடும்பத்தினர் ஒருவர் தலைவராக நியமிக்கப்பெற்ருர். சில வேளை வேறு தக்கோர் ஒருவர் தலைவர் ஆனுர்.

இக்காலத்தில் சிறப்பாக விளங்கியது கிராமங்களின் தன்னுட்சியே. இருதிறப்பட்ட கிராமங்கள் இருந்தன. ஒன்று பிரமதேயம், மற்ருென்று ஊர். இது தமிழ் நாட்டு முறை. தெலுங்கு கன்னடப் பகுதிகளில் ஊர் என்பது கிராமம் என்று பெயர் பெற்றது. இவ்வாட்சி முறையை விளக்கிக் காண்பிக்கும் சான்றுகள் பல உள. ஆனுல், தக்காணத்திலும் இது போன்ற முறையே நிலவியதா என்பதில் ஐயம் உளது. பிரமதேயம் என்னும் பார்ப்பன ரது சிற்றூரில் 'மகாசபை' ஒன்று பணியாற்றியது. தக்காணத்தில் அது 'மகாஜனம்' என்றழைக்கப்பட்டது. கி.பி. 10 -ஆம் நூற்ருண்டில் மகாசபை தன்னுட்சியை வளர்க்கும் ஆற்றல் மிக்க கருவியாக உரம் பெற்றது. அக் காலத்தைச் சேர்ந்த உத்தரமேரூர் கல்வெட்டுக்களில் மகா சபையின் அமைப்பும், அது பணியாற்றிய முறைகளும் வியக்கத்தக்க வகையில் தீட்டப்பெற்றுள்ளன. செய

ளாற்றும் பொறுப்பு 'ஏரிவாரியம்', 'பொன்வாரியம்'போன்ற பல குழுக்களுக்கு விடப்பெற்றது. இக்குழுக்களை அமைக்கும் முறை குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு கிராமமும் அல்லது சிற்றூரும் குடும்புகள் என்னும் முப்பது தொகுதிகள் அடங்கியது. வயது, குணம், கல்வியறிவு, சொத்து முதலிய தகுதியுள்ள ஒரு சிலரை ஒவ்வொரு தொகுதியும் தெரிந்தெடுக்கும். இங்ஙனம் தெரிந்தெடுக்கப்பெற்றவர்களிலிருந்து சிலரைக் குடவோலை அல்லது சீட்டு மூலம் நேரடியாகத் தெரிந்தெடுப்பர். தனிச் சீட்டுகளின் மூலம் இறுதியாகத் தெரிந்தெடுப்பதன் தீங்குகளைத் தவிர்க்கவே சீட்டுகளும் தேர்வும் கலந்த இச்சீரிய முறையைக் கையாண்டனர். எல்லாப் பிரமதேயத்திலும் இம்முறையில் குழுக்கள் அமைந்தன என உறுதி கூற இயலாது. தமிழ், மலையாள, கன்னட, தெலுங்குப் பகுதிகளிலுள்ள பிரமதேயங்களில் மகாசபைக் குழுக்கள் பணியாற்றி வந்தன என அறிகிறோம். 10-ஆம் நூற்றாண்டு முதல் 14-ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலம், தென் இந்தியப் பிரமதேயங்களின் பொற்காலம் என்று கூறலாம்.

இரண்டாவது வகை ஊர் எனப்பட்டது; இது பிரமதேயமல்லாத கிராமம். தக்காணத்தில் இதைத்தான் கிராமம் என அழைத்து வந்தனரென்று முன்னரே கண்டோம். சிற்றூர்களே நாட்டில் பெரும்பாலன. எனினும், அவை பற்றிக் கல்வெட்டுக்களிலிருந்து ஒரு சிறிதே அறிகின்றோம். ஊரின் அவைக்கும் ஊரென்றே பெயர் வழங்கி வந்தது. தீண்டா வகுப்பினர் நீங்கலாக ஊரில் வாழும் மக்கள் அனைவரும் அவையில் அமர்வர். கிராமத்திற்குப் பொதுவான காரியங்களில் அவை தீர்ப்பளிக்கும். ஒவ்வொரு ஊரிலும் 'கணம்', 'ஆளுங்கணம்'

என்று அழைக்கப்பெற்ற, ஊர் அவையின் செயற்குழுக்கள் இருந்தன. ஊரின் அலுவலாளர்களில் **'தண்டல்'** என்ற மேற்பார்வையாளரும், **'நியாயத்தார்'** என்ற நீதிபதியும், **'கிழார்'** என்ற ஊர்த்தலைவரும் முக்கியமானவர்கள்.

10-ஆம் 11-ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த திருவாங்கூர் கல்வெட்டுக்களும், **பிரமதேயங்களைச் சார்ந்த** சபைகள் எவ்வாறு விரைவாக வேலை செய்தன என்னும் விவரங்களைக் குறிப்பிடுகின்றன. **நாடுகள்** என அழைக்கப்பெற்ற பகுதிகளைப் பற்றிய செய்திகளும் இங்குக் குறிப்பிடத்தக்கவை. **தறைகளின்** அவைகள் **தறைக் கூட்டங்களெனவும், நாடுகளின்** அவைகள் **நாட்டுக் கூட்டங்க**ளெனவும் பெயர் பெற்றன. பெரும்பாலும் இம்முறை கேரளம் முழுவதும் நிலவியிருத்தல் வேண்டும். கேரளம் முழுவதற்கும் சேர்ந்து 'மகாமகம்' எனப் பெயருடைய நாட்டவை இருந்தது. அது பன்னிரண்டு ஆண்டுகளுக்கொரு முறை மாமாங்க விழாவின்போது திருநாவாய் என்ற இடத்தில் கூடும். இவ்வகையில் கூடுவோரில் பெரும்பாலார் நாயர் குலத்தினரே. அன்னார், நாட்டையும் அதன் பற்பல பகுதிகளையும் பொருள்பற்றி முடிவு கூறுவர். நாயர்கள், 'ஐந்நூறு', 'அறுநூறு', 'ஐயாயிரம்' என்ற கூட்டங்களாக ஒன்றுபடுவர். பெரும்பாலும் இக்கூட்டங்கள் நாட்டுக் கூட்டங்களையே குறிக்கும்.

நாயர்கள் படைப்பயிற்சி பெற்றமையின், மன்னர் நேர் பார்வையின் கீழ் ஊர்களைப் பாதுகாத்து வந்தனர். 'களரி' என்றழைக்கப்பட்ட உடற்பயிற்சிக்கூடம் பழங்காலத்திலிருந்தே கேரளத்தில் நிலைத்திருந்தது. முற்காலத்தில் 'களரி'யில் உடலுக்குத் தனிப் பயிற்சி அளித்தனர். நம்பூதிரிகள் சிறப்பு நிலை எய்திய பிறகு களரிகளில்

வெறும் படைப்பயிற்சி மட்டுமே அளித்து வந்தனர். ஒவ்வோர் இளைஞனும் களரிக்குச் செல்வதை முக்கியமாகக் கருதினான். ஆகவே, எல்லா நாயர்களும் படை வீரரானார்கள். ஓர் ஐரோப்பிய ஆசிரியர் கூறுவது போல், "பண்டை நாள் நாயர்கள் பலர், 'ஸ்பார்ட்ட'ப் போர் வீரர்களைப் போலவும், அன்பு மன்றத்தில் அரிய செயற் பண்பினராகவும் விளங்கினர்." படையின் பொருட்டு ஒவ்வொரு 'நாடு'ம் பல 'தேசங்கள்' ஆகப் பிரிக்கப் பெற்றது. 'தேசங்களும்', 'நாடுகளும்' நாயர் தலைவரின் கீழ் இருந்தன. அவர்கள் நாட்டில் அமைதியை நிலை நாட்டி, அரசருக்கு வேண்டிய படை திரட்டி வழங்க வேண்டியிருந்ததால், அவர்களுக்குத் தனி உரிமைகள் வழங்கப்பட்டன.

உண்மையில், நாயர்கள் மன்னனைத் தாங்கி வரும் நிலமானியப் பெருமக்களைப் போலவே விளங்கினர். படைப்பணியோடு ஒவ்வோர் ஊரிலுமுள்ள பல்வேறு குடும்பத்தின் மூத்த புதல்வர், தங்கள் தலைவன் நடத்தி வந்த பயிர்த்தொழிலை மேற்பார்த்து, அதற்கு ஊதியமாக விளை பொருளில் ஒரு பகுதியையும் பெற்று வந்தனர். நாயர்கள் தங்கள் தரக் கூட்டம், நாட்டுக் கூட்டம் முதலிய வற்றால் மன்னன் கொடுங்கோலாட்சியைத் தடுத்து வந்த னர். ஆற்றல் மிக்க அவ்வவைகள், பாதுகாப்பு, நீதி, ஆட்சி முறை முதலிய வேலைகளைச் செவ்வனே செய்து வந்தன. 'கேரளோற்பத்தி' பகரும் சான்றுகள் தவிர, அந்நிய நாடுகளிலிருந்து வந்து நாட்டைப் பார்த்தவர்களும் இவ் வவைகளின் திறத்தை எடுத்துக் கூறுகின்றனர்.

'கிராமாதிபதிகள்' அல்லது 'தேசவாழிகள்' என்று அழைக்கப்பெற்ற ஊர்த்தலைவர்கள் கோவில் நிலங்களை

மேற்பார்த்தல், ஊர்களைக் கண்காணித்தல், போர் வீரர்களைத் திரட்டுதல், ஊராரின் குழப்பங்களைத் தீர்த்து வைத்தல் முதலான வேலைகளைச் செய்து வந்தனர். தேசவாழிக்குக் கிராமத்திலிருந்தது போன்ற உரிமை தன் நாட்டில் தலைவராகிய நாடுவாழிக்கும் இருந்தது. அவர், நாட்டில் பாதுகாப்பும் நீதியும் வழங்கும் முக்கிய அலுவலாளராக இருந்தார். அவரே வரி இறுக்கும் அலுவலாளராகவும் விளங்கினர்.

வேளுடு தவிர, கேரளத்தின் பெரும்பகுதியில் அரசாங்க வருவாயில் நிலவரி இடம் பெறவில்லை. இதற்குக் காரணம் என்னவெனில், நிலம் நம்பூதிரிகளுக்குச் சொந்தமானது என்று மக்கள் எண்ணி வந்ததேயாம். ஆயினும், மன்னர் சுங்கம் போன்ற வரிகளாலும், தேவையான காலத்தில் கட்டாய நன்கொடைகளாலும் பணம்சேர்த்தனர். இதனல், கொடுங்கோன்மை தோன்ற வழி உண்டாகியது. எனினும், நம்பூதிரி அமைச்சர்களும், நாயர் தலைவர்களும் கிராம அவையினரும் தம் அரிய பண்பினுலும், ஆற்றலாலும், கொடுங்கோன்மை தோன்ருவண்ணம் தடுத்து வந்தனர்.

கேரளத்தின் இடைக்கால அரசியலில் கோவில், அல்லது 'தேவஸ்வம்' சிறப்பான இடம் பெற்றிருந்தது. முக்கிய கோவில்களெல்லாம் பார்ப்பனப் பொறுப்பாளரின் மேற்பார்வையின் கீழ்த் தனியாட்சி பெற்றுத் தழைத்தன. கோவில்களின் நிலத்திலும், அவற்றின் சுற்றிலுமிருந்த இடம் முழுவதிலும் கோவிலாட்சிக் குழுக்கள் வரையிறந்த ஆட்சி செலுத்தின. எடுத்துக்காட்டாக, வைக்கம் கோவிலின் பொறுப்பாளர்கள் தம் ஆட்சிக்குட்பட்ட எல்லாக் குற்றவாளிகளையும் தண்டிக்க உரிமை பெற்றிருந்

தனர். இச்செய்தியை அக்கோவிலின் பழைய ஏடுகள் கூறுகின்றன. நாட்டை ஆளும் வேந்தராயினும் கோவில் ஆட்சிப் பகுதியில் குற்றம் செய்வாராயின் அக்குற்றத் திற்காக அவருக்குத் தண்டனை விதிக்கக் கோவில் ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் இருந்தது.

கி. பி. 7, 8 -ஆம் நூற்றாண்டுகளில் தென் இந்திய நகர்களில் தனியாட்சி செலுத்திய மன்றங்களும் கழகங் களும் இருந்தனவென்று முன்னரே கூறியுள்ளோம். அவை 14- ஆம் நூற்றாண்டு வரை செழித்தோங்கின என் பதற்குப் போதிய சான்றுகள் கிடைத்துள. தொழிற் கழகங்களும், வாணிகக் கழகங்களும் ஆர்வத்துடன் செய லாற்றி வந்தன. ஆனால், இக்காலத்தில் தொழிற்கழகங் கள் குலநலக் கழகங்களாக மாறலாயின. நெசவாளர், எண்ணெய் வணிகர், தோட்டக்காரர், கல்தச்சர், பொற் கொல்லர், கயிறு திரிப்போர், கூடை முடைவோர், கள்ளிறக்குவோர் முதலியவர்களின் தொழிற்கழகங்களைப் பற்றிக் கல்வெட்டுக்களில் காண்கிறோம். நகரங்களுக்கு அண்மையிலுள்ள நாட்டுப்புறங்களிலிருந்து தொழிற் கழகங்களுக்கு உறுப்பினர்களைத் தெரிந்தெடுத்தனர். இவை கோவில்களுக்கு நன்கொடை ஈட்டும் சமூகப் பணிக் கழகங்களாகவும் தொண்டியற்றின.

ஆனால் தொழிற்கழகங்களைவிட வாணிகக் கழகங்களே சிறந்த முறையில் அமைக்கப்பெற்றிருந்தன. நகராட்சி களில் அவை பெரும் பங்கெடுத்தன. குலவேறுபாடின்றி யாவரும் இக்குழுக்களில் உறுப்பினராகும் உரிமை பெற்றி ருந்த போதிலும் வைசியர் என்ற பிரிவினராகக் கருதப்பட்ட செட்டியார்களே இவற்றில் மிகுந்திருந்தனர். பார்ப்பனரும் முஸ்லீம்களும்கூட வாணிகக் கழகங்களின் உறுப்பினராக

இருந்தனர். இக்காலத்தில் தழைத்தோங்கிச் சிறப்புற்ற இருவகை வணிகக் கழகங்கள் மணிகிராமம், அய்யவொளெ என்பனவாகும். இவை தென் இந்தியா முழுவதிலும் மட்டுமே அன்றி, கடலிற்கு அப்பால் கிழக்கே மலாயா, சீயம், சுமத்திரா, பர்மா, இலங்கை முதலிய நாடுகளிலும் வாணிகத் துறையில் செயலாற்றி வந்தன. ஆகவே, இவ் வணிகருக்குப் பல நாடுகளோடு வாணிகம் செய்வோர் எனப் பொருள்படும் நானாதேசிகர் என்ற பெயர் வழங்கலாயிற்று. இவ்வாணிகக் கழகங்களில் நகரங்கள் எனப் பெயர் பெற்ற அவைகளும், குறிப்பிட்ட செயல்களை நிறைவேற்ற வேறு தனிக் குழுக்களும் இருந்தன. ஆயினும், தக்காணத்தி லுள்ள நகர்களின் தன்னாட்சியுரிமை தமிழ் நாட்டு நகரங் களினும் குறைந்த அளவினதேயாம். ஏனெனில், தக்காண நகரக் குழுக்களின் செயல்களை அரசியல் அலுவலாளர்கள் தணிக்கை செய்து வந்தனர்.

**சமூக வாழ்க்கை:** இக்காலத்தில் ஏற்பட்ட மிக முக்கிய சமூக மாறுதல் கீழ்ச் சாதிகளின் வளர்ச்சியாகும். இக் கால முதற்கொண்டே, கைக்கோளர், செட்டியார், கம்மாளர், இரதக்காரர், பட்டினவர் முதலான பல வகுப்பினரைப் பற்றி யும், வலங்கை, இடங்கை என்ற இரு புதிய குலப் பிரிவு களைப் பற்றியும் கேள்விப்படுகிறோம். இவ்விரு பிரிவுகளை, முதலில், முதல் இராசேந்திரர் காலத்தில் காண்கிறோம். மூன்றும் குலோத்துங்கர் சமூகப் பிளவினை ஒழுங்குபடுத்த முயன்றதாகக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. மேலும், **சோழன் பூர்வபட்டயம்** என்ற இக்காலத்துக் கையெழுத்து ஏடொன்று, மன்னன் செய்த மாற்றங்களைத் தெளிவாக விரித்துக் கூறுகிறது. இது, சோழ மன்னன் அளித்த பழைய செப்பு ஏட்டின் ஒரு பிரதி என்று அப்பூர்வ பட்டயம்

கூறுகின்றது. இந்தப் பட்டயம் நாட்டின் சில பகுதிகளில் சமூகமும், அரசாங்கமும் அமைக்கப்பெற்ற முறையை விளக்குகிறது. இதில் வேளாளர், கைக்கோளர்,செட்டிகள் முதலிய வகுப்பினரைப்பற்றிக் கூறப்பட்டிருப்பதுடன் அவர்கள் பெரும்பாலும் மக்கட்டொகை மிகுந்த பிற பகுதி களிலிருந்து வந்து காஞ்சிபுரத்தில் குடியேறினரென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஏடு எழுதப்படுவதற்கு மூன்ரும் குலோத்துங்கரே மூலகாரணமாய் இருந்திருக்க வேண்டும். ஏனெனில், மூன்ரும் குலோத்துங்கரோடு தொடர்புடையவர்களாக மற்றக் கல்வெட்டுக்கள் கூறும் கஸ்தூரிரெங்கச்செட்டி, வெண்ணய்நல்லூர்ச் சடையப்ப முதலி என்னும் இரு தலைவர்களைப்பற்றிப் பூர்வபட்டயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கம்மாளர்களுக்கு அரசர் வழங்கிய உரிமைகளைப்பற்றி ஒரு கல்வெட்டுக் கூறும் செய்தியின் பிரதிகள் கரூர், பேரூர், மொடக்கூர் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. அந்நாளிலிருந்து கம்மாளரின் திருமண விழாக்களிலும் சாவுபற்றிய சடங்குகளிலும், இரட்டைச் சங்கும், கொட்டும் முழக்கலாமென்றும், அன்னர் செருப்புக்கள் அணியலாமென்றும், அவரது வீட்டுச்சுவர் களில் வெண்சாந்து பூசலாமென்றும் சில உரிமைகளைக் கொடுத்ததாக அது குறிப்பிடுகிறது.

இக்காலத்தில்தான் 'முதலியார்' என அழைக்கப்பட்ட 'வேளாளர்' குலத்தைப் பற்றிய தெளிவான குறிப்புக்களைக் காண்கிருேம். பவானிகூடல் என்னுமிடத்தில் கிடைக்கப் பெற்ற கி.பி. 1010- ஐச் சார்ந்த வரலாற்று நூற்சான் ருென்றில் இக்குலத்தைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஆயினும், மூன்ரும் குலோத்துங்கரின் காலத்திலிருந்துதான் முதலியார் வகுப்பு உயர்ந்து விளங்குவதைக் காண்கிருேம்.

அதன் பிறகு சோழர், பாண்டியர் ஆட்சியில், முதலியார்கள் அமைச்சர்களாகவும் ஊர்த் தலைவர்களாகவும் திகழ்ந்தனர். 13-ஆம் நூற்றுண்டிலும், அதன் பிறகும், பாண்டியர் மூன்றும் ஜடாவர்மர் காலத்தில் தாரமங்கலத்தில் குடி பார்த்திருந்த முதலியார்களும், நாஞ்சில் நாட்டிலுள்ள அழகிய பாண்டிபுரத்தில் வாழ்ந்த பெரிய வீட்டு முதலியாரும் இதற்கு எடுத்துக்காட்டாவர். கொங்கு நாட்டில் வேடருக்கும் வேளாளருக்குமிடையே எழுந்த பகையைச் சோழ மன்னன் தீர்த்து வைத்ததாக அறிகிறோம். ஏறத்தாழ 9-ஆம் நூற்றுண்டின் நடுவில் கொங்கு நாட்டை வென்ற முதல் ஆதித்திய சோழன் காலத்தில்தான் இது நிகழ்ந்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது. கொங்கு நாட்டில் வேளாளர்கள் குடியேறியதாகச் சொல்லப்படும் செய்தியும், அதன் பயனுக அங்கே ஏற்பட்ட சமூக மாறுதல்களும் எவ்வாறு குடியேற்றத்தின் விளைவாக கிளைக்குலங்கள் தோன்றின என்று காட்டுகின்றன. அக் காலத்தில் அங்கே குடியிருந்த வேடருக்கும், புதிதாக வந்த வேளாளருக்கும் சண்டை நிகழ்ந்ததாக இன்றும் கோயமுத்தூர் மாவட்டத்தில் கூறப்படுகிறது. முற்காலத்தில் இப்பகுதியை ஆண்டு வந்த கங்கர்கள் தமதாட்சியை நிலைநாட்டுவதற்காகப் பல வேடர்களை வரவழைத்து, அங்கே குடியேற்றியிருந்தார்கள். புதிய குடிகளான வேளாளருக்குத் தம் அம்பட்டர்களைத் தொழில் செய்யாதவாறு வேடர்கள் தடுத்தனர் எனக் கூறப்படு கிறது. ஆகவே, வேளாளர்கள், தம் இனத்தவருள்ளே பிரிவுகளை ஏற்படுத்தி அம்பட்டன், வண்ணான், மளிகைக் கடைக்காரன், பறையடிப்போன் எனப் பகுத்துக்கொண் டனர். இவ்வாறுக, வேளாளன், அம்பட்டன், வண்ணான்,

செட்டி, பறையன் ஆகிய 'பஞ்ச ஜாதி' என்ற ஐந்து வகுப்புக்கள் அப்பகுதியில் ஏற்பட்டன என அறிகிறோம். தென்இந்தியா முழுவதும், முற்றிலும் இதைப் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுவிட்டாலும், இவ்வாறு ஆங்காங்கு கிளைக்குலங்கள் தோன்றின என்பதை இது ஒருவாறு காண்பிக்கிறது.

தொழில் மட்டுமன்றி, சமூகப் பழக்க வழக்கங்களும் வாழ்க்கை முறைகளும், இன வேற்றுமைகளை வலுப் படுத்தின. பொது விருந்துண்ணுவதிலும், கோவிலின் பல பகுதிகளுக்குள் செல்வதிலும் தனி உரிமைகள் நிலை பெறலாயின. இடையிடையே உரிமைகளுக்காகச் சாதி களுக்கிடையே பகை மூண்ட போதிலும், ஒவ்வொரு வகுப்பைச் சார்ந்தவர்களுக்குள்ளே சமூக வாழ்க்கையில் ஒருவாறு ஒற்றுமை நிலவியது.

கீழ் வகுப்பினரின் நிலை வரவரத் தாழ்ந்துகொண்டே போயிற்று என்பது மறுக்க முடியாத உண்மை. அவர்கள் தம் இழிந்த நிலையை ஏற்றுக்கொண்டனர் என்பதிலிருந்து அன்னார் உள்ள நிறைவுடன் வாழ்ந்தாரெனக் கூறமுடியாது. கல்வியின்மையாலும், நல்வாழ்க்கைக்கேற்ற நலன் பெருமையாலும், அவர்கள் கீழான வேலைகளைச் செய்து, சமூகத்தில் இழிந்த நிலையெய்தி வறண்ட வாழ்வே வாழ்ந்து வந்தனர். தாழ்ந்த குலத்தவரில் பலர் பண்ணையாட்களாக அமர்ந்து அடிமைகளைப் போல வாழ்ந்தனர். தீண்டாமை முதிர்ச்சி பெற்றது. எடுத்துக்காட்டாக, சமூகத்தின் கீழ்ப் படியிலுள்ள பறையர், சில குலத்தவர் கொண்டாடும் விழாக்களிலே பறையடிக்காதவாறு தடுக்கப்பட்டனர். இதன் விளைவாகப் பிறந்த குழப்பங்களில் அரச

அலுவலாளர் தலையிட்டு முடிவு செய்தனர். எல்லாச் சாதிக்காரரும் கொண்டாடும் சில நிகழ்ச்சிகளிலும் பறையன் முரசொலிக்க வேண்டுமென்றும், அதற்குக் கூலியாக அவனுக்கு நெல்லும், கோழியும் கொடுக்க வேண்டுமென்றும் 13-ஆம் நூற்றுண்டில் அரச அலுவலாள ரொருவர் தீர்ப்புக் கூறியதாக அறிகிறோம். இராமநாத புரத்தில் காணப்படும் இக்குறிப்புக்கள், அக்காலத்தில் அடிக்கடி நிகழ்ந்த சாதிக் குழப்பங்களில் அரசர்கள் செய்த முடிவின் தன்மையைக் காட்டுகின்றன எனக் கூறலாம். கொங்கு நாட்டில் முற்காலத்தில் வேளாளருக்கு வேலை செய்து வந்த பறையர்கள், 'கொங்குப் பறையர்கள்' என ஒரு வகுப்பினராகப் பிரிந்தனரென்றும், அவர்கள் இந்நாள் வரை வேளாளரின் ஈமச்சடங்குகளைச் செய்துவருகின்றன ரென்றும், அச்சடங்குகளைச் செய்யும் உரிமை பிற குலங்களில் இறந்தவனின் மூத்த மகனுக்கே உரியதென்றும் அறியற்பாலது. கிளை வகுப்புக்கள் எவ்வாறு பிறந்தன என்பதை, 'வெள்ளான் செட்டிகள்','வெள்ளான் நாடார்கள்', 'செந்தலை வெள்ளாளர்' தோன்றிய முறையிலிருந்து காணலாம். வாணிகத் தொழில் செய்த வேளாளர் 'வெள்ளான் செட்டிகள்' எனவும், கள்ளிறக்கும் வேளாளர் 'வெள்ளான் நாடார்' எனவும், செந்தலை எனுமிடத்திலிருந்து வெளியேறியவர்கள் 'செந்தலை வேளாளர்' எனவும் அழைக்கப்பட்டனர். இப்பிரிவுகள் ஏற்பட்ட சில காலத்துக்குள் இவை போன்ற பற்பல கிளைப்பிரிவுகள் தோன்றின.

சமூக வசதிகளுக்கேற்ப நிகழ்ந்த இப்பிரிவுகள், அல்லது பெரும்பாலும் தற்செயலாக நேர்ந்த இப்பாகு பாடுகள், வெகு விரைவில் நிலையான இனப் பிரிவுகளாக

மாறின. சாதிகளும், கிளைச்சாதிகளும் தம்முயர்வுபற்றித் தமக்குள் போரிடத் தொடங்கின. தம் குலமே உயர்ந்த தெனக் காட்டுவதற்காகப் பழங்காலத்தில் தாம் உயர் குலத்தவரோடு தொடர்புடையவர்களெனக் கதைகள் புனையத் தொடங்கினர். தாழ்ந்த இனத்தார் தாம் அந்தண ரோடும் சத்திரியரோடும் உறவுகொண்டவர்களெனக் காட்டித் தம் நிலையை உயர்த்த முயன்றனர். 'இடங்கைச் சாதியினர்' தமது 'அக்கினி குண்ட'ப் பிறப்பைப் பற்றிக் கதை கட்டினர். இதைப் பற்றிய செய்தி மூன்றும் குலோத்துங்கர் காலத்துக் கல்வெட்டில் காணப்படுகிறது. அதில், இடங்கை வகுப்பினருக்கு வழங்கப்பட்ட குழலும், சங்கும் ஊதும் உரிமைகள் முதலியவை பற்றிக் கூறப்பட் டுள்ளது. இவ்வாருக இனப் பிரிவுகள் வளர்ந்ததோடு அவற்றிடையே தோன்றிய பகைமையும் முற்றியது.

இக்காலத்தில்தான் பெண்களின் நிலையும் தாழ்ந்தது. அன்னுர் தம் வீடுகளிலே அடைபடலாயினர். உயர்குலப் பெண்கள் கோவில் வழிபாட்டிற்கும், ஊர் விழாக்களுக்கும் தவிர, பிற காலங்களில் வெளியில் வருவதே அரிதாயிருந் தது. நடுத்தர வகுப்புப் பெண்கள் சற்று மிகுதியான உரிமைகள் பெற்றிருந்தனர். எனினும், அவர்களும் தம் தெருக்களைக் கடந்து அப்பால் செல்வதில்லை. தாழ்த்தப் பட்ட சாதியினர்களைத் தவிர மற்றெல்லோரிடையிலும் குழந்தை மணம் நிலைபெறலாயிற்று. கைம்பெண்கள் தம் உரிமைகள் யாவும் இழந்து பல இன்னல்களுக்குட்பட்டனர். உடன்கட்டை ஏறுதல் வழக்கிலிருந்தது. ஆயினும், முன் பிருந்ததைவிடக் குறைந்து வந்தது. அக்காலத்தில் நடை பெற்றதாக நாம் கேள்விப்படும் ஒரு சில உடன்கட்டை யேறும் நிகழ்ச்சிகளில், சுந்தர சோழனின் அரசியாகிய

வானவன் மாதேவி உயிர் துறந்தது குறிப்பிடத்தக்கதாகும். 13-ஆம் நூற்றுண்டில் தென் இந்தியாவைச் சுற்றிப் பார்த்த வெனிஸ் நாட்டவரான மார்க்கோபோலோ, அக் காலத்தில் உடன்கட்டையேறுதல் வழக்கிலிருந்ததாகக் கூறியுள்ளார்.

ஏழாம் நூற்றுண்டில்[3] தமிழ் நாட்டில் தோன்றிய 'தேவதாசி' முறையானது முதலாம் இராசராசரால் நிலை நாட்டப்பெற்றது. அக்காலத்தில் தக்காணத்திலுள்ள கோவில்களிலும் அம்முறையைக் கையாண்டனர். அப் பொழுதிருந்த தேவதாசிகள் நாட்டிய இசைக் கலைகளில் தேர்ச்சியுற்றவர்களாகவும், பக்தியில் முதிர்ந்தவர்களாகவும் திகழ்ந்தனர். சிலர் மன்னர்களோடும், செல்வர்களோடும் நெருங்கிப் பழகினர். ஆயினும், அவர்கள் கூட்டம் முழு வதையும் தாக்கிய தாழ்வு நிலை பிற்காலத்தே ஏற்பட்டது.

தென் இந்திய வரலாற்றின் இடைக்காலத்தில் கோவில் முதல் இடம் பெற்றிருந்தது. கோவிலே மக்களது சமய, சமூக, பொருளாதார, அரசியல், கலை வாழ்வை மாற்றும் திறன் பெற்றிருந்தது. பார்ப்பனரைத் தவிர வேறு பல குலத்தவரும் கோவிலுடன் தொடர்பு வைத்திருந்தனர். கோவில்களுக்குச் சொந்தமாக நில புலன்கள் இருந்தன. மேலும், கோவில் அலுவல்களில் பல மக்களை அமர்த்தியிருந்தனர். கோவிலுக்குத் தேவைப் பட்ட பொருள்களையும் பண்டங்களையும் பக்கத்திலிருந்து வாங்கினர். இம்முறைகளிலெல்லாம் கோவிலானது, மக்களது பொருளாதார நிலையில் பெரும்பங்கெடுத்து

3. பல்லவர் காலத்திலே தேவதாசிகள் சில கோவில்களில் அமர்த்தப்பட்டனர். ஆனால், இராசராசர்தான் அந்த வழக்கத்திற்குப் பெரும் ஊக்கமளித்தவர்.

வந்தது. தஞ்சாவூர்க் கோவில் நிலத்தில் பல்வகை வேலை களைச் செய்ய 609 ஆட்கள் அமர்த்தப்பட்டிருந்தனரென்று முதலாம் இராசராசர் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. அதே காலத்தைச் சேர்ந்த கோலார் கல்வெட்டு கூறுவதற் கேற்ப அப்பகுதியிலுள்ள ஓர் கோவிலில் 52 குடும்பங் களைச் சார்ந்தவர்கள் வேலை செய்து வந்தனர். மேலும், கோவிலே, இசை, நாட்டியம், கட்டடக் கலை, சிற்பக் கலை, ஓவியக் கலை முதலான பழங்கலைகளை வளர்த்து வந்தது. வேதங்கள், சாத்திரங்கள், தேவாரம், திருப்பதிகம், திருப்பல்லாண்டு, திருவாய்மொழி போன்ற சமய இசைப் பாட்டுக்களும் கோவில்களில் ஒழுங்காக இசைக்கப்பட்டு வந்தன. வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் இவை பற்றிய உயர் கல்வியில் கோவில்களும், மடங்களும் ஈடுபட் டிருந்தன. இப்பயிற்சியால் நேரடியாக அந்தணர்கள் பயனடைந்த போதிலும் பிறரும் சற்று நலம் பெற்றன ரெனக்கருதலாம்.

கேரளத்தில் 11-ஆம் நூற்றுண்டிற்குள்ளாக நம்பூதிரிகள், கோவிலிலும், அதன் வழியாக மக்களின் சமூக வாழ்க்கையிலும் தம் செல்வாக்கை நிலைநாட்டினர். நாயர்கள் போர்ப்பயிற்சி பெற்றுப் போர் வீரர்களாகத் திகழ்ந்தனர். நம்பூதிரிகளைப் போல நாயர்களும் ஏராள மான நில உரிமை பெற்றிருந்தனர். தென் இந்தியாவின் பிற பகுதியிலிருந்ததைவிடக் கேரளத்தில் சாதி வேற்றுமைகளும், வரையறைகளும் மிகக் கடுமையாக இருந்தன. ஆயினும் தமிழ், தெலுங்கு, கன்னட நாடு களிலிருந்தவை போலக் கேரள சூத்திரர்களிடையே மிகுதிப் பட்ட கிளைச் சாதிகள் தோன்றவில்லை. ஆனால் தச்சர், நெசவாளர் போன்ற தொழில் முறையில் பிரிந்த வகுப்பினர்

இருந்தனர். இலங்கைத் தீவு சோழருடன் தொடர்பு கொண்ட பிறகு, ஏறத்தாழ பத்தாவது நூற்றாண்டில் ஈழத்தைவிட்டுக் குடி பெயர்ந்தவர்களே ஈழவர்கள் எனச் சிலர் கருதுகின்றனர். ஆனால், தமிழ் இலக்கியச் சான்றின்படி அவர்கள் அதற்கு முன்னரே வந்தவர்களாவர். அவர்கள் முதலில் கள்ளிறக்கும் தொழில் செய்து வந்ததால் சமூகத்தில் அவர்களுக்குக் கீழான இடமே அளிக்கப் பட்டது. வடகேரளத்தில் அவர்களைத் 'தீயர்' என்றழைத்துத் தீண்டாத வகுப்பினராகவும் கருதி வந்தனர். 'தீண்டப் படாத'வர்களில் மிகத் தாழ்ந்த நிலையில் வாழ்ந்த 'பறையர்', 'புலையர்', 'செறுமர்' ஆகியோர் யாதொரு உரிமையுமின்றி நாட்களைச் செல்லாக்கினர். முன் குறிப்பிட்டது போல், சாதிக் கொடுமையே கேரள நாட்டின் சமூக வரலாற்றில் நடுவிடம் பெற்று விளங்கியது. கேரளச் சமூக அமைப்பில் இன்னொரு முக்கிய முறை மருமக்கள் தாயம் ஆகும். இத்தாய்வழி முறை எவ்வாறு கேரளத்தில் தொடங்கிற்று என்பது இன்னும் பெருங் கேள்வியாகவே இருக்கிறது. நாகர்கள் என்னும் பழங் குடிகளின் வழி வந்தவர்களே நாயர்களென்றும், அவர் களது பண்டைய வழக்கமே மருமக்கள் தாயமெனவும் சிலர் கருதுகின்றனர். இக்கருத்துடையோர் சிலர், கேரள மக்கட்கும், பெண் தெய்வங்களை வழிபட்டு வந்த சிந்துநதி நாகரிகச் சிற்பங்களுக்கும் தொடர்பு காட்டித் தம் கருத்தை வலியுறுத்துகின்றனர். வேறு சிலர், மத்திய தரைக் கடல் நாடுகளைச் சார்ந்த நாயிரி என்ற முற்காலக் கூட்டத்தார் இந்தியாவின் மேற்குக் கரையோரத்தில் குடியேறினரென்றும், அவர்கள் தம் நாடுகளில் பலகாலம் வழக்கிலிருந்த மருமக்கள் முறையைக் கேரளத்திலும் நிலை

நிறுத்திவிட்டனரென்றும் கூறுகின்றனர். இன்னும் சிலர், தாய்வழி முறையானது கேரளத்தின் சில பழங்குடிகளின் வழக்கமாயிருந்ததென்றும், அவர்களிடமிருந்து நாகர்கள் என்று முன்னுல் அழைக்கப்பெற்றிருந்த நாயர்கள் காலப் போக்கில் சூழ்நிலேயின் விளேவாக மருமக்கள் தாய வழக்கத்தை ஏற்றுக்கொண்டனரென்றும் கருதுகின்றனர். ஆனுல், நம்பூதிரிகள் கேரளத்திற்கு வந்த பின்னரே இம் முறையை நாயர்கள் கைக்கொண்டிருக்கலாமெனத் தோன்றுகிறது. நம்பூதிரிக் குடும்பங்களில் மூத்த மகன் மட்டுமே தன் சாதிப் பெண்ணே மணக்க வேண்டுமென்று ஏற்பட்ட வழக்கத்திஞலும், நம்பூதிரிகளுடன் நாயர்கள் அடுத்துப் பழகி வந்ததாலும், நம்பூதிரிகள் நாயர் மகளிருடன் மண உறவு செய்துகொண்டனர். இப் பெண்கள் தம் கணவரின் வீடுகளுக்குச் சென்று அங்கே வாழ்க்கை நடத்த முடியாததால், நாயர்களிடையே தாய் வழி முறை ஏற்பட்டிருக்கலாம். பிறகு அவர்களேப் பின் பற்றி ஈழவர், சாலியர்கள் போன்றவர்களில் சிலர் அம் முறையைக் கையாண்டனர்.

இலக்கியம் :

சம்ஸ்கிருதம் : அரசவைகள், கோவில்கள், மடங்கள், கடிகைகள் இவை யாவற்றிலும் தென் இந்தியாவில் சம்ஸ்கிருதமே வழங்கி வந்தது. ஆகவே, சம்ஸ்கிருத இலக்கிய நூல்கள் ஏராளமாக இயற்றப்பட்டு வந்தன. அக்காலத்தில் தோன்றிய இலக்கிய நாடகங்களில் கேரள மன்னன் இரண்டாம் குலசேகரன், (கி. பி. 935—55) மகா பாரதத்தைத் தழுவி எழுதிய தபதிசம்வரணம், சுபத்திராதனஞ்சயம் என்னும் இரு நாடகங்களும் மிகச் சிறந்தவை. 13 - ஆம் நூற்ருண்டின்

இறுதியில் வாரங்கல் மன்னர் பிரதாபருத்திரரால் ஆதரிக்கப் பெற்ற வித்தியநாதர், தம்மை ஆதரித்த அரசரைப் புகழ்ந்து பிரதாபருத்திர யசோபூஷணம் என்ற நாடகத்தை எழுதினர். அதைப் போன்ற நோக்கத்துடனே, கலிங்க நாட்டு அரசர் ஆதரித்த வித்தியாதரர் என்பார், ஏகாவலி என்ற நாடகமொன்றை எழுதினர். திறம்பட அமைக்கப் பட்டிருப்பினும், இவைகளை வழுவற்ற இலக்கியமெனக் கருதுவதற்கில்லை. வெறும் வெளியழகும், சொல்லழகும் தாம் இவற்றில் காணப்படுகின்றன. சமயப் பாடல்கள் பல தோன்றின. இருபொருளுணர்த்தும் சிலேடைக் கவிகளும் புதியவையாய் எழுந்தன. மூன்ரும் சோமேசுவரரது அவைக்கவிஞரான வித்யாமாதவர், பார்வதீ ருக்மணீயம் என்ற கவிதையை இயற்றினர். அதன் ஒவ்வொரு பாவிலும் இருபொருட்கள் புதைந்துள்ளன. ஒன்று, சிவனுக்கும் பார்வதிக்கும் நடந்த திருமணத்தைப் பற்றியும், மற்ருென்று, கிருஷ்ணனுக்கும் உருக்குமணிக்கும் முன் நிகழ்ந்த மணவிழா பற்றியும் விளக்குகின்றன. காமதேவரின் (1182—97) அவைக் கவிஞராகிய மாதவபட்டர் என்பவர், இராகவபாண்டவியம் என்ற கவிதை நூலை இயற்றினர். இராமாயண, மகாபாரதக் கதைகளை உள்ளடக்கிய ஒரு காப்பிய நூல் அது. அதில் சொல்லமைப்பு சிறந்து விளங்கிய போதிலும், கற்பனைத் திறன் இல்லை.

இக்காலத்தில், ஒரு பகுதி உரைநடையிலும், மறு பகுதி செய்யுளிலும் அமைந்துள்ள சம்பு[4] என்ற இலக்கிய

4 சம்பு, முதலில் கன்னடத்தில் தோன்றியது எனக் கூறுவர். ஆனல் சங்க காலத்திலேயே தமிழில் காப்பியங்கள் தோன்றின. சம்ஸ்கிருத முறையைத் தமிழ் பின்பற்றியிருக்கலாமென்று பலர் கருதுகின்றனர்.

முறையில் பல கதைகள் இயற்றப்பட்டன. சம்பு நடையானது, 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' எனப் பெயர் பெற்ற தமிழ்ச் சிலப்பதிகாரக் காப்பியத்திலும், சங்கப்புலவர் பெருந்தேவனர் இயற்றிய பாரதத்திலும் கையாளப்பட்டுளது. இராஷ்டிரகூட மூன்றும் இந்திரரது காலத்தைச் சேர்ந்த திரிவிக்கிரம கவி, பத்தாம் நூற்றண்டின் தொடக்கத்தில், நளன்-தமயந்தி கதையை நள-சம்பு என்ற நூலாக எழுதினர். நடைச் சிறப்புள்ள நூலன்றேனும், இது புதிய முறையில் எழுதப்பெற்ற நூலாகையால், படிப்பவருக்கு விருப்பளிக்கிறது. சம்பு முறையில் எழுதிய இன்னெருவர் சமணக் கவிஞரான சோம தேவசூரி என்பார். அவர் யசஸ்திலக சம்பு என்ற காவியத்தை இயற்றினர். அதில் அவந்தி நாட்டைச் சார்ந்த யசோதரையின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் கூறப் பட்டிருப்பதுடன் சமணக் கொள்கைகளும் கருத்துக்களும் நுழைக்கப்பெற்றுள்ளன.

பதினேராம் நூற்றண்டில் இயற்றப்பட்ட பில்ஹணரது விக்கிரமாங்க சரிதம் அக்காலத்தின் வரலாற்றைச் சிறிது காட்டுகிறது. அது சாளுக்கியப் பேரரசரான ஆறும் விக்கிரமாதித்தரின் வாழ்க்கையையும் வெற்றிகளையும் 18 சர்க்கங்களில் அமைத்துக் காட்டப்பட்டுள்ள நூல். ஆசிரியரது நடை தெளிவாகவும், உள்ளத்தை அள்ளும் தகைமையுடையதாகவும் இருந்தாலும் பல இடங்களில் புனைந்துரை மிக நீண்டுள்ளது. மேலும், அவர் அதைப் பொதுநோக்குடன் எழுதியதாகத் தெரியவில்லை.

சாளுக்கிய நாட்டில் இசை விளக்கவுரை இரண்டு வெளியாயின. மேலைச் சாளுக்கிய மன்னரான ஜகதேக மல்லர் (1138—50) சங்கீத சூடாமணி என்ற நூலை

எழுதினர். ஹரபாலதேவன் என்ற ஒரு சாளுக்கிய இளவரசர் இசையையும், நாட்டியத்தையும் விளக்குகின்ற சங்கீத சுதாகரத்தை இயற்றினர்.

இவற்றைவிடச் சிறந்தவை சாளுக்கியர்கள் எழுதிய சட்ட நூல்கள். ஆரும் விக்கிரமாதித்தரின் அவையில் பொலிவுடன் இலங்கிய விக்ஞானேசுவரர் என்பார், யாக்ஞ வல்கியர் இயற்றிய நூலே விளக்கிப் புகழ்பெற்ற மித்தாக்ஷரம் என்ற விரிவுரையை வரைந்தார். சட்டத் தைத் திட்டமுடன் வகுத்து எடுத்துக்காட்டுவதால் மித்தாக்ஷரத்தில் கூறப்படும் கருத்துக்களைத் தென் இந்தியாவிலும், வட இந்தியாவின் பல பகுதிகளிலும் அதனைப் பொதுவாக ஏற்றுக்கொள்ளுகின்றனர். விக்ஞானேசுவரரின் மாணவராகிய நாராயணர் செய்த வியவகார சிரோமணி என்ற சட்டத் தொகுப்பு நூலில் ஒரு பகுதியே நமக்குக் கிடைத்துள்ளது. கொங்கண நாட்டின் மன்னராகிய முதலாம் அபராதித்யர் தாம் எழுதிய விளக்க வுரையில் தம் சொந்தக் கருத்துக்களைத் தெளிவாகவும் திட்டமாகவும் எடுத்துரைக்கின்ருர். அதே காலத்தில் மீமாம்சக் கொள்கைகளைச் சட்டத்தில் நுழைக்கும் நோக்கத்துடன் வரதராசனின் வியவகார நிர்ணயம் என்ற நூல் வெளியானது. அக்காலத்தில் செய்த மற்ருெரு சிறந்த சட்டத்தொகுப்பு நூல் ஸ்மிரிதி சந்திரிகா ஆகும். கர்நாடகத்தில் 12-ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த தனஞ்சயர், 200 பாக்களடங்கிய நாமமாலா என்ற நிகண்டு ஒன்று இயற்றினர்.

இவை எல்லாவற்றையும்விட அக்காலத்தில் தோன்றிய அறிவியல் நூல்களே தலைசிறந்து விளங்கின. அத்துவைதம், துவைதம், விசிட்டாத்துவைதம் என்னும்

கொள்கைகளைப் பின்பற்றிப் பல விளக்கவுரைகள் வெளியாயின. சங்கரர், இராமானுசர், மத்துவர் என்பார் மூவர் வரலாறும் கோட்பாடுகளும் பற்றி முன்னர்க் கூறியுள்ளோம். வேதங்கள், உபநிடதங்கள் முதலியவை பற்றி அவர்கள் எழுதிய விரிவுரைகளும் அவர்கள் கொள்கைகள் பற்றிய விளக்கங்களும் உயர்ந்த நடையில் தீட்டப் பெற்றுள்ளன.

அறிவியல் கருத்துக்களை விளக்கி எழுதிய பிற நூலாசிரியர்களில் நியாயத்தைப் பற்றி எழுதிய முதல் தென் இந்தியர் 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வரத ராசர் என்பார். அவர் தார்க்கிக ரக்ஷா என்ற நூலையும், உதயணன் எழுதிய குசுமாஞ்சலிக்கு விளக்கவுரையும் செய்தார். அதே காலத்தில் அபரார்க்கர் என்பார், கருத்துச் செறிவுள்ள இரு விளக்கவுரைகளை வெளியிட்டார். அவை: பாசரவஞ்ஞனின் நியாயசாரத்திற்கும், யாக்ஞ வல்கிய ஸ்மிருதி என்ற நீதி நூலுக்கும் எழுதிய உரைகள் ஆகும். பூர்வ மீமாம்சத்தைப் பற்றி வரைந்த நூலாசிரியர் களும் வடமொழியிலேயே தமது அறிவியல் கருத்துக்களை விளக்கினர். இவ்வாறாக, கி. பி. 10-ஆம் நூற்றாண்டு முதல் 14-ஆம் நூற்றாண்டுவரை தென் இந்தியாவானது நாடகங்கள், சமயப் பாடல்கள், சட்ட நூல்கள் முதலியவை களை இயற்றிப் பல்வேறு கலைத் துறைகளில் சம்ஸ்கிருத மொழியை வளர்த்து வந்தது. இவற்றில் தலைசிறந்தவை அத்துவைதம், துவைதம், விசிட்டாத்துவைதம் என்னும் மூன்று கொள்கைகளும் பற்றி எழுதிய சமய அறிவியல் நூல்களேயாகும்.

தமிழ் :—பிற்காலச் சோழரின் காலத்தில் தமிழ் இலக்கியம் புகழேணியின் உச்சியை அடைந்தது. அர

சர்கள் தமிழ் மொழியை ஆதரித்ததால் அவர்கள் அவைக் களத்தில் தமிழணங்கு குறுநகை செய்து பொலிவுடன் வீற்றிருந்தாள். ஆற்றல் மிக்க அரசும், நாட்டின் சிறந்த செல்வ நிலேயும், பக்தி இயக்கத்தால் எழுந்த ஆழ்ந்த மறைப் பற்றும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணே யாய் அமைந்தன.

மறை நூல்களும், புராணங்களும், வீரகாவியங்களும் தமிழ் இலக்கியத்தில் சிறப்பிடம் பெற்றன. பத்தாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்ருகிய சீவக சிந்தாமணி வெளிவந்தது. சமணர்களும் காதற்காவியங்கள் தீட்டவல்லார் என்று காட்டவே துறவு பூண்டிருந்த பெரும்புலவர் திருத்தக்க தேவர், அக் காப்பியத்தை இயற்றினர். கதையின் தலேவஞன சீவகன் கனிந்த காதலும் முதிர்ந்த பக்தியுமுடையவஞக விளங்கு கிருன். ஆயினும், ஆசிரியர் காதலனுடைய வாழ்க்கையை விடத் துறவியின் நிலேயை மிகத் தெளிவாகக் காட்டுகிருர். அவரது கவிதை சொற்செறிவோடு பொருட்செறிவும் நிறைந்துள்ளது. அவரது இக்காப்பியமே பிற்காலத்தில் அவரைவிடப் புகழ்பெற்ற கம்பருக்கு இராமாவதாரம் இயற்ற வழிகாட்டியாக இருந்தது. சீவக சிந்தாமணி கம்பராமாயணத்துக்குத் தந்தை என்பர்.

12-ஆம் நூற்ருண்டே தமிழ் இலக்கிய வரலாற்றில் தலேசிறந்த காலம். ஏனெனில், அதுவே 'கம்ப நாடுடைய வள்ளல் கவிச் சக்கரவர்த்தி' வாழ்ந்த காலம். அவரது இராமாயணம் வால்மீகியின் மூலநூலின் வெறும் மொழி பெயர்ப்பன்று. அது அவரது கலேத் திறனேயும் கருத்து வளத்தையும் காட்டும் பெருங்காப்பியம். ஆகவே, கம்ப இராமாயணம் தமிழ் நாட்டின் நகர்களிலும், நாட்டுப்

புறங்களிலும் பல நூற்ருண்டுகளாகப் பரவிப் புகழ்பெற்று விளங்கிவருதல் வியப்பன்று. 14-ஆம் நூற்ருண்டின் இறுதியில் கன்னடநாட்டின் வடக்கிலுள்ள ஹசன் என்ற ஊரில் கம்ப இராமாயணத்தை வாழையடி வாழையாக விளக்கி வந்த ஒரு குடும்பத்தைப் பற்றிக் கேள்விப் படுகின்ருேம். கம்பரைத் தூற்றுவார்தாமும் அவரது கற்பனைத்திறனைப் போற்றுகின்றனர். வேளாண் மக்களையும் அவரது உழவுத்தொழிலையும் உயர்த்திக் கூறும் ஏரெழுபதும் திருக்கை வழக்கமும், திருவாய்மொழி பாடிய நம்மாழ்வாரைப் புகழும் சடகோபரந்தாதியும் அவர் இயற்றிய பிற நூல்களெனக் கூறப்படுகிறது. இது உண்மையாயிருப்பினும்கூட இவை அவரது இணையற்ற காப்பியத்தின் சிறப்பைப் பெறவில்லை.

கதைகளைக் கூறும் காப்பியங்களோடு மறைப் பற்று கொழிக்கும் மற்றும் பல இலக்கியங்களும் இக்காலத்தில் தோன்றலாயின. பத்தாம் நூற்ருண்டு முதல் நாடெங்கும் திருக்கோயில்கள் பல எழும்பின; அவற்றுடன் பக்திப் பாடல்களும் கிளம்பின. தில்லைத் திருக்கோயிலைப் பற்றி எழுந்த பாடல் தொகுதியே திருவிசைப்பா எனும் நூல். பலர் எண்ணுவது போல் அது தஞ்சாவூர்க் கோவிலைப் பற்றியதன்று. இது தவிர, பல கவிஞர்கள் பல கோயில் களைப் புகழ்ந்து பாடிய திருவிசைப்பாக்களும் உள்ளன; பதிஞரும் நூற்ருண்டின் முற்பகுதியில் வாழ்ந்த கருவூர்த் தேவர் சிவாலயங்கள் பலவற்றைப் பற்றிப் பாடல்கள் பல இயற்றியுள்ளார். அதே காலத்தில் வாழ்ந்த நம்பி ஆண்டார் நம்பி, அவ்வேளை வழங்கிய சைவ சமயப் பனுவல்கள் அனைத்தையும் ஒருங்கே தொகுத்துப் பத்துத்

திருமுறைகளாக வகுத்தார். பிற்காலத்தில் இரு திரு முறைகள் அவற்றுடன் சேர்ந்தன.

அக்காலத்தில் வெளிவந்த சைவ சமய இலக்கியத்தி லெல்லாம் தலையாயது அருண்மொழித் தேவர் என்னும் சேக்கிழார்[5] இயற்றிய **பெரிய புராணம். திருத்தொண்டர் புராணம்** என்றும் அழைக்கப்பட்டு வரும் இச்சிறந்த நூலின் பெரும்பகுதி நாயன்மார் வரலாருகவே இருந்த போதிலும், அதன் பாடல்கள்தோறும் இலக்கிய நறுமணம் கமழ்கிறது. அதில் ஊறும் பக்திப் பெருக்கைக் கண்டு அதைத் தமிழ் நாட்டின் ஐந்தாவது வேதம் எனக் கருது கின்றனர். **கம்பராமாயண**த்தைப் போல் **பெரிய புராண**மும் தமிழ்ப்புலவர்கள் படித்துப் பாராட்டும் சிறந்த இலக்கியமாகும். தமிழகத்திலே சைவப் பெருமக்கள் அனைவர் எண்ணத்திலும், வாழ்விலும், தலைமுறை தலை முறையாகப் **பெரிய புராண**த்தின் கருத்துக்கள் ஆழமாய் வேரூன்றிவிட்டன.

தென் இந்தியாவில் வாழ்ந்த வைணவ ஆழ்வார் களும், அடியார்களும், புலவர் பெருமக்களும் தமிழையே தம் கருத்தை விளக்கும் கருவியாகக் கருதினர். அவரும் பக்தி நெறியில் பல பனுவல்கள் இயற்றித் தமிழ் மொழியை வளமுறச் செய்தார். ஆயினும், அக்காலத்தில் தமிழையும் வட மொழியையும் விரவி முத்தும் பவளமும் கோத்த மாலை என **மணிப்பிரவாள** நடையில் நூல் இயற்றச் சிலர் முனைந்தனர். நம்பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை போன்ற விரிவுரையாசிரியர்கள் சிறப்பிழந்த இந்தச் செயற்கை

5. மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை 'பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ' என்று சேக்கிழாரைப் பற்றிப் பாடியுள்ளார்.

நடையைப் புகுத்தினர். ஆயினும், இராமானுசரைப் புகழ்ந்து பாடிய இராமானுச நூற்றந்தாதி எளிய தமிழ் நடையில் இயன்றுள்ளது. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், அஷ்டப்பிரபந்தம், பாகவதபுராணம், சடகோபரந்தாதி முதலியன சிறந்த தமிழ் இலக்கியங் களுக்கு எடுத்துக்காட்டாவன.

சமயப் பற்றற்ற வேறு நிகழ்ச்சிகளைப்பற்றிக் கூறும் நூல்களில் சிறந்தது செயங்கொண்டார் இயற்றிய கலிங்கத்துப்பரணி. அவர், முதல் குலோத்துங்கர் காலத்தில் அவைக்களப் புலவராகத் திகழ்ந்தார். பரணி, அல்லது போர்ப்பாடல்களில், அதுவே தலை சிறந்தது என்பதற்கு எட்டுணையும் ஐயமின்று. அது குலோத்துங்க மன்னர் நடத்திய கலிங்கப்போர் நிகழ்ச்சிகளை நிழற்படம் போல் எடுத்துக்காட்டி இன்பம் அளிப்பது. அதன் சொல்லழகும், பொருளழகும், நடையழகும் உள்ளத்தைக் கொள்ளை கொள்வன. விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசர் ஆகிய அரசர் களது அவைக்களத்தில் இலங்கிய அடுத்த கவிஞர் ஒட்டக் கூத்தர். அவர் இயற்றிய செய்யுள்களில் சிறந்தது அம் மூன்று மன்னரையும் புகழ்ந்து பாடிய மூவர் உலா. செயங்கொண்டாரைப் போலவே ஒரு பரணி அவர் எழுதி யுள்ளார். அது தக்கயாகப்பரணி. இரண்டாம் குலோத்துங்கரது குழவிப் பருவத்தைச் சுட்டிப் பிள்ளைத் தமிழ் இயற்றினர். ஒட்டக்கூத்தர் "இலக்கிய இலக்கணக் கடலை முழுதும் குடித்து ஏப்பமிடும்" பெரும்புலவர் எனலாம்; அவர் கல்லாத நூல் இல்லையெனக் கூறுவர்.

சிறந்த இலக்கண நூல் அக்காலத்தில் தோன்றின. அவற்றை ஆக்கியோர் பலர் சமண அறிஞராவர்.

பத்தாம் நூற்ருண்டின் இறுதியில் அமிதசாகரர், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை என்னும் யாப்பிலக்கண நூல்கள் இரண்டு இயற்றினர். வடமொழிப்புலவர் ஆசாரிய தண்டி என்பார் எழுதிய, காவியதர்சம் என்ற அணி இலக்கண நூலைத் தமிழ்த் தண்டியாசிரியர் என்பார் தமிழில் மொழி பெயர்த்து, சூத்திரத்தோடு உதாரணத்தையும் சேர்த்து தண்டியலங்காரம் என்னும் பெயரால் வெளியிட்டார். தமிழ் அணி இலக்கணங்களில் புகழ் பெற்றது தண்டியலங்காரமே. குணவீர பண்டிதர் இயற்றிய நேமிநாத வெண்பாப் பாட்டியல் என்ற யாப்பிலக்கண நூலும் இக்கால நூல்களில் குறிப்பிடத்தக்கது. பவணந்தி முனிவர் தமிழ் எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் விளக்கிக் கூறும் நன்னூல் யாத்தார். பவணந்தி முனிவரும் குணவீரபண்டிதரும் மூன்ரும் குலோத்துங்கர் காலத்தில் ஒருங்கு வாழ்ந்தவர். தொல்காப்பியருக்குப் பின்னர் ஐந்திலக்கணத்தையும் விரித்துரைக்க முன் வந்தவர் புத்தமித்திரர். அவர் வீரசோழியம் என்ற நூலை இயற்றினர். தம் காலத்தில் ஆண்ட வீரசோழன் பெயரால் அதற்கு வீரசோழியம் எனப் பெயரிட்டார். 11-ம் நூற்ருண்டில் வாழ்ந்த அவர், தமிழிலும் வடமொழியிலும் வல்லுநர். இருமொழி இலக்கணங்களையும் ஒருங்கு சேர்த்து அவர் அறிவுறுத்த முயன்றதாகத் தெரிகிறது.

தமிழ் இலக்கியத்தின் பொற்காலமாகிய இக்காலத்தில் பல விளக்கவுரை ஆசிரியர்களும் தோன்றினர். பண்டைய இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திற்கு முதன் முதல் இளம்பூரணர் உரை எழுதினர். தொல்காப்பியத்தின் பல பகுதிகளுக்கு நச்சினுர்க்கினியர் விரிவுரை வரைந்தார். பேராசிரியர் சில பகுதிகளுக்கு விரிவுரை தந்தார்.

சேனவரையர் சொல்லதிகாரத்திற்குச் சிறந்த உரை செய்தார். சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லாரும், திருக்குறளுக்கும் பரிபாடலுக்கும் பரிமேலழகரும் பெயர் பெற்ற உரை இயற்றினர்கள். பழைய இலக்கிய, இலக்கண நூல்கள் பலவற்றிற்கு உரை வகுத்த பெருமை நச்சினர்க்கினியருக்கே உரியது. பதுமனர் நாலடியாருக்கும், நக்கீரர், இறையனர் களவியலுக்கும் உரை செய்து புகழ் பெற்றனர். அவர்கள் கருத்துக்களில் சில தவருக இருப்பதாகக் கருதினும், அவர்தம் பெரும் புலமையையும், கல்வித் திறனையும், அறிவு முதிர்ச்சியையும் அவ்வுரைகளால் அறியலாம்.

**கன்னடம் :**—தற்காலக் கன்னட இலக்கியம் பத்தாவது நூற்ருண்டில் வாழ்ந்த பம்பா (ஆதிபம்பா) என்ற புகழ் பெற்ற கவிஞர் காலத்திலிருந்து தொடங்கியதென்று கூறலாம். அவர் இரண்டாம் அரிகேசரி என்னும் சிற்றரசரால் ஆதரிக்கப்பெற்றவர். அச்சிற்றரசர் இராஷ்டிரகூட மன்னர் மூன்ரும் கிருஷ்ணர் என்பவருக்குக் கீழ் அரசியல் நடத்தியவர். பம்பா தமது முதல் நூலாகிய ஆதிபுராணத்தில் சமண தீர்த்தங்கரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைத் தீட்டியுள்ளார். பம்பா பாரதம் என்பது அவர் செய்த சிறந்த நூல். அதற்கு மறுபெயர் **விக்கிரமார்ஜுன விஜயம்.** அது மகாபாரதக் கதையில் ஒரு பகுதியை விளக்கிக் கூறுகின்றது. பம்பாவின் கவிதைகள் கற்பனைத் திறனும் உயர்ந்த நடையும் உடையன.

பொன்ன, இரன்ன என்னும் கவிஞர் இருவர் அக்காலத்தில் விளங்கித்தோன்றினர். அவருள் பொன்ன 16-ஆம் தீர்த்தங்கரரின் வாழ்க்கை வரலாற்றை விளக்கி

சாந்தி புராணம் இயற்றினர். இரன்ன வளையல் விற்கும் வணிகர் குலத்தைச் சேர்ந்தவர். அஜித்த புராணம் என்ற நூல் செய்தார். அது சம்பு நடையில் இரண்டாம் தீர்த்தங்கரர் வாழ்க்கையை வகுத்துரைக்கின்றது. மகாபாரதக் கதையில் பீமனுக்கும் துரியோதனனுக்கும் இடையே நிகழ்ந்த இறுதிப்போரை விளக்கும் கெதாயுத்தம் அவர் செய்த மற்றொரு சம்பு நூல். சம்பு நடை நூல்கள் கன்னட நாட்டில் முற்காலத்திலே நிலவி வந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. வடமொழிகூட கன்னடத்திலிருந்து தான் சம்பு முறையைப் பெற்றது என்று கருதுவாருமுளர்.[6] ஆனல் சம்பு வடமொழியில்தான் முதலில் தோன்றிய தென்று தெரிகின்றது.

பாணருடைய வடமொழி நூல்களைத் தழுவி கர்நாடக காதம்பரி எனும் சம்பு நூலை இலக்கியவாணரான முதல் நாகவர்மர் எழுதினர். 11-ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த துர்கசிம்மர் என்ற சாளுக்கிய அமைச்சர் பஞ்சதந்திரக் கதைகளைச் சம்பு முறையில் அமைத்தார். அதில் எதுகை, மோனை மிகுதியாகக் காணப்படுவதால் அதன் இலக்கிய வளம் குறைந்தே தோன்றுகிறது. அதே காலத்தில் சந்திரராசர் என்பார் உரையாடல் முறையில் காதற்கவிதையாக மதனதிலகம் என்ற நூலை இயற்றினர். 12-ஆம் நூற்ருண்டின் முதற் பகுதியில் விளங்கிய அபிநவ பம்பா என்ற புகழ்பெற்ற நாகச்சந்திரர், 19-ஆம் தீர்த்தங்கரரின் பேரில் மல்லிநாத புராணம் என்னும் காப்பியத்தை இயற்றினர். ஏறக்குறைய அந்நூற்ருண்டின்

6. 'கர்நாடகத்தின் பிறப்புரிமை' என்ற நூலை எழுதிய ஆர். எஸ். முகலி என்பவர் சம்பு, கன்னடத்திலே ஆதியில் தோன்றியதென்று கருதுகிருர்

நடுப்பகுதியில் கர்ணபாரியார் என்பார், 22-ஆம் தீர்த்தங்கரரின் வாழ்க்கையை விளக்கும் **நேமிநாத புராணம்** செய்தார்.

அக்காலத்தில் சம்பு முறையில் எழுதிய நூல்கள் மலிந்து கிடந்த போதிலும், வேறு பல வகை நூல்களும் நிலவின. பல இந்துப் புராணங்கள் சமண நோக்குடன் எழுதப்பெற்றன. **மல்லிநாதபுராணம்** என்ற சம்பு நூலே வரைந்த நாகச்சந்திரன், அதைவிடப் புகழ் பெற்ற **இராமச்சந்திர சரிதப் புராணம்** இயற்றினர். அது இராமாயணத்தைச் சமண முறையில் எடுத்தோதுகிறது. இராமபிரான் இறுதியில் சமணத் துறவியாக மாறி நிர்வாண நிலையை அடைகிருர். கன்னட இலக்கியத்தில் ஒளிரும் மூன்று மாணிக்கங்களாகிய பம்பா, பொன்ன, இரன்ன என்னும் மூவரைத் தவிர பிற இலக்கியப் புலவர் அனைவரும் சமணரே. இரன்னவை ஆதரித்து வந்த சாவுண்டராயன் கி.பி. 978-இல் எல்லா தீர்த்தங்கரர் மீதும் உரைநடையில் **சாவுண்டராயப்புராணம்** இயற்றினர். அதுவே கன்னடத்தில் முதன் முதல் தோன்றிய உரைநடை நூல். 12-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த பிரம்மசிவன் என்ற சமண ஆசிரியர் **சம்யபரீக்ஷே** என்ற தர்க்க நூலில், சமய நெறிகள் பலவற்றில் சமண நெறியே தலைசிறந்த நெறி எனக் காட்ட முயன்ருர்.

சமய நூல்களை இயற்றிய பிற கன்னட ஆசிரியர்கள் வீர சைவ வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்களுடைய நூல்கள் பெரும்பாலும் உரைநடையில் எழுதப்பட்டன. 12-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த பஸவரும், பிற வீர சைவ நூலாசிரியரும் உரைநடை இலக்கிய நூல்களை மிகுதியாய் இயற்றியுள்ளனர். கல்வியறிவில்லாத மக்கள் நடுவிலும்

தம் மறைக் கருத்துக்கள் எளிதில் நுழையும் வண்ணம் இங்ஙனம் இவர் உரைநடையில் நூல்கள் எழுதினர். உரைநடை என்பது கன்னட மொழிக்குரிய தனி உரை நடையே. 13-ஆம் நூற்றுண்டில் உரைநடை உயர்ந்த நிலையை அடைந்தது. வீரசைவ நூலாசிரியர்களும் ஆசிரியைகளும் கன்னட உரைநடை இலக்கியத்தை வளர்த்தனர். அவர்களிடையே சிறந்த கவிஞர் சிலரும் தோன்றினர். ஒய்சள நாட்டு மன்னர் முதலாம் நரசிம்மர் காலத்தவரும் 12-ஆம் நூற்றுண்டின் கவிஞருமாகிய ஹளபீடு ஹரீச்வரர் பல நூல்கள் இயற்றியுள்ளார். அவர் ஹம்பியில் எழுந்தருளி யுள்ள கடவுள் விரூபாட்சரைப் புகழ்ந்து நூறு செய்யுள் பாடினர்; சிவன் பார்வதி திருமணம் பற்றி கிரிஜா கல்யாணம் என்ற சம்பு நூல் இயற்றினர்; சைவப் பெரியார் புனித வாழ்க்கையை விளக்கும் சிவகணதரகளெகளு என்ற காப்பியம் செய்தார். இறுதியாகக் குறிப்பிட்ட நூலில் இரகளெ என்ற கன்னடச் சீர்களை முதன் முறை யாக அவர் கையாண்டுள்ளார். அவரது உடன்பிறந்த தங்கையின் புதல்வர் இராகவாங்கர், அரிச்சந்திர காவியத் தைச் சிறந்த செய்யுள் நடையில் இயற்றினர். ஆயினும், அதில் இலக்கண வழுக்கள் மிகுந்துள்ளன. இராக வாங்கரே முதன் முதல் ஷட்பதி என்ற கன்னடச் சீர்களைக் கதைபொதி பாட்டுக்களில் பயன்படுத்தியவர். இவர் சோமநாத சரித்திரம் ஹரிஹர மகத்துவம் முதலான வீர சைவப் புனிதர் வாழ்க்கை வரலாறுகளை வகுத்துள்ளார். முதலாம் நரசிம்மர் காலத்தில் வாழ்ந்த கேரேய பத்மரசா என்பார், தீட்சா போதெ என்ற சைவ நெறி நூலை ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையே நிகழும் உரையாடல் போல் எழுதியுள்ளார்.

சமய நூல்களைத் தவிர, பல இலக்கிய நூல்களும் வெளியாயின. 12-ஆம் நூற்றாண்டில் இரண்டாம் நாகவர்மர் காவியாவலோகனம் என்ற இலக்கண நூலை இயற்றினர். அதில் கன்னட இலக்கணமும் சிறப்பாக அணியியலும் விளக்கப்பட்டுள்ளன. தனி இலக்கணத்தைப் பற்றி வரைந்துள்ள கர்நாடக பாஷா பூஷணம் என்னும் ஆராய்ச்சி நூலும் அவர் செய்ததேயாம். அதில் மேற்கோள்களைக் கன்னட இலக்கியத்திலிருந்து எடுத்துக் காட்டி விளக்கங்களை வடமொழியில் தந்துள்ளார். வட சொற்களுக்கு நேரான கன்னடச் சொற்களைத் தரும் வஸ்து கோசா என்ற நிகண்டுவையும் அவரே தொகுத்தார். 1150-ஆம் ஆண்டில், சோழ இளவரசர் ஒருவர், ஆசாரிய தண்டி எழுதிய காவிய தர்சம் என்ற வடசொல் அணி இலக்கணத்தைக் கன்னடத்திலே மொழி பெயர்த்தார். அது உதயாதித்திய அலங்காரம் எனப் பெயர் பெற்றது.

முற்காலக் கன்னட நூலாசிரியர்கள் விஞ்ஞானத்தைப் பற்றியும் நூல்கள் எழுதினர். பதினோராம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஸ்ரீதராச்சாரியார் ஜாதகத் திலகம் என்னும் சோதிட நூல் வெளியிட்டார். சோதிடத்தை விளக்கும் இக்கன்னட நூல் விஞ்ஞான நோக்குடன் எழுதப்பெற்றது. அடுத்த நூற்றாண்டின் தொடக்கத்தில் கீர்த்தி வர்மர் என்பார், விலங்கு நோய் இயல்பும், மருத்துவ முறைகளும் அடங்கிய கோ வைத்தியம் என்ற நூல் எழுதினர். 11-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இராசாதித்யர், கணிதமும் இலக்கியமும் விரவிய புதிய முறை நூல் ஒன்றை இயற்றினர். அவர், கணித விதி முதலிய பொருட்களை எளிய பாக்களாக எழுதி க்ஷேத்திர கணிதம்,

லீலாவதி, வியவகார கணிதம் என்னும் நூல்களில் அப் பாக்களை இணைத்தார்.

தெலுங்கு :—தற்கால வழக்கிலிருக்கும் தெலுங்கை முதன் முதல் வளர்க்கத் தலைப்பட்டவர் கீழைச் சாளுக்கிய மன்னர் இராசராச நரேந்திரர் ஆதரித்த நன்னய்யா என்பார். முதன் முதல் அவர் மகாபாரதத்தை மொழிபெயர்க்கத் தொடங்கினர். ஆனால் இராசராசன் ஆட்சியில், நாட்டில் ஏற்பட்ட குழப்பங்களால் முதல் இரண்டு பர்வங்களையும், மூன்ருவது பர்வத்தின் ஒரு சருக்கத்தையுமே அவரால் மொழிபெயர்க்க முடிந்தது. அவரது மொழி பெயர்ப்பில் வடமொழிச் சொற்கள் மலிந்திருப்பினும் நடை மிகவும் தெளிவாக இருக்கிறது. முதல் தெலுங்கு இலக்கண நூலாகிய ஆந்திர சப்த சிந்தாமணி அவர் செய்ததே. நன்னய்யா, சொற்களையும் அவற்றின் வழக்குகளையும் முறைப்படுத்தி மொழி வளர்ச்சிக்குப் பெருந்துணை செய்த தால் வாகானு சாஸன என்ற சிறப்புப்பெயர் பெற்ருர். அப்பெயருக்குத் 'தெலுங்கு மொழியை முறைப்படுத்தி வகுத்தவர்' என்று பொருள்.

நன்னய்யா காலத்தைச் சேர்ந்த மற்ருெரு நூல் ஆசிரியர் வேமுலவாட பீமகவி. அவரது வாழ்க்கையை யும் நூல்களையும் பற்றிக் கதைகள் பல உலவி வருவதால் இங்குத் திட்டமாக ஒன்றும் கூறுவதற்கில்லை. அவர் கலிங்க அரசரான வர்மா சோடகங்கரது அவைப்புலவராக இருந்தார். அவர் இயற்றிய முக்கிய நூல் கவிஜனுச்ரய என்ற இலக்கண நூல். அவரது பீமேஸ்வர புராணத்தில் திராக்ஷாராமாவிலுள்ள பீமேஸ்வரர் கோவிலைப் பற்றிய பழங்கதைகளை விளக்கியுள்ளார். இருபொருளுணர்த்தும்

பாக்களால் இயற்றிய ஒரே நூலில் இராமாயண மகாபாரதக் கதைகளைக் கூறும் **இராகவ பாண்டவீயம்** என்னும் நூலும் அவர் இயற்றியதாகவே கருதுகின்றனர். அந்நூல் இப்பொழுது கிடைக்கவில்லை.

12-ஆம் நூற்றாண்டுமுதல் வீர சைவம் தெலுங்கு நாட்டில் உரம் பெற்று வந்ததால் தெலுங்கு இலக்கியமும் வளர்ச்சியுறுவதற்கு அது உதவியளித்தது. வீர சைவர்கள் தம் மறையைப் பரப்பி பிற சமயங்களை எதிர்க்கத் தலைப் பட்டனர். வீர சைவக் கவிஞர்களில் சிறப்புற்ற மல்லிகார்ஜுன பண்டிதர், தெலுங்கு சோட இளவரசர் நன்னி சோடருக்கு ஆசிரியராக விளங்கினர். அவரது **சிவதத்துவசாரம்** எனும் நூல், 500 பாக்களில் வீர சைவக் கோட்பாடுகளை விளக்கிக் கூறுகிறது. நன்னி சோடர் இயற்றிய **குமார சம்பவம்** ஆதியில் வடமொழியில் காளிதாசர் கையாண்ட கருத்துக்களையும் அக்கால சைவ இலக்கியங்களில் கண்ட கோட்பாடுகளையும் எடுத்தோதுகிறது. நன்னி சோடர் தம் நூற்களில் கன்னடச் சொற்களையும் தமிழ்ச் சொற்களையும் மிகுதியாகப் பயன்படுத்தியுள்ளார் ; கன்னடச் சீர்களும் கையாளப்பட்டுள்ளன. சில அறிஞர்கள் **குமார சம்பவம்** ஓர் இலக்கிய நூலெனக் கருதியபோதிலும், அதில் இலக்கண வழுக்களும், வழக்கத்திலிருந்து மறைந்திருந்த மிகப் பழைய தெலுங்குச் சொற்கள் பலவும் ஆங்காங்கு வந்துள்ளன. வீர சைவர்கள் புகழும் கவிஞர்களில் 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பால்குரிகி சோமநாதரும் ஒருவர். அவர் நூல்களில் **பாஸவ புராணமும் அனுபவ சாரமும்** சிறப்புடையன.

**மலையாளம் :**—பழந்தமிழிற் பிறந்ததே மலையாள மொழி என்று இப்போது பெரும்பாலாரும் கருதுகின்றனர்.

14-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகுதான் மலையாளம் வளர்ச்சியுற்ற போதிலும் அம்மொழி தமிழிலிருந்து பிரிந்த காலம் எதுவென்று தெளிவாகக் கூற முடியவில்லை. கிருத்தவ ஊழிக்காலத் தொடக்கத்திற்கு முன்னரே தமிழில் செந்தமிழ், கொடுந்தமிழ் என்னும் இரு பிரிவுகள் வழங்கி வந்துள்ளன. செந்தமிழ் என்பது இலக்கியத் தமிழ் அல்லது தனித்தமிழ்; கொடுந்தமிழ் என்பது பேச்சுத் தமிழ் அல்லது கலப்புத் தமிழ். மேற்குக் கரைப் பகுதிகளில் கொடுந்தமிழ் பொதுவாகப் பரவியிருந்தது. கொடுந்தமிழிலிருந்தே, முக்கியமாக, அதன் ஒரு பகுதியாகிய கருந்தமிழிலிருந்தே, மலையாளம் பிறந்தது. அது வளர்ந்து முற்றுப்பெறுவதற்குச் சிறிது காலம் சென்றது. கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் மலையாளம் தொடங்கியதெனச் சில அறிஞர்கள் கருதுகின்றனர். ஆனால், பண்டை நாள் மலையாள மொழி எம்மொழியையும் சாராமல் தனியாகப் பிறந்ததென்று தற்காலத்தில் ஒரு சிலர் கூறுகின்றனர்.[7] ஆயினும் சிலப்பதிகாரத்தில் காணும் சொற்களில் பல மலையாள மொழியில் இன்னும் வழங்கப்படுதலால் கொடுந்தமிழுக்கும் பழைய மலையாளத்திற்குமுள்ள தொடர்பு நன்கு தெளிவாகிறது.

மலையாளத்தில், ஏறத்தாழ எட்டாம் நூற்றாண்டில் உருவான, மக்கள் பாடும் மிகப் பழமையான பாக்கள் கிடைத்துள்ளன. அவைகளில் பிராமணிப் பாட்டு, சாஸ்தாப் பாட்டு, ஓணப் பாட்டு, வில்லடிச்சான் பாட்டு,

7. ஒரு சிலர் மலையாளத்திலிருந்தே தமிழ் தோன்றியிருக்கலாமென்றும், வேறு சிலர், மலையாளம் தமிழுடன் தொடர்புடையதாயிருந்தபோதிலும், முதலில் ஒரு தனி மொழியாகவே தோன்றியதெனவும் கூறுகின்றனர். இக்கொள்கைகளை ஒப்புக்கொள்ளச் சான்றுகளில்லை.

திருவாதிரைப் பாட்டு எனப் பலவகையுண்டு. அவை தமிழ்ப் பாடல்களாக இருந்தாலும், இடத்திற்கேற்ப மாற்றமடைந்து, காலப்போக்கில் ஆங்கு நிலைபெற லாயின.

சிலவகைப் பாடல்களில் இசையும் நாடகமும் ஒன்ருக இணைந்துள்ளன. சிலப்பதிகாரத்தைப் போல் பழைமை யான சாக்கியர் கூத்தும், அதன் பிறகு தோன்றிய கூடி யாட்டமும் நாடகப் பாடல்களில் மிகப் பழமையானவை. குலசேகர ஆழ்வாரின் அவைப்புலவராகிய தோலர். இக்கலை பற்றிப் பல நூல்கள் எழுதியுள்ளார். அக்காலத்தில் மலையாளம் தனியாக உருவாகிக்கொண்டிருந்ததென்பதைத் தோலரது நூல்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

13-ஆம் நூற்றுண்டின் முடிவில் அல்லது 14-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் எழுதப்பட்ட இராமசரிதம் என்ற நூலே, ஒழுங்காக அமைந்துள்ள மிகப் பழைய மலையாள நூலாக இருக்கலாம். இராம சரிதத்தில் தமிழ் மணம் கமழ்ந்தபோதிலும் அது பழைய மலையாளத்தில் எழுதப்பட்ட நூலெனத் தெளிவாய் விளங்குகின்றது. அதே காலத்தில் 'நம்பியார் தமிழ்' என்ற ஒரு வகை நடையில் எழுதப்பெற்ற சில உரைநடை நூல்கள் வெளி யாயின. உண்மையில் அந்நடை பழைய மலையாள நடையேயாகும். இக்காலத்தில் தனி இலக்கிய நூல்களைத் தவிர மருத்துவம், வான நூல், அறிவியல் நூல் முதலாய துறைகளிலும் பல நூல்கள் வெளிவந்தன.

13-ஆம் நூற்றுண்டு முதல் மலையாள மொழியின் வளர்ச்சியில் வடமொழி தலையிட்டது. கேரள நாட்டில் நம்பூதிரிகள் பெற்றிருந்த எல்லையற்ற செல்வாக்கே

இதற்குக் காரணம். "வடமொழியானது மலையாளத்திற்குத் தன் அறிவுத் திறனையும், சொற்களையும், செய்யுள் வழக்கு களையும், யாப்பிலக்கணத்தையும், அணியியல் முறைகளை யும் அள்ளித் தந்துள்ளது'' என்று மொழி வல்லார் ஒருவர் கூறுகின்றார்.

கலை :—இக்காலத்தில் இலங்கிய சோழ நாட்டுக் கலை பெரும்பாலும் பல்லவ முறையைப் பற்றியதேயாகும். ஆயினும், கற்றளிகள் மிகுதியாகத் தோன்றின. சிவபெரு மானுக்குப் பல கற்கோவில்கள் எழுப்பிய ஆதித்தியர் கால முதல் கற்றளிகளின் தொகை வளர்ச்சியுற்றது. எனினும், இராசராசன் காலம் வரை அவ்வளர்ச்சி சிறிதாகவே இருந்தது.

சோழப் பேரரசர்கள் காலத்தில், அதாவது, ஏறக் குறைய கி. பி. 850 முதல் 1250 வரை தமிழ்நாடு முழு வதும் பல்வேறு அளவில் மிகப் பல கற்கோவில்கள் பொலி வுடன் திகழ்ந்தன. மைசூர் நாடு, ஆந்திர நாடு முதலான தென் இந்தியாவின் பல பகுதிகளிலும் சோழநாட்டுக் கட்டடக் கலை பரவியது. நார்த்தா மலையிலுள்ள விசயாலயச் சோழேச்வரர் கோயில், கண்ணனூர் 'சுப்பிரமணியர்' ஆலயம் முதலாய பலவகைப்பட்ட பழைய சோழர் கோவில்களை இன்றும் புதுக்கோட்டையில் காணலாம். சதுர மான பிரகாரத்தினுள் வட்ட வடிவமான மன்றம், அதன் மேல் விமானம், வளைந்த சிகரம், உச்சியில் சகவம் ஆகிய இவ்வுறுப்புக்களைக் கொண்டதே அக்காலக் கோவில்களின் அமைப்பு.

முதல் இராசராசர் காலமுதல் திருக்கோவிற் கட்டடக் கலையில் ஒரு புதிய இயல் தோன்றியது. அழகிய முறையில் அமைந்துள்ள தஞ்சாவூர் பெருவுடையார் (பிருகதீச்வரர்)

திருக்கோவில் அக்காலக் கலைக்கு ஓர் சிறந்த எடுத்துக் காட்டாகும். கர்ப்பக் கிருஹத்திற்கு மேல் ஏறக்குறைய இருநூறு அடி உயரம் எழும்பிய அழகிய விமானம் புது முறைக் கோவிலின் அமைப்பைக் காட்டுகிறது. விமானத்தைப் போல் நந்தியும், சிவலிங்கமும் மிகப்பெரிய அளவில் அமைந்திருந்த போதிலும் அவற்றின் அழகோ, அளவுப் பொருத்தமோ சிறிதும் குறையவில்லை. முதல் இராசேந்திரர் ஏறக்குறைய 1030-இல் கட்டிய கங்கை கொண்ட சோழ புரக் கோவிலும் அத்தகைய அமைப்புடையதே. தஞ்சாவூர்க் கோவில் விமானத்தில் காணும் நேர்கோட்டு அமைப்புக்குப் பதில் வளைவுகளைப் பயன்படுத்தியதும், சுவரின் வெளிப்புறத்தில் செதுக்கியுள்ள சிறந்த சிற்பங்களும் இக்கோவிலில் தோன்றும் திருத்தங்களாம். இவ்விரண்டு கோவில்களிலும் காணப்படும் சோழக் கட்டட முறை 11-ஆம் நூற்றுண்டிற்குப் பிறகும் கட்டடக் கலைக்கு வழி காட்டியாக விளங்கியது.

சோழர் காலத்தைச் சேர்ந்த கல், உலோகச் சிற்பங்கள், அக்காலத்திருந்த சிற்பிகளின் கைத்திறனையும், கற்பனைத் திறனையும் காட்டுகின்றன. ஏராளமாகக் காணப்படும் கற்சிலை, வெண்கலச் சிலை ஆகியவற்றில், கூத்தாடும் நடராசரின் திருவுருவமே மிகுதியாக உள்ளது. நடம் புரியும் சிலையின் அசைவுகள் எத்துணைத் திறனுடனும் அமைக்கப்பெற்றுள்ளதெனின், விரைவாகச் சுழல்வது போல் தோன்றிய போதிலும் அது நிலையாகவே நிற்கிறது. முதலாம் இராசராசர் காலத்திற்கு முற்பட்ட பல சிறந்த கற்சிலைகள் திருநெல்வேலியிலுள்ள திருவாலீசுவரன் கோவிலில் நிறைந்து காணப்படுகின்றன. தஞ்சாவூர், கங்கை கொண்ட சோழபுரக் கோவில்களிலும் உயர்தரச் சிலைகளைக்

காணலாம். தென் இந்திய வெண்கலச் சிலைகளில் மிகச் சிறந்தவை சோழர் காலத்தில் செய்யப்பட்டவைதாம். நடராசர் உருவங்களோடு சிவபெருமானின் வேறு பல உருவங்களும், திருமால், திருமகள், பார்வதி, அனுமார் ஆகியோரின் உருவச் சிலைகளும் பல்வேறு கோவில்களில் காட்சியளிக்கின்றன. தென் இந்தியாவில் பல பகுதிகளில் காணப்படும் சோழர் காலத்திய சிலைகள் தம் தொகையினாலும், சிறப்புத் தன்மையினாலும் ‘அக்காலத்தில் உலோக வார்ப்புத் தொழில் அடைந்திருந்த உச்ச நிலையை என்றும் எடுத்துக்காட்டுவதற்குப் போதுமானவை’ என்று ஒரு கலைஞர் கூறுகின்றார்.

உண்மை நிகழ்ச்சிகளை விளக்கும் சிற்பங்களைச் சோழர் காலத்தில் காண்பது அரிதென்றாலும், ஸ்ரீநிவாச நல்லூரிலுள்ள கோரக்கநாதர் கோவிலிலும், கும்பகோணத்திலுள்ள நாகேசுவரர் கோவிலிலும் காணப்படும் சிற்பங்கள் உயிருள்ளவையே போல் தோன்றுகின்றன. இராசராசர் காலத்திற்கு முன்னே சோழர்தம் ஓவியச் சிற்பங்கள் உயர் நிலைபெற்று விளங்கின. ஆயினும், நாம் திட்டமாகக் காலம் குறிக்கக்கூடிய முதல் தென் இந்திய ஓவியச் சிற்பம், முதல் இராசராசரின் கோப்பெருந்தேவியாகிய சோழமா தேவியின் உருவச் சிலையே ஆகும்.

தமிழ் நாட்டில் ஓவியக் கலையும் வளர்ந்திருந்ததெனத் தெரிகிறது. சில காலத்திற்கு முன் தஞ்சாவூர்க் கோயிலின் சுவர்களில் கண்டுபிடிக்கப்பட்ட சோழர் காலத்து ஓவியங்கள் பல்லவர், பாண்டியர் இவர்களது ஓவியங்களைப் போலவே காட்சியளிக்கின்றன; ஆயினும் அஜந்தா, வாதாபி, எல்லோரா ஆகிய இடங்களில் காணப்படும் ஓவியங்களைப் போல் அவ்வளவு சிறந்தவையல்ல.

கேரளத்தில் கற்கோவில்கள் அரிதாகவே காணப் பட்டன. ஆனால் மரக்கட்டடங்கள் சிறந்து விளங்கின. சிறிய கோவில்களும், அவற்றினுள் சில உருவங்களுமே அக்காலக் கேரளத்தில் காணக்கூடியன. ஆயினும், அந்தக் கல், உலோக உருவச் சிலைகள் அக்காலத்தின் பண்பட்ட கலைத்திறனைக் காட்டுகின்றன.

தக்காணத்தில் கல்யாணிச் சாளுக்கியர்கள் சில கட்டடக்கலை நுட்பங்களை வளர்த்தனர். அவற்றின் சிறப்பை மைசூரிலுள்ள ஒய்சளர் கோவில்கள் எடுத்துக் காட்டுகின்றன. இக்கோவில்களில் குறிப்பிடத்தக்க தென்னவென்றால், மக்கள் நுழையும் தலைவாயில்கள் பக்கங்களில் இருந்தன. சாளுக்கியக் கோவில்களின் விமானங்கள் வெளி அலங்காரமின்றிப் படிக்கட்டுக்கள் கொண்டவையாய் இருந்தன. ஆனால், ஒய்சளர் கோவில் களின் விமானங்கள் கலைத்திறமையுடன் கட்டப்பட் டிருந்தன. பிற்காலச் சாளுக்கிய விமானங்கள் ஒய்சளரின் முறையைப் பின்பற்றிக் கட்டப்பெற்றன. புறச்சுவர்களை மிக அழகுபடுத்துவதே பிற்காலச் சாளுக்கியக்கலையின் சிறப்புக்கூறாய் விளங்கியது. இவ்வகை வெளியழகுகளை இட்டகியிலுள்ள மகாதேவர், மல்லிகார்ஜுனர் கோவில் களிலும், குருவத்தியிலுள்ள மல்லிகார்ஜுனர் ஆலயத் திலும் காணலாம்.

மைசூரில், அழகிய இந்துக் கோவில்களைத் தவிர பல சமணக் கட்டடங்களும் உள்ளன. அவற்றில் தலை சிறந்தது ஸௌந்தர்ய பஸதி; சோழக் கட்டடக் கலை நுட்பங்களை அதில் காணலாம். முதல் தீர்த்தங்கரரது திருமகனான கோதமனின் 55 அடி உயரமுள்ள பெரிய உருவச்சிலையில் கலைத்திறன் பொங்கி வழிகின்றது. ஸ்ராவண பெல்கோளா

விலுள்ள இச்சிலையையும் சமணக் கோவிலையும் மேலைக் கங்க மன்னர் நாலாம் இராசமல்லரது அமைச்சராகிய சாமுந்த இராயர் நிறுவினர். ஆயினும், ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்கு முற்பட்ட காலத்திலேதான் தக்காணத்தில் விளங்கிய கட்டடங்கள், சிற்பங்கள் முதலியவற்றில், தலைசிறந்தவைகளைக் காணலாம். அக்காலத்தில்தான் அஜந்தா எல்லோரா, எலிபன்டா, அய்ஹொளெ, வாதாபி முதலிய இடங்களில் காணும் கருவூலங்கள் உலகிற்குக் கிடைத்தன.

பத்தாம் நூற்றாண்டிற்குப் பிறகு, வட இந்தியக் கட்டட முறையைப் பின்பற்றிய முப்பதுக்கு மேற்பட்ட கோவில்கள் கலிங்கத்தில் காட்சியளிக்கின்றன. அவற்றில் தனிச் சிறப்புடன் விளங்குபவை பூரியிலுள்ள ஜகநாதர் கோவிலும், கோனாரக்கிலுள்ள ஆதவன் ஆலயமும் ஆகும். கலிங்க நாட்டில் கட்டடக் கலை வளர்ச்சிக் காலத்தை மூன்று பிரிவுகளாகப் பகுக்கலாம். கி.பி. 750- முதல் 900 வரையுள்ள முற்காலச் சாளுக்கியரின் கட்டட முறையை புவனேச்வரத்திலுள்ள பரசுராமேச்வரர் கோவிலில் காணலாம். அதன் 44 அடி உயரமுள்ள சிகரம் பெரிதாக, ஆனால் வெளியழகின்றித் தோன்றுகிறது. அது ஒன்றின் மேல் ஒன்றாகப் பெருங்கற்களை அடுக்கி உருவாக்கப்பட்டது. அதைப் பலப்படுத்தப் போதிய சுண்ணும்பு பூசப்படவில்லை. கி. பி. 900-முதல் 1100-வரை நிலவிய இரண்டாவது பிரிவின் கலை நுட்பத்தை புவனேச்வரத்திலுள்ள லிங்கராசன் கோவிலிலும், பூரியிலுள்ள ஜகநாதர் கோவிலிலும் காணலாம். இக்காலத்தில் கட்டிய கோவில்கள் பெரிதாக எழுப்பப்பட்டன; மேலும், உள்ளே பல திருத்தங்களும் இருந்தன. உயர்ந்த சிகரமே

இக்காலக் கலையின் சிறப்பாக விளங்கியது. 1100-முதல் 1250-வரை பரவிய மூன்ருவது இறுதிப் பிரிவில் பல நடுத்தர அளவுக். கோவில்களையே காணக்கூடும். ஆயினும், நரசிம்ம தேவர் கோனரக்கில் கட்டிய கதிரோன் கோவில் மிகப் பெரியது; இக்கோவிலை பன்னிரு உருளை களின் மேலமைக்கப்பெற்ற மாபெரும் தேர் போல் கட்டி யுள்ளார். சுவர்களில் காணும் கலைகமழ் சிற்பங்கள் சில வற்றில் காதல் மணமும் வீசுகின்றது. உண்மையில், இக்கால முதல் பல கோவில்களில் காம வேட்கையைத் தூண்டும் சிற்பங்கள் தோன்றலாயின. கடவுள் வழிபாடு நிகழும் தூய இடங்களில் அவை தோன்றியதேன் என்ற கேள்விக்குப் பல விடைகள் அளிக்கப்படுகின்றன. சில வேளை, இந்துக்களிடம் மகாயான பௌத்தம் ஈடுபட்டிருந்த தந்திர வழிபாடு நுழைந்ததின் விளைவாக இருக்கலாம். இத்தகைய தூய்மையற்ற உருவங்கள் ஒரிஸ்ஸாவிலுள்ள கோவில்களில்தாம் முதன் முதல் இடம் பெற்றன. பிறகு அவை நாட்டின் நாலாபக்கமும் பரவலாயின.

12-ஆம் 13-ஆம் நூற்றுண்டுகளில் தக்காணத்தின் வடமேற்குப் பகுதியில் புதிய கோவில் கட்டடக் கலை ஒன்று தோன்றியது. அது பெரும்பாலும் வட இந்தியக் கலையையே பின்பற்றியது. இக்கலையின் சிறப்பு என்ன வென்றல் சிகரம் மிகுதியான அழகுடையதாக அமைக்கப் பட்டதேயாகும். உயர்ந்த சிகரத்தின் கோணங்களில் உள்ள இடைவெளிகளில் பெரிய சிகரத்தைப் போன்ற பல சிறு சிகரங்கள் நிறைந்துள்ளன.

## இயல் ஒன்பது

# கடல் கடந்த தென் இந்திய நாகரிகம்

நெடுங்காலத்திற்கு முன்னே தென் இந்தியா கீழ் நாடுகளோடு வாணிகத் தொடர்பு கொண்டிருந்ததென அறிந்தோம். இந்த வாணிகம் நாளடைவில் தென் இந்திய மக்கள் தொலை கிழக்கு நாடுகளில் குடியேறுவதற்கு வசதியளித்தது. தொலை கிழக்கில், பர்மா, மலாயா, சுமத்திரா, ஜாவா, போர்னியோ, சையாம், பூனும், காம்பூஜா, சம்பா முதலான நாடுகளில் தென் இந்திய நாகரிகம் பரவியிருந்ததற்குச் சான்றுகள் பல உள. அந்நாடுகளோடு தென் இந்தியர்கள் ஏற்படுத்திக்கொண்ட தொடர்பைச் சற்று ஆராய்ந்தால் இது நன்கு துலங்கும்.

**பர்மா** :—கி. பி. முதல் நூற்றாண்டில் பர்மாவோடு தென் இந்திய வாணிகம் நடைபெற்றிருந்ததென்று பெப்ளுஸிலிருந்தும் தாலமி வரைந்த நூலிலிருந்தும் அறிகிறோம். ஆனால் இந்த வர்த்தகத் தொடர்பு முதல் முதல் எப்பொழுது தோன்றியதென உறுதியாகக் கூற இயலாது. பர்மாவிலுள்ள ஒரு கூட்டத்தாரின் பெயரிலிருந்து தென் இந்தியத் தொடர்பு பற்றி ஒரு சான்று கிடைக்கக்கூடுமெனத் தெரிகிறது. 'மாண்' எனப்படும் ஒரு பர்மா கூட்டத்தார் 'தலேங்' எனவும் அழைக்கப்பட்டு வந்தனர். இது தென் இந்தியாவிலுள்ள தெலிங்கானாவின் நினைவாய்த் தோன்றி

யிருக்கலாமென்பது ஒரு கருத்து. ஒரு வேளை, தெலிங்கானு நாட்டிலிருந்து சில மக்கள் பர்மாவிற்குச் சென்றிருக்கலாமென ஒரு சாரார் கருதுகின்றனர். கீழைப் பர்மாவில் தாட்டன் என்ற ஓர் ஊரை அமைத்தவர் தெலிங்கர் என்பவரென ஒரு செவிவழிச் செய்தியும் வழங்குகிறது.

சுமார் கி. பி. ஐந்தாவது அல்லது ஆருவது நூற்ருண்டைச் சார்ந்த இரு தங்க ஏடுகளை மாண் கூண் என்ற சிற்றூரில் கண்டுபிடித்திருக்கின்றனர். அவ்விரண்டு ஏடுகளிலும் தென் இந்திய எழுத்தில் சில சொற்கள் பொறிக்கப்பட்டுள்ளன. மேலும், மற்ெருரு சிற்றூரிலுள்ள பௌத்த நினைவுக்குறிக் கல்வெட்டு ஒன்றில் பழைய தெலுங்கு, கன்னட எழுத்தில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டின் ஒரு வரி தென்படுகின்றது. இதில் காணப்படும் எழுத்து வடிவம் தென் இந்திய மன்னர்களாகிய பல்லவர், கதம்பர் என்பாரின் கல்வெட்டுகளிலுள்ளவற்ருேடு ஒத்திருப்பது உற்று நோக்குதற்குரியது. இக்கல்வெட்டில் குறிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ பிரபுவர்மர் என்பவர் பெரும்பாலும் அந்நாட்டை ஆண்டுவந்த 'மன்' என்ற அரசராக இருந்திருக்கலாம். 'வர்மன்' என்ற சிறப்புப்பெயர் இந்தியப் பெயரென்பது திண்ணம்; அது மன்னர்க்குரிய பட்டப் பெயர். மேலும், பிணப்பாதுகாப்பிற்குப் பயன்படுத்திய தாழிகள்மீது செதுக்கப்பட்டுள்ள வரிகளில் ஆர்ய விக்கிரமா, ஹரிவிக்கிரமா, ஸிம்ஹவிக்கிரமா என்ற சம்ஸ்கிருதமும் பாலியும் கலந்த பெயர்களைக் காண்கின்ருேம். பர்மா நாட்டில் எந்த மன்னன் பெயரின் பின்னும் விக்கிரமா அல்லது வர்மா என்று சேர்த்துக் கொள்ளும் வழக்கம் இருந்ததாகத் தெரியவில்லை. மாண்

மொழியில் இந்தியச் சொற்கள் பலவற்றைக் கடன் வாங்கிச் சேர்த்துக்கொண்டதை எளிதில் உணரலாம். பிரோம் அரசு ஆகிய ஸ்ரீக்ஷேத்திரத்திற்குத் தென் இந்தியக் கதம்பர்களது தலைநகரின் பெயரை ஒட்டி வனவாசி என்ற பெயர் வழங்கி வந்ததை இவ்விடத்தில் நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

பர்மாவிலுள்ள திருக்கோவில்களைத் தக்காணத்திலுள்ள சிற்பிகளே கட்டியிருக்க வேண்டுமெனச் சிற்ப நூல் வல்லுநர் ஸ்காட் என்பார் கருதுகின்றார். கோவில்களின் அமைப்பு மட்டுமே அன்றி அவற்றிலுள்ள சிலைகளும், அவற்றின் தோற்றமும் பாவனைகளும் தனிப்பட்ட தென் இந்திய முறையை ஒட்டியனவாய் உள்ளனவென்று அவர் தெளிவாகக் கூறுகிறார். பர்கன் என்ற ஊரில் தமிழ் எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டொன்று கண்டு பிடிக்கப்பட்டது. அதிலிருந்து நானாதேசி வணிகர் கட்டி வைத்த திருமால் கோவில் ஒன்று இருந்தது என்றும், அவ்வூரில் தமிழர் சிலர் குடியேறியிருந்தனர் என்றும் தெரிகிறது. அதே கோவிலுக்கு, 13-ஆம் நூற்றாண்டில், கேரளத்தைச் சேர்ந்த வணிகர் ஒருவர் நன்கொடை அளித்துள்ள செயல், தென் இந்திய மக்களுக்கு அவ்விடத்தோடு நெருங்கிய தொடர்பு இருந்ததென்ற கருத்தை வலியுறுத்துகிறது. சுருங்கக்கூறின், தென் இந்தியாவிற்கும் பர்மாவிற்கும் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் துவக்கத்திலேனும் அதற்கு முன்னரேனும் பலவகைத் தொடர்புகள் இருந்து வந்தன என்பதற்குத் தகுந்த சான்றுகள் உள.

மலாயா :—தென் இந்தியர் மலாயா நாட்டிலும் நெடுங்காலத்திற்கு முன்பே குடியேறியிருந்தனரென்று

தெரிகிறது. தென் இந்திய எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்கள் பலவற்றை அங்குக் காணலாம். எடுத்துக் காட்டாகக் குவால ஸெலின்ஸிங் என்னும் கிராமத்திலுள்ள கி. பி. ஆருவது நூற்ருண்டுக் கல்வெட்டு, கெடார மெனுமிடத்திலுள்ள கி. பி. நான்காம் நூற்ருண்டைச் சேர்ந்த இரு கல்வெட்டுக்கள், லிகோறில் கி. பி. 775-இல் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு ஆகியவற்றைக் குறிப்பிடலாம். வியோங்ஸ்நாவில் திகழும் கோவிலில் காணும் பல படிமங்களுள் இரு சிறந்த உருவச் சிலைகள் குறிப்பிடத்தக்கவை. அவற்றுள் ஒன்று, நின்ற திருக் கோலத்தில் எழுந்தருளியுள்ள திருமாலின் வடிவமும், மற்ருென்று, வைரவமூர்த்தியாக விளங்கியுள்ள சிவபெருமானின் வடிவமும் ஆகும். அவ்விரு உருவச்சிலைகளின் முக உறுப்புக்களும் முகத்தின் தோற்றமும் தவிர, மற்றெல்லா அமைப்பும் தென் இந்திய முறையைப் பின் பற்றினதாகவே காணப்படுகின்றன. அவ்வாறே, தாகூப் பாவிலுள்ள சில உருவச்சிலைகளைப் பற்றி லாஜோங்கீரா எனும் நிபுணரும், இதே கருத்தை வெளியிடுகின்ருர். பல மடிப்புக்களுடைய ஆடைகளும், எண்ணிறந்த அணிகலன் களும், உடலின் ஒசிந்த இயற்கை வளைவும் திராவிட நாட்டுப் படிமங்களை ஒத்திருக்கின்றன என்று அவர் தெளிவாக விளக்குகிருர்.

கட்டடக் கலையிலும் தென் இந்திய முறை அங்கு செல்வாக்குப் பெற்றிருந்ததாகத் தெரிகின்றது. கடாரத்தில் கிடைத்த புதை பொருட்களில் ஒரு பழைய சிவன் கோவிலின் எஞ்சிய பகுதிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக்கோவிலின் கட்டடக் கலை முறை பல்லவர் பின் பற்றியிருந்ததை ஒத்துள்ளதெனத் தொல் பொருள்

நிபுணர் குவாரிட்ச் வெல்ஸ் என்பார் கருதுகின்றார். அதன் அண்மையில் காணப்படும் மற்றொரு கோவிலின் கூரை மாமல்லபுரத்து ரதங்களின் கூரைகளைப் போல அமைந்திருக்கின்றது.

தவிர, தாகூபாவில் எட்டாவது நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்று வரலாற்றுச் சிறப்புப் பெற்றுளது. ‘அவனி நாரணம்’ என்ற ஏரி ஒன்று அமைக்கப்பெற்ற விவரத்தை அக்கல்வெட்டு கூறுகின்றது. மூன்றும் நந்திவர்மன் (கி. பி. 826—50) பெயரால் நாங்கூர் தலைவர் ஒருவர் அதை அமைத்ததாகக் கூறப் பெற்றுள்ளது. இந்தக் கல்வெட்டினால் ஆங்கு உயர் நிலையிலிருந்த வாணிகக் குழுக்களைப் பற்றிய செய்தி ஒன்றைப்பற்றியும் அறிகின்றோம். அந்த ஊரில் தங்கியிருந்த ‘மணி கிராம’த்தாரின், அதாவது வணிகரின், பொறுப்பிலேதான் அந்த ஏரியின் பாதுகாப்பு ஒப்படைக்கப் பெற்றிருந்ததென்பது அக்கல்வெட்டு வழியே நாம் அறியக் கிடக்கும் செய்தி.

ஆகவே, மலாயா நாட்டின் வரலாற்றிலும், கலை வளர்ச்சியிலும் பொது நலத்திலும் தென் இந்தியா அரும் பெரும் பங்கு கொண்டிருந்ததென்பதற்கு ஐயமில்லை. இன்றும் அந்தத் தொடர்பின் பலன்கள் நன்கு புலப்படுகின்றன. மலாயா மொழியில் வழங்கும் பல சொற்கள் தூய தமிழ்ச் சொற்கள் என்பது வெள்ளிடைமலை.[1] மலாயா என்ற சொல்லே மலை என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து தோன்றியது. தவிர, இலை, மணம்புரிதல், உறுதிமொழி,

1. Sri. Swami Satyananda: Indian Cultural Influence on Malaya (1947) pp 28—9.

இணை, வண்ணன் முதலியவற்றைக் குறிக்கும் மலாயாச் சொற்கள் தமிழின்பாற் கடன் பெற்ற சொற்கள் என்பது திண்ணம். மலாயாவிலுள்ள முஸ்லீம் அரசுகளில் இன்றும் ஸ்ரீ என்ற வடசொல் வழங்கி வருதல் உன்னுதற் குரியது. 'திரு' என்னும் தமிழ்ச் சொல்லையே ஸ்ரீ என்று திரித்து வடநூலார் வழங்கினர் எனக் கருதுவாருமுண்டு. மலாயா மொழியில் சமயம், அறம், கணிதம் முதலிய துறை களில் பல சம்ஸ்கிருதச் சொற்கள் இருப்பதைக் காணலாம். இவையும் இந்தியாவிலிருந்து சென்றவைதாம். கிருத்துவ நூற்றுண்டின் தொடக்கத்தில் நாகரிகமற்ற நிலையிலிருந்த மலாயா மக்களிடம் பல உயர்ந்த கருத்துக்களையும் பண் பாட்டையும் அமைத்தவர் தென் இந்தியாவிலிருந்து சென்று மலாயா நாட்டில் குடியேறியவரே என்பதற்கு ஐயமில்லை.

**சுமத்திரா :** கி. மு. மூன்றும் இரண்டாம் நூற்றுண்டு களில் சுமத்திராவில் இந்துக்கள் குடியேறினர் எனலாம். சுமத்திராவில் வாழும் ஸிம்பிறிங் என்ற கூட்டத்தார் சில ரிடையே இன்றும் வழக்கிலிருக்கும் 'சோழிய' - 'பாண்டிய'- 'மெலியாள'-'பெலவி' - (பல்லவ)-'தெகங்' (தெக்காணம்) முதலான பெயர்கள் தென் இந்தியத் தொடர்பைத் துலக்கிக் காட்டுகின்றன. இப்பெயர்கள் எக்காலத்தில் முதன் முதல் சுமத்திராவில் புகுந்தன என்று திட்டமாய்க் கூற முடியாது. ஆனல் நெடுங்காலத்திற்கு முன்பே அவை அங்குச் சென் றிருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது.

சுமத்திரா தீவில் ஸ்ரீவிஜய என்ற அரசு கி. பி. 7-ஆம் நூற்றுண்டில் உயர்நிலை எய்தியது. ஸ்ரீஜயனுஸா என்ற பௌத்த மன்னர் சுமத்திராவின் பெரும் பகுதியையும்,

அண்மையிலிருந்த பங்கா என்ற தீவையும் தம் கீழ்ப் படுத்தி தம் அரசு நிலையைப் பெரிதும் உயர்த்தினரெனக் கல்வெட்டுக்கள் வெளிப்படுத்துகின்றன. கி. பி. 8-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஸ்ரீவிஜய அரசுதான் சைலேந்திரப் பேரரசாய்ப் பெருமை அடைந்தது. அப்பேரரசில் தெற்கிலுள்ள தீவுகள் மட்டுமன்றி, மலாயாவும் கம்போடியாவும் இணைக்கப்பட்டன. கம்போடியாவும் ஜாவாவும் 9-ஆம் நூற்றாண்டில் விடுதலை பெற்ற போதிலும், பத்தாவது நூற்றாண்டின் இறுதிவரை சைலேந்திர வல்லரசு ஊக்கமாகவே இருந்து வந்தது. முதலில் சைலேந்திர மன்னர் சோழர்களுடன் நட்புற்றிருந்தனர். சைலேந்திர மன்னர், மாற விஜயோத்துங்கவர்மர், கி. பி. 1007-இல் தமிழ் நாட்டில் ஒரு பௌத்த ஆசிரமம் கட்டி வைத்தார். ஆயின், எக்காரணம் பற்றியோ இராஜேந்திர சோழர் சைலேந்திர அரசரோடு மாபெரும் போர் புரிந்து சுமத்திராவையும் மலாயாவையும் கைப்பற்றிக் கொண்டார். 11-ஆம் நூற்றாண்டு இறுதி வரையிலும் போர் தொடர்ந்து நடந்து கொண்டே இருந்தது. அதில் ஒரு திறத்தினரும் இறுதி வெற்றி பெறவில்லை. மஹாயான பௌத்த மதத்தைத் தழுவியவரான சைலேந்திரர்களுக்கு மலாயாவோடு நெருங்கிய உறவு இருந்து வந்ததனால் பௌத்த மதத்தின் செல்வாக்கு அங்கு தழைத்தது. சுமத்திராவிற்கு இந்து மதத்தோடுள்ள தொடர்பும் நெடுநாள் நீடித்திருந்த தென்பதை மறுக்க முடியாது. கி. பி. ஆரம்ப நூற்றாண்டுகளில் தொடங்கிய இத்தொடர்பு ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகள் வலிமை வாய்ந்திருந்தது. வங்காளத்திலிருந்து சென்ற நாகரிகத்தினும் மேலாகத் தமிழ் நாட்டிலிருந்தும் மலபாரிலிருந்தும் சென்ற பழக்க வழக்கங்கள்தாம்

சுமத்திராவின் நாகரிகக் கலப்புக்கு அடிப்படையாயிருந்தனவெனக் கூறலாம்.

ஜாவா : தென் இந்தியாவிலிருந்து ஜாவாவில் குடியேறிய மக்கள் நெடுங்காலத்திற்கு முன்பே சென்றவர் ஆவர். முன்னாளிலிருந்த தென் இந்தியப் பண்பாடும் நாகரிகமும் அக்காலம் முதல் ஜாவாவில் இணையத் தொடங்கின. மணிமேகலை முதலான காப்பியங்களில் ஜாவாவானது 'சாவகம்', 'சாவகத்தீவகம்' என்ற பெயர்களுடன் வழங்கப்பட்டுள்ளது.

ஜாவாக் கிராமங்கள் தனிப்பட்ட முறையில் சுதந்திரப் பகுதிகளாக இயங்கின. அரசியல் முறையும், அக்கிராம ஆட்சியின் உறுப்புக்களும் தென் இந்தியாவில் திகழ்ந்தவையை ஒத்தே இருந்தன. கி. பி. 132-இல் ஜாவாவைத் தேவவர்மர் ஆண்டுவந்ததாகச் சீன நாட்டு நூல்கள் கூறுகின்றன. அதற்கு முன்னராகவே இந்துக்கள் ஜாவாவில் குடியேறியிருக்கவேண்டுமெனத் தோன்றுகிறது. ஜாவாவிலுள்ள இடைக்காலச் செய்திக் கோவைகள் கி. பி. இரண்டாவது நூற்றாண்டில் கலிங்கத்திலிருந்து 20,000 இந்தியக் குடும்பங்கள் ஜாவாவில் வந்து குடியேறினவெனத் தெரிவிக்கின்றன. இவ்வாறு மக்கள் திரளாகச் சென்றதற்குக் காரணம் யாதென அறிய முடியவில்லை. ஆனால், அங்குப் புதியராய்க் குடியேறிய மக்கள் பல நகரங்களையும் பட்டணங்களையும் தோற்றுவித்தனர் என்றும், தமக்குமுன் வாழ்ந்திருந்த நாகரிகமற்ற மக்களிடையே பல்வேறு கலைகளைப் பரப்பினர் என்றும், கைத்தொழிலையும் வாணிகத்தையும் வளர்த்தனர் என்றும் அறிகின்றோம். மற்றுமொரு தடவை 5,000 இந்தியர் கொண்ட ஒரு பெருங்கூட்டம் மேற்குக் கடற்கரை நாட்டில்

இருந்து ஆறு பெரிய மரக்கலங்களிலும் நூறு சிறு நாவாய்களிலும் அங்குச் சென்று குடியேறியதாகக் காண்கின்றோம். இக்கேள்விச் செய்திகள் உண்மையாயிருந்தாலும் கட்டுக் கதையாயிருந்தாலும், எவ்வாறு 'இந்திய — ஜாவா' நாகரிகம் தோன்றியது என்பதை விளக்க உதவுகின்றன.

மேற்கு ஜாவாக் கல்வெட்டுக்களை வேங்கிப் பல்லவ எழுத்தில் பொறித்துள்ளனர். எழுத்தின் வடிவத்திலும், அமைப்பிலும், அக்கல்வெட்டுக்கள் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதியைச் சார்ந்தவை என உறுதிப் படுகின்றன. பூர்ணவர்மர் என்ற மன்னர் ஒரு பெருங் கால்வாய் வெட்டினர் என்றும், அதன் திறப்பு விழாவின் போது அவர் ஆயிரம் பசுக்களைப் பார்ப்பனருக்கு அளித்தார் என்றும் துகு என்னுமிடத்துள்ள கல்வெட் டொன்று கூறுகிறது. மேலும், அந்தக் கல்வெட்டில் தென் இந்தியப் பஞ்சாங்க முறையைப் பின்பற்றி நாள், திங்கள் முதலியன குறிக்கப்பட்டுள்ளன. ஆகவே, தென் இந்தியப் பழக்க வழக்கங்கள் அங்கும் பரவியிருந்த தென்பது தெள்ளிதிற் புலனாகிறது.

சீன யாத்திரிகர் பாஹியன், கி. பி. 414-இல், ஜாவாவிற்கு வந்த பொழுது, அங்குச் சில பௌத்தர்கள் எஞ்சியிருந்த போதிலும் 'பிராமண மதமே உச்ச நிலையில் இருந்தது' என்று கூறுகிறார். ஆயின், அதற்குப் பின்பு, வெகுவிரைவில் காஷ்மீரத்திலிருந்து வந்த குணவர்மரென்ற பௌத்த ஞானி, ஜாவாவை ஆண்டு வந்த மன்னரைத் தமது மதத்திற்குத் திருப்பினார். மேலும், குணவர்மரின் முயற்சியால் கீழ்ஜாவா முழுவதுமே, பெரும்பாலும், பௌத்த மதத்தைத் தழுவியதாகத் தெரிகின்றது.

மத்திய ஜாவாவிலும் மேற்கு ஜாவாவிலும் இந்து மதமே வலுவுற்றிருந்தது. அங்கு ஒரு புதிய அரசும் ஏற்பட்டது. கி. பி. 732 - ஆம் ஆண்டிலே சஞ்சயர் என்ற மன்னர் பொறித்துள்ள கல்வெட்டிலிருந்து அவர் சைவரென்றும், சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தாரென்றும், தென் இந்தியத் தொடர்பு பெருமிதமாக அவர் நாட்டில் தழைத்ததென்றும் தெரியவருகின்றது. கி. பி. 760-ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்ட மற்ருெரு கல்வெட்டு, அகத்தியரது உருவச்சிலையை உடைய கோவில் ஒன்று ஆங்கு இருந்தது எனக் குறிப்பிடுவதும் நம் கவனத்துக்குரியது. ஒன்பதாம் நூற்ருண்டு வரையிலும் ஜாவாவில் கோவில்கள் மரத்தினுலே கட்டப் பட்டன. இதுவும் தென் இந்தியத் தொடர்பையே வலுப்படுத்துகின்றது. ஏனென்ருல் ஒன்பதாம் நூற்ருண்டிற்கு முன்னதாகவே வட இந்தியாவில் செங்கல்லினுல் கோவில்கள் கட்டத் தொடங்கியிருந்தனர்.[2]

கி. பி. 778 முதல் 879 வரை ஜாவாவானது சைலேந்திர மன்னர் ஆட்சியில் வந்தது. அக்காலத்தில் அத்தீவு கலையில் உயர்நிலையை அடைந்தது. உலகிலுள்ள பௌத்த நினைவுக்குறிக் கட்டடங்களில் தலை சிறந்து விளங்கும் போராபதூர் கோவில் மன்றம் இக்காலத்தில் எடுக்கப்பெற்றதாகும். ஆனுல், அது பௌத்த மதத்தைச் சார்ந்ததாயிருந்த போதிலும், அறிஞர் வின்சென்று ஸ்மித் என்பார் கூறியிருப்பது போல், அந்த அரிய மாளிகை பல்லவர், சோழர் இவர்தம் சிற்பக் கலையை ஒத்ததாகவே காணப்படுகின்றது. சைலேந்திர ஆட்சி அகன்ற பின்

2. H. G. Quaritch Wales: 'The Making of Greater India.' pp. 152—3.

பண்டைச் சைவ சமய ஆட்சியே மீண்டும் நிறுவப் பெற்றது. கி. பி. 879 முதல் 927 வரையில் போராபதூர் மாளிகையைப் போன்ற பல இந்துக் கோவில்கள் அமைக் கப்பட்டன. பிராம்பனத்திலுள்ள லோராஜாங்ருங் என்ற பெருங்கோவில், மத்திய ஜாவாவில் இந்தியக் கலையும் ஜாவாக் கலையும் இணை பொருந்திய காட்சிக்குச் சான்ருக நிற்கின்றது.

12-ஆம் நூற்ருண்டில் கிழக்கு ஜாவாவில் கெடிரி என்ற பெயருடைய அரசு ஒன்று அமைக்கப்பட்டது. இந்துக் களாயிருந்த மன்னர் சம்ஸ்கிருதத்தைக் கருத்தாய்ப் பேணினர்கள். ஜாவா வரலாற்றில் 12-ஆம் நூற்ருண்டு மிக முக்கிய காலமாகும். ஏனெனில், அதற்கு இரண்டு நூற்ருண்டுகளுக்குப் பின், அதாவது 14-ஆம் நூற்ருண்டில் திகழ்ந்த நாகரிகம் தோன்றுவதற்கு 12-ஆவது நூற்ருண்டில் உருவாகிய நாகரிகமே அடிப்படையான உதவி புரிந்தது. 14-ஆவது நூற்ருண்டில் தோன்றிய அந் நாகரிகம் இந்தியக் கலையும் பழைய ஜாவாப் பண்பும் இணைந்து முதிர்ச்சி பெற்றதாயிருந்ததென்பதற்கு ஐயமில்லை.

**போர்னியாவும் பாலியும்:**—போர்னியாவில் கி. பி. நாலாம் நூற்ருண்டைச் சார்ந்த கல்வெட்டுக்களினுல் அங்கு இந்துக்களது தொடர்பு தொன்றுதொட்டே ஏற்பட்டிருந்த தாகத் தெரிகின்றது. அந்தக் கல்வெட்டுக்களில் சம்ஸ்கிருத மொழி நடை, எழுத்து வடிவம் ஆகியன அடங்கியுள்ளன. கருத்துக்கள் யாவும் தென் இந்தியக் கல்வெட்டுக்களை ஒத்திருக்கின்றன. பிராமண மதமும் அதைச் சார்ந்த ஆசாரங்களும், சடங்குகளும், போர்னி யாவில் மிகுதியாகப் பரவி வேரூன்றியிருந்தனவென்ப

தற்குக் கல்வெட்டுக்களே சான்றுகளாவன. கிழக்குப் போர்னியாவில் மரத்தினுல் உருவாக்கப்பட்ட ஒரு பழங் கோவிலில் சிவபெருமான், புத்தர் பெருமான் ஆகியோரின் அழகான கற்சிலைகள் உள்ளன. அதை சுமார் கி. பி. நாலாம் நூற்றுண்டைச் சார்ந்தவை என ஆராய்ச்சி வல்லுநர் திட்டப்படுத்தியுள்ளார்; மேலும், தென் இந்திய இசை, நாடகம், நாட்டியம் யாவும் தென் கிழக்கு ஆசியாவில் நன்கு பரவியிருந்ததற்குச் சான்றுகள் பல உள. இச் சான்றுகள் பாலியில் மிகுதியாகவும், சையாம், காம்போடியா, ஜாவா இவ்விடங்களில் சற்றுக் குறை வாகவும் காணப்படுகின்றன.

சையாம் :—சையாமைச் சார்ந்த பாங்டுக் கிராமத்தில் இந்திய முறையில் வார்க்கப்பட்டுள்ள கிரேக்கோ ரோமன் விளக்கு ஒன்றையும் அமராவதியில் புகழ் பெற்று விளங்கிய முறையைத் தழுவி உருவாக்கப்பட்டுள்ள புத்தர் சிலை ஒன்றையும் கண்டுபிடித்துள்ளனர். கி. பி. ஆரம்ப நூற்றுண்டுகளிலேயே அங்குச் சில தென் இந்தியர் குடியேறி இருந்திருக்க வேண்டுமென்பதை இவை தெளிவிக்கின்றன. அந்நாட்டில் தோண்டி எடுக்கப்பட்ட வேறு தொல்பொருள் களினுல் சையாமில் குடியேறியிருந்த தென் இந்தியர் களுக்குக் குப்த அரசரோடு தொடர்பு இருந்ததாகத் தெரிகின்றது. அன்றியும், பாங்டுக்கிற்கு வடக்கிலுள்ள சிறிதெப் என்ற ஊரில் பற்பல பழங்காலப் படிமங்களும் கி. பி. ஐந்தாவது அல்லது ஆருவது நூற்றுண்டைச் சார்ந்ததும், சிதைவுற்றதும், தென் இந்திய எழுத்துக்கள் பொறிக்கப்பட்டதும் ஆகிய ஒரு கல்வெட்டுப் பகுதியும் கிடைத்திருக்கின்றன. அங்ஙனமே கிடைத்துள்ள கற்சிலை கள், உருவங்கள் ஆகிய பலவற்றுள் ஒரு யக்ஷிணிச் சிலையும், உடைந்து போன ஒரு நந்தியின் உருவமும் உள்ளன.

பிற்காலத்தைச் சார்ந்த, அதாவது கி. பி. 6 முதல் 13 வரையுள்ள நூற்றுண்டுகளில் தோன்றிய இந்துச் சிலைகள் சிறப்பாக பிரமன், சிவன், விஷ்ணு, இந்திரன் முதலானோர் சிலைகள் ஒவ்வொரு வாசலிலும் நிற்கின்றன. ஆதியில் இந்துக்கள் சிறு சிறு கூட்டங்களாக வந்து தனித்தனியே குடியேறியிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. நாட்டில் பல பகுதிகளில் முன்னுள் வாழ்ந்திருந்த சையாம் மக்களுக்கும் பின் வந்து குடியேறிய தென் இந்தியர்களுக்கும் இணைப்பு ஏற்பட்டிருக்கலாமெனக் காண்கின்ருேம். தற்போதுள்ள சாண்டபூண் என்ற ஊருக்கு மூன்று கல் தொலைவுக்குக் கிழக்கே ஹிந்துக்கள் குடியேறிப் புதுக்குடி ஒன்று அமைத்ததற்குப் பல சான்றுகள் உள்ளன. ஆங்கு சம்ஸ்கிருதத்தில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்களின் சில பகுதிகளையும் காணலாம்.

கம்போடியாவிலிருந்தது போலவே சையாமிலும், அதன் தலைநகராகிய பாங்காக்கிலும் அரசர்களுக்குப் புரோகிதர்கள் இருந்து வந்தனர். இப்பழக்கம் சையாம் குடியரசு தோன்றுவது வரையில் தொடர்ந்து நடைபெற்றதாகத் தெரிகிறது. அக்கூட்டத்தைச் சார்ந்த புரோகிதர் ஒருவர், தாம் சையாமில் குடியேறிய இந்தியரின் ஐந்தாவது தலைமுறையைச் சார்ந்தவரெனவும், தமது முன்னோர் இராமேஸ்வரத்தைச் சார்ந்தவரெனவும், 1821-இல் கிரா போர்டு என்ற ஐரோப்பியரிடம் அவர் கூறியிருக்கின்ருர். தாம் காசியிலிருந்து வந்ததாக நம்புகிற வேறு சில பார்ப்பனர்களும் ஆங்குளர். இச்செய்திகள் உண்மையாயிருப்பினும் இருக்கலாம். பார்ப்பனர்கள் வட இந்தியாவிலும் தென் இந்தியாவிலும் இருந்து ஆங்குச் சென்றிருக்கக்கூடும். சையாம் மன்னர்களின் முடிசூட்டு விழாவில் ஒரு தமிழ்ப்

பாட்டுப் பாடப்படுவதாக அறிகிறோம். பாங்காக்கிலுள்ள கோவில்களில் பார்ப்பனப் புரோகிதர்கள் மாணிக்கவாசகரது திருவெம்பாவையிலிருந்து சில பதிகங்களை இன்றும் பாடி வருகிறார்கள். சையாம் கோவில்களில் நடைபெறும் ஆசாரங்களும் சடங்குகளும் தென் இந்தியக் கோவில்களில் நடப்பன போலவே காணப்படுகின்றன. மேலும், பல தென் இந்திய ஆலயங்களில் நடைபெறுவது போலவே மார்கழித் திங்களில் 'திருவெம்பாவை விழா' அங்கு நடைபெறுகிறது. இந்த விழாவில் பங்குகொள்ள விகௌரிலிருந்து பார்ப்பனர்கள் சையாம் கோவில்களுக்குச் செல்வதுண்டு.

**பூணனும் சென்லாவும்**:— பூணன், சென்லா என்று அழைக்கப்பட்டு வந்த இரு அரசியல் பகுதிகள்தாம் பின்னால் ஒன்றுபட்டு காம்போஜ நாடு அல்லது காம்போடியாவாகத் திகழ்ந்தன. சுமார் கி. பி. 245-இல் பூணனுக்குச் சென்றிருந்த சீன எழுத்தாளர் ஒருவர் அந்நாட்டில் பிசாசுகளை வணங்கும் வழக்கம் வெளிநாட்டிலிருந்து வந்ததாகக் கூறுகிறார். பிராமணர்கள் அங்குச் சென்றதையும், தங்கள் மதக் கொள்கைகளை அம்மக்களிடையே அவர்கள் புகுத்தியதையும் அது குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். பூணனை ஆண்ட அரச குலம், கௌண்டினியர் என்ற தென் இந்தியப் பார்ப்பார் ஒருவருக்கு நாக ஸோமா என்ற பெண்ணிடம் பிறந்த மகன் வழி வந்தது என்று கூறுகின்றனர். இதுபோலவே, சென்லா அரச குலத்தைப் பற்றியும் ஒரு கதையுண்டு.

கி. பி. நான்காவது நூற்றாண்டின் இறுதியில் இந்நாட்டிற்குள் இந்திய வழக்கங்களையும், இந்து மத ஆசாரங்களையும் கௌண்டினியர்தான் நுழைத்திருக்க வேண்டு

மெனச் சீன ஆதாரங்களிலிருந்து அறியலாம். சீனர்களுக்கும் இந்நாடுகளுக்குமிடைய தொடர்பு இருந்ததால் அவர்களுக்கு இங்கு நடந்த பலவற்றை அறிய வழி இருந்தது. ஜயவர்மர், உருத்திரவர்மர் என்று, கௌண்டினியரின் பின்வந்தோர் சீன நாட்டுக்குத் தூதர்களை அனுப்பினர். ஜயவர்மரின் மனைவியும் புதல்வனும் ஒவ்வொரு கல்வெட்டுப் பொறித்திருப்பதை அறிகிறோம். அவை இரண்டும் சுமார் கி. பி. ஐந்தாவது நூற்றாண்டைச் சார்ந்த எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருத்தல் கவனிக்கற்பாலது.

நெடுங்காலமாக இந்து மதம் பரவியிருந்த பூனன் நாட்டில், கூடு, சோம சூத்திரம் என்ற இருவகை வேலைப்பாடுகள் தோன்றியுள்ளன. அவை தென் இந்தியச் சிற்பக் கலையைப் பின்பற்றியனவாகவே இருத்தல் வேண்டும். அங்குள்ள சிவ விஷ்ணு லிங்கங்கள், சந்தனம் அரைப்பதற்குள்ள கற்கள், யாவும் கி. பி. ஐந்து அல்லது ஆறுவது நூற்றாண்டைச் சார்ந்தனவாய் இருக்கலாம்.

**காம்போஜ:—**இப்பொழுது காம்போடியா என்று பெயர் வழங்கப்படுகின்ற காம்போஜ அரசு முதலில் பூனனின் ஆட்சிக்குள் இருந்தது. காம்போஜ அரச குலத்தை நிறுவியோர் கம்பு முனிவர் மரபினர் எனக் கூறுவர். இது பொதுவாகத் தென் இந்தியாவிலும் வெளி நாட்டுப் புதுக் குடியிருப்புகளிலுமுள்ள அரச குடும்பங்களைப் பற்றிய கதைகளை ஒத்ததாயிருக்கின்றது. பூனனில் நடந்தது போல் காம்போஜத்திலும் கி. பி. முதல் நூற்றாண்டில் இந்துக்கள் குடியேறத் தொடங்கினர்களெனக் கருதலாம். காம்போஜ நாட்டில் சைவமும் வைணவமும் ஓங்கி வளர்ந்தன. பவவர்மர் என்ற அரசர் தம் தம்பி சித்திரசேனர் உதவியால் சுமார் கி. பி. 590-இல் பூனனைப்

போரில் முறியடித்து, தமது நாட்டிற்கு விடுதலை தேடித் தந்தார். பவவர்மர், சித்திரசேனர் இவ்விருவரது கல்வெட்டுக்களும் ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த பல்லவரது கல்வெட்டுக்களைப் பலவகையிலும் ஒத்திருக்கின்றன. ஆர்வமுடைய சிவபக்தரான பவவர்மர், நான்கு சிவாலயங்களைக் கட்டுவித்ததுமன்றி நாட்டிலுள்ள பல கோவில்களிலும் சிவலிங்கங்களை பிரதிஷ்டை செய்வித்தார். இந்து மதப் பாடல்களைக் கோவில்களில் உரிய காலங்களில் பாடும்படி ஏற்பாடு செய்தார். இராமாயணம், மகாபாரதம் என்னும் இதிகாசங்களையும், புராண காவியங்களையும், பாராயணம் செய்யும் வழக்கத்தை ஏற்படுத்தினர். அவருக்குப் பின்பு அரசுக்கு வந்த அவரது தம்பி மகேந்திர வர்மர், அண்மையிலிருந்த இந்து நாடான சம்பாவோடு நட்புக்கொண்டிருந்தார். அவருக்குப் பின்பு அரசாண்ட ஈசானவர்மரின் கல்வெட்டுக்களும் தென் இந்தியக் கல்வெட்டுக்களையே ஒத்திருந்தன. மத ஆசாரங்களைக் கண்காணிப்பதற்காக இவ்வரசர், பேரறிஞராகிய வித்தியா விசேட ஆசாரியரை நியமித்திருந்தார். கி. பி. 548-இலும் 549-இலும் உள்ள இரு கல்வெட்டுக்கள் இச் செய்தியைக் கூறுகின்றன. வித்தியா விசேடர் ஒரு கோவில் கட்டி, அதில் சிவலிங்கத்தையும் ஹரிஹரர் சிலையையும் பிரதிஷ்டை செய்து வைத்தார். இந்தோசீனாவில், சிவன், விஷ்ணு, சிவனும் விஷ்ணுவும் ஒருங்கே அமையப்பெற்ற ஹரிஹரர் ஆகிய மூன்று மூர்த்திகளின் ஆராதனைகளும் உயர்நிலையிலிருந்தன என்பதைச் சிலாசாசனங்களாலும் உருவச் சிலைகளினாலும் அறிகிறோம். ஈசானவர்மரது ஆட்சிக் காலத்தில் வைதீக முறை

வேள்விகள் பல நடந்தன; பார்ப்பன ஆசிரமங்களும் பல தோன்றின.

கி. பி. 604-இல் பொறிக்கப்பட்ட கல்வெட்டொன்றில் யோகத்தையும் பாசுபதாஸ்திரம் கைக்கொண்ட சிவனையும் பற்றிக் குறிப்பிடப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. உண்மையில் காம்போஜத்திலும் அதற்கு முன் பூனுனிலும் பாசுபதம் மலிந்து பரந்திருந்ததாகத் தெரிகிறது. கி. பி. 968-இல் ஐந்தாம் ஜயவர்மரது காலத்திலுள்ள ஒரு கல் வெட்டு, தக்ஷிணபதம் அல்லது தக்காணம் சைவ சமயத்தின் நடு நிலைக்களனாய் விளங்கியதைத் தெரிவிக்கின்றது. கீழ் நாடுகளிலுள்ள மக்களிடையே தென் இந்தியப் பழக்க வழக்கங்களும், கொள்கைகளும் மிகுதியாகப் பரவியிருந்தனவெனப் புலனாகின்றது. காஞ்சியை ஆண்ட பல்லவ மன்னர்களையும் தென்னாட்டில் தோன்றிய சங்கராச்சாரியரையும் பற்றிக் குறிப்பிடப்பட்டிருப்பது தென் இந்தியச் செல்வாக்கு அங்கு மலிந்திருந்ததை உறுதிப்படுத்துகிறது. ஆகவே, புதிதாய்க் குடியேறிய நாடுகளில் உள்ள இந்து மதத் தலைவர்கள், தாய் நாட்டு நாகரிகத்தோடு நெருங்கிய உறவு வைத்திருந்ததாகத் தெரிகின்றது.

காம்போஜ நாட்டின் பிற்கால அரசராகிய இரண்டாம் சூர்யவர்மரது ஆட்சியில் (கி. பி. 1112–53) ஆங்கோர் வாட் எனும் சிறப்புமிக்க கோயிற் கட்டடப் பணி நடைபெற்றது. அது தென் இந்திய முறையில் கட்டப்பட்ட திருமால் கோவில். அதில் மகாபாரதம், இராமாயணம், ஹரிவம்சம் முதலான காவிய நூல்களில் குறிக்கப்பட்டுள்ள தலைவர்கள் பலரின் உருவச்சிலைகள் உள்ளன. அவை மனத்தை உருக்கும் தன்மை அமைந்த அழகிய சிலைகள்.

ஆங்கோர் வாட் சிற்பப் பணிகள் போராபதூர் சிற்பங்களை விட மேலானவையென்பது பேரறிஞர் கூற்று.

நாளடைவில் உள்நாட்டு மக்களின் செல்வாக்கு வளரவே பௌத்த மத வழிபாடு வழக்கத்திற்கு வந்தது. இந்து மத நம்பிக்கைகள் பலவற்றை அது இணைத்துக் கொண்டது. முன்னாள் இந்து மத ஆசாரங்களும் கொள்கைளும் சமுதாயத்தில் பொது மக்களைவிட உயர்தர வகுப்பினரையே அதிகமாகக் கவர்ந்திருந்தது. பிஞ்ம்பென் என்னுமிடத்து மன்னரின் புரோகிதர்கள் இந் நாளிலும்கூட அலுவலாளர்கட்குப் பணியேற்பு உரை நடத்தி வைப்பதிலும் ஏனைய சடங்குகளிலும் பங்கு பற்றி வருகிறார்களென்பது சிந்தித்தற்குரியது. இந்நிலையில் கையாளப்பட்ட தெய்வப் பிரார்த்தனைகள் அனைத்தும் சற்றுப் பிழையுற்ற சம்ஸ்கிருத மொழி வாயிலாகவே நடைபெற்ற வந்தன. இவை தென் இந்தியக் கிரந்த எழுத்தில் எழுதப் பெற்றுள்ளன. இறுதியாக, நாட்டு மக்களாகிய க்மெர்கள் இந்தியர்கள் ஆகிய இரு திறத்தினர்களது பண்பாடும் ஒருங்கே இணைந்து ஒரு பொதுப் பண்பாடு அமைந்தது; எனினும், அதன் அடிப்படை இந்திய நாகரிகமே என்பதற்கு ஐயப்பாடில்லை.

**சம்பா:—** தற்போது தென் அன்னம் என விளங்கும் சம்பா நாடானது கம்போடியாவிற்குக் கிழக்கிலிருக்கிறது. சம்பா என்ற பெயர் வட இந்தியாவைச் சார்ந்த அங்க நாட்டிலிருந்து வந்திருக்கலாமெனப் பலர் கருதியுள்ளார்கள். ஆனால், அப்பெயர் சோழர் தலைநகராகிய காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து வந்தது என்று சொல்ல வழியுண்டு; ஏனென்றால், காவிரிப்பூம்பட்டினத்திற்குச் சம்பாபதி என்ற மற்றொரு பெயரும் உண்டு. சம்பா நாட்டில் கிடைத்துள்ள

மிகப் பழைய கல்வெட்டு தென் இந்திய எழுத்தில் பொறிக்கப்பட்டிருப்பது மேற்கூறிய கருத்தை வற்புறுத்துகிறது. சுமார் கி. பி. 350-இல் ஆட்சி புரிந்த பத்திராவர்மரின் ஆதிக் கல்வெட்டுக்கள் பல இதற்குத் தகுந்த எடுத்துக் காட்டாகத் துலங்குகின்றன. அக்கல்வெட்டுக்களிலுள்ள சில எழுத்து இலக்கணங்கள் தெலுங்கு மொழியில் உள்ளவை போலவே தோன்றுவதால் ஆதியில் சம்பாவில் குடியேறிய மக்கள் ஆந்திரர்களாக இருந்திருக்கலாம். டாங்டுவோங்கிலுள்ள புத்தர் பெருமானின் சிலை அமராவதிச் சிற்ப வகையை ஒத்திருக்கின்றது. இது மட்டுமன்று. டாங்டுவாங் நாட்டிற்கே அமராவதி என்ற பெயர் வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. பத்திராவர்மர் தர்ம மகாராஜா என்ற தலைமைப் பெயரையும் வர்மா என்ற வருணச் சிறப்புப் பெயரையும் பூண்டமை தென் இந்தியாவில் பல்லவர்களும் கதம்பர்களும் பின்பற்றிய வழக்கத்தை ஒத்திருப்பதால், அவரது நாடுகளிலிருந்தே அவை சென்றிருக்க வேண்டும். பக்திவர்மன் சிறந்த சிவ பக்தர்; மிஸன் என்னும் ஊரில் ஒரு சிவன் கோவிலைக் கட்டுவித்தார். சீனாவிற்கும் சம்பாவிற்குமிடையே அடிக்கடி போர் நிகழ்ந்தது. அன்றியும், எட்டாவது நூற்றாண்டில் சைலேந்திரர்களும் சம்பாவைத் தாக்கினார்கள். ஆறுயநயிற்றர்கள்[3] என்பாரின் இடைவிடாத தாக்குதல் மிகத் தீவிரமாக நடைபெற்றது. இறுதியில் 1318-ஆம் ஆண்டில் சம்பா அவர்கள் கையில் சிக்கியது.

ஆயிரமாண்டுகளுக்கு மேல் சம்பா இந்து ஆட்சிக்குள் இருந்ததால், இந்து மதமும் இந்துப் பண்பாடும் அந்

3. Aurianites.

நாட்டில் நன்கு வேரூன்றிவிட்டனவெனலாம். சைவம் தழைத்து ஓங்கியிருந்தது. முகலிங்கமும் நடராஜன் படிவமும் நாட்டில் எங்கணும் காட்சி அளித்தன. பிற் காலத்தில் அந்நாட்டு அரசர்களுக்கு வைணவத்திலும் மிகுந்த ஆர்வம் ஏற்பட்டது. பிரமர், ஹரிஹரர் இவ்விரு மூர்த்திகளுக்கும் மக்கள் வழிபாடு நடத்திவந்தனர். பௌத்த மதம் குன்றிய நிலையிலேதான் இருந்தது. இந்துக்களிடையே வழங்கிய நான்கு வருணங்கள், ஆறு சாஸ்திரங்கள், தொண்ணூற்றாறு தத்துவங்கள், அறுபத்து நான்கு கலைகள், இதிகாசங்கள், தர்மசாஸ்திரங்கள் இவை யாவையும் பற்றி, அந்நாட்டில் பல கல்வெட்டுக்களிலும் குறிப்புக்கள் காணப்படுகின்றன. நெடுங்காலத்திற்கு முன்னரே சம்பாவில் பகவதி வழிபாடு நிலவியிருந்தது என்பது நாம் நன்குணர்வதற்குரிய பொருளாகும். இந்த வழக்கம் கேரளத்தில் பன்னெடுங்காலம் வேரூன்றியிருந் ததனால் அங்கிருந்தே அது சம்பாவிற்குப் பரவியிருத்தல் வேண்டுமெனக் கருதுவது மிகையாகாது. போரகரிலுள்ள உமாபகவதி ஆலயம் பற்பல மாற்றங்களுக்கு உட்பட்ட போதிலும், இன்றும் தழைத்திருப்பதைக் காணலாம். முற்காலம் தொட்டே 'சமஸ்' என்ற சம்பா நாட்டு மக்கள் தங்கள் விழாக் கொண்டாட்டங்களில் சந்தனத்தை மிகுதி யாகப் பயன்படுத்தி வந்தனர். தென் இந்தியாவினைப் போலவே ஆங்கும் சமய நூல்கள் யாவையும் பனையோலை களில் வரைந்து பாதுகாத்தனர். சம்பாவிலுள்ள கோவில் களின் சிற்பவேலை திராவிட முறையை ஒட்டியதென்பதற்கு ஐயமில்லை. உயரப் போகப் போக அகலம் குறைந்து ஒன்றின் மேல் ஒன்றாக மாடி போல் அமைக்கப்பெற் றிருக்கும் மாடங்களும், கோவில்களும், அடிப்படைக்

கொத்தளங்களும், காஞ்சிபுரம், வாதாபி முதலிய ஊர்களிலுள்ள கோவில்களில் காணப்படுபவற்றை ஒத்திருக்கின்றன.

இலங்கை : கி. மு. நான்காம் நூற்றாண்டிலேயே இலங்கையில் ஆரியரது பண்பாடு பரவத் தொடங்கியது. அதன் பயனாகத் தோன்றிய சிங்கள மொழி, பாலியுடன் தொடர்புடையது. கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் ஏராள என்ற தமிழர், அரசியலைக் கைப்பற்றிக்கொண்டார். ஆனால், நெடுங்காலம் செல்லுவதற்கு முன்பே அதனைச் சிங்கள மன்னர் மீட்டுக்கொண்டார். அதற்குப் பின்பு அடிக்கடி இவர்களிடையே போர் நிகழ்ந்தது; கி. பி. எட்டாவது நூற்றாண்டு முதல் பாண்டியரும் சோழர்களும் இலங்கை மீது படையெடுத்தனர். அவற்றை எதிரிட்டு இலங்கை மன்னர் தென் இந்திய அரசியல் சச்சரவுகளில் தலையிட்டார். முதலாம் குலோத்துங்கர் காலத்தில் விஜயபாகு, தமது நாட்டைத் திரும்பவும் மீட்டுக் கொண்டார். மறுபடியும் சோழ மன்னர் மூன்றாம் குலோத்துங்கர் இலங்கை மீது போர் தொடுத்து சில வெற்றிகள் பெற்றார் எனக் கூறுவர். அழகான வெண்கலச் சிற்பங்கள் பல அங்குக் காணப்படுகின்றன. இன்றும், பொலனறுவாயில் நேர்த்தியாக வெண்கலத்தில் வார்க்கப்பட்டிருக்கும் சிவனடியார்களின் உருவங்களைக் காணலாம். அவற்றில் சில தென் இந்தியாவில் காண்பனவற்றினும் சிறந்தனவாம்.

குடியேற்ற முறை : ஆகவே, தென் கிழக்கு ஆசியாவிலுள்ள பல நாடுகளிலும் தென் இந்திய மக்கள் குடியேறியிருந்தனர். அவர்களது நாகரிகமும் பண்பாடும் ஆங்குப் பரவின; ஆனால், அந்நாடுகளில் இந்தியர் குடியேற்றம்

அரசாங்கத்தின் வாயிலாக நிகழ்ந்தது அன்று எனப் புலனுகிறது; அதனை அரசினர் தொடங்கவும் இல்லை; நடத்தவும் இல்லை. வாணிகம் நடத்திய மக்கள் பலர் தம் ஊதியம் கருதியே அந்நாடுகளுக்குச் சென்றனர். அவர்களைத் தொடர்ந்து எளிய மக்கள் பலர் பலவகைத் தொழில் செய்து பிழைப்பதற்காக ஆங்குச் செல்லலாயினர். அவர்தம் கொள்கைகளும், பழக்கவழக்கங்களும், மதமும், பண்பாடும் அங்கிருந்த நாகரிகமற்ற பழங்குடி மக்களிடையே இயற்கையாகப் பரவின. புது நாகரிகம் பழங்குடி மக்களின் பண்பை மேற்கொண்டது எனக் கூறுவதற்கில்லை. அதற்கு நேர்மாருக இந்தியப் பண்பாடு அந்நாடுகளில் முன் இருந்தோரின் வாழ்க்கை இயலோடு ஒன்றுசேர்ந்து இணைந்து ஒரு புது நாகரிக முறையாக அமைந்தது. ஆகவே, அந்தக் குடியேற்றத்தில் வணிகர்களும் தொழிலாளிகளும், நாடோடி வாழ்வை விரும்பிய வீரர்களும், யாவருக்கும் மேலாகப் புரோகிதர்களும் பெரும் பங்கு கொண்டிருந்தனர். ஆனல், இந்தியக் கலையும் பண்பாடும் எல்லாக் காலத்திலும் நேரடியாகத் தாய்நாட்டிலிருந்து பிற நாட்டிற்கு வந்தில. சில வேளைகளில், தென் இந்தியாவிலிருந்து தென் கிழக்கு ஆசியாவில் குடியேறியிருந்த சில மக்களிடமிருந்தே வேறு சில நாடுகளில் அவை பரவின. இந்தியப் பழக்கவழக்கங்களையும் கலை ஞானத்தையும் அண்மையிலிருக்கும் ஊர்களுக்குப் பரப்புவதில் குறிப்பாக சாவக நாடு ஈடுபட்டிருந்ததெனத் தெரிகிறது.

முதலில் தென்கிழக்கு நாடுகளில் சென்று குடியேறிய மாபெரும் இயக்கத்தில் தக்காணத்திலும் தெற்குக் கோடியிலும் உள்ள மக்கள் ஈடுபட்டிருந்தனர். இதில் பங்கு

கொண்டவரில் முதல்வர் ஆந்திரரே எனக் கூறலாம். அவரைத் தொடர்ந்து தென் இந்தியாவின் கீழ்க் கரையோரமாக வாழ்ந்திருந்த தமிழர்களும், மேல் கரைக் கேரள மக்களும் சென்றனர். ஒரு வேளை, கி. பி. மூன்றும் நூற்றுண்டு முதல் களப்பிரர் ஆக்கிரமிப்பினுல் தமிழகத்தில் தோன்றிய சீர்குலேவும், பின்னர், புலிகேசி மன்னர் வேங்கியைப் பிடித்த காரணத்தால் ஆந்திர நாட்டில் தலேயெடுத்த குழப்பமும் அவர்களில் சிலர் வெளிநாட்டில் சென்று குடியேறுவதற்குத் தூண்டுகோலாயிருந்திருக்கலாம். எங்ஙனமாயினும், கடல் கடந்து சென்ற தென் இந்திய நாகரிகம் கி. பி. 11 அல்லது 12-வது நூற்றுண்டு வரையிலும் அங்குத் தொடர்ந்து பரவிக்கொண்டே வந்தது. அது ஆசிய வரலாற்றில் ஒரு முக்கிய விளேவை உண்டு பண்ணியது. உண்மையில், இந்திய வரலாற்றிலும் இது ஒரு பெருமை வாய்ந்த நிகழ்ச்சியெனக் கூறுவது மிகையாகாது. "இந்திய மதமும் நாகரிகமும் பிற இடத்திற்குச் சென்று புது முறையில் புத்துயிர் பெற்ற செயல் இந்திய வரலாற்றில் வியப்பைத் தரும் ஓர் இயல் எனக் கருதலாம். எனினும், இந்தியர் இதுகாறும் அதன் பெருமையை நன்குணர்ந்துள்ளார் எனக் காண்கிலேம்" என்று இக்கால வரலாற்று நூல் வல்லுநர் ஒருவர் கூறியிருக்கிருர்.

4. Gertrude E. Sen ; The Pageant of Indian History vol. I, P. 322.